
# மார்க்ஸ் எங்கெல்ஸ்

## தேர்வு நூல்கள்


பன்னிரண்டு
தொகுதிகளில்

✻

தொகுதி
1



Karl Marx



F. Engels

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்

## பன்னிரண்டு தொகுதிகளில்

## தொகுதி 1

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К. Маркс, Ф. Энгельс

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 1

*на тамильском языке*

**K. Marx, F. Engels**

**SELECTED WORKS IN 12 VOLUMES**

Volume 1

*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭ $\frac{10101-6}{016(01)-82}$ 677—82 0101010000

## பொருளடக்கம்

கா. மார்க்ஸ். ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள் 7

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ஃபாயர்பாக். பொருள்முதல்வாத மற்றும் கருத்துமுதல் வாதக் கண்ணோட்டத்தின் எதிர்ப்பு (ஜெர்மன் சித்தாந்தம். அத்தியாயம் I) . . . . 12

I . . . . . . . . . . . . . . 12

II . . . . . . . . . . . . . . 33

III . . . . . . . . . . . . . . 73

IV . . . . . . . . . . . . . . 81

பி. எங்கெல்ஸ். கம்யூனிசத்தின் கோட்பாடுகள் 139

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை . . . . . . . . . . . . . . 170

1872ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரை 170

1882ஆம் ஆண்டு ருஷ்யப் பதிப்பின் முகவுரை 173

1883ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரை 175

1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரையிலிருந்து . . . . . . . . . . . . . 177

1892ஆம் ஆண்டுப் போலிஷ் பதிப்பின் முகவுரை 182

1893ஆம் ஆண்டு இத்தாலியப் பதிப்பின் முகவுரை . . . . . . . . . . . . . . 185

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை . . . . . . . 189

I. முதலாளிகளும் பாட்டாளிகளும் . . . . 190

II. பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும் . . . . 213

III. சோஷலிச, கம்யூனிச இலக்கியம் . . . 228
IV. தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்து கம்யூனிஸ்டுகளின் நிலை . . . 246
கா. மார்க்ஸ். முதலாளித்துவ வர்க்கமும் எதிர்ப் புரட்சியும் . . . . . . . . . . . 250
கா. மார்க்ஸ். மார்க்ஸ் பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதம் . . . . . . . . . 258
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . 280
பெயர்க் குறிப்பகராதி . . , . . . . . . . 300

கா. மார்க்ஸ்

# ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்[1]

## 1

ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதம் உள்ளிட்டு இது வரை இருந்து வந்திருக்கும் எல்லாப் பொருள்முதல் வாதத்துக்கும் உரிய பிரதானமான குறைபாடு இதுதான்: பொருள் [Gegenstand] எதார்த்தம், புலனுணர்வு என்பது புறப்பொருள் [Object] அல்லது சிந்திப்பு [Anschanung] என்னும் வடிவத்தில் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் மனிதப் புலனுணர்வுள்ள நடவடிக்கை என்று நடைமுறை என்றும் கொள்ளப்படவில்லை, அகநிலையாகக் கொள்ளப்படவில்லை. எனவே பொருள் முதல்வாதத்துக்கு நேர் எதிரான நிலையில் கருத்து முதல்வாதம் செயலாக்கமுள்ள பகுதியை வளர்க்க நேர்ந்தது, ஆனால் கருத்தியலாக மட்டுமே இதைச் செய்தது. ஏனெனில் கருத்துமுதல்வாதம் எதார்த்தமான புலனுணர்வுள்ள நடவடிக்கையை அறியாது. சிந்தனைப் புறப்பொருட்களிலிருந்து உண்மையில் வகைவேறுபாடு செய்யப்பட்ட புலனுணர்வுள்ள புறப்பொருட்களை ஃபாயர்பாக் விரும்புகிறார், ஆனால் மனித நடவடிக்கையையே புறப்பொருளான [Gegenstandliche] நடவடிக்கையாகக் கருத்தில் கொள்வதில்லை. எனவே கிறித்தவ சமயத்தின் சாராம்சம் எனும் நூலில் அவர் தத்துவார்த்தப் போக்கை மட்டுமே உண்மையான மனிதப் போக்கு என்று கருதுகிறார், அதே போதில் நடைமுறை அதன் அசிங்கமான-யூதவழிப்பட்ட

தோற்ற வடிவில் மட்டுமே கருதிப் பார்க்கப்பட்டு அறுதி செய்யப்படுகிறது. எனவே அவர் ''புரட்சிகரமான'' ''நடைமுறை-விமர்சன''ச் செயல்பாட்டின் உட்பொருளைப் புரிந்து கொள்ளவில்லை.

## 2

புறப்பொருளான [Gegenstandliche] உண்மையை மனித சிந்தனைக்கு உரியதாக கருத முடியுமா எனும் பிரச்சினை தத்துவத்துறைப் பிரச்சினை அல்ல, மாறாக அது ஒரு நடைமுறைப் பிரச்சினையாகும். தனது சிந்தனையின் உண்மையை அதாவது அதன் எதார்த்தத்தையும் வலிமையையும் இப்புறத்தன்மையையும் [Diesseitigkeit] மனிதன் நடைமுறையிலே நிரூபிக்க வேண்டும். நடைமுறையில் இருந்து தனிமைப் படுத்தப்பட்ட சிந்தனையின் எதார்த்தத் தன்மை அல்லது எதார்த்தமற்ற தன்மை பற்றிய வாதாடல் முற்றிலும் ஓர் ஏட்டறிவுவாதப் பிரச்சினையாகும்.

## 3

புறச்சூழல்கள் மற்றும் வளர்ப்பின் விளைபயனே மனிதர்கள் என்றும், எனவே மாறுபட்ட மனிதர்கள் இதர புறச்சூழல்கள் மற்றும் மாறுபட்ட வளர்ப்பின் விளைபயனே என்றும் கூறும் பொருள்முதல்வாதப் போதனை மனிதர்கள் தாம் புறச்சூழல்களை மாற்றுகிறார்கள் என்பதையும் கல்வி கற்பிக்கிறவனுக்கே கல்வி கற்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதையும் மறக்கிறது. எனவே இப்போதனை சமுதாயத்தை இருபகுதிகளாகப் பிரிப்பதில் தவிர்க்க முடியாதபடி வந்து சேருகிறது, இவற்றுள் ஒன்று சமுதாயத்துக்கு மேலாக உள்ளது (எடுத்துக்காட்டாக, ராபர்ட் ஓவன் நூலில்).

புறச்சூழல்கள் மாற்றமுறுவதும் மனித நடவடிக்கையும் தற்செயலாக இணைவதை, புரட்சிகரமாக்கப் பெறும் நடைமுறை என்பதாக மட்டுமே கருதிப்பார்க்க முடியும், பகுத்தறிவு ரீதியாகப் புரிந்துகொள்ள முடியும்.

## 4

சமயத் தன்விலக்கல் எனும் மெய்நடப்பில் இருந்து, உலகத்தை ஒரு சமயவழிப்பட்ட கற்பிதமான உலகமாகவும் எதார்த்தமான உலகமாகவும் இரண்டுபடுத்திக் கொண்டு தொடங்குகிருர் ஃபாயர்பாக். அவரது பணி சமயவழிப் பட்ட உலகத்தை அதன் சமயச்சார்பற்ற அடிப்படைக்குள் கரைத்து விடுவதிலேயே அடங்கியுள்ளது. இந்தப் பணியை முடித்த பிறகு பிரதானமான காரியம் இன்னும் செய்து முடிக்கப்படாமலே இருக்கிறது எனும் உண்மையை அவர் பார்க்கத் தவறுகிருர். ஏனெனில், இந்தச் சமயச் சார்பற்ற தான அடித்தளம் தன்னிடமிருந்தே தன்னைப் பிரித்துக் கொண்டு ஒரு சுதந்திரமான மண்டலமாகத் தன்னைக் கற்பனையாக நிலை நிறுத்திக் கொள்கிறது எனும் மெய்வி வரத்தை இந்தச் சமயச் சார்பற்ற அடிப்படையின் சொந்தப் பிளவையும் சுய முரண்பாட்டியல்பையும் வைத்து மட்டுமே உண்மையில் விளக்க வேண்டும். ஆகவே பிந்திச் சொன் னதை முதலில் அதன் முரண்பாட்டில் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அந்த முரண்பாட்டை அகற்றுவதின் மூலமாக நடைமுறையில் அதைப் புரட்சிமயமாக்க வேண் டும். இவ்வாறு, எடுத்துக்காட்டாக, உலகியலான குடும்பமே புனிதக் குடும்பத்தின் இரகசியம் என்று கண்டுபிடித்தவுடன் முந்திச் சொன்னதை தத்துவரீதியாக விமர்சிக்க வேண்டும், நடைமுறையில் புரட்சிமயமாக்க வேண்டும்.

## 5

**கருத்தியலான சிந்தனையுடன்** திருப்தியடையாமல் ஃபா யர்பாக் **புலனுணர்வுள்ள சிந்திப்புக்கு** வேண்டுகோள் விடு கிருர். ஆனல் அவர் புலனுணர்வை **நடைமுறை** ரீதியிலான மானுடப் புலனுணர்வுள்ள நடவடிக்கையாகக் கருதிப் பார்க்க வில்லை.

## 6

ஃபாயர்பாக் சமயச் சாராம்சத்தை **மானுடச்** சாராம்ச மாக மாற்றுகிருர். ஆனல் மானுடச் சாராம்சம் என்பது ஒவ்வொரு தனி நபரிடமும் உள்ளார்ந்து கிடக்கும் கருத்

தியல் அல்ல. அதன் எதார்த்த நிலையில் அது சமுதாய உறவுகளின் பொதுத் தோற்றமாகும்.

இந்த எதார்த்தமான சாராம்சம் பற்றிய விமர்சனத்தில் ஃபாயர்பாக் இறங்காமல் அதன் விளைவாக:

1. வரலாற்று நிகழ்வுப் போக்கில் இருந்து கருத்திய லாகப் பிரிந்து சமய உணர்ச்சியை [Gemüt] தன்னிலையான ஒன்ருக அறுதிசெய்துகொள்ளவும், ஒரு கருத்தியலான—தனிமைப்படுத்தப்பட்ட—மானுடரீதியான தனிநபரை முன் அனுமானித்துக் கொள்ளும்படியும் நிர்ப்பந்திக்கப்படுகிருர்.

2. ஆகவே அவரைப் பொருத்தவரை மானுடச் சாராம் சத்தை ஓர் ''இனம்'' என்று மட்டுமே, ஓர் அகவயமான ஊமையான பொது நிலை—அது பல தனிநபர்களை இயல் பாகவே ஒன்றுபடுத்துகிறது, என்று மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

7

இதன் பின்விளைவாக, ''சமய உணர்ச்சி'' என்பதே தன் னளவில் ஒரு சமுதாய விளை பயன் என்பதையும், தாம் பகுத் தாயும் கருத்தியலான தனிநபர் எதார்த்தத்தில் ஒரு குறிப் பிட்ட சமுதாய வடிவத்தைச் சேர்ந்தவர் என்பதையும் ஃபாயர்பாக் பார்க்கவில்லை.

8

சமுதாய வாழ்க்கை முக்கியமாயும் காரிய சாத்தியமானது. தத்துவத்தை மாயாவாதத்தை நோக்கித் தவருக இட்டுச் செல்லும் மர்மங்கள் அனைத்தும் மானுட நடைமுறையிலும், இந்த நடைமுறை பற்றிய உணர்வாற்றல் அறிவிலும் தமது பகுத்தறிவு பூர்வமான விடையினைக் காண்கின்றன.

9

சிந்திப்புத் தன்மையுள்ள பொருள்முதல்வாதம் அதாவது புலனுணர்வை நடைமுறை நடவடிக்கையாகப் புரிந்து கொள் ளாத பொருள்முதல்வாதம்—எய்தியுள்ள உச்ச கட்டம் ''குடியுரிமை சமுதாயத்தில்'' உள்ள தனிநபர்களைப் பற்றிய சிந்திப்பே ஆகும்.

## 10

பழைய பொருள்முதல்வாதத்தின் நோக்கு நிலை "குடியுரிமை" சமுதாயமே: புதிய பொருள்முதல்வாதத்தின் நோக்குநிலை மானுட சமுதாயம் அல்லது சமுதாயமயமாக்கப் பட்ட மனித குலமே.

## 11

தத்துவ ஞானிகள் உலகத்தைப் பல்வேறுவழிகளில் வியாக்கியானப் படுத்தி மட்டுமே வந்திருக்கிறார்கள், ஆனால் அதை மாற்றுவதுதான் இப்போதுள்ள விஷயமாகும்.

*1845 வசந்த காலத்தில்*
*மார்க்ஸ் எழுதியது*

*1888ல் எங்கெல்சால் தமது Ludwig Feuerbach and the End of Classical German Philosophy எனும் நூலின் தனிப்பதிப்பிற்கான பிற்சேர்ப்பில் முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப் பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது*

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

# ஃபாயர்பாக். பொருள்முதல்வாத மற்றும் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தின் எதிர்ப்பு

(''ஜெர்மன் சித்தாந்தம்.'' அத்தியாயம் 1)[2]

## [I]

[S. 1] ஜெர்மன் சித்தாந்தவாதிகளிடம் இருந்து நாம் கேள்விப்படுவது போன்று, கடந்த ஒரு சில ஆண்டுகளில் ஜெர்மனி இணைவரையற்ற ஒரு புரட்சியை அனுபவித்துள்ளது. ஸ்ட்ராவுஸ் உடன் தொடங்கியதான ஹெகலியன் தத்துவவியலின் சிதைவு[3] ஒரு சர்வப்பொதுக் கிளர்ச்சியாக மாறி ''கடந்த காலத்திய ஆட்சி அதிகாரங்கள்'' அனைத்தையும் துடைத்தொழித்தது. இந்தப் பொதுவான குழப்பத்தில் உடனடி அழிவுக்கு மட்டுமே ஆளாக்கப்படப் போகும் தன்மையில் சக்திவாய்ந்த சாம்ராஜ்யங்கள் உதித்தெழுந்தன. மேலும் அதிகத் துணிவுகொண்ட அதிக வலிமை வாய்ந்த போட்டியாளர்களால் ஒதுக்குப் புறத்தில் வீசி எறியப்பட மட்டுமே உரிய தன்மையில் வீரர்கள் ஏற்கெனவே தற்காலிகமாக உதித்தெழுந்திருந்தனர். இதன் அருகே வைத்துப் பார்க்கும் போது பிரெஞ்சுப் புரட்சி[4] ஒரு குழந்தை விளை

யாட்டு எனத் தோன்றத்தக்க புரட்சி இது, இதன் அருகே வைத்துப்பார்க்கும் போது தியதோகி[5] போராட்டம் மிக அற்பமானது எனத் தோன்றும் அளவில் இது ஓர் உலகப் போராட்டம். கோட்பாடுகள் ஒன்றை ஒன்று துரத்தி வெளியேற்றின, சிந்தனை வீரர்கள் இது காறும் கேட்டறிந்திராத வேகத்தில் ஒருவரை ஒருவர் வென்று வீழ்த்தினர். ஜெர்மனியில் இதர காலகட்டங்களில் மூன்று நூற்றாண்டுகளில் நிகழ்ந்ததை விடவும் அதிகமான அளவில் இந்த மூன்று ஆண்டுகளில் 1842-45ல் மேலதிகமான பழமை துடைத்தொழிக்கப்பட்டது.

இவையாவும் தூய சிந்தனை எனும் அரங்கில் நடைபெற்றதாகக் கருதப்படுகிறது.

நாம் எடுத்துக் கவனிக்கும் இந்த நிகழ்ச்சி நிச்சயமாயும் சுவையானதே: பரமாத்மாவின் பதனழிவு சார்ந்த நிலை. அதன் உயிரின் கடைசித்துடிப்பு ஒடுங்கிவிட்ட போது இந்த Caput Mortuum*இன் பல்வேறு இணைக்கூறுகள் சிதைவுறத் தொடங்கி ஒரு புதிய சேர்மானத்தினுள் பிரவேசித்தன. புதிய பொருளாக வடிவெடுத்தன. பரமாத்மாவைச் சுரண்டியே அது வரையில் வாழ்ந்து வந்த தத்துவவியல் தொழிலதிபர்கள் இப்போது இந்தப் புதிய சேர்மானங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். ஒவ்வொருவரும் தமக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பங்கினைச் சில்லறையாக விற்பனை செய்வதற்கு சாத்தியமான சகல உற்சாகத்துடனும் முன்வந்தனர். இது இயல்பாகவே போட்டியைத் தோற்றுவித்தது, இந்தப் போட்டியானது துவக்கத்தில் மிதமான எழுச்சியற்ற முதலாளித்துவப் பாணியில் நடத்தப்பட்டது. பின்னால் ஜெர்மன் மார்க்கெட் தெவிட்டுமளவுக்குப் பண்டங்கள் நிறைந்து இருந்த போது, எல்லா முயற்சிகளும் செய்த பின்னும் உலக மார்க்கெட்டில் இந்தப் பண்டங்களுக்கு கிராக்கி இல்லாத போது, இந்த அலுவல் வழக்கமான ஜெர்மன் பாணியில்,

*நேர் பொருளில்: மாண்ட தலை; வேதியியலில் வடித்தெடுத்த பிறகு மீதமாக நிற்கும் கசடைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் தொடர்; இங்கு மிச்சம், எச்சம் என்பதாகும். —ப-ர்.

பொய்யான போலியான உற்பத்தி, தரத்தில் வீழ்ச்சி, மூலப் பொருட்களில் கலப்படம், விவரச் சீட்டுக்களைப்புரட்டுதல், போலியான கொள்முதல்கள், பேரத்தில் மோசடி செய்தல் மற்றும் எந்த விதமான மெய்யான அடிப்படையும் இல்லாத கடன் வழங்கு முறை ஆகியவற்றால் பாழாக்கப்பட்டது. இந்தப் போட்டி ஒரு கடும் போராட்டமாக மாறியது, இது இப்போது உலக முக்கியத்துவம் பெற்ற ஒரு புரட்சி என்றும், மிகவும் வியக்கத்தக்கதான விளைவுகளையும் சாதனைகளையும் பெற்றுத்தரும் ஒன்றாகவும் நம்மிடம் போற்றிப் புகழப்படுகிறது, வியாக்கியானப்படுத்தப்படுகிறது.

நேர்மையான ஜெர்மன் குடிமகன் நெஞ்சத்திலும் கூட ஒரு தேசியப் பெருமித எழுச்சி ஆர்வத்தை எழுப்புகிற இந்தத் தத்துவவியல் போலித்தனத்தை, அதன் உண்மையான மதிப்பில் கணிக்க விரும்புவோமானால், இந்த இளம் ஹெகலியன் இயக்கம் முழுவதன் சின்னத்தனம் மற்றும் வட்டாரக் குறுநோக்கத்தையும், குறிப்பாக தமது சாதனைகள் சம்பந்தமான இந்த வீரர்களின் பிரமைகளுக்கும் அவர்களது மெய்யான சாதனைகளுக்கும் இடையிலான அவலமும் நகைச் சுவையும் கலந்த மாறுபாட்டையும் துலக்கமாக வெளிக் கொணர விரும்புவோமானால், நாம் இந்தக் காட்சி முழுவதையும் ஜெர்மனியின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டதான ஒரு நோக்கு நிலையில் இருந்து பார்க்க வேண்டும்.*

---

* இங்கு திருத்தமாக எழுதப்பட்ட பிரதியின் முதல் பெயர்ப்பில் பின்வரும் பகுதி அடிக்கப்பட்டுள்ளது:

''[ப. 2] எனவே நாம் அவர்கள் அனைவருக்கும் பொதுவான சித்தாந்த மெய்க்கோள்களைத் தெளிவாக்கம் செய்யும் ஒரு சில பொதுப்படையான அவதானிப்புகளுடன் இந்த் இயக்கத்தின் தனிப்பட்ட பிரதிநிதிகள் குறித்த பிரத்தியேகமான விமர்சனத்தையும் முகவுரையாகத் தருகிறோம். பின்னால் வரவிருக்கும் தனிப்பட்ட விமர்சனங்களைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றின் அடிநோக்கத்துக்கும் தேவைப் படும் அளவுக்கு நமது விமர்சனத்தின் நோக்கு நிலையைச் சுட்டுவதற்கு இந்தக் குறிப்புகள் போதுமானதாக இருக்கும்.

## [1.] பொதுவாக சித்தாந்தம் விசேஷமாக, ஜெர்மன் சித்தாந்தம்

[S. 2] ஜெர்மன் விமர்சனம் அதன் ஆகக் கடைசியான முயற்சிகள் வரையில் தத்துவ ஞான உலகை என்றுமே துறந்துவிடவில்லை. அதன் பொதுவான தத்துவஞான மெய்க் கோள்களைப் பரிசீலிப்பதை விடவும் அதிகமாக, அதன் ஆய் வாராய்வின் முழு அமைப்பும் ஹெகலின் ஒரு திட்டவட்ட

---

இந்தக் குறிப்புகளை குறிப்பாயும் ஃபாயர்பாக்குக்கு எதிராக வைக்கிறோம், காரணம் அவர் ஒருவர் மட்டுமே குறைந்த பட்சம் சிறிதளவு முன்னேற்றம் காண முனைந்துள்ளார், மற்றும் அவரது நூல்களை De Bonne Foi (நம்பிக்கையுடன்) பரிசீலிக்க முடியும்.

### 1. பொதுவாக சித்தாந்தம், குறிப்பாக ஜெர்மன் சித்தாந்தம்

வரலாற்றின் விஞ்ஞானம் எனும் தனி ஒரு விஞ்ஞானத்தை மட்டுமே நாம் அறிவோம். எவரும் வரலாற்றை இரண்டு பக்கங்களில் இருந்தும் பார்த்து அதை இயற்கையின் வர லாறு மற்றும் மனிதரின் வரலாறு எனப் பிரிக்க முடியும். எனினும் இந்த இரு பக்கங்களும் பிரிக்க வொண்ணுதவை. மனிதர்கள் வாழும் வரை இயற்கையின் வரலாறும் மனிதர் களின் வரலாறும் பரஸ்பரம் சார்ந்து நிற்பவை. இயற்கை விஞ்ஞானம் எனப்படும் இயற்கையின் வரலாறு பற்றி இங்கு நாம் அக்கறைப்பட வேண்டுவதில்லை; ஆனுல் நாம் மனி தரின் வரலாறு பற்றிக் கட்டாயம் பரிசீலிக்க வேண்டும். காரணம் கிட்டத்தட்ட இந்த சித்தாந்தம் முழுவதும் ஒன்று இந்த வரலாற்றின் ஒரு புரட்டப்பட்ட வியாக்கியானமாக அல்லது அதிலிருந்து முற்றுகக் கருத்தாக்கம் செய்யப்பட்ட ஒன்றுக வந்து முடியும். சித்தாந்தம் தன்னளவில் இந்த வர லாற்றின் ஓர் அம்சம் மட்டுமே.''

திருத்தமாக எழுதப்பட்ட முதல் பெயர்ப்பில் அடிக்கப் படாத ஒரு பகுதி மேலும் வருகிறது. இது வரலாறு குறித்த பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் மெய்க்கோள் பற்றியதாகும். இந்தத் தொகுதியில் இந்தப் பகுதி திருத்தி எழுதப்பட்ட பிரதியின் பிரதான (இரண்டாம்) பெயர்ப்பின் வாசகத்தில், பிரிவு 2ல் (பக்கங்கள் 19-21 பார்க்க) இடம் பெற்றுள்ளது.—ப-ர்.

பொதுக் கோட்பாடு ஆகியவற்றின் ஆட்சியிலான மத நம்பிக்கை சம்பந்தப்பட்டவரை இளம் ஹெகலியன்கள் பழைய ஹெகலியன்களுடன் உடன்படுகிறார்கள். ஒரு தரப்பு மட்டுமே இந்த மேலாதிக்கத்தை அடாவழி உரிமைப் பறிப்பு என்று தாக்குகிறது, மற்ற தரப்பு இதைச் சட்டமுறைமை யானது என்று மெச்சிப்புகழ்கிறது.

இளம்ஹெகலியன்களின் கருத்தோட்டங்கள், சிந்தனைகள், எண்ணங்கள் உண்மையில் அவர்கள் ஒரு சுயேச்சையான இருத்தலைக் கற்பித்துக் கூறுகிற உணர்வின் எல்லா விளை பயன்களையும் மனிதர்களின் மெய்யான பிணைப்புகள் என்று (பழைய ஹெகலியன்கள் அவற்றை மானுட சமுதாயத்தின் மெய்யான பிணைப்புக்கள் என்று கூறியது போலவே) கருது வதன் காரணமாக இந்த இளம் ஹெகலியன்கள் இந்த உணர் வின் பிரமைகளை மட்டுமே எதிர்த்துப் போராட வேண்டி யுள்ளது என்பது தெளிவாகத் தெரியும். அவர்களது விசித் திரக் கற்பனையின்படி மனிதர்களின் உறவுகள், அவர்களின் எல்லாச் செயல்கள், அவர்களது பிணைப்புக்கள் மற்றும் அவர்களது குறைபாடுகள் அவர்களது உணர்வின் விளை பயன்களே என்பதால் இளம் ஹெகலியன்கள் மனிதர்களிடம் அவர்களது தற்போதைய உணர்வை மானுட விமர்சன அல்லது தன்னுணவ உணர்வுக்குப்* பரிமாற்றம் செய்து கொள்ளும்படியும் அதன் வழி தமது குறைபாடுகளை அகற்றிக் கொள்ளவும் கோரும் தார்மிக அடிக்கோளை தர்க்க ரீதியாக முன்வைக்கிறார்கள். உணர்வை மாற்றிக்கொள்ளும் படி கேட்கும் இந்தக் கோரிக்கை, எதார்த்தத்தை இன்னொரு வழியில் வியாக்கியானம் செய்வதற்கு, அதாவது, இன்னொரு வியாக்கியானம் வாயிலாக அதை அங்கீகரிப்பதற்கு இட்டுச் செல்லும். இளம் ஹெகலியன் சித்தாந்தவாதிகள் ''உலகை அதிரவைக்கும்''[6] எனப்படுவதான தமது அறிக்கைகளைச் செய்த போதிலும் மிகவும் திடமான பழமைவாதிகளாவர். அவர்களில் மிகவும் அண்மையில் வந்த பேர்கள், தாம் ''தொடர்களை'' எதிர்த்து மட்டுமே போராடுவதாகக் கூறிய

* இங்கு குறிப்பிடப்படுவது லுத்விக் ஃபாயர்பாக், புருனோ பௌவர் மற்றும் மாக்ஸ் ஸ்டிர்னர் ஆவர்.—ப-ர்.

போது, அவர்களது செயலுக்குரிய சரியான விளக்கத்தைக் கண்டறிந்து கொண்டார்கள். ஆயினும் இந்தத் தொடர்களுக்கு எதிர்ப்பட தாமே வேறு தொடர்களை முன் வைப்பதையும், இந்த உலகின் தொடர்களை எதிர்த்துப் போராடும் போது மெய்யாக நிலவும் உலகை எதிர்த்து அவர்கள் எந்த வழியிலும் போராடவில்லை என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். இந்தத் தத்துவவியல் விமர்சனம் மிகச் சில அடையக் கூடிய (அவையும் முற்றிலும் ஒரு சார்பினதாக இருக்கும்) பலன்கள், சமய வரலாற்றின் கருத்துக் கோணத்தில் இருந்து கிறித்தவம் பற்றிய ஒரு சில தெளிவாக்கங்கள் மட்டுமே ஆகும். மீதமுள்ள அவர்களது துணிபுரைகள் யாவும், இந்த முக்கியமல்லாத தெளிவாக்கங்களில் சர்வப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்புகளை வழங்கி விட்டதாக அவர்கள் உரிமை கொண்டாடுவதை மேலும் அழகு படுத்தும் முயற்சி மட்டுமே யாகும்.

ஜெர்மன் எதார்த்தத்துடன் ஜெர்மன் தத்துவ ஞானத்துக்குள்ள தொடர்பு பற்றியும், தமது விமர்சனத்துக்கும் தமது சொந்தப் பொருள்வகை சுற்றுச் சார்புக்கும் உள்ள உறவு பற்றியும் ஆய்வாராய்வு செய்யவேண்டும் என்று இந்தத் தத்துவவியலாளரில் எவருக்குமே தோன்றவில்லை.*

### [2. வரலாற்றின் பொருள்முதல்வாதக் கருத்தோட்டம் பற்றிய முற்கோள்கள்]**

*[ப.3]* நாம் எதிலிருந்து தொடங்குகிறோமோ அந்த முற்கோள்கள் தான்தோன்றித்தனமானவை அல்ல, வறட்டுச் சூத்திரங்கள் அல்ல, மாறாக கற்பனையில் மட்டுமே கருத்தாக்கம் செய்யக் கூடியதான மெய்யான முற்கோள்களாகும், அவர்கள் மெய்யான தனிநபர்கள், அவர்களது நட-

* திருத்தமாக எழுதப்பட்ட பிரதானப் பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதியில் இந்தப் பக்கத்தின் மீதிப் பகுதி வெற்றிடமாக விடப்பட்டிருக்கிறது. அடுத்த பக்கத்தில் தொடர்ந்து தரப்பட்டுள்ள பகுதி இந்தத் தொகுதியில் 3ஆம் பிரிவாக மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.—ப-ர்.

** இந்தப் பிரிவிலுள்ள வாசகம் திருத்தி எழுதப்பட்ட பிரதியின் முதல் பெயர்ப்பில் இருந்து எடுக்கப்பட்டது.—ப-ர்.

வடிக்கை மற்றும் அவர்கள் வாழ்ந்து வரும் பொருளாயத நிலைமைகள், ஒருங்கே ஏற்கெனவே இருந்து வருவதும், அவர்களது நடவடிக்கையால் உருவாக்கப் பட்டவையும் ஆகும் என்பதை அவர்கள் காண்கிறார்கள். இவ்வாறாக, இந்த முற்கோள்களை முற்றும் [ப. 4] அனுபவவாத வழிகளில் சரி பார்க்க முடியும்.

மனித வரலாறு அனைத்தின் முதல் முற்கோள் உயிர்வாழும் மானுடத்தனிநபர்களின் இருத்தலே.* இவ்வாறு நிலை நாட்டப்பட வேண்டிய முதல் மெய்நடப்பு இந்தத் தனிநபர்களின் வாழ்க்கை அமைப்பும் இயற்கையின் இதர கூறுகளுடனான அவர்களது பிந்திய உறவும் ஆகும். இங்கு நாம் மனிதனின் மெய்யான உடல் இயல்பு அல்லது மனிதன்தானே எதனுள் இருக்கக் காண்கிறானோ அந்த பூகர்ப்ப இயல், மலை நீர்வள இயல், தட்பவெப்பம் இத்தியாதி இயற்கை நிலைமைகளுக்குள்ளோ செல்ல முடியாது என்பது திண்ணம்.** வரலாற்றை எழுதுவது என்பது, இந்த இயற்கை அடிப்படைகளில் இருந்தும், மனிதர்களின் செயல் மூலம் வரலாற்றுப் போக்கில் ஏற்படும் அவற்றின் மாற்றங்களில் இருந்தும் தான் எப்போதும் கட்டாயம் துவங்கப்பட வேண்டும்.

விலங்குகளிடமிருந்து மனிதர்களை உணர்வு மூலம், சமயம் மூலம் அல்லது நீங்கள் விரும்பும் வேறு (எதைக் கொண்டும்) வேறுபடுத்திப் பார்க்கக்கூடும். அவர்கள் தமது வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யத் தொடங்கிய

* கையெழுத்துப் பிரதியில் பின்வரும் வாசகம் அடிக்கப் பட்டிருக்கிறது: ''விலங்குகளிடம் இருந்து இந்தத் தனிநபர்களை வேறுபடுத்திக் காட்டிய முதல் வரலாற்றுச் செயல் அவர்கள் சிந்திக்கிறார்கள் என்பதல்ல, மாறாக அவர்கள் தமது வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டனர் என்பதே.''—ப-ர்.

** கையெழுத்துப் பிரதியில் பின்வரும் வாசகம் அடிக்கப் பட்டிருக்கிறது: ''மனிதனது ஆரம்பமான தன்னியல்பான அமைப்பு, குறிப்பாக வருண இன வேறுபாடுகள் இந்த நிலைமைகளைச் சார்ந்து நிற்கின்றன என்பது மட்டுமல்ல, அதோடு இன்றைய காலகட்டம் வரையிலான மனிதர்களது மேற்பட்ட வளர்ச்சி அல்லது வளர்ச்சி இன்மையும் கூட இவற்றைச் சார்ந்து நிற்கின்றன.''—ப-ர்.

உடனே தம்மைத் தாமாகவே விலங்குகளிடமிருந்து வேறு படுத்திக் கொள்ளத் தொடங்கி விடுகிறார்கள். இந்த நடவடிக்கை அவர்களது வாழ்க்கை அமைப்பால் நெறிப் படுத்தப்படுகிறது. தமது வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்து கொள்வது மூலம் மனிதர்கள் மறைமுகமாகத் தமது மெய்யான பொருளாயத வாழ்க்கையை உருவாக்கிக் கொள் கிறார்கள்.

மனிதர்கள் தமது வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்து கொள்வதற்குரிய மார்க்கம். அவர்கள் இருக்கக் காண்பதும் மற்றும் புனருற்பத்தி செய்ய வேண்டுவதுமான மெய்யான வாழ்க்கைச் சாதனங்களின் தன்மையையே முதலாவதாயும் சார்ந்திருக்கிறது.

[ப. 5] இந்த உற்பத்திப் பாணியை தனிநபர்களின் உயிர் வாழ்வின் புனருற்பத்தி என்பதாக எளிதில் கருதிவிடக் கூடாது. மாறாக, இது இந்தத் தனிநபர்களின் நடவடிக்கையின் ஒரு திட்டவட்டமான வடிவம், அவர்களது வாழ்க்கையை வெளிக்காட்டும் ஒரு திட்டவட்டமான வடிவம், அவர்கள் பங்குக்கு ஒரு திட்டவட்டமான வாழ்க்கைப் பாணி ஆகும். தனி நபர்கள் வாழ்க்கையை வெளிக்காட்டுவது போல அப்படியே அவர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் எத்தகையோர் என்பது அவர்களது பொருள் உற்பத்தியுடன் முற்றும் பொருத்தமாக அமைகிறது, அவர்கள் என்ன உற்பத்தி செய்கிறார்கள் மற்றும் எப்படி உற்பத்தி செய்கிறார்கள் என்பவற்றுடன் ஒருங்கே பொருத்தமாக அமைகிறது. இவ்வாறு தனிநபர்களின் இயல்பு அவர்களது பொருள் உற்பத்தியை நிர்ணயிக்கும் பொருள்வகை நிலைமைகளைச் சார்ந்திருக்கிறது.

மக்கள் தொகை அதிகரிப்புடன் இந்தப்பொருள் உற்பற்றி தலைகாட்ட மட்டுமே செய்கிறது. அதன் பங்குக்கு இந்த மக்கள் தொகை அதிகரிப்பு தனிநபர்களிடையே ஒருவருக்கு ஒருவர் கொள்ளும் ஒட்டுறவை [Verkehr][7] முன் அனுமானிக்கிறது. இந்த ஒட்டுறவின் வடிவமும் மறுபடி பொருள் உற்பத்தியால் நிர்ணயிக்கப்படுகிறது.*

---

* திருத்தி எழுதப்பட்ட பிரதியின் முதல் பெயர்ப்பு இதோடு முடிகிறது. மேலும் இந்தத் தொகுதியில் திருத்தி

## [3. பொருள் உற்பத்தியும் ஒட்டுறவும். உழைப்புப் பிரிவினை மற்றும் சொத்துடைமை வடிவங்கள்: குலமரபு, புராதன, நிலப்பிரபுத்துவ பாணி]

[S. 3] வெவ்வேறு தேசங்கள் அவை தமக்கு இடையே ஏற்படுத்திக்கொண்ட உறவுகள், ஒவ்வொன்றும் அதன் உற்பத்தி சக்திகளை, உழைப்புப் பிரிவினையை மற்றும் உள்நாட்டு ஒட்டுறவை எந்தளவுக்கு வளர்த்துக் கொண்டுள்ளன என்பதைச் சார்ந்திருக்கிறது. இந்தக் கூற்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு தேசம் இன்னொரு தேசத்துடன் கொண்டுள்ள உறவு மட்டுமல்ல, மாறாக தேசத்தின் முழுமையான உள் கட்டுமானம் கூட, அதன் உற்பத்தி மற்றும் அதன் உள்நாட்டு வெளிநாட்டு ஒட்டுறவு ஆகியவற்றின் வளர்ச்சிக் கட்டத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு தேசத்தின் உற்பத்தி சக்திகள் எந்த அளவுக்கு வளர்க்கப் பட்டிருக்கின்றன என்பதை, உழைப்புப் பிரிவினை எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கொண்டு மிகவும் வெளிப்படையாக எடுத்துக் காட்டலாம். ஒவ்வொரு புதிய உற்பத்தி சக்தியும், அது ஏற்கெனவே அறியப்பட்டதான உற்பத்தி சக்திகளின் வெறும் ஓர் அளவுரீதி விரிவாக்கம் அல்ல என்ற அளவுக்கு (எடுத்துக்காட்டாக, புதிய நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொணர்தல்) உழைப்புப் பிரிவினையில் மேலதிகமான வளர்ச்சியை உண்டாக்குகிறது.

ஒரு தேசத்தின் அகத்தேயான உழைப்புப் பிரிவினை முதலில் தொழில்துறை மற்றும் வாணிகத்துறை உழைப்பை விவசாயத்துறை உழைப்பில் இருந்து தனிப் பிரிதலுக்கு இட்டுச் செல்கிறது, இதிலிருந்து நகரம் மற்றும் நாட்டுப்புறம் என்ற பிரிதலுக்கும் அவற்றின் நலன்கள் மோதுறவும் இட்டுச் செல்கிறது. இதன் மேற்பட்ட வளர்ச்சியானது வாணிக உழைப்பை தொழில்துறை உழைப்பில் இருந்து தனிப் பிரியுமாறு இட்டுச் செல்கிறது. அதே சமயம், இந்தப் பல்வேறு கிளைகளின் உள்ளேயான உழைப்புப் பிரிவினை வாயிலாக

---

எழுதப்பட்ட பிரதியின் பிரதான பெயர்ப்பின் வாசகம் அடங்கியுள்ளது.—ப-ர்.

திட்டவட்டமான உழைப்பு வகைகளில் ஒத்துழைக்கும் தனி நபர்கள் மத்தியில் பல்வேறு பிரிவுகள் ஏற்படுகின்றன. இந்தத் தனிப்பட்ட குழுக்களின் ஒப்பீட்டு நிலைமை விவசாயம், தொழில்துறை மற்றும் வாணிகத்தில் (தந்தை வழி முறை, அடிமை முறை, உடைமைப் படிமுறைகள், வர்க்கங்கள்) கையாளப்படும் முறைகளால் நிர்ணயிக்கப்படும். இதே நிலைமைகள், (மேலும் வளர்ச்சியடைந்த ஒட்டுறவு ஏற்படும் பட்சத்தில்), பல்வேறு தேசங்களின் பரஸ்பர உறவுகளிலும் காணப்படும்.

உழைப்புப் பிரிவினையிலான பல்வேறு வளர்ச்சிக் கட்டங்கள் உடைமை உரிமையின் மிகப்பல வேறுபட்ட வடிவங்கள் மட்டுமே, அதாவது உழைப்புப் பிரிவினையில் தற்போது நிலவும் கட்டம், உழைப்பின் சாதனம், கருவி மற்றும் விளைபயன் சம்பந்தப்பட்ட தனி நபர்களின் பரஸ்பர உறவுகளையுங்கூட நிர்ணயம் செய்கிறது.

உடைமையின் முதல் வடிவம் பூர்வகுடி [Stammeigentum] உடைமையாகும்.[8] உற்பத்தியின் வளர்ச்சியற்ற கட்டத்துக்கு இது பொருத்தமானது, இந்த கட்டத்தில் மக்கள் வேட்டையாடுதல் மீன் பிடித்தல் மூலமும், விலங்குகளை வளர்த்தல் அல்லது ஆக உயர்ந்த கட்டத்தில் விவசாயம் மூலமும் வாழ்ந்து வந்தனர். பிந்திய கட்டம் பேரளவிலான சாகுபடி செய்யப்படாத நிலப்பரப்பை முன் அனுமானிக்கிறது. இந்தக் கட்டத்தில் உழைப்புப் பிரிவினை இன்னும் மிக ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது, மற்றும் குடும்பத்தில் நிலவும் இயற்கையான உழைப்புப் பிரிவினையை மேலும் விஸ்தரிப்பதோடு நின்றுவிடுகிறது. எனவே சமுதாயக் கட்டமைப்பு குடும்பத்தின் விரிவாக்கத்தின் அளவுக்கு வரம்பிடப்படுகிறது; தந்தை வழி பாணி குடும்பத் தலைவர்கள் அவர்களின் கீழ் பூர்வ குடி உறுப்பினர்கள், கடைசியாக அடிமைகள். குடும்பத்தில் மறைந்து கிடக்கும் அடிமைமுறை, மக்கள் தொகைப் பெருக்கம், தேவைகளின் அதிகரிப்பு, போர் மற்றும் பண்டமாற்று எனும் இருவகையிலும் வெளி உறவுகள் விஸ்தரிக்கப்படல் இவற்றுடன் சேர்ந்து படிப்படியாக மட்டுமே வளர்ச்சியடைகிறது.

இரண்டாவது வடிவம் பண்டைய சமுதாய மற்றும் அரசு உடைமையாகும். இது பல பூர்வகுடியினர் உடன்பாடு மூலமோ அல்லது வென்று பெறுதல் மூலமோ ஒரு நகரத்துக்குள் ஒன்றிணைவதில் இருந்து குறிப்பாயும் துவங்குகிறது, இது இன்னும் அடிமை முறையுடன் சேர்ந்தே நிலவுகிறது. சமுதாய உடைமையைத் தவிர ஜங்கமத் தன்மையும் பின்னுல் ஸ்தாவரத்தன்மையும், கூடக் கொண்டதான தனியார் சொத்து, சமுதாய உடைமைக்குக் கீழடங்கிய சகஜமற்ற வடிவம் என்ற முறையில், வளர்ச்சியுறுவதை நாம் ஏற்கெனவே காண்கிறோம். தமது உழைக்கும் அடிமைகள் மீது நகரவாசிகள் தமது சமுதாயக் கூட்டுக்குள் மட்டுமே அதிகாரம் வைத்திருக்கிறார்கள், எனவே இந்தக் காரணத்தால் மட்டுமே சமுதாய உடைமை வடிவத்துக்கு அவர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சமுதாய தனியார் சொத்து தான் செயலூக்கமுள்ள நகரவாசிகளை தமது அடிமைகளுக்கு மேலாகவும் எதிராகவும் இந்தத் தன்னியல்பாகப் பெறப்பட்ட அமைப்பு வடிவத்திற்குள் இருக்கும்படி கட்டாயப்படுத்துகிறது. இந்தக் காரணத்தால் இந்தச் சமுதாய உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தின் முழுக் கட்டமைப்பும் அதனுடன் சேர்ந்து மக்களின் அதிகாரமும், குறிப்பாயும் தனியார் ஸ்தாவரச் சொத்து பரிணமித்து வரும் அதே அளவுக்கு அழிவுறுகிறது. உழைப்புப் பிரிவினை ஏற்கெனவே அதிக வளர்ச்சியடைந்துள்ளது. நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண் நிலையை நாம் ஏற்கெனவே காண்கிறோம்; இதற்குப் பின்னுல் நகர நலவுரிமைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அந்த அரசுகளுக்கும், நாட்டுப்புற நலவுரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்த அரசுகளுக்கும் இடையிலான முரண் நிலையும், மற்றும் நகரங்களுக்கு உள்ளேயே தொழில் துறை மற்றும் கடல்வழி வாணிகம் இவற்றுக் கிடையிலான முரண் நிலையும் உள்ளன. நகரத்தார் மற்றும் அடிமைகளுக்கு இடையிலான வர்க்க உறவு இப்போது முழுமையாக வளர்ச்சியடைந்து விட்டது.

தனியார் சொத்துடைமையின் வளர்ச்சியின் விளைவாக

நாம் இங்கு முதல் தடவையாக, நவீன தனியார் சொத்துடைமையுடன், மேலும் விரிவான அளவில் எதை மறுபடியும் காணப் போகிறோமோ, அதே நிலைமைகளை இங்கு காண்கிறோம். ஒரு புறத்தில் தனியார் சொத்தின் ஓரிடக் குவியல், இது ரோமாபுரியில் வெகு முன்பாகவே தொடங்கியது (லிசினியசின் நிலச்சட்டம்[9] நிரூபித்துக் காட்டுவது போல), மற்றும் உள்நாட்டுப் போர்களின் காலம் முதல், குறிப்பாயும் சக்கரவர்த்திகளின் கீழ் மிகவும் வேகமாக நடைபெற்றது. மறுபுறத்தில் இதனுடன் சேர்ந்து பிளபியன் சிறுதர விவசாயிகள் பாட்டாளிகளாக மாற்றமுறுவது, சொத்துடைமை நகரத்தாருக்கும் அடிமைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் இவர்கள் இருந்த காரணத்தால், ஒரு சுயேச்சையான வளர்ச்சியை என்றுமே அடையவில்லை.

மூன்றும் வடிவிலான உடைமை நிலப்பிரபுத்துவ அல்லது சமுதாயப் படிநிலை சொத்துடைமையாகும். பண்டைக் காலம் நகரம் மற்றும் அதன் சிறு பரப்பில் இருந்து தொடங்கியது என்றால் மத்திய காலங்கள் நாட்டுப்புறத்தில் இருந்து தொடங்கின. இந்த வேறுபட்ட துவக்க நிலை அந்தக் காலத்தில் நிலவிய அடர்த்திக் குறைவான மக்கள் தொகையால் நிர்ணயிக்கப்பட்டது. அப்போது மக்கள் தொகை ஒரு பெரிய பரப்பில் சிதறிக்கிடந்தது, படையெடுப்பாளர்களால் இது பெருமளவுக்கு அதிகரிக்கப்படவில்லை. கிரீஸ் மற்றும் ரோமாபுரிக்கு மாறுபட்ட முறையில் துவக்கத்தில் ரோமன் படையெடுப்புக்களாலும் அதனுடன் முதலில் சம்பந்தப்பட்டிருந்த விவசாயம் பரவலாகியதாலும் உருவான மேலும் விரிவான பிரதேசத்தில் நிலப்பிரபுத்துவ வளர்ச்சி விரிவடைகிறது. ரோமன் சாம்ராஜ்யத்தின் நலிவும், மற்றும் காட்டுமிராண்டிகளால் அது படையெடுத்து வெல்லப்பட்டதும் காரணமாக கடைசி நூற்றாண்டுகளில் பல உற்பத்தி சக்திகள் நாசமாக்கப்பட்டன. விவசாயம் நலிவுற்றது, சந்தை இல்லாத காரணத்தால் தொழிற்துறை அழிவுற்றது வாணிகம் மறைந்தொழிந்தது, அல்லது பலாத்காரமாக நிறுத்தி வைக்கப்பட்டது; நாட்டுப்புற, நகரப்புற மக்கள் தொகை குறைந்து விட்டது. இந்த நிலைமைகளில் இருந்தும், இவற்றால் நிர்ணயிக்கப்பட்ட படை

யெடுத்து வெல்வதன் அமைப்புத்துறை பாணியின் விளைவாயும் நிலப்பிரபுத்துவ சொத்துடைமை ஜெர்மானிய ராணுவ அரசியல் சட்டத்தின் செல்வாக்கின் கீழ் வளர்ந்தது. பழங்குடி மற்றும் சமுதாய உடைமையைப் போலவே இது மீண்டும் ஒரு சமுதாயக் கூட்டை [Gemeinwesen] அடிப்படையாக்கியே இருக்கிறது. ஆனால் அதற்கு எதிராக நிற்கும் நேரடியாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வர்க்கம், பழைய குடிவாழ் கூட்டுகளில் இருந்தது போன்ற அடிமைகளல்ல, மாறாக பண்ணை அடிமைகளாக்கப்பட்ட சிறு விவசாயிகளே. நிலப்பிரபுத்துவம் முழுமையாக வளர்ச்சியடைந்த உடனேயே நகரங்கள் பாலான பகைமையும் உதித்தெழுகிறது. நிலவுடைமையின் மேற்கட்டு வரிசை முறை கட்டமைப்பும் அதனுடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் படையினரின் ஆயுதமேந்திய அமைப்புகளும் பண்ணையடிமைகள் மீது ஆதிக்கம் செலுத்த பிரபுக்குலத்துக்கு அதிகாரம் அளித்தன. இந்த நிலப்பிரபுத்துவ அமைப்பு அடக்கி ஆளப்படும் உற்பத்தி செய்யும் வர்க்கத்துக்கு எதிரான ஸ்தாபனம் என்ற முறையில் பழைய சமுதாய உடைமையின் அதே அளவுக்கு இருந்தது. ஆனால் ஸ்தாபன வடிவமும் நேரடியாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோருடனான உறவும், வேறுபட்ட உற்பத்தி நிலைமைகள் காரணமாக வேறாக இருந்தன.

இந்தப் பிரபுத்துவ அமைப்பு முறையிலான நிலவுடைமைக்கு, நகரங்களில் கூட்டுமுறைச் சொத்துடைமை உருவில், அதன் சரியிணையான தொழில்களின் பிரபுத்துவ பாணி அமைப்பு இருந்தது. இங்கு சொத்துடைமை [S. 4] பிரதானமாயும் ஒவ்வொரு தனி நபரின் உழைப்பிலும் அடங்கியிருந்தது. அமைப்புத் திரட்சியுள்ள கொள்ளைக்காரப் பிரபுக்குலத்துக்கு எதிராக ஒன்றிணைய வேண்டிய அவசியம், தொழிலதிபர் அதே சமயம் வாணிகராயும் இருக்கும் ஒரு காலத்தில் சமுதாயப் பாதுகாப்புள்ள சந்தைகளின் தேவை, எழுச்சியுற்று வரும் நகரங்களுக்குள் திரண்டுமொய்த்து வரும் தப்பியோடிய பண்ணையடிமைகள் இடையே பெருகிவரும் போட்டி, நாடு முழுவதன் பிரபுத்துவக் கட்டமைப்பு, இவை யாவும் ஒன்று சேர்ந்து கைவினைச் சங்கங்களைத்

தோற்றுவித்தன. தனிப்பட்ட கைவினைஞர்களிடம் படிப் படியே சேகரமான சிறு மூலதனமும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் முன்னே அவர்கள் நிலவரமான எண்ணிக்கை யில் இருந்து வந்ததும், கைவினைப் பணியாளன் மற்றும் தொழில் பயில்வோனின் உறவை உருவாக்கியது. இது நாட்டுப்புறத்தில் இருப்பது போன்றதான ஒரு மேற்கட்டு வரிசையை நகரத்திற்கும் கொண்டுவந்தது.

இவ்வாறாக, பிரபுத்துவ சகாப்தத்தின் போது நிலவிய சொத்துடைமையின் பிரதான வடிவில், ஒருபுறம் அதனுடன் பிணைக்கப்பட்ட அடிமை உழைப்புடன் சேர்ந்த நிலச் சொத் தும், மறுபுறம் கைவினைப் பணியாளர் உழைப்பை ஆதிக்கம் செய்யும் சிறு மூலதனம் கொண்ட தனிநபரின் உழைப்பும் இடம் பெற்றிருந்தன. சிறு வீத மற்றும் புராதனமான நிலச் சாகுபடி முறை மற்றும் கைவினைத் தொழில் மாதிரியிலான தொழில் துறை எனும் உற்பத்தியின் வரம்பிட்ட நிலைமை களால் இவை இரண்டின் அமைப்பு முறையும் நிர்ணயிக்கப் பட்டன. நிலப் பிரபுத்துவம் மலர்ந்து செழித்த நாட்களில் உழைப்புப் பிரிவினை எதுவும் இருக்கவில்லை. ஒவ்வொரு நாடும் தன்னுள் தானே நகரம் மற்றும் நாட்டுப்புறத்தின் முரண் நிலையைத் தாங்கி நின்றது, ஆதீனங்களாகப் பிரிவினை செய்ததானது நிச்சயமாயும் பலமாகத் திட்டமிடப்பட்ட ஒன்றாகும். ஆனால் நாட்டுப்புறத்தில் அரசகுலம், பிரபுக்குலம் சமயகுருமார் மற்றும் விவசாயிகள் எனும் பாகுபாடும், நகரங்களில் கைவினை ஆண்டான்கள், கைவினைப் பணியாட் கள் தொழில் பயில்வோர் மற்றும் விரைவில் அந்தக் கூலித் தொழிலாளர் கும்பல் எனும் பாகுபாடும் தவிர, முக்கிய மான எந்தப் பிரிவினையும் நடைபெறவில்லை. விவசாயத்தில் இது மாறிமாறிச் சாகுபடி செய்யும் ஏற்பாட்டால் கடின மாக்கப்பட்டது, இதை ஒட்டியே விவசாயிகள் தாமே புரிந்து வந்த குடிசைத் தொழில் தோன்றியது. தனிப்பட்ட தொழில்கள் சம்பந்தப்பட்டவரை தொழில் துறையில் உழைப்புப் பிரிவினை இல்லவே இல்லை. மற்றும் அவற்றின் இடையேயோ மிகச் சொற்பமாக இருந்தது. தொழில் துறையும் வாணிகமும் தனிப் பிரிக்கப்பட்ட நிலை பழைய

நகரங்களில் ஏற்கெனவே இருக்கக் கண்டோம். புதிய நகரங்களில் அது, நகரங்கள் பரஸ்பர உறவு பூண்ட போது பின்னுல் மட்டுமே வளர்ச்சியடைந்தது.

மேலும் பெரிய பிரதேசங்களை பிரபுத்துவ முடியரசுகளாக இணைப்பது நகரங்களுக்கு இருந்தது போலவே நிலவுடைமைப் பிரபுக்குலத்துக்கும் அவசியமாயிற்று. ஆகவே, ஆளும் வர்க்கத்தின் பிரபுக்குலத்தின் அமைப்பில், எங்கும் ஒரு முடிமன்னர் தலைமை தாங்கக் கண்டோம்.*

### [4. வரலாற்றின் பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் சாராம்சம். சமுதாய வாழ்நிலை மற்றும் சமுதாய உணர்வு]

[S. 5] எனவே, ஒரு திட்டவட்டமான வழியில் உற்பத்தித் திறனுடன் செயல்படும் திட்டவட்டமான தனிநபர்கள்** திட்டவட்டமான சமுதாய மற்றும் அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறுர்கள் என்பதே மெய்நடப்பு. அனுபவவாத அவதானிப்பு, ஒவ்வொரு தனி எடுத்துக் காட்டிலும் அனுபவவாத முறையிலும் எவ்விதமான மருட்டுதலோ ஊகக் கற்பனையோ இன்றியும் உற்பத்தியோடான சமூக மற்றும் அரசியல் கட்டமைப்பின் தொடர்பை வெளிக்கொணர வேண்டும். திட்டவட்டமான தனிநபர்களின் வாழ்க்கை நடைமுறையில் இருந்து சமுதாயக் கட்டமைப்பும் அரசும் தொடர்ச்சியாகப் பரிணமித்து வருகின்றன, ஆனுல் இந்தத் தனிநபர்களை அவர்கள் தமது சொந்த அல்லது இதர மக்களது கற்பனையில் தோற்றமளிப்பது போலன்றி அவர்கள் உண்மையிலேயே இருப்பது போலக்

* மேலும் இந்தக் கையெழுத்துப் பிரதியில் இப்பக்கத்தின் மீதிப்பகுதி வெறுமையாக விடப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்தில் வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் சுருக்கம் தொடங்குகிறது. சொத்துடைமையின் நாலாவது முதலாளித்துவ வடிவம் பற்றிய விளக்கம் அத்தியாயத்தின் 4ஆம் பகுதி, பிரிவுகள் 2-4ல் தரப்பட்டுள்ளது.—ப-ர்.

** மூலவாசகம்: ''திட்டவட்டமான உற்பத்தி உறவுகளின் கீழான திட்டவட்டமான தனிநபர்கள்.''—ப-ர்.

கருதிப்பார்க்க வேண்டும். அதாவது அவர்கள் செயல் புரியும் வகையில், உற்பத்தி செய்யும் வகையில், எனவே அவர்கள் திட்டவட்டமான பொருள்வகை வரம்புகளுக்குள் தமது சித்தத்திடமிருந்து சுயேச்சையான முன் அனுமானங்கள் மற்றும் நிலைமைகளின் கீழ் வேலை செய்யும் விதத்தில் கருதிப் பார்க்க வேண்டும்.*

கருத்துக்கள், கருத்தோட்டங்கள், உணர்வு ஆகியவற்றின் படைப்பு, முதலில் மனிதர்களின் பொருள்வகை நடவடிக்கை மற்றும் பொருள்வகை ஒட்டுறவுடன், மெய் வாழ்க்கையின் நடைப்பாணியுடன் நேரடியாக இணைந்துப் பின்னுற்றுக் கிடக்கிறது. கருதிப் பார்த்தல் சிந்தித்தல், மனிதர்களின் அறிவின் ஒட்டுறவு ஆகியவை இந்தக் கட்டத்தில் அவர்களது பொருளாயத நடத்தையின் நேரடி ஒழுக்காகத் தோற்றமளிக்கின்றன. ஒரு மக்களினத்தின் அரசியல், சட்டங்கள், தார்மிக ஒழுங்கு, சமயம், இயக்கமறுப்புத் தத்து

* பின்வரும் பகுதி கையெழுத்துப் பிரதியில் அடிக்கப்பட்டுள்ளது: ''இந்தத் தனிநபர்கள் உருவாக்கும் கருத்துக்கள் ஒன்று இயற்கையுடனுன அவர்களது உறவுகளைப் பற்றியதாகவோ, அல்லது அவர்களது பரஸ்பர உறவுகளைப் பற்றியதாகவோ அல்லது அவர்களது சொந்த இயல்பு பற்றியதாகவோ ஆன கருத்துக்களாகும். இந்த இடங்களில் எல்லாம் அவர்களது கருத்துக்கள் மெய்யோ அல்லது பிரமையோ ஆன அவர்களது உண்மை உறவுகள் மற்றும் நடவடிக்கைகளின் அவர்களது பொருள் உற்பத்தி மற்றும் ஒட்டுறவின் அவர்களது சமூக மற்றும் அரசியல் ஸ்தாபனத்தின் உணர்வு பூர்வமான வெளிப்பாடு என்பது தெளிவு, மெய்யான பொருள்வகையில் பரிணமித்துள்ள தனிநபரின் உள்ளுணர்வுக்கும் கூடுதலாக தனிப்பட இன்னொரு உள்ளுணர்வு முன் அனுமானிக்கப்படும் பட்சத்தில் மட்டுமே இதற்கு எதிரான அனுமானம் சாத்தியமாகும். இந்தத் தனிநபர்களின் உண்மையான உறவுகள் பற்றிய உணர்வு பூர்வமான வெளியீடு பிரமையாக இருக்குமானுல், அவர்கள் தமது கற்பனையில் எதார்த்தத்தைத் தலைகீழாகப் புரட்டுவார்களானுல், பின்னர் இது தன் வகைக்கு அவர்களது வரம்புக்குட்பட்ட பொருள்வகை பாணி நடவடிக்கையின் அதிலிருந்து உதித்தெழும் அவர்களது வரம்புக்குட்பட்ட சமுதாய உறவுகளின் விளைவாக இருக்கும்.''—ப-ர்.

வம் இத்தியாதிகளின் நடைப்பாணியில் வெளியிடப்படும் அறிவியல் படைப்புக்கும் இதுவே பொருந்தும். மனிதர்கள், மெய்யான செயலூக்கமுள்ள மனிதர்கள், அவர்களது கருத் தோட்டங்கள், கருத்துக்கள் இத்தியாதிகளின் படைப்பாளி கள் ஆவர், ஏனெனில் அவர்கள் தமது உற்பத்தி சக்திகளின் திட்டவட்டமான வளர்ச்சியாலும், அதன் ஆக அதிகபட்ச வடிவங்கள் வரையிலான இவற்றுக்கு பொருத்தமான. ஒட்டுறவாலும் நெறியாக்கம் செய்யப்படுகிறார்கள்.* உணர்வு என்பது உணர்வு பூர்வமான இருத்தல் தவிர வேறு எதுவாக வும் இருக்க முடியாது, மனிதர்களின் இருத்தல் என்பது அவர்களது மெய்யான வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்காகும். ஒரு காமெரா இருட்டறையில் தோன்றுவது போன்று எல்லா சித்தாந்தத்திலும் மனிதர்களும் அவர்களது புறநிகழ்வுகளும் தலை கீழாகத் தோன்றுமானால் இந்தப் புலப்பாடு, அவர்களது உடல் சார்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கில், கண் விழி யின் பின்திரையில் விழும் பொருள் தலை கீழாக்கப் படுவது போல, அந்த அளவுக்கு அவர்களது வரலாற்று வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கிலும் ஏற்படுகிறது.

விண்ணில் இருந்து மண்ணுக்கு இறங்கும் ஜெர்மன் தத்துவஞானத்துக்கு நேர் மாறுபாடான முறையில் இங்கு நாம் மண்ணில் இருந்து விண்ணுக்கு ஏறுகிறோம். அதாவது உடலுருவில் விளங்கும் மனிதர்களை வந்தடையும் பொருட்டு, நாம் மனிதர்கள் என்ன சொல்கிறார்களோ, கற்பனை செய் கிறார்களோ, கருதிப்பார்க்கிறார்களோ அதிலிருந்தும், கூறப் பட்ட, சிந்திக்கப்பட்ட, கற்பனை செய்யப்பட்ட, கருதிப் பார்க்கப்பட்ட மனிதர்களிடம் இருந்தும் நாம் இயங்கத் தொடங்குவதில்லை. நாம் மெய்யான செயலூக்கமுள்ள மனி

* மூலவாசகம்: ''மனிதர்களே மற்றும் துல்லியமாயும் அவர்களது பொருளாயத வாழ்க்கை, அவர்களது பொருள் வகை ஒட்டுறவு மற்றும் சமுதாய அரசியல் கட்டமைப் பிலான அதன் இனிமேற்பட்ட வளர்ச்சி ஆகியவற்றால் நெறியாக்கம் செய்யப்படும் மனிதர்களே அவர்களது கருத் தோட்டங்கள் கருத்துக்கள் இத்தியாதிகளைப் படைப்பவர் கள்.—ப-ர்.

தர்களிடமிருந்து இயங்கத் தொடங்குகிறோம், மற்றும் அவர்களது மெய்யான வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படையில் இந்த வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கின் சித்தாந்த மறிவினைகள் மற்றும் எதிரொலிகளின் வளர்ச்சியை நாம் நிதர்சனப்படுத்திக் காட்டுகிறோம். மனித மூளையில் உருவாகும் பொய்த் தோற்றங்களும் கூடத் தவிர்க்க முடியாத வகையில் அவர்களது பொருளாயத வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கின் மேம்பட்ட உருவங்களேயாகும். இது அனுபவவாத மூலம் சரிபார்க்க இயல்வதும், மற்றும் பொருள் வகைமெய்க் கோள்களுக்குக் கட்டுப்பட்டதுமாகும். இவ்வாறாக தார்மிக ஒழுங்கு, சமயம், இயக்க மறுப்புவாதம், மீதமுள்ள சித்தாந்தம் அனைத்தும் மற்றும் பொருத்தமான அவற்றின் உணர்வின் வடிவங்களும் இனி மேல் சுயேச்சையின் சாயலைக்கூட நீடித்து வைத்திருக்க முடியாது. அவற்றுக்கு வரலாறு இல்லை, வளர்ச்சி இல்லை, ஆனால், தமது பொருள் உற்பத்தியையும் பொருளாயத ஒட்டுறவையும் வளர்த்து வரும் மனிதர்கள், இதனுடன் கூடவே அவர்களது மெய்யான வாழ்நிலையை, அவர்களது சிந்தனையை மற்றும் அவர்களது சிந்தனையின் விளைபயனை மாற்றிக் கொள்கிறார்கள். வாழ்க்கை உணர்வால் நிர்ணயிக்கப்படுவதில்லை, ஆனால் உணர்வு வாழ்க்கையால் நிர்ணயிக்கப்படுகிறது. முதல் அணுகுமுறையில் வாழும் நபர் என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்படும் உணர்வு துவக்க நிலையாக இருக்கும்; இரண்டாவது முறையில்—இது மெய்யான வாழ்க்கையுடன் பொருந்தியதாகும்—உண்மையான வாழும் நபர்கள் தாமே துவக்க நிலையாக விளங்குவர், மற்றும் உணர்வு என்பது முற்றமுழுமையாயும் அவர்களது உணர்வாகவே கருதப்படும்.

இந்த அணுகு முறையில் முற்கோள்கள் இல்லை என்று சொல்ல முடியாது. இது மெய்யான முற்கோள்களுடன் துவங்குகிறது, அவற்றை ஒரு கணமும் கைவிட்டு விடுவதில்லை. இதன் முற்கோள்கள் மனிதர்களே, எவ்விதமான நம்ப முடியாத தனிமை நிலையிலோ மற்றும் இறுக்க நிலையிலோ அல்லாத, மாறாக திட்டவட்டமான நிலைமைகளிலான அவர்களின் மெய்யபடியான அனுபவவாத ரீதியில்

கண்டுணரக் கூடியதான, வளர்ச்சி நிகழ்ச்சிப் போக்கிலான மனிதர்களே ஆவர். இந்தச் செயலூக்கமான வாழ்க்கை—நிகழ்ச்சிப் போக்கு வருணிக்கப்பட்ட உடனேயே, வரலாறு, அனுபவவாதிகள் (அவர்கள் இன்னமும் கருத்தியல் நிலையிலேயே உள்ளனர்) விஷயத்தில் போல வழக்கற்ற விவரங்களின் ஒரு தொகுப்பாகவோ, அல்லது கருத்துமுதல்வாதிகள் விஷயத்தில் போன்று கற்பனை செய்து கொள்ளப்பட்ட கருப்பொருட்களின் கற்பனை செய்து கொண்ட செயல்பாடாகவோ இருக்காது.

எங்கு கற்பனைக் கோட்டை முடிவுறுகிறதோ—மெய்யான வாழ்க்கையில்—அங்கு மெய்யான நேருறுதியான விஞ்ஞானம் தொடங்குகிறது: மனிதர்களின் வளர்ச்சியின் எதார்த்த நடைமுறையின் மெய்யான செயல்பாட்டின் உருவமைப்பு தொடங்குகிறது. உணர்வு பற்றிய வெற்றுப் பேச்சு முடிவுறுகிறது, மெய்யான அறிவு அதன் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். எதார்த்தம் சித்திரித்துக் காட்டப்படும் போது, அறிவியலின் ஒரு சுதந்திரமான துறை என்ற முறையில் தத்துவவியல் அதன் இருத்தல் சாதனத்தை இழந்துவிடுகிறது. அதிகபட்சமாகப் போனுல், அதன் இடத்தை ஆகப்பொதுவான விளைவுகளைத் தொகுத்துக் கூறுவது மூலமும், மனிதர்களின் வரலாற்று வளர்ச்சியை அவதானிப்பதில் இருந்து உதித்தெழும் கருத்தாக்கங்கள் மூலமும் மட்டுமே நிறைவு செய்ய முடியும். மெய்யான வரலாற்றில் இருந்து விலகி நின்று பார்த்திடில், இந்தக் கருத்தாக்கங்களுக்குத் தமக்கென எவ்வித மதிப்பும் கிடையாது. வரலாற்று விவரப் பொருட்களை முறைப்படுத்துவதையும், அதன் தனியான படிநிலைகளின் வரிசை முறையினைச் சுட்டுவதையும் எளிதாக்க உதவ மட்டுமே அவற்ருல் முடியும். வரலாற்றின் சகாப்தங்களை நேர்த்தியாகச் சரி செப்பம் செய்வதற்குத் தத்துவ இயல் வழங்குவது போன்ற எந்த ஒரு முறைப்பட்டியையோ அல்லது வரைமுறையினையோ அவற்ருல் எவ்வழியிலும் வழங்க முடியாது. நேர் மாருக, பழைய சகாப்தத்தினுடையதோ அல்லது இன்றைய சகாப்தத்தினுடையதோவான நமது வரலாற்று விவரப் பொருட்களை

நாம் அவதானம் செய்து முறைப்படுத்த ஒருங்கும் போது—மெய்யாக விளக்கிக் காட்டும்போது—மட்டுமே நமது சங்கடங்கள் தொடங்குகின்றன. இந்தச் சங்கடங்களை அகற்றும் பணி முற்கோள்களால் நெறி செய்யப்படுகிறது. அவற்றை இங்கு எடுத்துச் சொல்வது முற்றிலும் சாத்தியமல்ல. ஆனால் அவற்றை ஒவ்வொரு சகாப்தத்தினதும் மெய்யானவாழ்க்கை நிகழ்ச்சிப் போக்கு மற்றும் தனிநபர்களின் செயல்பாடு குறித்த ஆய்வினல் மட்டுமே தெளிவுபடுத்த முடியும். சித்தாந்தவாதிகளுக்கு மாறுபட்ட தனிப்பண்பாக நாம் பயன்படுத்திவரும் இந்தக் கருத்தாக்கங்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து அவற்றை வரலாற்று உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டி விளக்குவோம்.*

## [II]

### [1. மனிதனின் மெய்யான விடுதலைக்கான நிபந்தனைகள்]

[1] தத்துவவியல் இறைஞானம் ஆதாரப்பகுதி மற்றும் எல்லாச் சப்புச்சவறுகளையும் ''தன்னுணர்வுக்கு'' குறுக்கிவிடுவது மூலமும், மனிதனை என்றுமே அடிமை நிலையில் வைத்திருக்காத இந்தத் தொடர்களின் ஆதிக்கத்தில் இருந்து, ''மனிதனை விடுவிப்பது'' மூலமும் மனிதனின் விடுதலையை ஓர் அடியும் கூட முன்கொண்டு செல்ல முடியாது என்று அவர்களுக்கு விளக்கிக் கூறுவது மூலம் நமது மதிநுட்பத் தத்துவ இயலாளர்களுக்கு அறிவொளி வழங்குவதற்கு நாம் நிச்சயம் சிரமப்படப் போவதில்லை என்பது கண்கூடு.** மெய்யான உலகில் மெய்யான வழிமுறைகளைக் கையாளுவதன்

* திருத்தப்பட்ட பிரதியின் பிரதானப் பகர்ப்பு இங்கு முடிவுறுகிறது. மேலும் இந்தத் தொகுதி மூலக் கையெழுத்துப் பிரதியின் மூன்று பகுதிகளுடன் தொடர்கிறது.—ப-ர்.

** ஓரக்குறிப்புகள் மார்க்ஸ் அளித்தவை: ''விடுதலை மற்றும் மெய்யான விடுதலை.'' ''மனிதன். அலாதியான ஒருவன். தனிநபர்.'' ''பூகர்ப்பவியல் முறையில், நீர்வள இயல் முறையில் இத்தியாதி நிபந்தனைகள். மனித உடல். தேவையும் உழைப்பும்.''—ப-ர்.

மூலம் மட்டுமே மெய்யான விடுதலையை அடைவது சாத்தியம் என்பதையும், நீராவி எஞ்சின், நூல் நூற்கும் இயந்திரம், மற்றும் நூற்புக்கதிர்ப் பொறி இல்லாமல் அடிமை முறையை ஒழிக்க முடியாது என்பதையும், மேம்படுத்தப்பட்ட விவசாயம் இல்லாமல் பண்ணையடிமை முறையை ஒழிக்க முடியாது என்பதையும், மற்றும் போதுமான தரத்திலும் அளவிலும் உணவும் பானமும், வீடுகளும் உடைகளும் பெற இயலாதவரை பொதுப்பட மக்களை விடுதலை செய்ய முடியாது என்பதையும் நாம் அந்த தத்துவ இயலாளர்களுக்கு விளக்கிக் கூறப் போவதில்லை. ''விடுதலை'' என்பது ஒரு வரலாற்றுச் செயல் ஒரு மானசிகச் செயல் அல்ல. மற்றும் இது வரலாற்று நிலைமைகளால், தொழில்துறை, வாணிக விவசாய வளர்ச்சியால், ஒட்டுறவு நிலைமைகளால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது...* [2] பிறகு அடுத்தபடியாக, அவற்றின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களுக்கு ஏற்றபடி, ஆதாரப் பகுதி, கருப்பொருள், தன்னுணர்வு மற்றும் தூய விமர்சனம் எனும் முட்டாள்தனம் சமய மற்றும் இறைஞான முட்டாள்தனம் கொண்டுவரப்பட்டு, இது பின்னல் அவர்கள் தமது வளர்ச்சியில் போதிய அளவு அதிகமாக முன்னேறிய போது பின்னல் மீண்டும் அகற்றப்பட்டது.** அற்பமான வரலாற்று வளர்ச்சி மட்டுமே நடைபெற்றுவரும் ஒரு நாடான ஜெர்மனியில் இந்த மானசிகமான வளர்ச்சிகள் இந்த மிகு புகழ்பாடும், திறனற்ற அற்பநிகழ்வுகள் வரலாற்று வளர்ச்சி இல்லாக்குறைக்கு ஒரு மாற்றீடாக உதவுகின்றன மற்றும் அவை வேரூன்றிவிடுகின்றன, அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும். ஆனல் இந்தப் போராட்டம் வட்டார முக்கியத்துவமே உடையது.***

---

* கையெழுத்துப் பிரதி இங்கு சேதமடைந்திருக்கிறது: ஏட்டின் கீழ்ப்பகுதி கிழிந்திருக்கிறது, வாசகத்தில் ஒரு வரி காணப்படவில்லை.—ப-ர்.

** ஓரக்குறிப்புகள் மார்க்ஸ் அளித்தவை: ''தொடர்களும் எதார்த்த இயக்கமும். ஜெர்மனியில் தொடர்களின் முக்கியத்துவம்.''—ப-ர்.

*** ஓரக்குறிப்புகள் மார்க்ஸ் அளித்தவை: ''மொழி என்பது எதார்த்தத்தின் மொழியாகும்.''—ப-ர்.

## [2. ஃபாயர்பாக்கின் சிந்திப்புப் பாணி மற்றும் முரண்பாடான பொருள்முதல்வாதத்துக்கு விமரிசனம்]

...* உண்மையில் ஒரு எதார்த்தமான பொருள்முதல்வாதிக்கு அதாவது கம்யூனிஸ்டுக்கு இது, உலகைப் புரட்சிமயமாக்கும் ஒரு பிரச்சினை, நிலவில் இருப்பவற்றை நடைமுறையில் தாக்கி மாற்றம் செய்யும் ஒரு பிரச்சினையாகும். சில சமயங்களில் ஃபாயர்பாக்கிடம் இத்தகைய கருத்துக்களை நாம் காணும் போது, அவை தனிப்பட்ட ஊகம் தவிர அதிகமான எதுவுமல்ல என்பதையும், இங்கு வளர்ச்சியடையக் கூடியதான கருமுளைகள் தவிர வேறு எதுவாகவும் கருதிப்பார்க்கத் தேவையற்றதும், அவரது பொதுவான கண்ணோட்டத்தில் மிகவும் அற்பமான செல்வாக்கே செலுத்தக் கூடியதுமான கருத்துக்களே என்பதையும் காண வேண்டும். புலனுணர்வு உலகம் பற்றிய ஃபாயர்பாக்கின் ''கருத்தோட்டம்'' ஒருபுறத்தில் அதன் வெறும் சிந்திப்பு அளவுக்குள்ளும் மறுபுறத்தில் வெறும் மன உணர்விலும் அடங்கிவிடுகிறது. ''மெய்யான வரலாற்று மனிதன்'' என்பதற்குப்பதில் அவர் ''மனிதன்'' என்று கூறுகிறுர். ''மனிதன்'' என்பது உண்மையில் ''ஜெர்மானியன்'' ஆகும். முதல் சந்தர்ப்பத்தில், புலனுணர்வு உலகம் பற்றிய சிந்திப்பில் அவர் தமது உணர்வு மற்றும் மன அலைக்கு முரணுன காரியங்கள் மீது அவசியமாயும் விளக்கம் தருகிறுர். இது அவர் முன் அனுமானிக்கும் இசைவை, புலனுணர்வு சார்ந்த உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும், குறிப்பாக மனிதனிலும் இயற்கையிலுமான இசைவைக் குலைக்கிறது.** இந்தக் குலைவை அகற்றுவதற்கு

---

* கையெழுத்துப் பிரதியில் 5 பக்கங்கள் காணப்படவில்லை.—ப-ர்.

** பி. கு. ஃபாயர்பாக்கின் குறைபாடு அவர் அப்பட்டமாயும் கண்கூடான புலனுணர்வு தோற்றத்தை, புலனுணர்வு மெய்நடப்புகளின் மேலும் சரிநுட்பமான ஆராய்ச்சியால் நிலைநாட்டப்பட்டதான புலனுணர்வு எதார்த்தத்துக்குக் கீழடக்குகிறுர் என்பதல்ல, மாறுக கடைசியாகப் பார்க்குமிடத்து அவர் புலனுணர்வு சார்ந்த உலகை அதை ஒரு ''தத்துவஞானியின்'' ''கண்'' கொண்டு அதாவது

அவர், ''அப்பட்டமாயும் கண்கூடானதை'' மட்டுமே காணும் அபசாரமான ஒன்று மற்றும் நடப்புக்களின் ''மெய் யான தன்மையைக்'' காணும் மேலும் உயர்வான தத்துவ இயல் ரீதியான ஒன்று ஆகிய ஓர் இரட்டைப் புலனறிவில் புகல் தேட வேண்டும், தம்மைச் சுற்றிலும் உள்ள புல னுணர்வு சார்ந்த உலகம் எவ்வாறு அனுதிகாலம் தொட்டு நேரடியாக வழங்கப்பட்ட ஒரு சாதனமல்ல, என்றும் ஒரே மாதிரி நிரந்தரமாக நீடிக்கும் ஒன்றல்ல என்பதையும், மாருக அது தொழில் துறையின் மற்றும் சமுதாய நிலையின் விளைபயன் என்பதையும், மற்றும் உண்மையிலேயே அது ஒரு வரலாற்று விளைபயன் என்ற பொருளில், பரஸ்பரம் முந்திய தலைமுறையின் தோள்கள் மீது நின்று தனது தொழில் துறையையும் ஒட்டுறவையும் வளர்த்துக் கொண்ட, மாறிய தேவைகளுக்கு ஏற்ப தன் சமுதாய அமைப்பை மாற்றியமைத்துக் கொண்ட தலைமுறைகளின் முழு வரிசை யின் செயல்பாட்டின் விளைவு என்பதையும் அவர் காண்ப தில்லை. ஆகச் சாமான்யமான ''புலனுணர்வு ரீதியில் அத் தியாவசியமான'' சாதனங்களும் கூட சமுதாய வளர்ச்சி, தொழில்துறை மற்றும் வாணிக ஒட்டுறவு மூலம் மட்டுமே அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட எல்லாப் பழ மரங்களையும் போலவே செர்ரி பழமரம் சில நூற்றுண்டு களுக்கு முன்பு மட்டுமே நமது மண்டலத்தில் வாணிகத்துறை மூலம் மறு நடவு செய்யப்பட்டது என்பது நன்கறிந்த விஷ யம். எனவே ஃபாயர்பாக்குக்கு இது, ஒரு திட்டவட்டமான யுகத்தில் ஒரு திட்டவட்டமான சமுதாயத்தின் இந்தச் செயல் மூலம் [9] மட்டுமே ''புலனுணர்வு ரீதியில் அத்தியா வசியமானதாக'' மாறியது.

இதற்கிடையே, காரியங்கள் உண்மையிலேயே இருப் பதையும் மற்றும் நிகழ்வதையும் போலவே இவ்வாறு நாம் கருதிப்பார்க்கும் போது ஆழமான தத்துவவியல் பிரச்சினை ஒவ்வொன்றுக்கும் தீர்வு காணப்படுகிறது. இது முற்றும் நேரடியாக ஓர் அனுபவவாத மெய் நடப்பாகத் தீர்வு காணப் ''கண்ணுடி'' மூலம் பார்ப்பது தவிர வேறுவழியில் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்பதே ஆகும்.

படுவதைப் பின்னுல் மேலும் தெளிவாகக் காணலாம். உதாரணமாக, ''சாரப்பொருள்'' மற்றும் ''தன் உணர்வு'' சம்பந்தமான அறிவாழங்காண முடியாத உன்னதப் படைப்புகள்* எல்லாம் எதிலிருந்து பிறந்தனவோ அந்த மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு பற்றிய முக்கியமான பிரச்சினை (''இயற்கை மற்றும் வரலாற்றிலான எதிர் நிலை பற்றி'' (ப. 110) இவை இரண்டும் தனித்தனி விஷயங்கள் போலவும் மனிதன்[10] தனக்கு முன்பாக எப்போதும் ஒரு வரலாற்று ரீதியான இயற்கையையும் ஒரு இயற்கையான வரலாற்றையும் கொண்டிருக்கவில்லை போலவும் கருதி, புருனே பேசுகிருர்), புகழ் வாய்ந்த ''இயற்கையுடனுன மனிதனது ஒருமைப்பாடு'' தொழில்துறையில் எப்போதும் இருந்து வந்திருக்கிறது என்பதையும், தொழில்துறையின் குறைந்த அல்லது அதிகரித்த வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு சகாப்தத்திலும் பல்வேறு வடிவங்களில் இருந்து வந்திருக்கிறது. இதற்கு இணையான அடிப்படையில் மனிதனது உற்பத்தி ஆற்றல்கள் வளர்ச்சி பெறும் வரையில் இயற்கையுடன் மனிதன் நடத்தும் ''போராட்டம்'' போன்று இருந்து வந்திருக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ளும் போது அது தானுகவே நொறுங்கிவிடுகிறது. தொழில்துறை, வாணிகம், பொருளுற்பத்தி மற்றும் வாழ்க்கைத் தேவைகளின் பரிவர்த்தனை இவை தாமே வினியோகத்தையும் பல்வேறு சமுதாய வர்க்கங்களின் கட்டமைப்பையும் நிர்ணயம் செய்கின்றன, மறுபுறம் அவை நிறைவேற்றப்பட வேண்டிய முறை சம்பந்தப்பட்டவரை அதனுல் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, உதாரணமாக ஃபாயர்பாக், நூருண்டுகளுக்கு முன்பு எங்கு நூற்புராட்டைகளும், நெசவுத்தறிகளும் மட்டுமே காணப்பட்டனவோ அந்த மாஞ்செஸ்டரில் ஆலைகளையும் யந்திரங்களையும் மட்டுமே பார்க்கிருர், அல்லது அகஸ்டஸ் காலத்தில் எங்கு திராட்சைத் தோட்டங்களையும் ரோமன் முதலாளிகளின் நாட்டுப்புற மாளிகைகள் தவிர வேறு எதையும் கண்டிருக்க முடியாத ரோம் நாட்டு சம

* கேதே எழுதிய **பாவுஸ்டு.** *"Prolog im Himmel"* (''சுவர்க்கத்தில் அறிமுகம்'').—**ப-ர்.**

வெளிகளில், அவர் மேய்ச்சல் நிலங்களையும் சதுப்பு நிலங்களையுமே பார்க்கிறார் எனும் நிலை ஏற்படுகிறது. ஃபாயர்பாக் இயற்கை விஞ்ஞானத்தின் புலக்காட்சிபற்றிப் பிரத்தியேகமாகக் கூறுகிறார். பௌதிகவியலாளர் மற்றும் வேதியியலாளர் கண்களுக்கு மட்டுமே காட்சிதரும் இரகசியங்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் தொழில்துறை மற்றும் வாணிகம் இல்லாவிடில் இயற்கை விஞ்ஞானம் எங்கே இருக்கும்? இந்த ''தூய'' இயற்கை விஞ்ஞானத்துக்கும் கூட, வாணிகம் மற்றும் தொழில்துறை வாயிலாக, மனிதர்களின் புலனுணர்வு நடவடிக்கை மூலம் அதன் விவரப்பொருட்களைப் போலவே ஒரு நோக்கமும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் செயல்பாடு, இந்தத் தொடர்ச்சியான புலனுணர்வு உழைப்பு மற்றும் படைப்பு, இந்த உற்பத்தி, இப்போது நிலவும் புலனுணர்வு சார்ந்த உலகம் முழுவதன் அடிப்படை, பெருமளவில் இருப்பதால், இது ஓராண்டுக்கு இடைமுறிக்கப் பட்டாலுங்கூட ஃபாயர்பாக் இயற்கை உலகில் பேரளவான மாற்றங்களைக் காண்பார் என்பது மட்டுமல்ல, மனிதர்களின் இந்த உலகம் முழுவதும், தமது சொந்தப் புலனறிவு ஆற்றலும், இல்லை, அவரது சொந்த வாழ்நிலையும் கூட இல்லாதிருப்பதைக் காண்பார். இவை எல்லாவற்றிலும் புற இயற்கையின் முந்துரிமை மறுக்க முடியாதபடி நீடிப்பது திண்ணம், இவை அனைத்துக்கும் generatio aequivoca*யால் உருவாக்கப்பட்ட ஆரம்ப மனிதர்களுக்கும் சம்பந்தம் கிடையாது, ஆனால் மனிதன் இயற்கையில் இருந்து வேறுபட்டவனாகக் கருதப்படும் அளவுக்கு மட்டுமே இந்தப் பாகுபாட்டுக்கு அர்த்தமுண்டு. அதைப்பற்றியவரை, இயற்கை, மானுட வரலாற்றுக்கு முற்பட்டதான இயற்கை எவ்வகையிலும் ஃபாயர்பாக் வாழ்ந்துவரும் இயற்கை அல்ல, அது இன்று இனிமேலாய் எங்குமே நிலவாத (அண்மையில் தோன்றிய ஒரு சில ஆஸ்திரேலியப் பவளத் தீவுகளில் தவிர) இயற்கையாகும், எனவே அது ஃபாயர்பாக்குக்கும் நிலவவில்லை.

நிச்சயமாயும் ஃபாயர்பாக் [10] மனிதனும் கூட ''புலன்

* தன்னியல்பான தலைமுறை.—ப-ர்.

களின் ஒரு பொருளே'' என்பதை உணர்கிறுர் என்பதால் அவருக்கு ''தூய'' பொருள்முதல்வாதிகளைக் காட்டிலும் மிகப்பெரிய அனுகூலம் கிடைத்திருக்கிறது. ஆனுல் அவர் இன்னமும் தத்துவத்தின் உலகிலேயே நீடித்து இருந்து, மனிதர்களை அவர்களது சம்பந்தப்பட்ட சமூகத் தொடர்பில் கருதிப் பார்க்காமல், அவர்கள் இப்போது என்னவாக இருக்கிறுர்களோ அதை உருவாக்கிய இன்று நிலவும் வாழ்க்கை நிலைமைகளை வைத்துக் கருதிப் பார்க்காமல், இருக்கும் காரணத்தால் அவர் மனிதனை அவனது ''புலன்களின் ஒரு பொருளாக'' மட்டுமே, ''புலனுணர்வுச் செயல்பாடாக'' அல்ல, கருதிப் பார்க்கிறுர் எனும் மெய் நடப்பு நீங்கலாக அவர் உண்மையில் வாழும் செயலூக்கமுள்ள மனிதர்களைச் சென்று எட்டுவதே இல்லை, மாருக மனிதன் எனும் கருத்தாக்கத்துடன் நின்று விடுகிறுர். ''மெய்யான தனிப்பட்ட ஆகிருதிபூர்வமான'' மனிதனை உணர்வு பூர்வம் அங்கீகரிப்பதற்கு அப்பால் முன் செல்வதில்லை. அதாவது அன்பு மற்றும் நட்புறவு எனும் உறவுகள், இன்னமும் கருத்தியலாக்கப்பட்ட உறவுகள் தவிர்த்த ''மனிதனுக்கு மனிதன்'' கொள்ளக் கூடியதான வேறு ''மானுடஉறவுகள்'' எதையும் அவர் அறிய மாட்டார். இன்றைய வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய விமர்சனம் எதையும் அவர் தருவதில்லை. இவ்வாருக புலனுணர்வு சார்ந்த உலகை அதன் ஆக்கக் கூருக இருக்கும் தனிநபர்களின் உயிர்ப்புள்ள புலனுணர்வு நடவடிக்கையின் முழு மொத்தமாக அவரால் கருதிப்பார்க்க முடியவில்லை. எனவே அவர் ஆரோக்கியமான மனிதர்களுக்குப் பதில் கண்டமாலை பிடித்த அளவுக்கு மேல் வேலை வாங்கப்பட்ட, காசம் பிடித்த பசித்தவர் கூட்டத்தையே காண்கிறுர். அவர் ''உயர் புலக் காட்சி'' மற்றும் அதிசிரேஷ்டமான ''உயிரினங்களின் சீரமைப்பிலும்'' தஞ்சம் புகும் கட்டாயம் ஏற்படுகிறது. இவ்வாருக எங்கு, கம்யூனிஸ்டுப் பொருள்முதல்வாதி தொழில்துறை சமுதாயக் கட்டமைப்பு இரண்டின் மாற்றத்தையும் அவசியமானதாகவும், அதே சமயம் ஒரு நிபந்தனையாகவும் பார்க்கிறுரோ அந்த இடத்தில் ஃபாயர்பாக் கருத்தியலில் மூழ்கிவிடுகிறுர்.

ஃபாயர்பாக் ஒரு பொருள்முதல்வாதி என்ற வகையில் வரலாற்றை எடுத்துக் கவனிப்பதில்லை, வரலாற்றை அவர் கருதிப் பார்க்கும் அளவுக்கு அவர் பொருள்முதல்வாதியாக இருக்கவில்லை. அவரைப் பொருத்தவரை பொருள்முதல் வாதமும் வரலாறும் முற்றிலும் வெவ்வேறு திசைகளில் இயங்குகின்றன. இந்த மெய் நடப்பு தற்செயலாக, ஏற் கெனவே என்ன கூறப்பட்டுள்ளதோ அதிலிருந்து கண்கூடா கும்.*

### [3. முதனிலை வரலாற்று வழி உறவுகள் அல்லது சமூகச் செயல்பாட்டின் அடிப்படை அம்சங்கள்: வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி, புதிய தேவைகளின் உற்பத்தி, மக்கள் (குடும்பத்தின்) புனருற்பத்தி, சமுதாயத் தகவல் சாதனங்கள், உணர்வு]

*[11]*** முதற்கோள்களே இல்லாத ஜெர்மானியர் பற்றி நாம் எடுத்துக் கூறுவதால், நாம் அனைத்து மானுட வாழ்நிலை யின் எனவே அனைத்து வரலாற்றின் முதலாவது முதற் கோளைச் சாற்றுவதன் மூலம் விளக்கத் தொடங்க வேண்டும். அதாவது ''வரலாற்றைப் படைக்க இயலும்''*** பொருட்டு மனிதர்கள் உயிர் வாழக் கூடிய நிலையில் இருத்தல் வேண் டும். ஆனால் வாழ்க்கையில் பிற எல்லாவற்றுக்கும் முன்பு உண்டல், குடித்தல், வசிப்பிடம் உடை மற்றும் வேறு பல

---

* கையெழுத்துப் பிரதியில் பின்வரும் பகுதி அடிக்கப் பட்டுள்ளது: ''இங்கு நாம் வரலாற்றை மேலும் அதிக விவர மாக விவாதிப்பதற்குக் காரணம் என்ன எனில் வரலாறு மற்றும் 'வரலாற்று வழிப்பட்ட' எனும் சொற்கள் ஜெர் மானியருக்கு எதார்த்தம் என்பது தவிர்த்த சாத்தியமான எல்லாப் பொருள்களையும் வழக்கமாகத் தருவதாகும். இதற்கு ஒரு நேர்த்தியான உதாரணம் செயிண்ட் புருனோ வும் அவரது 'பிரார்த்தனை மேடை பேச்சாற்றலும்.' '' —ப-ர்.

** ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''வரலாறு''.—ப-ர்.

*** இந்தத் தொகுதியின் 68 பக்கம் பார்க்க.—ப-ர்.

காரியங்கள் அடங்கியுள்ளன.* இவ்வாருக, முதல் வரலாற்றுச் செயல், இந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான சாதனங்களை உற்பத்தி செய்தல் பொருள்வகை வாழ்க்கையை உருவாக்குதல் ஆகும். உண்மையில் இது ஒரு வரலாற்று வழிச் செயலே, அனைத்து வரலாற்றின் அடிப்படை நிபந்தனையே, கேவலம், மானுட வாழ்க்கையைக் காத்துப் பேணும் பொருட்டு (ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு செய்தது போலவே) இன்னும் இதனை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் கட்டாயம் செய்து முடிக்க வேண்டும். புலனுணர்வு சார்ந்த உலகம் குறைந்தபட்சத்துக்கு செயிண்ட் புருனோ[12] விஷயத்தில் போல ஒரு கம்பாகக் குறுக்கப்பட்ட போதுங்கூட இது ஒரு கம்பை உற்பத்தி செய்யும் செயலை முன் அனுமானிக்கிறது. எனவே வரலாறு பற்றிய எந்தவொரு வியாக்கியானத்திலும் ஒருவர் முதன் முதலாய் இந்த அடிப்படை உண்மையை அதன் சகல முக்கியத்துவத்துடன் அதன் அனைத்துக் குறிபொருளுடன் அவதானிக்க வேண்டும். மற்றும் அதற்குரிய முக்கியத்துவத்தை அதற்கு வழங்க வேண்டும். ஜெர்மானியர் இதை என்றுமே செய்தது கிடையாது, எனவே அவர்களுக்கு வரலாற்றுக்கான உலகியல் சார்ந்த ஓர் அடிப்படை என்றுமே இருந்தது கிடையாது, மற்றும் அதன் பின்விளைவாக அவர்களிடை ஒரு வரலாற்ருளர் என்றுமே இருந்தது கிடையாது. பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் அவர்கள் அரசியல் சித்தாந்தத்தின் கடு முயற்சியில் நீடித்து இருந்தவரை, குறிப்பாயும் இந்த வரலாறு என்பதுடனை இந்த மெய்மையின் உறவை மிகவும் ஒருதலைபட்சமான பாணியில் மட்டுமே கருதிப்பார்த்தனர் என்ற போதிலுங்கூட அவர்கள் குடியுரிமை சமுதாயம், வாணிகம் மற்றும் தொழில்துறை வரலாறுகளை முதலில் எழுதியதன் மூலம், வரலாற்றை எழுதுவதற்கு ஒரு பொருள்முதல்வாத அடிப்படையினை வழங்க முதல் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிருர்கள்.

* ஓரக் குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''ஹெகல்.[11] பூகர்ப்பவியல், மலை நீர்வள இயல், இத்தியாதி நிலைமைகள். மனித உடல்கள். தேவைகள், உழைப்பு.''—ப-ர்.

இரண்டாவது அம்சம் [12] முதல் தேவையின் நிறைவேற்றம் (நிறைவேற்றும் செயலும், பெறப்பட்டுள்ள நிறைவேற்ற சாதனங்களும்) புதிய தேவைகளுக்கு இட்டுச் செல்கிறது; மற்றும் இந்தப் புதிய தேவைகளின் உருவாக்கமே முதல் வரலாற்றுச் செயலாக இருக்கிறது. இங்கு நாம் ஜெர்மானியரின் மாபெரும் வரலாற்று விவேகத்தின் ஆன்மிக வழிமரபை உடனடியாகக் கண்டுணர்கிறோம். இவர்கள், நேரடியான விவரப்பொருள்கள் கிட்டாத போது, இறையியல் அல்லது அரசியல் அல்லது இலக்கியக் கூளம் எதையும் பரிமாற முடியாத போது, இது வரலாறு அல்லவே அல்ல, மாறாக ''வரலாற்றுக்கு முந்திய சகாப்தம்'' என்று அடித்துரைக்கிறார்கள். எனினும் நாம் இந்த மடமையான ''வரலாற்றுக்கு முந்திய'' நிலையில் இருந்து சரியான வரலாற்றுக்கு எப்படிச் செல்வது என்பது பற்றி அவர்கள் நமக்கு அறிவொளி புகட்டுவதில்லை. இருந்த போதிலும் மறுபுறத்தில் தமது வரலாற்றுக் கற்பனையில் அவர்கள் இந்த ''வரலாற்றுக்கு முந்திய காலத்தை'' விசேஷ ஆர்வத்துடன் பற்றிக் கொள்கிறார்கள். காரணம் அவர்கள் அங்கு ''ஜீரணிக்க முடியாத விவரங்களின்'' தலையீட்டில் இருந்து பத்திரமாக இருப்பதாகக் கற்பனை செய்துகொள்கிறார்கள்; அதே சமயத்தில் அங்கு அவர்கள் தமது கற்பனைத் துடிப்பை இஷ்டம் போல ஓடவிட முடியும் மற்றும் ஆயிரக்கணக்கான கருதுகோள்களை நிறுவியும் தகர்த்தும் செயல்பட முடியும்.

துவக்கம் முதலே வரலாற்று வளர்ச்சியில் பிரவேசிக்கும் மூன்றாவது புறநிகழ்வு, தமது சொந்த வாழ்க்கையை அன்றாடம் மறு உருவாக்கம் செய்து வரும் மனிதர்கள் இதர மனிதர்களை உருவாக்கத் தொடங்குகிறார்கள், தமது வகையினரை இனப்பெருக்கம் செய்கிறார்கள் என்பதே: ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு, பெற்றோர்-குழந்தைகள் உறவு, குடும்பம். துவக்கத்தில் ஒரே சமுதாய உறவு என்பதாக இருக்கும் குடும்பம். பின்னால், அதிகரித்த தேவைகள் புதிய சமுதாய உறவுகளையும், அதிகரித்த மக்கள் தொகை புதிய தேவைகளையும் படைத்துருவாக்கும்போது, கீழடங்கிய ஒன்றாக (ஜெர்மனியில் தவிர) மாறிவிடுகிறது.

பின்னுல் இது, ஜெர்மனியில் வழக்கமாக இருப்பது போன்று ''குடும்பம் பற்றிய கருத்தோட்டத்திற்கு'' ஏற்ற முறையில் அன்றி, நிலவில் இருக்கும் அனுபவவாத விவரங்களுக்கு ஏற்பான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும், பகுத்தாய்வு செய்யப்பட வேண்டும்.

சமுதாயச் செயல்பாட்டின் இந்த மூன்று அம்சங்களை யும் மூன்று வெவ்வேறு கட்டங்களாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது திண்ணம். மாருக, வெறும் மூன்று அம்சங் களாக அல்லது ஜெர்மானியர்களுக்குத் தெளிவாக்கும் விதத் தில் மூன்று ''தருணங்களாக'' எடுத்துக்கொள்ளப்பட வேண் டும். இவை வரலாற்றின் வைகறை முதல், முதலாவது மனி தர்கள் காலம் தொட்டே உடன் நிகழ்வாக இருந்து வரு கின்றன. அதோடு அவை இன்று வரலாற்றில் தம்மைத் தாமே இன்னும் வலியுறுத்திக் கொள்கின்றன.

வாழ்க்கையின் உருவாக்கம், ஒருவரது சொந்த உழைப் பினுலான வாழ்க்கை மற்றும் இனப்பெருக்காலான புதிய வாழ்க்கை ஆக இரண்டும் ஒருங்கே நிற்க, இப்போது இரட்டை உறவாகத் [13] தோற்றமளிக்கிறது: ஒரு புறத்தில் ஓர் இயற்கையான உறவாகவும், மறு புறத்தில் ஒரு சமுதாய உறவாகவும் தோற்றமளிக்கிறது. சமுதாய உறவு என்னும் போது அதை நாம் பல தனி நபர்களின் ஒத்துழைப்பு என்ப தாகவே புரிந்து கொள்கிறோம். இது எந்த நிபந்தனைகளின் கீழ், எந்த முறையில், என்ன நோக்கத்திற்காக என்பது ஒரு பொருட்டல்ல. ஏதோ ஒரு உற்பத்தி முறை அல்லது தொழில் துறை கட்டம் ஏதோ ஒரு ஒத்துழைப்பு முறை அல்லது சமு தாய கட்டத்துடன் எப்போதும் இணைக்கப்பட்டிருக்கும் என் பதும், இந்த ஒத்துழைப்பு முறை தானே ஒரு ''உற்பத்தி சக்தி'' என்பதும் இதிலிருந்து தொடர்கிறது. மேலும் மனி தர்களுக்கு எளிதில் அணுகத்தக்க எண்ணிறந்த உற்பத்தி சக்திகள் சமுதாயத்தின் தன்மையை நிர்ணயம் செய்கின்றன. எனவே ''மனிதகுலத்தின் வரலாறை'' தொழில்துறை மற்றும் பரிவர்த்தனை வரலாற்றுடன் தொடர்பு படுத்தியே எப்போதும் ஆராய வேண்டும், கையாள வேண்டும். ஆனுல் ஜெர்மனியில் இந்த வகைப்பட்ட வரலாற்றை எழுதுவது

எவ்வாறு சாத்தியமல்ல என்பதும் தெளிவு. காரணம் ஜெர் மானியரிடம் தேவையான புரிந்து கொள்ளும் திறன் மற்றும் விவரப் பொருட்கள் பற்றுக்குறையாக இருப்பது மட்டு மல்ல, அத்துடன் கூட அவர்கள் ''சிந்திக்கும் ஆற்றலின் அறிகுறியும்'' இல்லாத நிலையில் இருக்கிறார்கள். காரணம் ரைன் நதிக்கு அப்பால் வரலாறு நிகழ்ந்து வருவது நின்று விட்ட காரணத்தால் இந்த விஷயங்கள் பற்றிய எவ்வித அனுபவமும் பெற முடியாது. இவ்வாறாக, துவக்க முதலே மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் பொருள்வகைத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதும், இது அவர்களது தேவைகள் மற்றும் உற்பத்தி முறைகளால் நிர்ணயம் செய்யப்பட்டது என்பதும், இது மனிதர்களைப் போலவே அந்தளவுக்குப் பழமையானது என்பதும் முற்றிலும் கண் கூடாகும். இந்த உறவு முடிவின்றி புதிய வடிவங்களை எடுத்து வருகிறது. இவ்வாறு, விசேஷமாயும் மனிதர்களை ஒன்று சேர்க்கும் எந்தவொரு அரசியல் அல்லது சமய மடமையின் இருத்தலில் இருந்து சுயேச்சையாக ஒரு ''வரலாற்றை'' முன்வைக்கிறது.

முதற்படியான வரலாற்று உறவுகளின் நான்கு தருணங் களை நான்கு அம்சங்களை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்ததற்குப் பின்னர், இப்போது மட்டுமே மனிதனுங்கூட ''உணர்வு'' உடைத்தவனாக இருக்கிறான் என்பதை நாம் காண்கிறோம்.* இருந்தும் கூட இது உள்ளார்ந்த அல்லது ''தூய'' உணர்வு அல்ல. துவக்கத்தில் இருந்தே ''ஆன்மா'' [14] பருப் பொருள் கொண்டு ''அழுத்தப்படும்'' சாபக்கேடு மூலம் இன்னலுறுகிறது. பருப்பொருள் இங்கு காற்றின் அலை பாயும் அடுக்குகளின் வடிவில், ஒலிகளாக, சுருங்கச் சொன்னால்,

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''மனிதர்களுக்கு வரலாறு இருக்கிறது, காரணம் அவர்கள் தம் வாழ்க்கையினை உருவாக்க வேண்டும், மற்றும் அதை மேலும் ஒரு குறிப் பிட்ட வழியில் உருவாக்க வேண்டும். இது அவர்களது உடல் அமைப்பினால் நிர்ணயம் செய்யப்படுகிறது, அவர்களது உணர்வும் இதே வழியில் தான் நிர்ணயம் செய்யப்படு கிறது.''—ப-ர்.

மொழியாகத் தோற்றமளிக்கிறது. மொழி உணர்வைப் போல அத்தனை பழமையானது, மொழி என்பது இதர மனிதர்களுக்கும் கூட நிலவுகிற நடைமுறை உணர்வு ஆகும், இந்தக் காரணத்தால் மாத்திரமே எனக்கும் சொந்த முறையில் அது உண்மையிலேயே இருக்கிறது. உணர்வைப் போலவே மொழியும் இதர மனிதர்களுடனான ஒட்டுறவின் தேவையில் இருந்து, அவசியத்தில் இருந்து மட்டுமே உதித்தெழுகிறது.* ஓர் உறவு எங்கேனும் நிலவுமானால் அது எனக்காக நிலவுவதாகும்: விலங்கு எதனுடனும் "உறவுகள்" பூண இறங்குவதில்லை. அது எந்த உறவும் கொள்வதில்லை. காரணம் விலங்குக்கு பிறவற்றுடனான அதன் உறவு ஓர் உறவாக இருப்பதில்லை. எனவே உணர்வு என்பது வெகு தொடக்கம் முதலே ஒரு சமுதாய விளைபயன், மனிதர்கள் வாழும் காலம் வரையில் அது நீடிக்கும். உணர்வு என்பது முதற்கண் நேரடியான புலச்சார்பான சுற்றுச் சூழல் சம்பந்தப்பட்ட உணர்வாக, மற்றும் தன்னுணர்வு பெற்றுவரும் தனிநபருக்குப் புறம்பாக இருக்கும் இதர நபர்கள் மற்றும் பொருட்களுடனான வரையறைக்குட்பட்ட தொடர்பின் உணர்வாக மட்டுமே இருக்கும் என்பது திண்ணம். அதே சமயம் இது இயற்கை பற்றிய உணர்வாகும். இது முதலில் மனிதர்களுக்கு முற்றிலும் அன்னியமான, சர்வ வல்லமையுடைய மறுக்க முடியாத சக்தியாகத் தோற்றமளிக்கிறது; இதனுடனான மனிதர்களின் உறவுகள் அறவே புலன் நுகர்ச்சி வகைப்பட்டவை, இதனால் அவர்கள் விலங்குகளைப் போல அச்சுறுத்தப்படுகின்றனர். இவ்வாறாக இது இயற்கையின் அப்பட்டமான புலன் நுகர்ச்சி உணர்வேயாகும் (இயற்கைச் சமயம்).

இங்கு நாம் உடனடியாகப் பார்ப்பது: இந்த இயற்கைச் சமயம் அல்லது இயற்கையுடனான மனிதர்களின் இந்தக் குறிப்பிட்ட உறவு சமுதாயத்தின் வடிவால் நிர்ணயம் செய்யப்படுகிறது, மற்றும் பின்னது முன்னதை நிர்ணயம்

---

* கையெழுத்துப் பிரதியில் பின்வரும் சொற்கள் அடிக்கப்பட்டுள்ளன: "எனது சுற்றுச் சுழலுடனான எனது உறவே எனது உணர்வாகும்."—ப-ர்.

செய்கிறது. இங்கு எல்லா இடங்களிலும் இருப்பது போலவே, இயற்கை மற்றும் மனிதனின் முற்ருெருமை எத்தகைய வழியில் தோற்றமளிக்கிறதென்ருல், இயற்கையுடனுன மனிதனது வரையறுக்கப்பட்ட உறவானது மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளும் வரையறுக்கப்பட்ட உறவினை நிர்ணயம் செய்கிறது, அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட உறவானது இயற்கையுடனுன மனிதனின் வரையறுக்கப்பட்ட உறவை நிர்ணயம் செய்கிறது, இதற்குக் காரணம் இயற்கை இன்னும் வரலாற்று வழியில் சிறிதும் மாற்றியமைக்கப்பட வில்லை என்பதே. மறுபுறத்தில் தன்னைச் சுற்றிலுமுள்ள தனி நபர்களுடன் தொடர்பு கொள்வதன் அவசியம் பற்றிய மனிதனது உணர்வு, அவன் சமுதாயத்தில் எந்தளவுக்கு வாழ்ந்து வருகிருன் எனும் உணர்வின் துவக்கமாகும். இந்தத் துவக்கம் இந்தக் கட்டத்திலான சமுதாய வாழ்க்கையைப் போல அதே அளவுக்குப் புலன் நுகர்ச்சி வகைப்பட்டதாகும். இது வெறும் மந்தை—உணர்வுதான், மற்றும் இந்தக் கட்டத்தில், மனிதன் விஷயத்தில் உணர்வு புலன் தூண்டலின் இடத்தை மேற்கொள்கிறது, அல்லது அவனது புலன் தூண்டல் உணர்வு பூர்வமானது எனும் மெய் நடப்பால் மட்டுமே மனிதன் ஆட்டுக் கூட்டத்தில் இருந்து வேறுபடுத்திக் கண்டறியப்படுகிருன். இந்த ஆட்டு மாதிரி அல்லது பூர்வகுடி உணர்வு, அதிகரித்த உற்பத்தித் திறன், தேவைகளின் பெருக்கம் மற்றும் இவை இரண்டுக்கும் அடிப்படையான [15] மக்கள் தொகை உயர்வு மூலமாக, கூடுதல் வளர்ச்சியும் விரிவாக்கமும் பெறுகிறது. ஆரம்பத்தில் பாலுறவுச் செயலிலான உழைப்புப் பிரிவினை தவிர வேறு எதுவாகவும் இருந்திராத உழைப்புப் பிரிவினை இவற்றுடன் வளர்ச்சியுறுகிறது. பின்னர் இயல்பான முன்னமைவு, (உ—ம். உடல் வலிமை) தேவைகள் விபத்துகள் இத்தியாதி காரணமாக தன்னியல்பாக அல்லது இயற்கையாக உழைப்புப் பிரிவினை வளர்ச்சியுறுகிறது. உடல் உழைப்பு மற்றும் மூளை உழைப்புப் பிரிவினை தோன்றும்

தருணம் மட்டுமே உண்மையிலேயே உழைப்புப் பிரிவினை இத்தகையதாக மாறுகிறது.*

இந்தத் தருணம் முதற் கொண்டு உணர்வானது தான் நிலவும் அனுபவத்தின் உணர்வை விட வேறு சிலது எனவும், மெய்யான சிலவற்றை சுட்டிக்காட்டாமலே அது உண்மையில் சிலவற்றை உருவகப்படுத்துகிறது எனவும் தன்னைத் தானே எதார்த்தத்தில் முகப் புகழ்ச்சி செய்து கொள்ள முடியும். இப்போது முதல் உணர்வானது உலகத்திடமிருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொண்டு, ''தூயதான'' தத்துவம், இறைமையியல், தத்துவஞானம், ஒழுக்கவியல் இத்தியாதிகளை உருவாக்கச் செயல்படும் நிலைமையில் இருக்கும். இந்தத் தத்துவம், இறைமையியல், தத்துவஞானம், ஒழுக்கவியல் இத்தியாதி நிலவி வரும் உறவுகளுக்கு முரண்பாடாக வந்தாலுங்கூட, நிலவிலுள்ள சமுதாய உறவுகள் நிலவிலுள்ள உற்பத்தி சக்திகளுக்கு முரண்பாடாக வந்துவிட்ட காரணத்தால் மட்டுமே இது நிகழ முடியும். மேலும் உறவுகளின் ஒரு குறிப்பிட்ட தேசிய வட்டத்திற்குள், தேசிய வரம்புக்குள் அன்றி இந்த தேசிய உணர்வுக்கும் இதர தேசங்களின்** நடைமுறைக்கும் இடையிலான, அதாவது ஒரு தேசத்தின் (இப்போது நாம் ஜெர்மனியில் காண்பது போல) தேசிய உணர்வு மற்றும் பொதுவான உணர்வுக்கு இடையிலான முரண்பாடு தோன்றுவதன் வாயிலாகவும் கூட இது நிகழ முடியும். ஆனல் இந்த முரண்பாடு தேசிய உணர்வின் அகத்தேயான ஒரு முரண்பாடாக மட்டுமே நிலவுவது போலத் தோன்றுவதால், இந்த தேசத்துக்குத் தோன்றுவதால் பின்னர் போராட்டமும் இந்த தேசியக் குப்பைக்குள் அடங்கியதாக இருக்கும்.

*[16]* மேலும், உணர்வு தான் சொந்தமாக எதைச் செய்யத் தொடங்கும் என்பது அறவே ஒரு பொருட்டல்ல:

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''முதல் சித்தாந்தவாதிகளின் வடிவம் என்ற முறையில் **புரோகிதர்கள்** இருப்பர்.''—**ப-ர்.**

** ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''**சமயம்.** ஜெர்மானியரும் **சித்தாந்தமும்** என்ற முறையில்.''—**ப-ர்.**

இந்தக் குப்பை எல்லாவற்றில் இருந்தும் நாம் ஒரே ஒரு அனுமானத்தைப் பெறப் போகிறோம். இந்த உற்பத்தி சக்திகள், சமுதாயத்தின் நிலைவரம், மற்றும் உணர்வு ஆகிய மூன்று நெம்பு திறன்களும், ஒன்றுக்கொன்று முரண்பாடாக வர முடியும், கட்டாயம் வர வேண்டும். காரணம் உழைப்புப் பிரிவினை என்பது அறிவுத்துறை மற்றும் உடல் சார்ந்த செயல்* அனுபவித்து மகிழ்தலும் உழைப்பும் உற்பத்தியும் நுகர்வும் பல்வேறு தனிநபர்களை வந்தடைகின்றன என்பதன், சாத்தியக்கூறை இல்லை, மெய்நடப்பை உணர்த்துகிறது. அவை முரண்பாட்டுக்குள் வராமல் இருப்பதற்கான ஒரே சாத்தியக்கூறு தன் முறைக்கு உழைப்புப் பிரிவினையை நிலைமறுப்புச் செய்வதில் தான் காணக்கிடக்கிறது. மேலும் ''பூதங்கள்'', ''பந்தங்கள்'', ''உயர் ஜீவி'', ''கருத்துரு'', ''மனச்சாட்சித் துடிப்பு'' ஆகியவை தனித்து நிற்கும் நபரின் வெறும் கருத்தியலான ஆன்மிக வெளிப்பாடு, கருத்தோட்டம், மிகவும் அனுபவ ரீதியான தளைகள், மற்றும் வரம்புகள் என்பதையும் இதனுள் வாழ்க்கையின் உற்பத்தி முறையும் அதனுடன் சேர்ந்த ஒட்டுறவின் வடிவமும் இயங்கி வருகின்றன என்பதையும் விளக்கத் தேவையில்லை.

### [4. சமூக ரீதியிலான உழைப்புப் பிரிவினை மற்றும் அதன் பின்விளைவுகள்: தனிச் சொத்துடன் அரசு, சமுதாயச் செயல்பாடு ''தனிப்பிரிதல்'']

உழைப்புப் பிரிவினையில் இந்த முரண்பாடுகள் எல்லாம் உள்ளடக்கமாக இருக்கின்றன. அது தன் முறைக்கு குடும்பத்தின் இயற்கையான உழைப்புப் பிரிவினை மற்றும் ஒன்றுக்கொன்று எதிரான தனிப்பட்ட குடும்பங்களாக சமுதாயத்தைப் பிரித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது. அதனிடம் ஏக காலத்தில் அளவிலும் பண்பிலும் ஒருங்கேயான உழைப்பு மற்றும் அதன் விளைபயன்களின் **வினியோகம்,** உண்மையில் **சமத்துவமற்ற** வினியோகம் தரப்

* மார்க்ஸ் எழுதிய ஓரக்குறிப்பு அடிக்கப்பட்டுள்ளது: ''செயலும் சிந்தனையும், அதாவது சிந்தனை இல்லாத செயல், செயல் இல்லாத சிந்தனை.''—ப-ர்.

படுகிறது, எனவே சொத்துடைமை எழுகிறது: [17] இதன் உட்கரு, முதல் வடிவம் குடும்பத்தில் காணக்கிடக்கிறது, அங்கே மனைவியும் குழந்தைகளும் கணவனின் அடிமைகளாக இருக்கிறார்கள். குடும்பத்தில் மறைந்து கிடக்கும் இந்த அடிமை வாழ்வு இன்னும் முதிராத நிலையில் இருந்த போதிலும், முதல் சொத்துடைமை ஆகும். ஆனால் இது இந்த ஆரம்ப கட்டத்தில் கூட நவீனப் பொருளியலாளர் களின் வரையறுப்புகளுக்கு முற்றிலும் சரி ஒப்பானதாக இருக்கிறது. அவர்கள் இதை மற்றவர்களின் உழைப்புச் சக்தியை செயலாட்சி செய்யும் அதிகாரம் என்று கூறுகிறார் கள். மேலும் உழைப்புப் பிரிவினை மற்றும் தனிச்சொத்து டைமை என்பவை முழுதொத்த சொற்றொடர்களாகும்: இன்னொன்றில் செயல்பாட்டின் விளைபயன் குறித்து உறுதிப் படுத்தப்பட்டிருப்பது போலவே, ஒன்றில் செயல்பாடு குறித்த அதே விஷயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், உழைப்புப் பிரிவினை தனிப்பட்ட நபர் அல்லது தனியொரு குடும்பத்தின் நலனுக்கும், ஒருவரோடு ஒருவர் ஒட்டுறவு கொண்டுள்ள எல்லா நபர்களினதும் சமுதாய நலனுக்கும் இடையே முரண்பாடு இருப்பதை உணர்த்து கிறது. உண்மையில் இந்த சமுதாய நலன் ''பொதுப்பட்ட நலனாக'' கற்பனையில் மட்டும் நிலவும் ஒன்றல்ல, மாறாக முதன் முதலாக எதார்த்தத்தில் நிலவுகிறது, எவர் மத்தி யில் உழைப்பு பிரிவினை செய்யப்பட்டதோ அந்த நபர்களின் பரஸ்பர கூட்டுச் சார்பின் உருவில் நிலவுகிறது.

தனிநபரின் நலன் மற்றும் சமுதாயத்தின் நலனுக்கு இடையிலான இந்த மெய்யான முரண்பாட்டில் இருந்து பின்னது அரசு என்ற முறையில் ஒரு சுயேச்சையான வடி வத்தை எடுக்கிறது. இது தனிநபர் மற்றும் சமுதாயத்தின் மெய்யான நலன்களில் இருந்து விலக்குற்று அதே சமயம் கற்பனையான சமுதாய வாழ்வாக, ஒவ்வொரு குடும்பத்தி லும் பூர்வகுடிப் பல்கூட்டுத் திரட்டிலும் நிலவும் மெய்யான பிணைப்புக்களை எப்போதும் அடிப்படையாக்கியதாக விளங்கு கிறது. இந்தப் பிணைப்புகள் சதையும் இரத்தமும் போல, மொழி, பெருமளவிலான உழைப்புப் பிரிவினை மற்றும்

இதர நலன்களைக் கொண்டனவாகும். குறிப்பாயும், நாம் பின்னால் விரிவாக எடுத்துச் சொல்லப் போகும்—உழைப்புப் பிரிவினையால் ஏற்கெனவே நிர்ணயம் செய்யப்பட்டதான வர்க்கங்களை அடிப்படையாக்கியதாக இவை விளங்கும். இந்த உழைப்புப் பிரிவினை இத்தகைய ஒவ்வொரு மனிதர்கள் திரளினுள்ளும் தனிக் கூறுகளாகத் துண்டுபடும், இவற்றுள் ஒன்று மற்ற அனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது. அரசின் அகத்தேயான எல்லாப் போராட்டங்களும், ஜனநாயகம், பிரபுக்குல ஆட்சி, மற்றும் முடியாட்சி ஆகியவற்றின் இடையிலான போராட்டமும், ஓட்டுரிமைக்கான போராட்டம் இத்தியாதி, இத்தியாதி, வெறும் கற்பனை வடிவங்கள் மட்டுமே. இவற்றில் வெவ்வேறு வர்க்கங்களின் மெய்யான போராட்டங்கள் இவற்றிடையே முடிவுவரை நடக்கின்றன (இந்த விஷயம் பற்றிப் போதிய அறிமுகஞானத்தை *Deutsch-Französische Jahrbücher*[13] மற்றும் *Die heilige Familie* ஆகியவற்றில் இருந்து அவர்கள் அடைந்த போதிலும் கூட, இது குறித்து, ஜெர்மன் தத்துவவாளர்களுக்கு, எவ்வித சூசகமும் இருக்கவில்லை) என்பதும் இதிலிருந்து தொடர்கிறது. இதற்கும் மேல், மேலாதிக்கத்துக்காகப் போராடி வரும் ஒவ்வொரு வர்க்கமும், பாட்டாளி வர்க்கத்தின் விஷயத்தில் போல, அதன் மேலாதிக்கம் பழைய வடிவிலான சமுதாயம் முழுமையும் அதன் ஆதிக்கமும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக வேண்டும் போது, முதலில் தனது நலனை பொதுப்பட்ட நலனாக தன்முறைக்கு உருவகப்படுத்திக் காட்டும் பொருட்டு, இதை முதல் தருணத்தில் செய்யும்படி அது கட்டாயப்படுத்தப்படுகிறது, தொடர்ந்து அது முதலில் தனக்கென அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற வேண்டும்.

தனிநபர்கள் தமது பிரத்தியேக நலனை மட்டுமே நாடுகிறார்கள், இது அவர்களது சமுதாய நலனுடன் பொருந்துவதில்லை (உண்மையில் பொதுவான என்பது கற்பனை வடிவிலான சமுதாய வாழ்க்கையே) என்ற காரணத்தால் பின்னது, அவர்களுக்கு ''அன்னியமான'' ஒரு நலனாக, ''அவர்களிடமிருந்து [18] சுயேச்சையாக'', அதன் முறைக்கு ஒரு குறிப்

பிட்ட, தனி இயல்பான ''பொதுவான'' நலன் என்ற முறையில் அவர்கள் மீது திணிக்கப்படும், அல்லது அவர்கள் தாமாகவே ஜனநாயகத்தில் இருப்பது போன்று இந்த ஒவ்வாமையின் அகத்தே கட்டாயம் இருக்க நேரும். மறுபுறத்திலுங்கூட, இடையறுதும் மெய்யாகவும் சமுதாயத்தின் மற்றும் கற்பனை சமுதாயத்தின் நலன்களுக்கு விரோதமாகச் செல்லும் இந்தக் குறிப்பிட்ட நலன்களின் நடைமுறைப் போராட்டம், கற்பனையான ''பொது'' நலன்கள் வாயிலாக, அரசின் வடிவில், காரிய சாத்தியமான தலையீட்டையும் கண்காணிப்பையும் அவசியமாக்குகிறது.*

[17] இறுதியாக, மனிதன் இயற்கையான சமுதாயத்தில் இருக்கும் வரை, அதாவது பிரத்தியேக நலனுக்கும் பொதுப்பட்ட நலனுக்கும் இடையே பிளவு இருக்கும் வரை, எனவே செயல்பாடு சுயவிருப்பமாக வன்றி இயற்கையாகவே பிரிவினை செய்யப்படும் வரை, உழைப்புப் பிரிவினை மனிதனின் சொந்தச் செயல் எவ்வாறு அவனை எதிர்த்திடும் ஓர் அன்னிய சக்தியாக மாறுகிறது, அதோடு அவன் அதைக் கண்காணிப்பதற்குப் பதில் அது அவனை அடிமைப்படுத்துகிறது என்பதற்கான முதல் உதாரணத்தை வழங்குகிறது. காரணம் உழைப்புப் பங்கீடு நடப்புக்கு வந்த உடனே ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட தனி முழுச் செயல்துறையைப் பெற்றுவிடுகிறான், இது அவன் மீது வலுவந்தமாகத் திணிக்கப்படுகிறது, இதிலிருந்து அவன் தப்ப முடியாது. அவன் ஒரு வேட்டைக்காரனாக, மீன்பிடிப்பவனாக ஓர் ஆடுமேய்ப்பவனாக அல்லது ஒரு விமர்சன விமர்சகனாக இருக்கிறான், தனது ஜீவனோபாயத்தை இழக்காமல் இருக்க வேண்டுமானால் அவன் அவ்வாறே நீடித்து இருக்க வேண்டும். அதே போதில் கம்யூனிஸ்டுச் சமுதாயத்தில் யாருக்கும் ஒரு தனி முழுமையான செயல்பாடு என்பது இல்லை, ஒவ்வொருவரும் தாம் விரும்பும் துறையில் வித்தகராகலாம், சமுதாயம் பொதுவான பொருள் உற்பத்தியை ஒழுங்கியக்கம் செய்கிறது. இவ்வாறாக, இன்று ஒரு காரியம் செய்யவும்

* இந்த இரண்டு பாராக்களும் ஓரத்தில் எங்கெல்சால் சேர்க்கப்பட்டுள்ளன.—ப-ர்.

நாளை இன்னொரு காரியம் செய்யவும் என்னால் இயல்கிறது; காலையில் வேட்டையாடுவதும், பிற்பகல் மீன்பிடிப்பதும், மாலையில் கால் நடை வளர்ப்பதும், சாப்பாட்டுக்குப் பிறகு விமர்சனம் செய்வதும், எப்படி நான் என்றுமே வேட்டைக் காரனாக, மீன்பிடிப்பவனாக, ஆடு மேய்ப்பவனாக, அல்லது விமர்சகனாக மாறாமலே எனக்கு ஒரு மனது இருக்குமோ அது போல சாத்தியமாகிறது.

[18] சமுதாயச் செயல்பாட்டின் இந்த உறுதிப்பாடு, நமக்கு நாமே உற்பத்தி செய்வது நமக்கு மேலான ஓர் எதார்த்த சக்தியாக கெட்டிப்படுத்தப்பட்டு, நமது கண் காணிப்பை விஞ்சி வளர்ந்து, நமது எதிர்பார்ப்புக்களைத் தடங்கல் செய்து, நமது திட்டங்களை ஒன்றுமில்லாதபடி செய்வது என்பது இது காறும் இருந்து வந்துள்ள வரலாற்று வளர்ச்சியிலான பிரதானக் காரணிகளில் ஒன்றாகும். இந்த சமுதாய சக்தி, அதாவது வெவ்வேறு தனிநபர்களின் ஒத் துழைப்பின் வாயிலாக உதித்தெழும் இந்த பெருக்கப்பட்ட உற்பத்திச் சக்தி, உழைப்புப் பிரிவினையால் நிர்ணயம் செய்யப் படுவதால், இந்தத் தனிநபர்களின் ஒத்துழைப்பு சுயவிருப்ப மாக அன்றி இயற்கையாகவே ஏற்பட்ட காரணத்தால், இவர்களுக்கு அது அவர்களது சொந்த ஒன்றுபட்ட சக்தியாக அன்றி அவர்களுக்குப் புறம்பாக இருக்கும் ஓர் அன்னிய சக்தியாகத் தோற்றமளிக்கிறது. இதன் தோற்றமோ இறுதி லட்சியமோ என்ன என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள், எனவே இதை அவர்கள் கண்காணிக்க முடியாது, நேர்மாறாக, இது மனிதனது சித்தம் மற்றும் செயலில் இருந்து சுயேச்சை யாக, இவற்றின் முக்கிய விசை அமைவாகக் கூட இன்றி, தனி இயல்பான பல வளர்ச்சிப் படிகள், கட்டங்கள் ஊடே கடந்து செல்கிறது.* இவ்வாறு இருந்திராவிட்டால் எடுத்துக் காட்டாக, சொத்துடைமைக்கு எவ்வாறு ஒரு வரலாறு இருக்க முடியும், அது எப்படிப் பல்வேறு வடிவங்

* இந்த வாசகத்தின் ஓரத்தில் மார்க்ஸ் எழுதிய பகுதி, இந்தத் தொகுதியின் அடுத்த 5ம் பிரிவின் முதல் இரண்டு பாராக்களில், இந்தப் பாராவுக்கு உடனே அடுத்தபடி மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.—ப-ர்.

களை எடுக்க முடியும், உதாரணமாக நிலச் சொத்து சம்பந்தப்பட்ட பல்வேறு முற்கோள்களுக்கு ஏற்ப எப்படி பிரான்சில் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சிலர் கரங்களில் மையப்படுத்தப்பட்டும், இங்கிலாந்தில் ஒரு சிலர் கரங்களில் மையப்படுத்தப்பட்டு இருந்ததில் இருந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டும்; இன்று உள்ளபடியே நிலவுவது எப்படி சாத்தியமாகும்? அல்லது பல்வேறு தனிநபர்கள் அல்லது நாடுகள் பொருட்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது தவிர வேறு எதுவுமல்லாத வாணிகம் சப்ளை மற்றும் தேவையின் உறவு வாயிலாக முழு உலகையும் ஆட்சி புரிவது என்பது எங்ஙனம் நிகழ்கிறது? இந்த உறவு ஓர் ஆங்கிலப் பொருளியல் நிபுணர் கூறுவது போல எப்படிப் பண்டையர் ஊழ்வினை போன்று புவியைச் சுற்றி வட்டமிடுகிறது, தனது மாயக் கரங்களால் மனிதர்களுக்கு நற்பாக்கியத்தையும் துர்ப்பாக்கியத்தையும் பங்கிட்டளிக்கிறது, சாம்ராஜ்யங்களை நிறுவுகிறது, [19] சாம்ராஜ்யங்களை வீழ்த்துகிறது, தேசங்களைத் தோன்றும்படியும் மறையும்படியும் செய்கிறது? அதே போதில் தனியார் சொத்துடைமையின் அடித்தளம் ஒழிக்கப்படுவதோடு, உற்பத்தியில் கம்யூனிச ஒழுங்கியக்கம் புகுத்தப்படுவதோடு (இதில் மனிதர்கள் மற்றும் அவர்கள் எதைத் தாமே உற்பத்தி செய்கிறார்களோ அதற்கும் இடையிலான பகைமை உறவு அழித்தொழிக்கப்படுவதும் அடங்கும்) சப்ளை மற்றும் தேவை எனும் உறவின் வன்மை ஒன்றுமில்லாதபடி கரைக்கப்பட்டு விடுகிறது, மனிதர்கள் மீண்டும் தமது கண்காணிப்பின் கீழ் பரிவர்த்தனையை, உற்பத்தியை, அவர்களது பரஸ்பர உறவின் பாணி அனைத்தையும் பெறுவது எங்ஙனம் நிகழ்கிறது?

### [5. கம்யூனிசத்துக்கான ஒரு பொருள்வகை முற்கோள் என்ற முறையில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி]

[18] இந்த "தனிப்பிரிதல்" (தத்துவவியலாளர்களுக்குப் புரியும் படியான ஒரு தொடரைப் பயன்படுத்திச் சொன்னால்) என்பதை இரண்டு காரிய சாத்தியமான முற்

கோள்களுக்கு வகை செய்யப்பட்டால் மட்டுமே ஒழித்துக் கட்ட முடியும் என்பது திண்ணம். அது ஒரு ''சகிக்க முடியாத'' ஆட்சியாக அதாவது மனிதர்கள் அதை எதிர்த்துப் புரட்சி செய்யும் ஓர் ஆட்சியாக ஆக வேண்டுமானல், அது மனித குலத்தின் மாபெரும் திரளினரை ''சொத்துப் பத்தில்லாதவர்களாக'' ஆக்க வேண்டுவதும், அதே சமயம் செல்வமும் கலாசாரமும் கொண்ட ஓர் உலகம் நிலவும் முரண்பாட்டை உருவாக்குவதும் தவிர்க்க முடியாத படி தேவை. இந்த இரண்டு நிபந்தனைகளும் உற்பத்தி சக்தியில் மாபெரும் அதிகரிப்பையும், அதன் உயர் அளவிலான வளர்ச்சியையும் முன் அனுமானிக்கின்றன. மறுபுறத்தில், உற்பத்தி சக்திகளின் இந்த வளர்ச்சி (இது மனிதர்கள் வட்டார ஜீவி என்பதற்குப் பதில், உலக வரலாற்று வழி ஜீவிகளாக உள்ளபடியே அனுபவ ரீதியாக இருத்தலை உணர்த்துகிறது) அறவே அத்தியாவசியமான நடைமுறை முற்கோளாகும். காரணம் இது இல்லாவிட்டால் இன்மை என்பது கேவலம் பொதுப்படுத்தப்படும், வறிய நிலை தொடர்பாக அவசியத் தேவைகளுக்கான போராட்டம் மற்றும் பழைய குப்பைக் கூள விவகாரம் அனைத்தும் கட்டாயம் மீண்டும் நிகழும். இதற்கும் மேலாக, உற்பத்தி சக்திகளின் சர்வப்பொது வளர்ச்சியுடன் மட்டுமே மனிதர்கள் இடையிலான ஒரு சர்வப்பொது ஒட்டுறவு நிலைநாட்டப்படுகிறது என்பதாலும், இது எல்லா தேசங்களிலும் ஏக காலத்தில் ''சொத்துப்பத்தில்லாத'' மக்கள் திரளினர் எனும் புலப்பாடை உருவாக்குவதாலும், (சர்வப்பொது போட்டி) ஒவ்வொரு தேசமும் இதர தேசங்களின் புரட்சிகளைச் சார்ந்து நிற்குமாறு செய்கிறது, மற்றும் இறுதியாக வட்டார நபர்கள் இடத்தில் உலக வரலாற்று வழி, அனுபவவாத முறையில் இயங்கும் சர்வப்பொதுவான நபர்களை இருத்துகிறது. இது இல்லாதபட்சம், (1) கம்யூனிசம் ஒரு வட்டார நிகழ்ச்சியாக மட்டுமே இருக்க முடியும்; (2) ஒட்டுறவு சக்திகள் தாமே இந்தளவுக்கு சர்வப்பொதுவாக வளர்ச்சியடைந்திருக்க முடியாது, எனவே சகிக்க முடியாத சக்திகள்: அவை மூடநம்பிக்கைகளால் சூழப்பட்டு திருத்தம்

பெருத நிலைமைகளில் நீடித்து நிலவியிருக்கும். மற்றும் (3) ஒட்டுறவின் ஒவ்வொரு விரிவாக்கமும் வட்டார கம்யூனிசத்தை ஒழித்திருக்கும். அனுபவவாத வழியில், ஆதிக்க நிலையில் உள்ள மக்களின் ''உடனடியான'' ஏக காலத்திலான[14] செயல் என்ற முறையில் மட்டுமே கம்யூனிசம் சாத்தியமாகும். இது உற்பத்தி சக்திகளின் சர்வப்பொதுவான வளர்ச்சியையும், கம்யூனிசத்தோடு கட்டுண்டு கிடக்கும் உலக ஒட்டுறவையும் முன் அனுமானிக்கிறது.*

[19] மேலும் சொத்துப்பத்தில்லாத உழைப்பால் மட்டுமே வாழ்கிற தொழிலாளர் திரளினர் நிலவுவது—மூலதனத்திடம் இருந்தும் ஓரளவுக்கான தேவை நிறைவில் இருந்தும் கத்தரிக்கப்பட்டு, வாழ்க்கைக்கான உறுதியான ஆதாரம் என்ற முறையில் உள்ள வேலை இழப்பு இனி மேலும் தாற்காலிகமானதல்ல என்ற நிலையில், படுமோசமாயும் இடர் மிகுந்த நிலைமையில் உள்ள உழைப்பு சக்தி—போட்டி வாயிலான உலக மார்க்கெட்டை முன் அனுமானிக்கிறது. இவ்வாறாக, கம்யூனிசமும் அதன் செயல்பாடும் எவ்வாறு ''உலக வரலாற்று''வாழ்நிலையை மட்டுமே கொண்டிருக்க முடியுமோ அதுபோல பாட்டாளி உலக வரலாற்று வழியில் மட்டுமே வாழ முடியும். தனிநபர்களின் உலக வரலாற்றுவழி வாழ்நிலை, அதாவது உலக வரலாற்றுடன் நேரடி இணைப்புக் கொண்டுள்ள தனிநபர்களின் வாழ்நிலை.

[18] கம்யூனிசம் என்பது நமக்கு இனி நிலை நாட்டப்பட வேண்டிய நிலவரமோ எதார்த்தம் தன்னைத் தானே (கட்டாயம்) தகவமைத்துக் கொள்ள வேண்டிய ஒரு லட்சியமோ அல்ல. நாம் கம்யூனிசத்தை இன்றுள்ளவற்றை ஒழிக்கும் ஒரு மெய்யான இயக்கம் என்றே அழைக்கிறோம். இந்த இயக்கத்தின் நிலைமைகள் தற்போது நிலவும் முற்கோள்களில் இருந்து விளைவனவாகும்.**

---

* இந்த வாசகம் தொடரும் கையெழுத்துப் பிரதியின் அடுத்த பக்கத்தின் மேலே மார்க்ஸ் எழுதிய குறிப்பு: **''கம்யூனிசம்''.—ப-ர்.**

** கையெழுத்துப் பிரதியில் இந்தப் பாராவை மார்க்ஸ்

* * *

[19] முந்திய எல்லா வரலாற்றுக் கட்டங்களிலும் நிலவிய உற்பத்தி சக்திகளால் நிர்ணயிக்கப்பட்டதும், தன் முறைக்கு இவற்றை நிர்ணயம் செய்வதுமான ஒட்டுறவின் வடிவமே குடியுரிமை சமுதாயம் ஆகும். பின்னது ஒற்றையான குடும்பத்தையும், பன்மையிலான பூர்வகுடி எனப்படுவதையும் தனது முற்கோள்களாக மற்றும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது நாம் மேலே கூறியுள்ளதில் இருந்து தெளிவாகத் தெரியவரும். இந்த சமுதாயத்தின் வெகு துல்லியமான நிர்ணயக் கூறுகள் மேலே சுட்டிய நமது குறிப்புக்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடியுரிமை சமுதாயம் எப்படி வரலாறு அனைத்தினதும் மெய்யான ஆதாரமாயும் மற்றும் அரங்கமாயும் விளங்குகிறது என்பதையும், மெய்யான உறவுகளைப் புறக்கணித்து அரசர்கள் மற்றும் அரசுகளின் பகட்டோசை நாடகங்களுடன் நின்றுவிடுகிற இதுகாறும் கொண்டிருந்த வரலாறு பற்றிய கருத்தோட்டம் எவ்வளவு அபத்தமானது என்பதையும் இங்கு நாம் ஏற்கெனவே காண்கிறோம்.

பிரதானமாயும் நாம் இதுவரை மனிதர்கள் மூலம் இயற்கைக்கு மறுவடிவம் கொடுத்தல் எனும் மானுடச் செயல்பாட்டின் ஓர் அம்சத்தை மட்டுமே எண்ணிப் பார்த்திருக்கிறோம். இன்னொரு அம்சம் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்கு மறுவடிவம் கொடுத்தல்.*

அரசின் தோற்றம் மற்றும் குடியுரிமை சமுதாயத்தின்பாலான அரசின் உறவு.**

---

இந்தப் பகுதியின் முதல் பாராவுக்கு மேலே சேர்த்திருக்கிறார்.—ப-ர்.

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''ஒட்டுறவு மற்றும் உற்பத்தி ஆற்றல்.''—ப-ர்.

** கையெழுத்துப் பிரதியில் இப்பக்கத்தின் கடைசி வெற்றாக விடப்பட்டுள்ளது. அடுத்த பக்கம் வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் முடிவுகள் பற்றிய விளக்கவுரை தொடங்குகிறது.—ப-ர்.

### [6. வரலாறு குறித்த பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தில் இருந்து பெற்ற முடிவுகள்: வரலாற்று வழி நடைமுறையின் தொடர்ச்சி, வரலாறு உலக வரலாறுக மாற்றமடைதல், ஒரு கம்யூனிஸ்டுப் புரட்சியின் அவசியம்]

*[20] வரலாறு என்பது தனித்தனி தலைமுறைகளின் தொடர்வரிசை தவிர வேறு எதுவுமல்ல. ஒவ்வொரு தலைமுறையும் முந்திய எல்லாத் தலைமுறைகளாலும் அதனிடம் மரபாக வழங்கப்பட்ட பொருட்களை, மூலதன நிதிகளை உற்பத்தி சக்திகளைச் சுரண்டிப் பயன்படுத்துகிறது. இவ்வாறுக ஒருபுறத்தில் முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைமைகளில் பரம்பரை நடவடிக்கையைத் தொடர்கிறது. மறுபுறம் முற்றிலும் மாறுபட்ட நடவடிக்கை மூலம் பழைய சூழ்நிலைமைகளை மாற்றுகிறது. இதைக் கற்பனைமுறையில் புரட்ட முடியும், அதன் மூலம் பிந்திய வரலாறு முந்திய வரலாற்றின் இலக்கு ஆக்கப்படுகிறது, உதாரணம், அமெரிக்கா கண்டு பிடிக்கப் பட்டதற்குச் சாட்டியுரைக்கப்பட்ட இலக்கு பிரெஞ்சுப் புரட்சி வெடிப்பதை மேலும் ஊக்குவிப்பதற்காகும். இதன் மூலமாக வரலாறு தனது சொந்தச் சிறப்பு நோக்கங்களைப் பெறுகிறது மற்றும் ''இதர நபர்களுடன் நிகராக நிற்கும் ஒரு நபராகிறது'' (அதாவது: ''சுய உணர்வு'', ''விமர்சனம்'', ''அலாதித்தன்மை'' இத்தியாதி). அதேபோதில் முந்திய வரலாற்றில் ''கதி'', ''குறிக்கோள்'', ''கருமுளை'' அல்லது ''கருத்து'' எனும் சொற்களால் சுட்டி வழங்கப் படுவது பிந்தியவரலாற்றில் இருந்து, முந்திய வரலாறு பிந்திய வரலாற்றின் மீது செலுத்தும் தீவிர செல்வாக்கில் இருந்து, உருவான ஒரு கருத்தாக்கமே தவிர வேறு எதுவும் அல்ல.*

*ஒன்று மேல் இன்னென்று செயல்படும் தனித்தனித் துறைகள் இந்த வளர்ச்சிப் போக்கில் எந்தளவு அதிகமாக விரிவடைகின்றனவோ, அந்த அளவுக்கு அதிகமாக தனித் தனி தேசிய இனங்களின் ஆரம்பத் தனிமை நிலை, இவற்றுல் இயற்கையாகவே தோற்றுவிக்கப்பட்ட வளர்ச்சியடைந்த உற்பத்தி முறை, ஒட்டுறவு மற்றும் தேசங்கள் இடையிலான*

உழைப்புப் பிரிவினை ஆகியவற்றின் மூலம் அழிக்கப்படுகிறது. இவ்வாறு உதாரணமாக, இந்தியாவிலும் சீனாவிலும் வாழும் எண்ணிறந்த தொழிலாளர்களின் உணவைப் பறித்து வயிற்றி லடிக்கும் ஓர் இயந்திரம் இங்கிலாந்தில் புனையப்படுமானால், அது இந்த சாம்ராஜ்யங்களின் வாழ்நிலை வடிவம் முழு வதையும் தலைகுப்புறக் கவிழ்க்குமானால், இந்தப் பதுப் புனைவு ஓர் உலக வரலாற்று மெய்நடப்பாக மாறி விடு கிறது. அல்லது மறுபடியும் சர்க்கரை மற்றும் காப்பியை எடுத்துக் கொள்வோம். நெப்போலியன் பாணி மாகண்ட அமைப்பு முறை[15] காரணமாக, இந்தப் பொருட்களில் பற்றுக்குறை ஏற்பட்டதால் ஜெர்மானியர் [21] நெப் போலியனை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்ததும், இவ்வாறு இது **1813**ன் புகழ் மிக்க விடுதலைப் போர்களுக்கான எதார்த்த அடிப்படையானதுமான மெய்நடப்பு இவற்றின் உலக வர லாற்று முக்கியத்துவத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிரூபித்துக் காட்டியது. வரலாறை உலக வரலாறாக்கிய இந்த மாற்றம், ''சுய உணர்வு'' உலக ஆன்மா அல்லது வேறு எந்த ஓர் இயக்க மறுப்பியல் பூதத்திடமிருந்தும் ஏற்பட்ட வெறும் கருத்தியலான செயல் அல்ல என்பதும், மாறாக முற்றிலும் பொருள்வகைப்பட்ட, அனுபவவாத முறையில் சரிபார்க்கக்கூடிய ஒரு செயலே, ஒவ்வொரு தனி நபரும் வந்தும் போயும் உண்டும் பருகியும் உடையணிந் தும் நிதர்சனப்படுத்திக் காட்டும் ஒரு செயலே என்பதும் இதில் இருந்து தொடர்கிறது.

தமது செயல்பாடு உலக வரலாற்றுச் செயல்பாடாக விரிவடைவதோடு, தனிப்பட்ட நபர்கள் தமக்கு அன்னிய மான ஒரு சக்தியின் கீழ் மேலும் மேலும் அடிமைப்பட்டு வருகிறார்கள் என்பது வரலாற்றில் இன்று வரை நிச்சயமா யும் நிலவிவரும் ஓர் அனுபவவாத மெய்ப்பாடு ஆகும். (இந்த நிர்ப்பந்தத்தை அவர்கள் உலக ஆன்மா எனப்படு வதன் சார்பிலான ஓர் இழிவான தந்திரமாகவே கருதிப் பார்த்திருக்கிறார்கள்.) இந்த சக்தி மேலும் மேலும் பேரள வானதாகி, கடைசி சந்தர்ப்பத்தில், உலக மார்க்கெட்டாக வந்தமைகிறது. ஆனால் சமுதாயத்தின் இப்போதைய நிலை

வரம் கம்யூனிஸ்டுப் புரட்சியால் (இது பற்றிப் பின்னல் அதிகவிவரம் தரப்படுகிறது) வீழ்த்தப்படுவது மூலமும், இதனுடன் முற்றொருமையாக இருக்கும் தனியார் சொத்துடைமை ஒழிக்கப்படுவது மூலமும் ஜெர்மன் தத்துவவாளர்களை இவ்வாறு குழப்புகிற இந்த சக்தி கலைக்கப்படும் என்பதும், பின்னர் ஒவ்வொரு தனிநபரின் விடுதலையும் வரலாறு உலக வரலாறாக* மாற்றமடைந்துவரும் அளவுக்கு நிறைவேற்றம் பெறும் என்பதும், அதே போன்று அனுபவவாத முறையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. தனிநபரின் மெய்யான அறிவாற்றல் செல்வம் அவரது மெய்யான தொடர்புகளின் செல்வத்தையே முற்றிலும் சார்ந்திருக்கும் என்பது மேலே சொல்லப்பட்டவற்றில் இருந்து தெளிவாகும். அதற்குப் பின்பு மட்டுமே தனிப்பட்ட நபர் பல்வேறு தேசிய மற்றும் வட்டாரத் தடை வேலிகளில் இருந்து விடுவிக்கப்பட்டு உலகம் முழுவதன் பொருள் வகை மற்றும் அறிவாற்றல் படைப்போடு எதார்த்தமாகத் தொடர்பு படுத்தப்படுவார், மற்றும் இந்தப் புவி முழுவதன் சகலதுறை உற்பத்தியை (மனிதனின் படைப்புகளை) அனுபவிக்கும் ஆற்றலைப் பெறும் நிலையில் வைக்கப்படுவார்.எல்லா வழிகளிலுமான சார்புநிலை எனும் தனிநபர்களின் உலக வரலாற்று வழி ஒத்துழைப்பின் இந்த இயற்கையான வடிவம், இந்த [22] கம்யூனிஸ்டுப் புரட்சி மூலம் இந்த சக்திகள் மீதான கண்காணிப்பு மற்றும் உணர்வு பூர்வமான மேலாதிக்கமாக மாற்றப்படும்.மனிதர்கள் ஒருவர் மீது இன்னொருவர் செயல்படுவதன் மூலம் பிறந்த இந்த சக்திகள் இது வரையில் அவர்களுக்கு முற்றிலும் அன்னியமான சக்திகளாக இருந்து மனிதர்களை அச்சுறுத்தியும் ஆளுமை செய்தும் வந்துள்ளன. இப்போது இந்தக் கருத்தைக் கற்பனையான—கருத்தியலான அதாவது நம்பவியலா விசித்திரத் தொடர்களில்,''உயிரினங்களின் சுயத்தோற்றம்'' என்பதாக (''சமுதாயத்தை உரை பொருளாக்கி'') மறுபடியும் வெளியிட்டுரைக்கலாம். இதன் மூலமாக, ஒருவரோடொருவர் தொடர்பு பூண்ட இடையுறவுள்ள தனிநபர்

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''உணர்வு உற்பத்தி குறித்து.''—ப-ர்.

களின் கோவையான வரிசையைத் தனிநபராகக் கருதிப் பார்க்க முடியும். இது தன்னைத் தானே பிறப்பித்துக் கொள்ளும் மர்மத்தை செய்து நிறைவேற்றுகிறது. உடல் அளவிலும் சிந்தனை அளவிலும் தனிநபர்கள் ஒருவர் இன்னொருவரை நிச்சயமாயும் உருவாக்கி வருகிறார்கள் என்பது இங்கு தெளிவு. ஆனால் அவர்கள் செயிண்ட் புரூனோவின் மடமை பாணியிலோ அல்லது ''உருவாக்கப்பட்ட'' மனிதனின் ''அலாதித் தன்மை'' எனும் பொருளிலோ தம்மைத்தாமே உருவாக்கிக் கொள்வது கிடையாது.

இறுதியாக நாம் தீட்டியுள்ள வரலாற்றின் இந்தக் கருத்தோட்டத்தில் இருந்து மேலும் இந்த முடிவுகளுக்கு வருகிறோம்: 1) உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் உற்பத்தி சக்திகளும் ஒட்டுறவு சாதனங்களும் தோற்றுவிக்கப்படும் ஒரு கட்டம் வருகிறது. அவை, நிலவும் உறவுகளின் கீழ் பொல்லாங்கு மட்டுமே விளைப்பதாக உள்ளன, அவை இனிமேலால் உற்பத்தி சக்திகளாக இரா, அழிக்கும் சக்திகளாகவே இருக்கும் (யந்திரங்கள், பணம்); இதனுடன் தொடர்பாக ஒரு வர்க்கம் வெளிக் கொணரப்படுகிறது. இது சமுதாயத்தின் சாதகங்களை அனுபவிக்க வழியின்றி, சமுதாயத்தின் எல்லா பாரங்களையும் சுமக்க வேண்டி இருக்கிறது, சமுதாயத்தில் இருந்து விரட்டப்பட்டு [23] இதர வர்க்கங்கள் அனைத்துடனும் மிகவும் தீர்மானகரமான பகைமை மேற்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது; இது சமுதாய உறுப்பினர்களின் பெரும்பான்மையாக அமைந்துள்ள வர்க்கமாகும். இதனிடமிருந்து தான் ஓர் அடிப்படையான புரட்சியின் அவசியம் பற்றிய உணர்வு, கம்யூனிஸ்டு உணர்வு பிறக்கிறது; இந்த வர்க்கத்தின் நிலைமை குறித்த சிந்திப்பின் வாயிலாக இதர வர்க்கங்களின் மத்தியிலுங்கூட இது உதித்தெழுவது திண்ணம்; 2) எந்த நிலைமைகளின் கீழ் திட்டவட்டமான உற்பத்தி சக்திகள் பிரயோகிக்கப்பட முடியுமோ அவை சமுதாயத்தின் ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் ஆட்சியின் நிலைமைகளாகும். இந்த வர்க்கத்தின் சமுதாய சக்தி அதன் சொத்துடைமையில் இருந்து பெறப்படுகிறது. இது ஒவ்வொரு இடத்திலும் அரசின் வடிவில் அதன்

நடைமுறை-கருத்தியலான வெளிப்பாட்டைப் பெறுகிறது. எனவே, ஒவ்வொரு புரட்சிகரப் போராட்டமும் அதுகாறும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ஒரு வர்க்கத்துக்கு* எதிராகவே நெறியாண்மை செய்யப்படுகிறது. (3) இன்று வரையிலான எல்லாப் புரட்சிகளிலும் செயல்பாட்டு முறை எப்போதுமே சிறிதும் தீங்குறாது நீடித்து வந்துள்ளது. இது இந்த செயல்பாட்டின் வேறுவிதமான வினியோகத்தின் இதர நபர்களுக்குரிய உழைப்பின் புதிய வினியோகத்தின் பிரச்சினை மட்டுமே ஆகும். முந்திய செயல்பாட்டு முறைக்கு எதிராக கம்யூனிஸ்டுப் புரட்சி நெறியாண்மை செய்யப்படும் பொழுதிலேயே அது உழைப்பை** ஒழித்துவிடுகிறது, மேலும் வர்க்கங்களுடன் கூடவே எல்லா வர்க்கங்களின் ஆட்சியையும் ஒழித்துக் கட்டுகிறது, காரணம் சமுதாயத்தில் இனிமேலால் ஒருவர்க்கம் என்று கணிக்கப்பட முடியாததும், ஒரு வர்க்கமாக அங்கீகரிக்கப்படாததும், தானே இன்றைய சமுதாயத்தின் சகல வர்க்கங்கள் மற்றும் தேசிய இனங்கள் இத்தியாதிகளின் கலைப்பின் வெளியீடாக விளங்குவதுமான ஒரு வர்க்கத்தால் செய்து முடிக்கப்படுகிறது; மற்றும் (4) இந்தக் கம்யூனிஸ்டு உணர்வு பேரளவான வீதத்தில் உருவாவதற்கும், இந்த லட்சியத்தின் வெற்றி சாதனைக்கும் ஒருங்கே மனிதர்கள் பேரளவான வீதத்தில் மாறுதலடைவது அவசியம். இந்த மாறுதல் ஒரு காரிய சாத்தியமான இயக்கத்தில், ஒரு புரட்சியில் மட்டுமே நடைபெற முடியும். எனவே இந்தப் புரட்சி அவசியமானது. காரணம் ஆளும் வர்க்கங்களை வேறு எந்த வழியிலும் வீழ்த்த முடியாது என்பது மட்டுமல்ல, அதோடு கூட அதை வீழ்த்துகிற வர்க்கம் ஒரு புரட்சியில் மட்டுமே காலகாலமான குப்பைகளைக் களைந்தெறிவதில் வெற்றிகண்டு, சமுதாயத்

---

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''பொருளுற்பத்தியில் இன்றைய நிலைவரத்தைப் பேணிக்காக்க இந்த மக்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள்''.—ப-ர்.

** பின்வரும் சொற்கள் கையெழுத்துப் பிரதியில் அடிக்கப்பட்டுள்ளன:... ''இன் ஆட்சி இதன் கீழ் நடக்கும் செயல்பாட்டு வடிவம்...''—ப-ர்.

தைப் புதிதாக நிறுவுவதற்குத் தகுதி வாய்ந்ததாக ஆக முடியும் என்பதும் இதற்குக் காரணமாகும்.*

* கையெழுத்துப் பிரதியில் பின்வரும் பகுதி அடிக்கப் பட்டுள்ளது: ''பிரான்சிலும், இங்கிலாந்திலும் மற்றும் ஜெர்மனியிலும் உள்ள எல்லாக் கம்யூனிஸ்டுகளும் புரட்சியின் அவசியம் பற்றி நீண்ட கால முன்பே உடன்பட்டுள்ளனர், அப்படியிருக்க செயிண்ட் புரூனே ''மெய்யான மனிதநேயம்'', அதாவது கம்யூனிசம், ஆன்மிகவாதத்தின் இடத்தை (இதற்கு இடமே இல்லை) மதிப்பைப் பெறும் பொருட்டு மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக அமைதியாக தொடர்ந்து கனவு காண்கிறார், நம்புகிறார். பிறகு அவர் தமது கனவில் ''கடைத்தேற்றத்தை நிச்சயம் அடையலாம், மண்ணகம் விண்ணகமாகும், விண்ணகம் மண்ணகமாகும்'' என்று சந்தேகமின்றித் தொடர்ந்து காண்கிறார் (இறை ஞானியால் இன்னும் விண்ணகத்தை மறக்க முடியவில்லை). ''பிறகு ஆனந்தமும் பேரின்பமும் அழியா நிரந்தரத்துக்கு விண்ணகப் பண்ணிசை முழக்கும்'' (பக். 140). தீர்ப்பு நாள் அவரை எதிர்பாராது விஞ்சிச் செல்லும் போது சமய பீடத்தின் தலைவர் மிகவும் வியப்படைவார். அந்த நாளில் பின்வருவன எல்லாம் நிகழும். அந்த நாள் வானில் பிரதிபலிக்கும் எரியும் நகரங்களின் காட்சி வைகறையைக் குறிக்கும் அப்போது ''விண்ணகப் பண்ணிசைகளுடன்'' Marseillaise மற்றும் Carmagnole சுதியும் காதுகளில் எதிரொலிக்கும் இதைத் தொடர்ந்து தேவையான பீரங்கியின் கர்ஜனை முழங்கும் கில்லோடீன் தாளமிடும், அப்போது அபகீர்த்தி மிக்க ''மக்கள் திரள்'' ça ira, ça ira என்று கூவி ''சுய உணர்வை'' விளக்குக் கம்பம் மூலம் நிறுத்திவைக்கும்[16]. ''அழியா நிரந்தரத்துக்கு ஆனந்தமும் பேரின்பமும்'' எனும் மகிழ்விக்கும் சித்திரத்தைத் தீட்டுவதற்கு செயிண்ட் புரூனேவுக்கு எவ்வித முகாந்தரமும் இல்லை. தீர்ப்பு நாளில் செயிண்ட் புரூனேவின் நடத்தையை எடுத்த எடுப்பிலேயே வருணனை செய்யும் மகிழ்ச்சியை நாம் இழக்கிறோம். மேலும் Proletaires en Revolution (புரட்சியை நடத்தும் பாட்டாளிகளை) விமர்சனத்தை வீழ்த்த விரும்புகிற ''சாரப்பொருளாக'' ''திரளாக'' கருதிப்பார்ப்பதா அல்லது பௌவரின் கருத்துக்களை ஜீரணிக்கத் தேவையான நிலையுறுதியில் இன்னும் பற்றாக்குறையாக இருக்கும் ஆன்மாவின் ''தோற்றமாகக்'' கருதிப்பார்ப்பதா என்பதை முடிவு செய்வது கடினமானது'' —ப-ர்.

## [7. வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின் பொழிப்பு]

[24] வரலாறு பற்றிய இந்தக் கருத்தோட்டம், வாழ்க்கை தன்னையே குறித்த பொருள்வகை உற்பத்தியுடன் துவங்கி, உற்பத்தியின் மெய்யான நடைமுறையை விளக்கும் நமது ஆற்றலை, மற்றும் இதனுடன் தொடர்புடையதும் இந்த உற்பத்திமுறையால் படைத்துருவாக்கப்பட்டதுமான ஒட்டுறவு வடிவை (அதன் பல்வேறு கட்டங்களிலான குடியுரிமை சமுதாயத்தை), அனைத்து வரலாற்றின் அடிப்படையாகப் புரிந்து கொள்ளவும், அரசு என்ற முறையில் இதைச் செயலில் காட்டவும், உணர்வு, சமயம், தத்துவவியல், ஒழுக்க நெறி இத்தியாதிகளின் எல்லா வெவ்வேறு தத்துவார்த்த விளைபயன்களையும் வடிவங்களையும் விளக்கிக் கூறவும், அந்த அடிப்படையில் இருந்து அவற்றின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைத் தடம் கண்டு அறியவும் ஆன ஆற்றலைச் சார்ந்து நிற்கிறது. இந்த வழியில் இந்த முழு விவகாரமும் அதன் ஒட்டுமொத்தத்தில் விவரிக்கப்படும் (எனவே இந்தப் பல்வேறு தரப்புகளும் ஒன்றுக்கொன்று நடத்தும் பரஸ்பரச் செயல்பாட்டைக் கூட விளக்க முடியும்). வரலாற்றின் கருத்துமுதல்வாத கருத்துக்கோணம் போன்று ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒரு வகை இனத்தை தேடத்தேவை இல்லை; மாறாக இது வரலாற்றின் மெய்யான ஆதாரத்தின் மீது இடையறாது நின்று நிலவுகிறது. இது கருத்தில் இருந்து நடைமுறையை விளக்கவில்லை, மாறாக ஸ்தூலமான நடைமுறையில் இருந்து கருத்துக்களின் உருவாக்கத்தை விளக்குகிறது. இதற்கேற்ப, அது உணர்வின் எல்லா வடிவங்களையும் விளைபயன்களையும் மானசிக விமர்சனம் மூலம் ''சுய உணர்வின்'' அகத்தே உறுதிப்படுத்தல் மூலம், அல்லது ''ஆவியுருக்கள்'' ''பூதங்கள்,'' ''கற்பனைகளாக''[17] மாற்றுவது மூலம் கரைத்து விட இயலாது, மாறாக, இந்தக் கருத்துமுதல்வாத மோசடிக்கு இடமளித்த உண்மையான சமுதாய உறவுகளை நடைமுறையில் வீழ்த்தினால் மட்டுமே முடியும் என்றும், வரலாற்றின், சமயத்தின் தத்துவவியலின்

மற்றும் தத்துவத்தின் இதர எல்லா வகைகளின் இயக்கு விக்கும் சக்தி விமர்சனம் அல்ல, ஆனால் புரட்சியே என்றும் விளம்பும் முடிவுக்கு வருகிறது. ''ஆன்மாவின் ஆன்மா''* என்பதாக ''சுய உணர்வு'' ஆக மாறுவது மூலம் வரலாறு முடிவடைந்து விடுவதில்லை, ஆனால் அதில் ஒவ்வொரு கட்டத் திலும் ஒரு பொருள்வகை விளைவு காணப்படுகிறது: உற்பத்தி சக்திகளின் ஒரு தொகை, தனிநபர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலும் தனிநபர்கள் மத்தியில் பரஸ்பரமும் ஆன ஒவ் வொரு தலைமுறைக்கும் முந்திய தலைமுறையினால் வழி வழி வழங்கப்பட்டதுமான வரலாற்று வழி படைத்துருவாக்கப் பட்ட உறவு; உற்பத்தி சக்திகளின் பெருந்திரள், மூலதன நிதிகள் மற்றும் நிலைமைகள், இவை ஒரு புறம் புதிய தலைமுறையால் உண்மையில் மாற்றியமைக்கப்படுகின்றன, அதோடு மறுபுறம் இதற்கு அதன் வாழ்க்கை நிபந்தனைகளை இவ்விளைவு விதிமுறை செய்கிறது, மற்றும் அதற்குத் திட்ட வட்டமான ஒரு வளர்ச்சியையும் ஒரு தனிப் பண்பினையும் தருகிறது. எந்தளவுக்கு மனிதர்கள் புறநிகழ்வுகளை உரு வாக்குகிறார்களோ அதே அளவுக்குப் புற நிகழ்வுகள் மனிதர்களை உருவாக்குகின்றன [25] என்பதையும் இது புலப்படுத்துகிறது.

ஒவ்வொரு தனிநபர் மற்றும் தலைமுறையினர், தமக்குக் கொடுக்கப்பட்ட சிலவாக இருக்கக் காணும் உற்பத்தி சக்தி கள், மூலதன நிதிகள் மற்றும் ஒட்டுறவின் சமுதாய வடிவங் களின் கூட்டுத் தொகையே ''சாரப்பொருள்'' எனவும் ''மனிதனின் சாரம்'' எனவும் தத்துவஞானிகள் கருதிப் பார்த்து வந்துள்ளதும், அவர்கள் தெய்வமாக்கியும், தாக்கி யும் வந்துள்ளதுமானவற்றின் மெய்யான அடிப்படையா கும்: இந்தத் தத்துவஞானிகள் ''சுய உணர்வு'' மற்றும் ''அலாதித்தன்மை'' என்பதாக இதை எதிர்த்துக் கலகம் செய்கிறார்கள் எனும் மெய்நடப்பால், மனிதர்களது வளர்ச்சி யின் திட்பமும் செல்வாக்கும் சிறிதளவும் அலைக்கப்படாத ஒரு மெய்யான அடிப்படையாகும். வெவ்வேறு தலைமுறை

* இது புருனோ பௌவரின் சொற்றொடர்.—ப-ர்.

கள் இருக்கக் காண்கிற இந்த வாழ்க்கை நிலைமைகள், கால வட்டத்தில் அடிக்கடி நிகழ்ந்துவரும் புரட்சிகரக் குமுறல், நிலவும் அமைப்புமுறை முழுவதன் அடிப்படையையும் வீழ்த்துவதற்குப் போதிய வன்மை உள்ளதா இல்லையா என்பதையும் கூட முடிவு செய்கின்றன. ஒரு முழுமையான புரட்சியின் இந்த முக்கியமான கூறுகள் இருக்கவில்லையானால் (அதாவது, ஒருபுறம் நிலவில் இருக்கும் உற்பத்தி சக்திகளும், மறுபுறம், இது காறும் இருந்த தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை எதிர்த்து மட்டுமின்றி, இதை அடிப்படையாக்கிய ''முழுச் செயல்பாட்டின்'' அதுவரையிலான மெய்யான ''வாழ்க்கை உருவாக்கத்தையும்'' எதிர்த்த புரட்சிகர மக்கள் திரளினர் உருவாக்கமும்) பின்னர் எதார்த்தமான வளர்ச்சியைப் பொருத்தவரை, கம்யூனிசத்தின் வரலாறு நிரூபித்துக் காட்டுவது போல இந்தப் புரட்சியின் கருத்து ஏற்கெனவே நூறு தடவைகள் வெளியிடப்பட்டதா இல்லையா என்பது அறவே ஒரு பொருட்டல்ல.

### [8. வரலாற்றுக்கு முந்தியதான கருத்துமுதல் கருத்தோட்டத்தின் ஆதாரமற்ற தன்மை, குறிப்பாயும் ஹெகலுக்குப் பிந்திய ஜெர்மன் தத்துவவியலின் ஆதாரமற்ற தன்மை]

இன்றுவரையான வரலாற்றின் கருத்தோட்டம் முழுவதிலும், வரலாற்றின் இந்த மெய்யான அடிப்படை, ஒன்று, அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது அல்லது வரலாற்றின் போக்குக்கு முற்றும் சம்பந்தமற்றதான ஒரு சில்லரை விவகாரமாகக் கருதப்பட்டிருக்கிறது. எனவே வரலாறு எப்போதும் புறச்சார்பான தரத்துக்கு ஏற்பக் கட்டாயம் எழுதப்பட வேண்டும்; வாழ்க்கையின் மெய்யான உருவாக்கம் தொடக்ககால வரலாறாகத் தோன்றுகிறது, அதே போதில் உண்மையிலேயே வரலாற்றுச் சிறப்புடையது சாமான்ய வாழ்வில் இருந்து தனிப்பிரிக்கப்பட்டு புவிக்கு மேல் அப்பாற்பட்டதான சிலதாகத் தோற்றமளிக்கிறது. இதோடு இயற்கையின் பால் மனிதனுக்குள்ள உறவு வரலாற்றில் இருந்து

விலக்கப்படுகிறது, எனவே, இயற்கை மற்றும் வரலாற்றின் முரண்நிலை படைத்துருவாக்கப்படுகிறது. வரலாற்றின் இந்தக் கருத்தோட்டத்தின் வியாக்கியானிகள் இதன் பின் விளைவாக வரலாற்றில் மன்னர்கள் அரசுகளின் அரசியல் செயல்பாடுகளையும், சமயம் மற்றும் எல்லாவகைப்பட்ட தத்துவார்த்தப் போராட்டங்களையும் மட்டுமே காண முடிந்திருக்கிறது, குறிப்பாக ஒவ்வொரு வரலாற்று சகாப்தத்திலும் அந்த சகாப்தத்தின் பிரமையை ஏற்கும்படி நேர்ந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு சகாப்தம் தன்னை முற்றிலும் ''அரசியல்'' அல்லது ''சமயத்தின் அடிநோக்கங்களால் தூண்டுவிக்கப்படுவதாகக் கற்பனை செய்து கொள்ளும் பட்சத்தில், ''சமயம்'' மற்றும் ''அரசியல்'' அதன் மெய்யான அடிநோக்கங்களின் வடிவங்களாக மட்டுமே இருந்த போதிலும், வரலாற்றுளர் இந்தக் கருத்தை ஒப்புக்கொள்கிறார். சம்பந்தப்பட்ட மக்களின் அவர்களது மெய்யான நடவடிக்கை பற்றிய ''கருத்து'', ''கண்ணோட்டம்'' நிர்ணயம் செய்யும் ஒரே செயலூக்க சக்தியாக மாற்றப்படுகிறது, இது அவர்களது நடைமுறையைக் கண்காணிக்கிறது, மற்றும் வரையறுக்கிறது. இந்தியர்கள் மற்றும் எகிப்தியர் விஷயத்தில் முதிராத வடிவில் தோற்றமளிக்கும் உழைப்புப் பிரிவினை அவர்களது அரசு மற்றும் சமயத்தில் ஜாதிமுறையை வெளிக்கொணரும் போது, இந்த ஜாதி முறையே [26], இந்த முதிராத சமுதாய வடிவத்தை உருவாக்கியுள்ள சக்தி என்பதாக வரலாற்றுளர் கருதுகிறார்.

பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் எதார்த்தத்துக்கு ஓரளவு நெருக்கமாக இருக்கும் அரசியல் பிரமையினைக் குறைந்தபட்சம் பற்றி நிற்கும் அதே போதில், ஜெர்மானியர் ''சுத்த ஆன்மாவின்'' உலகினுள் இயங்கி சமயப் பிரமையினை வரலாற்றின் இயக்கு சக்தி ஆக்குகிறார்கள். இந்த அனைத்து ஜெர்மன் வரலாற்று எழுத்தாண்மை அதன் ''ஆகநேர்த்தியான விளக்கத்துக்குக்'' குறுக்கப்படும் போது கடைசிப் பின்விளைவாக வருகிறது வரலாறு பற்றிய ஹெகலியன் தத்துவவியல். அதற்கு இது மெய்யான அல்லது அரசியல் அக்கறைக்குரிய ஒரு விஷயம் அல்ல, மாறாக தூய

சிந்தனைகள் பற்றிய விஷயம். இது பின்னுல் செயிண்ட் புருனோவுக்கு ஒரு ''சிந்தனைகளின்'' தொடராக தோற்றம் அளிக்க வேண்டும். இவை ஒன்றை ஒன்று கபளிகரம் செய்து கொண்டு இறுதியாக ''சுய உணர்வில்''* ஈர்த்துக் கொள்ளப் படுவதாகும். மெய்யான வரலாறு குறித்து எதுவுமே தெரியாத பாழாய்ப்போன மாக்ஸ் ஸ்டிர்னருக்கு வரலாற்றின் போக்கு ''வீரர்கள்'', திருடர்கள் மற்றும் பேய்களின் வெறும் கதையாக மட்டுமே மேலும் அதிக நிலையுறுதியுடன் தோற்றமளிக்கிறது. இந்தப் பேய்களின் பார்வையில் இருந்து அவர்தமது ''புனிதமின்மை'' மூலம் மட்டுமே தன்னைக் காத்துக் கொள்ள முடியும், என்பது நிச்சயம். இந்தக் கருத்தோட்டம் உண்மையிலேயே சமயத் தன்மை கொண்டது: இது சமயநம்பிக்கையுள்ள மனிதனை ஆதிகால மனிதனுக, வரலாற்றின் துவக்க நிலையாக ஆதாரப் படுத்திக் காட்டுகிறது. மேலும் அதன் கற்பனையில் பிழைப் புக்கும் மற்றும் வாழ்க்கை தனக்கேயுமான சாதனங்களின் மெய்யான உற்பத்திக்குப் பதில் சமயத்தால் உருவாக்கப் படும் போலிப்புனைவுகளைப் புகுத்துகிறது.

அதன் ஆக்கச்சிதைவும், மற்றும் அதன் விளைவான ஐயமும் தயக்கமும் ஒன்று சேர்ந்த, வரலாறு குறித்த முழுக் கருத் தோட்டமும் அறவே ஜெர்மானியரின் தேசிய விவகார மாகும், மற்றும் இது ஜெர்மானியருக்கு ஒரு வட்டார அக்க றையை மட்டுமே தருவதாகும். எடுத்துக்காட்டாக, அண்மை யில் பல தடவைகள் விவாதிக்கப்பட்ட பின்வரும் முக்கிய மான விஷயத்தைச் சுட்டலாம்: ''கடவுளின் உலகத்தில் இருந்து மனிதனின் உலகத்துக்கு'' நாம் எப்படி உண்மை யிலேயே ''கடந்து செல்கிறோம்''. இந்தக் ''கடவுளின் உலகம்'' கற்பனையில் தவிர வேறு எங்கோ இருந்தது போலவும், படித்த கனவான்கள் இது குறித்து அறியாமலே இப்போது அவர்கள் எதன் வழியை நாடுகிறுர்களோ அந்த

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''புறநிலை வரலாற்று எழுத்தாண்மை எனப்படுவது வரலாற்று நிலைமைகளை நடை முறையில் இருந்து சுயேச்சையாகக் கருதுவதில் அடக்கம். பிற்போக்குத் தன்மை.''—ப-ர்.

''மனிதனின் உலகில்'' அவர்கள் இடைவிடாது வாழ்ந்திருக்க வில்லை போலவும் நடத்தப் பெறும் இந்த தத்துவார்த்த நீர்க்குமிழியின் மர்மத்தை விளக்குவதான இந்தத் துறை போன விளையாட்டு (இதைத் தவிர இது வேறு அதிகமாக ஒன்றுமில்லை) நேர்மாறுக, அதன் தோற்றத்தை மெய்யான நிலவுலக நிலைமைகளில் நிதர்சனப்படுத்திக் காட்டுவதில் காணக்கிடக்கவில்லை. இந்த ஜெர்மானியர்களுக்கு எப்போதுமே இது முன்னுள் எழுத்தாளர்களின் மடைமைக் கதைகளை [27] வேறு சில தான்தோன்றிச் செயலாக ஆய்ந்து முடிவு செய்யும் எளிய விவகாரமாகவே இருந்து வந்துள்ளது. அதாவது இந்த மடைமைக் க்தைகளுக்கு ஒரு சிறப்பான அர்த்தம் இருப்பதாயும் அதைக் கண்டறிய முடியும் எனவும் அவர்கள் முன் அனுமானித்தார்கள். ஆனுல் உண்மையில் இது இந்தத் தத்துவார்த்தப் பேச்சை உள்ளபடியே நிலவும் நிலைகளில் இருந்து விளக்கும் பிரச்சினையாக மட்டுமே இருந்தது. இந்தத் தொடர்களின் மெய்யான நடைமுறையிலான சிதைவும், மனிதர்களின் உணர்வில் இருந்து இந்தக் கருத்துப்படிவங்களை அகற்றுவதும் நாம் ஏற்கெனவே சொன்னது போல, தத்துவார்த்த பகுத்தறிதலால் அன்றி மாறிய நிலைமைகளால் செயல்படுத்தப்படும். பெருந்திரளான மனிதர்கள் அதாவது பாட்டாளிகளைப் பொருத்தவரை இந்தத் தத்துவார்த்தக் கருத்துப்படிவங்கள் இல்லை, எனவே அவற்றைக் கலைக்கத் தேவையில்லை. இந்த மக்கள் திரளினரிடம் எப்போதேனும் ஏதேனும் தத்துவார்த்தக் கருத்துப் படிவங்கள், உதாரணமாக சமயம் இத்தியாதி, இருந்திருக்குமாறுல் அவை நெடுங்கால முன்பே புறநிகழ்வுகளால் கலைக்கப்பட்டுவிட்டன.

இந்தப் பிரச்சினைகள் மற்றும் விடைகளின் முற்றுன தேசிய இயல்பு, இந்தத் தத்துவாளர்கள் ''கடவுள் மனிதன்'', ''மனிதன்'' இத்தியாதி போன்ற வேதாளங்கள் வரலாற்றின் தனிப்பட்ட சகாப்தங்களில் தலைமை தாங்கியதாக, காரியகரமாக நம்பும் போக்கில் இருந்து மீண்டும் புலப்படுகிறது. (செயிண்ட் புரூனே ''விமர்சனமும் விமர்சகர்களும் மட்டுமே வரலாற்றை உருவாக்கியுள்ளனர்''[18]

என்று அடித்துக் கூறும் அளவுக்கு போகிறார்) அவர்கள் தாமே வரலாற்று அமைப்பு முறைகளைக் கட்டியமைக்கும் போது அவர்கள் முந்திய காலப்பகுதி அனைத்தையும் மிகப் பெரிய அவசரத்தில் தாண்டிச் சென்று ''மங்கோலிசத்தில்''[19] இருந்து செழுமையான உள்ளடக்கம் கொண்ட வரலாற்றுக்கு, அதாவது *Hallische* மற்றும் *Deutsche Jahrbücher*[20] வரலாற்றையும், ஹெகலியன் கொள்கையை ஒரு பொதுப் பூசல் என்று கலைத்துவிடுவதையும் நோக்கி உடனடியாகக் கடந்து செல்கிறார்கள். அவர்கள் இதர தேசங்கள் அனைத்தையும், எல்லா மெய் நடப்புக்களையும் மறந்து விடுகிறார்கள். அவர்களது Theatrum Mundi (உலக அரங்கம்) லீப்சிக் புத்தகச் சந்தை மற்றும் ''விமர்சனம்'', ''மனிதன்'', ''அலாதித்தன்மை''* சம்பந்தமான பரஸ்பரப் பூசல்களிலும் அடங்கி விடுகிறது. இந்தத் தத்துவாளர்கள் உண்மையான வரலாற்று விஷயங்களை, எடுத்துக் காட்டாக பதினெட்டாம் நூற்றாண்டை விளக்கப்புகும் போது, அவற்றுக்கு அடிப்படையாக உள்ள மெய்விவரங்கள் மற்றும் எதார்த்த வளர்ச்சியில் இருந்து தனிப்பிரித்த காலங்களின் கருத்துக்களின் வரலாற்றை மட்டுமே தருகிறார்கள், அதுவுங்கூட அந்தக் காலப் பகுதியை ஒரு செம்மையுறாத பூர்வாங்க கட்டமாக, மெய்யான வரலாற்று யுகத்தின் இன்னமும் வரம்புக்குட்பட்ட முன்னோடி என்பதாக அதாவது, 1840 முதல் 1844 வரையிலான ஜெர்மன் தத்துவவியல் போராட்டத்தின் காலப் பகுதியாக உருவாக்கிக் காட்டும் பொருட்டு மட்டுமே இவ்வாறு தருகிறார்கள். எதிர்பார்த்த படியே, வரலாற்று முக்கியத்துவம் அற்ற ஒரு நபரின் மற்றும் அவரது விசித்திரக் கனவுகளின் சிறப்பை உயர்வாக வலியுறுத்தும் நோக்கமுடன் முந்திய காலப் பகுதியின் வரலாறு எழுதப்பட்ட போது, உண்மையான வரலாற்று நிகழ்வுகள்யாவும், வரலாற்றின் அகத்தேயான அரசியலின் மெய்யான வரலாற்றுப் படையெடுப்புகள் கூடக் குறிப்பிடப்படுவதில்லை. இதற்குப் பதிலாக செயிண்ட் புரூனோ, இப்போது

* அதாவது, புரூனோ பௌவர், லுத்விக் ஃபாயர்பாக் மற்றும் மாக்ஸ் ஸ்டிர்னர்.—ப-ர்.

மறக்கப்பட்டுவிட்ட அவரது பதினெட்டாம் நூற்ருண்டின் வரலாற்றில்[21] வழங்கியுள்ளதைப் போன்ற ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொள்ளாமல், தன்னிச்சையான கட்டமைவையும், இலக்கிய வம்பையும் அடிப்படையாக்கிய ஒரு நிகழ்ச்சி விரிவுரையையே நாம் பெறுகிருேம். எல்லாத் தேசியத் தப்பெண்ணங்களுக்கும் மேலே முடிவின்றி உயர்த்தப்பட்டுவிட்டதாகத் தம்மைத்தாமே கற்பனே செய்து கொள்ளும் பகட்டாரவார வீண்பெருமைக் கருத்து வாணிகர்கள் நடைமுறையில் ஓர் ஐக்கிய ஜெர்மனி பற்றிக் கனவுகாணும், மதுமாந்தும் அற்பவாதிகளை விடவும் மிக அதிகளவு தேசியவாதிகளாவர். அவர்கள் இதர தேசங்களின் செயல்களை வரலாற்று முக்கிய முடைத்தவையாக அங்கீகரிப்பதில்லை: அவர்கள் ஜெர்மனியில், ஜெர்மனிக்கு [28] ஜெர்மனியின் பெயரால் வாழ்கிருர்கள். அவர்கள் ரைன் பாடலை[22] சமயகீதமாக மாற்றி, பிரெஞ்சு அரசுக்குப்பதில் பிரெஞ்சு தத்துவ ஞானத்தைக் களவாடுவது மூலம் அல்சேஸ் மற்றும் லோரைன் பகுதிகளை வென்றுபெறுகின்றனர், பிரெஞ்சு மாகாணங்களுக்குப் பதில் பிரெஞ்சுக் கருத்துக்களை ஜெர்மன்மயமாக்குகின்றனர். புரூனே மற்றும் மாக்ஸ் எனும் புனிதருடன் ஒப்பிடும் போது ஹெர் வெனிடே ஒரு பரந்த நோக்காளர், அவர் தத்துவத்தின் சர்வப் பொதுவான ஆதிக்கத்தில் ஜெர்மனியின் சர்வப்பொது ஆதிக்கத்தைப் பிரகடனம் செய்கிருர்.

### [9. ஃபாயர்பாக் பற்றியும், வரலாறு குறித்த அவரது கருத்துமுதல்வாதக் கருத்தோட்டம் பற்றியும் கூடுதல் விமர்சனம்]

''சமுதாயத்தில் உள்ள சாதாரண மனிதன்'' எனும் தகுதி காரணமாக அவர் தம்மை ஒரு கம்யூனிஸ்டு என்று சாற்றிக் கொண்டும்,[23] கம்யூனிஸ்டு என்பதை ''மனிதன்'' என்பதன் பயனிலையாக மாற்றிக் கொண்டும், அதன் மூலம் எதார்த்த உலகில் ஒரு திட்டவட்டமான புரட்சிகரக் கட்சியைப் பின்பற்றுபவர் எனும் பொருள் தரும் ''கம்யூனிஸ்டு''

எனும் சொல்லே கேவலம் ஒரு வகை இனமாக மாற்றம் செய்யும் போது (*Wigand's Vierteljahrsschrift*, 1845, B. 2) ஃபாயர்பாக் தம்மைத் தாமே எப்படிப் படுமோசமாக ஏமாற்றிக் கொள்கிறார் என்பதும் இந்த வாதங்களில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. மனிதர்கள் ஒருவரோடு இன்னொருவர் கொண்டுள்ள உறவு சம்பந்தமான ஃபாயர் பாக்கின் பகுத்தறிதல் முழுவதும், மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் தேவை, எப்போதும் தேவை என்பதை நிரூபிக்கும் அளவுக்கு மட்டுமே செல்கிறது. இந்த மெய்மையின் உணர்வை அவர் நிலைநாட்ட விரும்புகிறார். அதாவது, இதரத் தத்துவாளர்களைப் போலவே நிலவும் ஒரு மெய்மை பற்றிய ஒரு சரியான உணர்வை உருவாக்க மட்டுமே விரும்புகிறார். அப்படியிருக்க, ஒரு மெய்யான கம்யூனிஸ்டுக்கு இது நிலவும் நிலைவரங்களை வீழ்த்துவது என்பது குறித்த விஷயமாகும். மேலும் இந்த மெய்நடப்பினதின் உணர்வை உருவாக்குவதற்கான தமது முயற்சியில் ஃபாயர்பாக் ஒரு தத்துவாளர் மற்றும் தத்துவஞானியாக இல்லாது போய்விடும் நிலைக்குச் செல்லாமலே, ஒரு தத்துவாளராய் சாத்தியமான அளவுக்குச் செல்கிறார் என்பதை நாம் முழுநிறைவாகப் பாராட்டுகிறோம். எனினும் செயிண்ட் புருனோவும் செயிண்ட் மாக்சும் கம்யூனிஸ்டு பற்றிய ஃபாயர்பாக்கின் கருத்துருவைப் பற்றிப்பிடித்துக் கொண்டு அதை மெய்யான கம்யூனிஸ்டின் இடத்தில் வைக்கிறார்கள்—கம்யூனிசத்தையும் கூட "ஆன்மாவின் ஆன்மாவாக" ஒரு தத்துவவியல் வகையினமாக ஒரு சமமான எதிராளியாக, புருனோவைப் பொருத்தவரை காரியசாத்திய முகாந்திரம் கருதியே கூட எதிர்க்கும் பொருட்டு இது நடக்கிறது.

நமது இதர எதிராளிகளைப் போலவே ஃபாயர்பாக்கும் நிலவும் எதார்த்தத்தை ஒப்புக்கொள்கிறார், அதே சமயத்தில் அதை தவறாகவும் புரிந்து கொள்கிறார். இதற்கு உதாரணமாக, *Philosophie Der Zukunft* எனும் நூலில் இருந்து ஒரு பகுதியை நினைவு கூருகிறோம். அதில் அவர் ஒரு பொருள் அல்லது ஒரு மனிதனின் இருத்தல் அதே சமயத்தில் அதன் அல்லது அவனது சாராம்சமும்[24] ஆகும்

எனவும், ஒரு விலங்கு அல்லது மனிதப் பேர்வழியின் இருத்தல் நிலைமைகள் வாழ்க்கை முறை மற்றும் செயல்பாடு ஆகியவை, அதன் ''சாராம்சம்'' தானே அவற்றில் மன நிறைவை உணரும் வகையில் இருப்பவை எனவும் ஒரு கருத்தை உருவாக்குகிறார். இங்கு ஒவ்வொரு விதிவிலக்கும் வருந்தத்தக்க வாய்ப்பாகவோ, நெறி பிறழ்வாகவோ பகிரங்கமாக கருதிப்பார்க்கப்படுகின்றன. இவற்றை மாற்ற முடியாது. இவ்வாறாக, கோடிக்கணக்கான பாட்டாளிகள் தமது வாழ்க்கை நிலைமைகள் எவ்வகையிலும் திருப்திகரமல்ல என்று உணர்வார்களானால், அவர்களது ''இருத்தல்'' [29] அவர்களது ''சாராம்சத்துக்குச்'' சிறிதும் ஒத்திராவிட்டால், பின்னர், மேற்கோள் காட்டப்பட்ட பகுதியின் பிரகாரம் இது தவிர்க்க முடியாத இடையூறேயாகும், இதைப் பொறுமையாகத் தாங்கிக்கொள்ள வேண்டும். எனினும் கோடிக் கணக்கான பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும் வேறு மாதிரியாக நினைக்கிறார்கள். அதன்படி ஒரு காரியசாத்தியமான வழியில் ஒரு புரட்சியின் வாயிலாக தமது ''இருத்தலை'' தமது ''சாராம்சத்துடன்'' இணக்கமாகக் கொண்டுவரும் பொழுது அவர்கள் இதை உரிய காலத்தில் நிரூபித்துக் காட்டுவார்கள். எனவே இத்தகைய சம்பவங்களில் ஃபாயர்பாக் மனிதனின் உலகம் பற்றிப் பேசுவதே இல்லை. மாறாக, எப்போதும் வெளிப்புற இயற்கையில், மேலும் இன்னமும் மனிதனால் கீழடக்கப்படாத இயற்கையில் புகலிடம் தேடுகிறார். ஆனால் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் தொழில் துறையில் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் இந்தத் துறையின் இன்னொரு பகுதியை கழற்றி நீக்கிவிடுகிறது. ஆகவே இத்தகைய ஃபாயர்பாக் பாணி அறுதியுரையை சித்திரிக்கும் உதாரணங்களை உருவாக்கும் அடித்தளம் வேகமாகச் சுருக்க முறுகிறது. மீனின் ''சாராம்சம்'' அதன் ''இருத்தல்'', ஆன தண்ணீர்—இந்த ஓர் அறுதியுரைக்கு அப்பால் போகாதிருத்தல். நன்னீர் வாழ் மீனின் ''சாராம்சம்'' ஓர் ஆற்றின் தண்ணீர். ஆனால் ஆறு தொழில்துறைக்குப் பயன்படுத்தப்பட்டவுடன், அது சாயம் மற்றும் இதர கழிவுப் பொருட்களால் தூய்மை கெடுக்கப்பட்டவுடன், மற்

றும் நீராவிப் படகுகள் அதில் ஓடவிடப்பட்டவுடன், அல்லது அதன் தண்ணீர் கால்வாய்களில் திருப்பிவிடப்பட்டவுடன் அங்கு சாமான்ய சாக்கடை நீர் மீன்களுக்குரிய அவற்றின் இருத்தல் சாதனத்தைப் பறித்து விடும் போது, பின்னது மீனின் ''சாராம்சமாக'' இருத்தல் இயலாது, இனிமேலால் பொருத்தமான இருத்தல் சாதனமாயும் இருக்காது. இத்தகைய எல்லா முரண்பாடுகளும் தவிர்க்க முடியாத சகஜக்கேடுகளே எனும் விளக்கம், பாழாய்ப் போன மாக்ஸ் ஸ்டிர்னர் அதிருப்தியுற்றோருக்கு வழங்கும் ஆறுதல் மொழியில் இருந்து சாரத்தில் வேறுபடவில்லை. இந்த முரண்பாடு அவர்களது சொந்த முரண்பாடு என்றும் இந்த இக்கட்டு நிலை அவர்களது சொந்த இக்கட்டு நிலை என்றும் அவர் கூறுகிறார். இதன்பின், அவர்கள் ஒன்றுமன அமைதி கொள்ள வேண்டும், தமது வெறுப்பைத் தமக்குள்ளே வைத்துக் கொள்ளவேண்டும். அல்லது அதற்கு எதிராக, ஏதேனும் ஒரு விசித்திரமான வழியில் கலகம் செய்ய வேண்டும். என்று கூறுகிறார். இது செயிண்ட் புரூனோவின் குற்றச் சாட்டில் இருந்து கிஞ்சிற்றும் வேறுபட்டதல்ல. இந்த துரதிருஷ்டமான நிலைமைகளுக்குக் காரணம் சம்பந்தப்பட்ட பேர்கள் ''சாராம்சம்'' என்னும் குப்பையில் சிக்குண்டிருப்பதும், ''பரமமான சுயவுணர்வுக்கு'' முன்னேறுமல் இருப்பதும், இந்த பாதக நிலைமைகள் தமது ஆன்மாவின் ஆன்மாவே என்பதை உணராமல் இருப்பதும் தான் என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

## III

[1. ஆளும் வர்க்கம் மற்றும் ஆளும் உணர்வு. வரலாற்றில் ஆன்மாவின் ஆதிக்கம் பற்றிய ஹெகலின் கருத்தோட்டத்தின் உருவாக்கம்]

[30] ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆளும் வர்க்கங்களின் கருத்துக்களே கோலோச்சும் கருத்துக்களாக விளங்கும் அதாவது, சமுதாயத்தின் பொருள்வகை சக்தியை ஆளும் வர்க்கம், அதே சமயம் அதன் கோலோச்சும் அறிவுத்துறை

சக்தியாகவும் விளங்கும். பொருள் உற்பத்தி சாதனங்களைத் தனது செயலாட்சியில் வைத்திருக்கும் வர்க்கம், அதேசமயம் அறிவுத்துறை உற்பத்தி சாதனங்கள் மீது கண்காணிப்புச் செலுத்தும், எனவே அதன் மூலம், பொதுப்படச் சொன்னால், அறிவுத்துறை உற்பத்தி சாதனங்கள் தம் வசம் இல்லாதவர்கள், அதற்குக் கீழடங்கி இருப்பார்கள். கோலோச்சும் கருத்துக்கள் என்பவை மேலோங்கி நிற்கும் பொருள்வகை உறவுகளின் லட்சிய வெளிப்பாடும், கருத்துக்களாகப் புரிந்து கொள்ளப்பட்ட மேலோங்கி நிற்கும் பொருள்வகை உறவுகளும் தவிர வேறு எதுவுமல்ல. ஆளும் வர்க்கமாக அமையும் தனிநபர்கள் இதர விஷயங்களுக்கு மத்தியில் உணர்வையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள், எனவே சிந்திக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஒரு வர்க்கம் என்ற முறையில் ஆட்சி நடத்தி ஒரு சகாப்தத்தின் அளவையும் வீச்சையும் நிர்ணயம் செய்கிறார்கள் என்னும் அளவுக்கு, அவர்கள் இதை அதன் முழு அளவெல்லை வரை செய்கிறார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். எனவே அவர்கள் வேறு காரியங்களுடன் கூடவே சிந்தனையாளர்களாகவும் கருத்துக்களை உருவாக்குகிறவர்களாகவும் இருந்து ஆட்சி செய்கிறார்கள், தமது யுகத்தின் கருத்துக்களின் உற்பத்தியையும் வினியோகத்தையும் முறைப்படுத்துகிறார்கள்: இவ்வாறாக, அவர்களது கருத்துக்கள் இந்த சகாப்தத்தின் கோலோச்சும் கருத்துக்களாக விளங்குகின்றன. எடுத்துக் காட்டாக, மன்னராட்சி, பிரபுக்குலம் மற்றும் முதலாளித்துவ வர்க்கம் ஆதிக்கத்துக்காகப் போட்டியிட்டுப் போரிடும் ஒரு யுகத்தில் ஒரு நாட்டில், எனவே ஆதிக்கம் பகிர்ந்து கொள்ளப்படும் இடத்தில், அதிகாரங்களை தனிப்பிரிக்கும் போதனை மேலோங்கிய கருத்தாக நிதர்சனப்படுகிறது, மற்றும் ஒரு ''நிரந்தரச் சட்டமாக'' வெளியிடப்படுகிறது.

இது வரையிலான வரலாற்றின் பிரதான சக்திகளில் ஒன்றாக நாம் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட* உழைப்புப்

* இத்தொகுதியின் 46-53 பக்கங்களைப் பார்க்க.—ப-ர்.

பிரிவினை, ஆளும் வர்க்கத்தினுள்ளும் மூளை உழைப்பு [31] மற்றும் உடலுழைப்புப் பிரிவினையாக தோற்றமளிக்கிறது. ஆகவே இந்த வர்க்கத்தின் அகத்தே ஒரு பகுதியினர் இந்த வர்க்கத்தின் சிந்தனையாளர்களாகக் காட்சியளிக்கிறார்கள் (இதன் செயலூக்கமுள்ள, கருத்தோட்டமுள்ள சித்தாந்த வாதிகள், இந்த வர்க்கம் தன்னைப் பற்றியே கொண்டுள்ள பிரமையினைச் செவ்வைப் படுத்துவதையே தமது பிழைப்புக்கு முக்கிய ஆதாரமாகக் கொண்டவர்கள்). அதே போதில் இந்தக் கருத்துக்கள் பிரமைகள் பற்றியதான மற்ற பகுதியினரின் தோரணை மேலும் மந்தமானதாயும் ஏற்புத்தன்மை கொண்டதாயும் இருக்கிறது, காரணம் உண்மையில் அவர்கள் இந்த வர்க்கத்தின் செயலூக்கமுள்ள உறுப்பினர்கள், மேலும் தம்மைப் பற்றிய பிரமைகளையும் கருத்துக்களையும் புனைவதற்கான காலாவகாசம் அவர்களுக்கு மிகவும் குறைவு. இந்த வர்க்கத்தின் அகத்தை இந்தப் பிளவு இரு பகுதியினர் இடையில் ஓரளவு எதிர்ப்பையும் பகையையும் கூட வளர்க்கலாம். எனினும் இது, இந்த வர்க்கம் தன்னையே அபாயத்திற்குள்ளாக்கிக்கொள்ளத்தக்க ஓர் எதார்த்த மோதலில் இறங்கும் போது தானாகவே ஒன்றுமில்லாமற் போய் விடுகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் கோலோச்சிவரும் கருத்துக்கள் ஆளும் வர்க்கத்தின் கருத்துக்கள் அல்ல எனவும், இந்த வர்க்கத்தின் அதிகாரத்தில் இருந்து தனிவேறான ஓர் அதிகாரம் இருப்பதாகவும் கருதப்படும் போலித் தோற்றமும் மறைந்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் புரட்சிகரக்கருத்துக்கள் நிலவுவதானது ஒரு புரட்சிகர வர்க்கம் இருத்தலை முன் அனுமானிக்கிறது, பிந்தியதற்கான மெய்க்கோள்களைப் பொறுத்தவரை போதியளவு விவரங்கள் மேலே தரப்பட்டுள்ளன.*

இப்போது வரலாற்றின் போக்கை ஆராயுமிடத்து, நாம் ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களை ஆளும் வர்க்கத்திடமிருந்தே நீக்கம் செய்து அவற்றுக்கு ஒரு சுயேச்சையான இருத்தலைக் கற்பிதம் செய்வோமானால், ஒரு குறிப்பிட்ட சமயத்தில்

---

* இத்தொகுதியின் 53-55,60-62 பக்கங்களைக் காண்க. —ப-ர்.

இந்த அல்லது அந்தக் கருத்துக்கள் மேலோங்கி இருந்தன என்று சொல்வதோடு நாம் நின்றுவிடுவோமானால், இந்தக் கருத்துக்களின் உருவாக்கம் மற்றும் இதை உருவாக்கிய வர்களின் நிலைமைகள் பற்றி கவலைப்படாது இருப்போமானால், இவ்வாறாக இந்தக் கருத்துக்களின் ஊற்றுக்கண்ணாக இருக்கும் தனிநபர்களையும் உலக நிலைமைகளையும் அசட்டை செய்வோமானால், நாம் எடுத்துக்காட்டாக, பிரபுக் குலம் ஆதிக்கம் செலுத்தி வந்த காலத்தில் ''கௌரவம்,'' ''விசுவாசம்'' இத்தியாதி கருத்துருக்கள் மேலோங்கி இருந் தன எனவும், முதலாளி வர்க்கத்தின் மேலாதிக்கம் நிலவிய காலத்தில் ''சுதந்திரம்'', ''சமத்துவம்'' இத்தியாதி கருத் துருக்கள் மேலோங்கி இருந்தன எனவும் கூற முடியும். ஒட்டுமொத்தத்தில் ஆளும் வர்க்கம் தானே இது இவ்வாறு இருப்பதாகக் கற்பனை செய்துகொள்கிறது. குறிப்பாயும், பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னால் எல்லா வரலாற்று ளர்களுக்கும் பொதுப்படையாக இருக்கும் வரலாற்றின் இந்தக் கருத்தோட்டம், கூடுதலாயும் கருத்தியலான கருத் துக்கள் அதாவது, சர்வப்பொது மெய்மை வடிவத்தைக் கூடுதலாக மேற்கொள்ளும் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்தும் எனும் புலப்பாடுக்கு [32] எதிராக தவிர்க்க முடியாதபடி காட்சியளிக்கும். ஏனெனில், தனக்கு முன்பு ஆட்சி செய்து வந்த வர்க்கத்தின் இடத்தில் தன்னை அமர்த்திக் கொள்ளும் ஒவ்வொரு புதிய வர்க்கமும், தனது நோக் கத்தை நிறைவேற்றும் பொருட்டு மட்டுமே, தனது நலனை சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரின் நலனாகக் காட்டும் படி, அதாவது இலட்சிய வடிவில் வெளிப்படுத்துமாறு கட்டாயப்படுத்தப்படுகிறது: அது தனது கருத்துக்களுக்கு சர்வப்பொது மெய்மை வடிவம் தந்து அவை மட்டுமே பகுத்தறிவுக் கொத்தவை சர்வப்பொதுவானவை செல் தகுதி வாய்ந்தவை என்பதாக உருப்படுத்திக் காட்ட வேண்டியுள்ளது. ஒரு புரட்சியைச் செயல்படுத்தும் வர்க்கம், அது ஒரு வர்க்கத்தை எதிர்க்கிறது என்ற காரணத்தால் மட்டுமே, வெகு துவக்கம் முதலே ஒரு வர்க்கமாக அன்றி, மாறாக சமுதாயம் முழுவதன் பிரதிநிதியாகத் தோற்றம்

அளிக்கிறது, ஓர் ஆளும் வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் சமுதாயத்தின் முழுத் திரளாகத் தோற்றமளிக்கிறது.* இதை அதனால் செய்ய முடியும். காரணம் முதலில் அதன் நலன் ஆட்சிபுரியாத இதர வர்க்கங்கள் அனைத்தின் நலனுடன் உண்மையிலேயே அதிகத் தொடர்புடையது, ஏனெனில் இது வரை இருந்த நிலைமைகளின் நெருக்குதலின் கீழ் இதன் நலன் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட நலனாக இன்னும் வளர்ச்சியடைய இயலவில்லை. எனவே இதன் வெற்றி, ஓர் ஆதிக்க நிலையை வென்று பெற முடியாதபடி இருக்கும். இதர வர்க்கங்களின் பல தனிநபர்களுக்கும் கூட அனுகூலம் செய்கிறது. ஆனால் தம்மைத்தாமே ஓர் ஆளும் வர்க்கமாக உயர்த்திக் கொள்ளும் நிலையில் இந்தத் தனிநபர்களை அமர்த்தும் அளவுக்கு மட்டுமே இவ்வாறு அனுகூலம் செய்கிறது. பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம் பிரபுக்குலத்தின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்திய போது அது அதன் வாயிலாக பல பாட்டாளிகள் தம்மைத் தாமே பாட்டாளி வர்க்கத்துக்கு மேலாக உயர்த்திக் கொள்வதை சாத்தியமாக்கியது. ஆனால் இது, அவர்கள் முதலாளித்துவ வகைப்பட்டோராக மாறியதன் அளவுக்கு மட்டுமே சாத்தியமாயிற்று. எனவே, ஒவ்வொரு புதிய வர்க்கமும், முன்னால் ஆட்சிபுரிந்து வந்த வர்க்கத்தைக் காட்டிலும் கூடுதல் விரிவான அடிப்படையில் மட்டுமே தனது தலைமைப் பாத்திரத்தை எய்துகிறது, அப்படியிருக்க, புதிய ஆளும் வர்க்கத்துக்கு எதிரான, ஆட்சியில் இல்லாத வர்க்கங்களின் எதிர்ப்பு, பின்னால் மேலும் கூடுதல் கடுமையானதாயும் ஆழமிக்கதாயும் வளர்கிறது. இந்தப் புதிய ஆளும் வர்க்கத்

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: (சர்வப் பொதுமை என்பது (1) வர்க்கம் ஆதீனத்தை எதிர்ப்பது, (2) போட்டி, உலகுதழுவிய ஒட்டுறவு இத்தியாதி, (3) ஆளும் வர்க்கத்தின் மாபெரும் எண்ணிக்கை பலம், (4) பொது நலன்களின் பிரமை (துவக்கத்தில் இந்தப் பிரமை உண்மையாக இருந்தது), (5) சித்தாந்தவாதிகளின் ஏமாற்று மற்றும் உழைப்புப் பிரிவினை ஆகியவற்றுக்குச் சரி ஒப்பாக இருக்கிறது).''—ப-ர்.

துக்கு எதிராக நடத்தப்பட வேண்டிய போராட்டம், தன் முறைக்கு, ஆட்சிபுரிய முயன்ற முந்திய வர்க்கங்கள் அனைத் தாலும் செய்ய முடிந்ததை விடவும் [33] அதிகமாக, சமு தாயத்தின் முந்திய நிலைமைகளை மேலும் தீர்மானகர மாயும் தீவிரமாயும் நிலைமறுப்புச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது எனும் உண்மையை இந்த இரண்டு காரி யங்களும் வரையறை செய்கின்றன.

பொதுப்படையான வர்க்க ஆட்சி, சமுதாயம் நிறுவப் பட்டுள்ள வடிவில் இல்லை என்ற நிலை ஏற்பட்ட உடனேயே, அதாவது, ஒரு குறிப்பிட்ட நலனை பொது நலனாகவோ அல்லது ''பொது நலனை'' கோலோச்சும் நலனாகவோ காட்ட வேண்டுவது இனி மேலால் அவசியமில்லை என்ற நிலை ஏற் பட்ட உடனேயே, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் ஆட்சி குறிப்பிட்ட சில கருத்துக்களின் ஆட்சி மட்டுமே எனும் முழுப் போலித் தோற்றமும் இயல்பான முடிவுக்கு வருகிறது.

ஆட்சி செய்யும் கருத்துக்கள் ஆளும் தனிநபர்களிட மிருந்தும், எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு குறிப்பிட்ட கட்டத்திலான உற்பத்தி முறையில் இருந்து எழும் உறவு களில் இருந்தும் தனிப்பிரிக்கப்பட்டு, இந்த வழியில் வர லாறு எப்போதுமே கருத்துக்களின் செல்வாக்கின் கீழ் இருக் கிறது எனும் முடிவுக்கு வந்துவிட்ட பிறகு, வரலாற்றில் மேலோங்கி நிற்கும் சக்தி என்ற முறையில் இந்தப் பல்வேறு கருத்துக்களில் இருந்து''பொதுக் கருத்து''பொதுக் கருத்துப் படிவம் இத்தியாதிகளை பிரித்தெடுப்பது மிகவும் எளிதா கும். இவ்வாறாக, இந்த தனித்தனி கருத்துக்களையும் கருத் துருக்களையும், வரலாற்றில் வளர்ந்து வரும் கருத்துருவின் சார்பிலான ''சுயநிர்ணயத்தின் வடிவங்களாகப்'' புரிந்து கொள்வதும் எளிது. மனிதர்களின் எல்லா உறவுகளையும், மனிதன் பற்றிய கருத்துரு, கருதிப்பார்க்கப்பட்ட மனிதன், மனிதனின் சாராம்சம், மனிதன் என்பதில் இருந்து வருவித்து உருவாக்கலாம் என்பது பின்னர் இயல்பாகவே தொடர் கிறது. இதை கற்பனைக் கோட்டை கட்டும் தத்துவவியலா ளர்கள் செய்திருக்கிறார்கள். தான் ''கருத்துருவின் வளர்ச்சி பற்றி மட்டுமே ஆராய்ந்து பார்த்திருப்பதாயும் வரலாற்

றில் 'மெய்யான அறமுறை இறைமைவாதத்தை' உருவாக்கி இருப்பதாயும்'' ஹெகல் தானே *Gescaichts philosophie* இன் முடிவில் ஒப்புக்கொள்கிறார் (ப. 446). இப்போது ஒருவர் ''கருத்துருவின்'' உற்பத்தியாளர்களிடம், தத்துவ வாளர்களிடம், சித்தாந்திகளிடம் மற்றும் தத்துவ வியலாளர்களிடம் மறுபடியும் போகலாம்.அதன் பிறகு அவர் தத்துவவியலாளர்கள், சிந்தனையாளர்கள் என்ற முறையில் வரலாற்றில் எல்லாக் காலங்களிலும் மிகு செல்வாக்குடன் இருந்து வந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வருவார்: இந்த முடிவை ஹெகல் ஏற்கெனவே வெளியிட்டிருப்பதை நாம் காண்கிறோம்.[25]

வரலாற்றில் ஆன்மாவின் தலைமைப் பாத்திரத்தை நிரு பித்துக் காட்டும் (இதனை மேற்கட்டு வரிசை என்று ஸ்டிர் னர் குறிக்கிறார்) இந்த வித்தை] முழுவதும் இவ்வாறாகப் பின்வரும் மூன்று முயற்சிகளுக்குள் அடங்கிவிடுகிறது.

[34] № 1. அனுபவவாதக் காரணங்களுக்காக, அனு பவவாத நிலைமைகளில் அனுபவவாதப் பேர்வழிகளாக ஆட்சிபுரியும் அவர்களது கருத்துக்களை இந்த மெய்யான ஆட்சியாளர்களிடம் இருந்து தனியாகப் பிரித்து, இவ் வாறாக, வரலாற்றில் கருத்துக்கள் அல்லது பிரமைகளின் ஆட்சி இருப்பதை அங்கீகரிக்க வேண்டும்.

№ 2. இந்தக் கருத்துக்களின் ஆட்சியில் ஒருவர் ஒரு ஒழுங்குமுறையைக் கொண்டுவர வேண்டும், தொடர்ந்து வருகிற ஆட்சிக் கருத்துக்களின் மத்தியில் ஒரு மாயையான தொடர்பை நிரூபித்துக் காட்ட வேண்டும். ''கருத்துருவின் பாற்பட்ட சுயநிர்ணயச் செயல்கள்'' என்பதாக இவற்றைப் புரிந்து கொள்வது மூலம் இது சமாளிக்கப்படுகிறது (இது சாத்தியமே, காரணம் இவற்றின் அனுபவவாத அடிப் படையின் விளைவாக இந்தக் கருத்துக்கள் ஒன்றுடன் ஒன்று உண்மையிலேயே இணைக்கப்பட்டுள்ளன. மற்றும் வெறும் கருத்துக்கள் என்பதாகக் கருதிப்பார்க்கப்படுவதால், அவை சுய வேறுபாடுகள் சிந்தனை வாயிலாக ஏற்பட்ட வேறுபாடு கள் ஆகின்றன).

№ 3. இந்த ''சுயநிர்ணயம் புரியும் கருத்துருவின்''

மாயமான தோற்றத்தை அகற்ற இது ஒரு நபராக மாற்றப்படுகிறது—''சுய உணர்வு''—அல்லது முழுநிறைவாகவும் பொருளாயதத்தன்மை வாய்ந்ததாகத் தோன்றும் பொருட்டு வரலாற்றில் இந்தக் ''கருத்துருவைப்'' பிரதிநிதித்துவப்படுத்தும் ''சிந்தனையாளர்கள்'', ''தத்துவவியலாளர்கள்'', சித்தாந்தவாதிகள் எனப்படும், வரலாற்றின் உற்பத்தியாளர்கள், ''காப்பாளர் கவுன்சில்'' ஆட்சியாளர்கள் எனப்படும் பல நபர்களாக மாற்றப்படுகிறது.* இவ்வாறாக, பொருளாயதத் தன்மை வாய்ந்த கூறுகளின் முழு அமைப்பும் வரலாற்றில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டது, இப்போது கற்பனைக் குதிரையை இஷ்டம் போல ஓட்டலாம்.

ஜெர்மனியில் கோலோச்சிய இந்த வரலாற்று முறையையும் அதற்கான முகாந்திரம் என்ன என்பதையும் பொதுவாக சித்தாந்தவாதிகளின் பிரமைகளுடனும் உ. ம். நீதியாளர் அரசியலாளர் (இவர்கள் மத்தியிலான காரியவாத அரசறிஞர்களிடமுமான) பிரமைகளுடனுமான அதன் தொடர்பிலிருந்தும், இந்தப் பேர்வழிகளின் வறட்டுச் சூத்திரக் கனவுப்போக்கு மற்றும் புரட்டுகளில் இருந்தும் புரிந்து கொள்ள வேண்டும்; இது அவர்களது வாழ்க்கையிலான எதார்த்த நிலைமை, அவர்களது தொழில், மற்றும் உழைப்புப் பிரிவினையில் இருந்து முற்றிலும் எளிதாக விளக்கப்படுகிறது.

[35] சாமான்ய வாழ்வில் ஒவ்வொரு கடைக்காரனும் ஒருவர் என்ன பாவனை செய்கிறார் என்பதற்கும் அவர் உண்மையில் எப்படி இருக்கிறார் என்பதற்கும் இடையே மிகவும் நன்றாக வேறுபடுத்திக் கண்டறிய இயல்கிறது; அதே போதில், நமது வரலாற்றாளர்கள் இந்தச் சின்னஞ்சிறு நுண்ணறிவை இன்னும் பெறவில்லை. அவர்கள் ஒவ்வொரு சகாப்தத்தையும் உண்மை என ஏற்றுக்கொண்டு, அது தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும், கற்பனை செய்து கொள்ளும் சகலத்தையும் மெய் என்று நம்புகிறார்கள்.

---

* ஓரக் குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''மனிதன்-'பகுத்தறிவுடைய மானுட உணர்வு' ''.—ப-ர்.

## [IV]

### 1. உற்பத்திக் கருவிகளும் சொத்து வடிவங்களும்

...* [40] முதலாவதில் இருந்து மிகவும் உயர் வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினை மற்றும் ஒரு விரிவான வாணிகம் பற்றிய முற்கூற்றும் தொடர்கிறது; இரண்டாவதில் இருந்து வட்டாரமும். முதல் நிகழ்வில் தனிநபர்களை ஒன்று சேர்த்துக் கொண்டுவர வேண்டும், இரண்டாவதில் அவர்கள் தாமே சம்பந்தப்பட்ட உற்பத்திக் கருவியுடன் ஒருங்கே உற்பத்திக் கருவிகளாக இருக்கக் காண்கின்றனர்.

எனவே, இங்கு இயற்கையான உற்பத்திக் கருவிகளுக்கும் நாகரிகத்தால் படைத்துருவாக்கப்பட்ட உற்பத்திக் கருவிகளுக்கும் இடையே வேறுபாடு எழுகிறது. விளைநிலம் (தண்ணீர் இத்தியாதி) இயற்கையான உற்பத்திக் கருவி என்று கருதப்படலாம். முதலாவதில், இயற்கையான உற்பத்திக் கருவிகள் விஷயத்தில், தனிநபர்கள் இயற்கைக்குக் கீழடங்கி ஒத்தாசையாக இருக்கிறார்கள்; இரண்டாவதில் உழைப்பின் உற்பத்திப் பொருளுக்கும். எனவே முதலாவதில் சொத்து (நிலச்சொத்து) நேரடி இயல்பான ஆதிக்கமாகத் தோற்றம் அளிக்கிறது. இரண்டாவதில் உழைப்பின் ஆதிக்கமாக, குறிப்பாயும் திரட்டப்பட்ட உழைப்பின், மூலதனத்தின் ஆதிக்கமாகத் தோற்றம் அளிக்கிறது. முதலாவது, தனிநபர்கள் குடும்பம், பூர்வகுடி, நிலம் இத்தியாதிகளால் ஆன ஒரு பிணைப்பால் இணைக்கப்பட்டிருப்பதை முன் அனுமானிக்கிறது. இரண்டாவது, அவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் சுயேச்சையாக இருப்பதையும், பரிவர்த்தனையால் மட்டுமே சேர்த்திணைக்கப்படுவதையும் முன் அனுமானிக்கிறது. முதலாவதில் உள்ளடங்கியிருப்பது பிரதானமாயும் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரிவர்த்தனையே, இதில் முன்னவர்களின்

---

* இங்கே கையெழுத்துப் பிரதியின் நான்கு பக்கங்கள் காணப்படவில்லை.—ப-ர்.

உழைப்பு பின்னதன் விளை பொருள்களுடன் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிறது. இரண்டாவதில் உள்ளடங்கி இருப்பது முக்கியமாயும் மனிதர்கள் தம் மத்தியிலான பரிவர்த்தனையே. முதலாவதில் சராசரி மானுடப் பொது அறிவு போதுமானது, உடல் நடவடிக்கை மூளை நடவடிக்கையில் இருந்து இன்னமும் பிரிக்கப்படவில்லை. இரண்டாவதில் உடல் உழைப்பு மற்றும் மூளை உழைப்புக்கு இடையிலான பிரிவினை ஏற்கெனவே நடைமுறையில் செய்து முடிக்கப்பட்டிருக்க வேண்டும். முதலாவதில் சொத்துப்பத்தில்லாதவர்கள் மீதான சொத்துடைமையாளரின் ஆதிக்கம் ஒரு சொந்த உறவு முறையை ஒரு வகையான குடிவாழ்கூட்டினை [Gemeinwesen] அடிப்படையாக்கி இருக்கலாம். இரண்டாவதில் அது ஒரு மூன்றும் தரப்பான பணம் என்பதில் முக்கியமாக உருப் பெற்றிருக்கலாம். முதலாவதில் சிறுதரத் தொழில் துறை நிலவுகிறது, ஆனால் இயற்கையான உற்பத்திக் கருவியைப் பயன் படுத்தல் மூலம் இது வரையறுக்கப்படுகிறது, எனவே பல்வேறு தனிநபர்கள் மத்தியில் உழைப்புப் பிரிவினை இல் லாமலே இது நிலவுகிறது. இரண்டாவதில் தொழில்துறை யானது உழைப்புப் பிரிவினையின் அகத்தும் அதன் வாயிலாக வும் மட்டுமே நிலவுகிறது.

[41] இதுவரையிலுமான நமது ஆராய்வு உற்பத்திக் கருவிகளில் இருந்து தொடங்கியது, மற்றும் இது ஒரு சில தொழில்துறை கட்டங்களுக்கு தனியார் சொத்துரிமை அவசியம் என்பதை ஏற்கெனவே புலப்படுத்தி விட்டது. Industrie Extrative (வடிப்புத் தொழில்துறையில்) தனி யார் சொத்து இன்னும் உழைப்புடன் தற்செயலாக இணைந் திருக்கிறது; சிறுதரத் தொழில்துறை மற்றும் எல்லா வகை விவசாயத்திலும் இது வரையில் சொத்து நிலவில் இருக்கும் உற்பத்திக் கருவிகளின் இன்றியமையாத பின் விளைவாக இருந்துவருகிறது. பெரிய தொழில்துறையில் உற் பத்திக் கருவிக்கும் தனியார் சொத்துக்கும் இடையிலான முரண்பாடு முதல் தடவையாகத் தோற்றமளிக்கிறது. மேலும் இந்த முரண்பாட்டை உருவாக்க பெரிய தொழில் துறை மிகவும் உயர்ந்தளவு வளர்ச்சி பெற்றிருக்க வேண்

டும். இவ்வாருக, பெரிய தொழில் துறையுடன்தான் தனியார் சொத்துரிமை ஒழிப்பு சாத்தியமாகிறது.

---

### [2. உடல் உழைப்பு மற்றும் மூளை உழைப்புப் பிரிவினை. நகரம் நாட்டுப்புறம் எனும் பிரிவு. கில்டு முறை]

உடலுழைப்பு மற்றும் மூளை உழைப்பின் ஆகப்பெரிய உழைப்புப் பிரிவினை, நகரம் நாட்டுப் புறம் எனும் பிரிவாகும். நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான இந்தப் பகைமை நிலை, காட்டுமிராண்டி நிலையில் இருந்து நாகரிகத்துக்கும், பூர்வ குடியில் இருந்து அரசுக்கும், வட்டாரத்தில் இருந்து தேசத்துக்கும் ஆன மாற்றத்தோடு தொடங்குகிறது, மற்றும் இன்றைய நாள் வரையிலான நாகரிகத்தின் வரலாறு முழுவதன் ஊடேயும் பரந்து செல்கிறது (தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்[26]).

நகரம் இருப்பதானது அதே சமயம் நிர்வாகம், போலீஸ், வரிகள் இத்தியாதிகளின் அவசியத்தை, சுருங்கக் கூறின், நகராட்சி மன்றம் மற்றும் இவ்வாருக, பொதுவான அரசியலின் தேவையையும் உணர்த்துகிறது.இங்கு மக்கள் இரண்டு மாபெரும் வர்க்கங்களாகப் பிரிவுற்றது முதலில் வெளிப்பாடாயிற்று, இது நேரடியாக உழைப்புப் பிரிவினை மற்றும் உழைப்புக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. நகரமானது ஏற்கெனவே உண்மையில் மக்கள் திரள், உற்பத்திக் கருவிகள், மூலதனம் உல்லாச வசதிகள் மற்றும் தேவைகளின் பொதுமையமாக இருக்கிறது. அதே பொழுதில் நாட்டுப்புறம் இதற்கு நேர் எதிரான மெய்நடப்பை, தனித்த நிலை மற்றும் பிரிவை நிதர்சனப்படுத்திக் காட்டுகிறது. நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான பகைமை நிலை தனிச்சொத்துடைமையின் கட்டுக்கோப்புக்கு அகத்தேமட்டுமே நிலவ முடியும். இது, உழைப்புப் பிரிவினையின் கீழ், அவர் மீது வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு திட்டவட்டமான நடவடிக்கையின் கீழ்—தனிநபர் அடிமைப்படுத்தப்படுவதன் ஒரு மிகவும் மடத்தனமான வெளிப்பாடாகும். இந்த அடிமைப்படுத்தல் ஒரு மனிதனை

வரம்புக்குட்பட்ட நகரவிலங்காகவும் இன்னொரு மனிதனை வரம்புக்குட்பட்ட நாட்டுப்புற விலங்காகவும் ஆக்கி அவர்களது நலன்களுக்கு இடையிலான மோதலை அன்றாடம் புதிதாகப் படைத்துருவாக்கி வருகிறது. இங்கு மீண்டும் உழைப்பே, தனிநபர்கள் மீதான அதிகாரமே முக்கியமானதாக இருக்கிறது. அவர்கள் இருக்கும் வரைத் தனிச்சொத்துடைமையும் கட்டாயம் இருக்க வேண்டும். நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான பகைமையை ஒழிப்பது என்பது சமுதாய வாழ்வின் முதல் நிபந்தனைகளில் [42] ஒன்றாகும். இந்த நிபந்தனை மறுபடியும் பெருமளவிலான பொருள் வகை முற்கோள்களைச் சார்ந்ததாக இருக்கிறது. இதை வெறும் சித்தத்தால் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது என்பதை முதல் பார்வையிலேயே எவரும் காணலாம் (இந்த நிபந்தனைகள் இன்னும் விவரிக்கப்படவுள்ளன). நகரம் மற்றும் நாட்டுப்புறத்தின் பிரிவை, மூலதனம் மற்றும் நிலச்சொத்தின் பிரிவாகவும், நிலச் சொத்தில் இருந்து சுயேச்சையாக நிலவி வளர்ச்சியடைந்து வரும் மூலதனத்தின் துவக்கமாகவும் புரிந்துகொள்ள முடியும். சொத்துடைமையின் துவக்கத்திற்கு அடிப்படையாக இருந்தது உழைப்பு மற்றும் பரிவர்த்தனை மட்டுமே.

மத்திய காலங்களில் முந்திய காலப்பகுதியில் இருந்து தயார்நிலையில் வருவிக்கப்படாமல், மாறாக விடுதலைபெற்றுவிட்ட பண்ணை அடிமைகளால் புதிதாக உருவாக்கப்பட்டதான நகரங்களில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடன் கொண்டு வந்த சிறு மூலதனம் தவிர அவனது கைத் தொழிலுக்கு மிகவும் அவசியமான கருவிகள் மட்டுமே இதில் ஏறத்தாழ அடங்கியிருந்தன. அவனது சொந்தமான பிரத்தியேகமான உழைப்பு மட்டுமே அவனது சொத்தாக இருந்தது. நகரங்களுக்குள் இடைவிடாது தப்பிச் சென்ற பண்ணையடிமைகளின் போட்டி, நகரங்களை எதிர்த்த நாட்டுப்புறத்தின் இடைவிடாத போர் இவ்வாறாக ஓர் அமைப்புத்திரட்சியுள்ள நகராட்சி ராணுவப் படையின் தேவை, ஒரு குறிப்பிட்ட வகையான உழைப்பில் பொது உடைமை உரிமையின் பிணைப்பு, கைவினைஞர்கள் வாணிகர்களாகவும் இருந்து வந்த

போதில் அவர்களது பொருட்களை விற்பனை செய்வதற்கான பொதுக் கட்டடங்களின் தேவை, இதன் பின்விளைவாக அனுமதி இன்றி இருந்தவர்களை இந்தக் கட்டடங்களில் இருந்து வெளியேற்றுதல், பல்வேறு கைத் தொழில்கள் இடையேயான மோதல், மிகவும் சிரமப்பட்டு அடைந்த தேர்ச்சியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுவதன் அவசியம், நாட்டுப்புறம் முழுமையிலுமான நிலப் பிரபுத்துவ அமைப்பு: இவையே ஒவ்வொரு கைத்தொழிலையும் சார்ந்த தொழிலாளர்கள் கில்டுகளில் (கைவினைச் சங்கங்களில்) ஒன்று சேருவதற்குக் காரணமாக இருந்தன. பிந்திய வரலாற்று மாற்றங்கள் வாயிலாக எழுந்த கில்டு அமைப்பின் பல உருமாற்றங்களை இந்தக் கட்டத்தில் நாம் மேலும் விளக்க முற்படவில்லை. நகரங்களுக்குள் பண்ணை அடிமைகள் தப்பி ஓடுவது என்பது மத்திய காலங்கள் முழுவதிலும் தடை எதுவும் இன்றித் தொடர்ந்தது. இந்தப் பண்ணை அடிமைகள் தமது பிரபுக்களால் அடக்கி வாட்டப்பட்டு நகரங்களுக்குள் தனித்தனியாக வந்தார்கள், இங்கு அவர்கள் அமைப்புத் திரட்சியுள்ள ஒரு சமுதாயக் கூட்டை நிறுவினார்கள். இதற்கு எதிராக அவர்கள் எதுவும் செய்ய முடியவில்லை. இதற்குள், அவர்கள் தமது உழைப்புக்கான தேவை மற்றும் ஸ்தாபன ரீதியாகத் திரண்டிருந்த தமது நகர்ப்புறப் போட்டியாளர்களின் நலன்கள் ஆகியவற்றால் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அடங்கிக் கிடக்க நேர்ந்தது. தனித்தனியாக வந்து புகுந்த இந்தத் தொழிலாளர்களால் என்றுமே எவ்வித அதிகாரத்தையும் பெற முடியவில்லை. ஏனெனில், அவர்களது உழைப்பு பயின்று தெரிந்து கொள்ள வேண்டிய கில்டு மாதிரி வடிவில் இருக்குமானால் கில்டு மாஸ்டர்கள் (கைவினைச்சங்க ஆண்டான்கள்) தங்கள் சித்தப்படி அடக்குவித்து தமது நலனுக்கு ஏற்ப ஒழுங்கமைத்தார்கள்; அல்லது அவர்களது உழைப்பு பயின்று தெரிந்துகொள்ளக் கூடியதாக அல்லாமலும் எனவே கில்டு மாதிரி வடிவில் இல்லாமலும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் நாட்கூலி ஆட்கள் ஆயினர், என்றுமே ஸ்தாபன ரீதியில் ஒன்று திரள முடியாதபடி நிறுவன ஒழுங்கற்ற மந்தையாக நீடித்தனர். நகரங்

களில் இந்த நாட் கூலியாட்களுக்கு இருந்த தேவை இந்த மந்தையை உருவாக்கியது.

இந்த நகரங்கள் தனிப்பட்ட உறுப்பினர்களின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பு, உற்பத்தி சாதனங்களைப் பன்மடங்காக்குதல் தனிப்பட்ட உறுப்பினர்களின் தற்காப்பு எனும் நேரடித் தேவைகளால் [43] வெளிக்கொணரப்பட்ட மெய்யான ''இணைப்புகளாகும்''[27]. இந்த நகரங்களில் இருந்த மனித மந்தைக்கு எவ்விதமான அதிகாரமும் இருக்கவில்லை. அது ஒருவரை ஒருவர் அறியாத தனித்தனியாக உள்ளே புகுந்த நிறுவன ஒழுங்கற்ற தனிநபர்களைக் கொண்டு அமைந்ததாகும் மற்றும் இது போருக்கான ஆயுத ஏற்பாடுகளுடன் இவர்கள் மீது ஜாக்கிரதையுடன் கண்காணிப்புச் செய்துவரும் ஒரு ஸ்தாபனத் திரட்சியுள்ள சக்திக்கு எதிராக ஸ்தாபனக்கட்டின்றி நின்றது. கைவினைச் சங்கப் பணியாளர்களும், பணிபயில்வோரும் கைவினைச் சங்க ஆண்டான்களின் நலனுக்கு மிகவும் பொருத்தமான விதத்தில் ஒவ்வொரு கைத்தொழிலிலும் ஒன்று திரட்டப்பட்டனர். அவர்களுக்கும் அவர்களது ஆண்டான்களுக்கும் இடையே நிலவிய தந்தைவழிச் சமுதாய பாணி உறவு பின்னவர்களுக்கு ஓர் இரட்டை அதிகாரத்தை வழங்கியது. ஒரு புறத்தில் கைவினைச் சங்கப் பணியாளர்களின் வாழ்க்கை முழுதின் மேலுமான அவர்களது செல்வாக்குக் காரணமாயும், மறுபுறம் ஒரே ஆண்டான் கீழ் வேலை செய்து வந்த கைவினைச் சங்கப் பணியாளர்களுக்கு, இதர ஆண்டான்களின் கைவினைச் சங்கப் பணியாளர்களுக்கு எதிராக அவர்களை ஒன்றிணைத்து வைத்தும் இவர்களிடம் இருந்து தனிப்பிரித்தும் வைத்த மெய்யான பிணைப்பாக இது இருந்த காரணத்தாலும் இந்த இரட்டையதிகாரம் ஏற்பட்டது. இறுதியாக, தாமே கைவினைச் சங்க ஆண்டான்கள் ஆக வேண்டும் எனும் தமது இயற்கையான அக்கறையால் நிலவில் இருக்கும் அமைப்பு முறையுடன் கைவினைச் சங்கப் பணியாளர்கள் கட்டுண்டு கிடந்தார்கள். எனவே, இந்த மனித மந்தை குறைந்தபட்சம் நகராட்சி அமைப்பு முறை முழுவதற்கும் எதிராகக் கலகங்களை நடத்தின. அவர்

களது அதிகாரமின்மை காரணமாக இந்தக் கலகங்கள் எவ்விதப் பயனும் அளிக்கவில்லை. அதே போதில் கைவினைச் சங்கப் பணியாளர்கள் கைவினைச் சங்க முறையின் மெய்யான இயல்புக்கே உரியதான தனிக் கைவினைச் சங்கங்களுக்கு உள்ளே கிளர்ச்சி செய்யும் சிறு செயல்களுக்கு அப்பால் என்றுமே செல்லவில்லை. மத்திய காலங்களில் ஏற்பட்ட மாபெரும் எழுச்சிகள் யாவும் நாட்டுப்புறப் பகுதிகளில் இருந்தே மூண்டுபரவின. ஆனல் விவசாயிகளின் தனிமை நிலை மற்றும் இதன் பின்விளைவான அனுபவமின்மை காரணமாக இவை அதே அளவுக்கு அறவே பயனற்றதாக இருந்தன.—

இந்த நகரங்களில் மூலதனம் இயல்பாகவே வருவிக்கப்பட்ட மூலதனமாக, ஒரு வீடு, கைவினைக்குரிய கருவிகள் மற்றும் இயல்பான மரபு வழியிலான வாடிக்கையாளர்கள் கொண்டதாக இருந்தது. வாணிகத்தின் பின்தங்கிய நிலை மற்றும் புழக்கம் இல்லாமை காரணமாக மீட்டுப் பெற இயலாத நிலையில் இந்த மூலதனம் தந்தையிடம் இருந்து மகனுக்கு மரபுவழியில் வந்தது. பணத்தில் மதிப்பிடக் கூடியதும், இந்த அல்லது அந்த துறையில் பட்டும் படாமலும் முதலீடு செய்யக் கூடியதுமான நவீன மூலதனம் போலன்றி இந்த மூலதனம் உரிமையாளரின் குறிப்பிட்ட வேலையுடன் நேரடித் தொடர்பு கொண்டதாகவும், அதிலிருந்து பிரிக்க முடியாததாகவும் அந்த அளவுக்கு ஆதீன மூலதனமாயும் இருந்தது.—

நகரங்களில் [44] தனிப்பட்ட கைவினைச்சங்கங்களின் இடையில் உழைப்புப் பிரிவினை இன்னமும் [முற்றும் இயல்பாக வருவிக்கப்படவில்லை]* கைவினைச் சங்கங்கள் தமக்குள் தனிப்பட்ட தொழிலாளர்கள் இடையே வளர்ச்சி அடையவே இல்லை. ஒவ்வொரு தொழிலாளியும் பல பணிகளில் முழு மொத்தமாயும் தேர்ச்சி பெற வேண்டி இருந்தது. தனது கருவிகளால் செய்யப்பட வேண்டிய சகலத்தையும் செய்ய இயலும்படி இருக்க நேர்ந்தது. வரம்புக்கு உட்

* இங்கு கையெழுத்துப் பிரதி சேதமடைந்துள்ளது.—ப-ர்.

பட்ட வாணிகம், தனித்தனி நகரங்களுக்கு இடையேயான வெகுசொற்பமான போக்குவரத்து வசதிகள், மக்கள் பற்றாக் குறை மற்றும் குறுகிய தேவைகள் ஓர் உயர்ந்த உழைப்புப் பிரிவினையை அனுமதிக்கவில்லை. எனவே ஆண்டான் ஆக விரும்பிய ஒவ்வொரு மனிதனும் தனது கைத்தொழில் முழுவதிலும் தேர்ச்சி பெற வேண்டியதாக இருந்தது. இவ் வாறாக, மத்திய கால கைவினைஞர்களிடம் தமது விசேஷப் பணியில் அதில் விசேஷத் திறன் எய்துவதில் அக்கறை காணப் பட்டது. இது ஒரு குறுகிய கலைக்குரிய தன்மையில் மேம் பாடுறும் ஆற்றல் பெற்றிருந்தது. எனினும் இந்த மெய் யான காரணத்தால்தான் ஒவ்வொரு மத்திய காலக் கைவினை ஞனும் தன் வேலையில் முழுமையாக ஆர்வமுடன் ஈடு பட்டிருந்தான் அதன்பால் அவனுக்கு ஒரு திருப்திகரமான அடிமைத்தனமான உறவு இருந்தது, மற்றும் தனது வேலை ஒரு பொருட்டல்ல, எனக் கருதும் நவீனத் தொழிலாளியை விடவும் அதிகமான அளவுக்கு அவன் அடக்கப்பட்டுக் கிடந் தான்.—

### [3. கூடுதல் உழைப்புப் பிரிவினை. வாணிகமும் தொழில் துறையும் பிரிதல். பல்வேறு நகரங்களுக்கு இடையே உழைப்புப் பிரிவினை. பட்டறைத் தொழில்]

உழைப்புப் பிரிவினையின் அடுத்த நீட்டிப்பு உற்பத்தியும் வாணிகமும் பிரிதலும் வாணிகர்களின் ஒரு விசேஷமான வர்க்கத்தின் உருவாக்கமும் ஆகும்; இந்தப் பிரிவு நகரங் களில் முந்திய காலப்பகுதியால் மரபாக விட்டுச் செல்லப் பட்டு, (இதர பொருட்களுடன் கூடவே யூதர்களையும் சேர்த்து) வழி வழியாக ஒப்புவிக்கப்பட்டதாகும், இது மிகு விரைவில் புதிதாக உருவாக்கப்பட்டவற்றில் தோற்றமளித் தது. இதோடு, உடனடி அண்டை அயல் பிரதேசம் கடந்து வாணிகப் போக்குவரத்துத் தொடர்புகளை மேற்கொள்ளு வதற்கான சாத்தியப்பாடு ஏற்பட்டது. இந்தச் சாத்தியப் பாட்டின் நிறைவேற்றம் நிலவில் இருந்த போக்குவரத்து

சாதனங்கள் மற்றும் நாட்டுப்புறத்தில் இருந்த பொதுஜனப் பாதுகாப்பு நிலையைச் சார்ந்ததாக இருந்தது. இவை அரசியல் நிலைமைகளாலும் (மத்திய காலங்கள் முழுவதும் வாணிகர்கள் ஆயுதமேந்திய கரவான் பயணம் செய்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே) மற்றும் ஒட்டுறவுக்கு எளிதான பிராந்தியங்களில் எழும் முதிரா நிலையிலான அல்லது முன்னேற்றமான (அடைந்துள்ள கலாசார மட்டத்தால் நிர்ணயிக்கப்படுவதான) தேவைகளால் முடிவு செய்யப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் முந்துரிமையான வாணிகத்தோடும், நகரின் நேரடி சுற்றுப்பகுதிகளுக்கு அப்பால் வாணிகர்கள் மூலம் வாணிகம் விஸ்தரிக்கப்பட்டதோடும் உற்பத்திக்கும் வாணிகத்துக்கும் இடையில் ஒரு கொண்டு கொடுப்புச் செயல்பாடு உடனே தோற்றமளித்தது. நகரங்கள் ஒன்றுடன் ஒன்று உறவுகள் கொள்ளத் தொடங்கின, புதிய கருவிகள் ஒரு நகரில் இருந்து இன்னொன்றுக்கு வாங்கப்பட்டன. மற்றும் உற்பத்திக்கும் வாணிகத்துக்கும் இடையிலான பிரிவு தனித்தனி நகரங்களுக்கு [45] இடையே விரைவில் ஓர் உற்பத்திப் பிரிவினையை வெளிக் கொணர்ந்தது. இவை ஒவ்வொன்றும் விரைவில் தொழில் துறையில் ஒரு முக்கியமான பிரிவைப் பயன்படுத்தலாயின. ஆரம்ப காலத்திய ஸ்தலக் கட்டுப்பாடுகள் படிப்படையாகத் தகர்ந்து விழத் தொடங்கின.

ஒரு வட்டாரத்தில் பெறப்பட்ட உற்பத்தி சக்திகள், சிறப்பாயும் புதுப்புனைவுகள் பிற்கால வளர்ச்சிக்குக் கிட்டாமற் போகுமா இல்லையா என்பது முற்றிலும் வாணிகத்தின் விஸ்தரிப்பையே சார்ந்ததாக இருக்கும். நேரடி சுற்று வட்டாரத்தைக் கடந்து வாணிகம் நிலவாத காலம் வரையில் ஒவ்வொரு புதுப்புனைவும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தனித்தனியாகச் செய்யப்பட வேண்டும். மற்றும் கேவலம் எதேச்சையாக ஏற்படும் காட்டுமிராண்டி மக்களினங்களின் படையெடுப்புக்கள், வெகு சாமான்யமான போர்களும் கூட, முன்னேற்றமான உற்பத்தி சக்திகளையும் தேவைகளையும் கொண்ட ஒரு நாடு அறவே துவக்கம் முதல் மீண்டும் வேலை தொடங்கும்படி தூண்டுவிக்கப் போது

மானவை. புராதன வரலாற்றில் ஒவ்வொரு புதுப்புனைவும் அன்றாடம் புதிதாகவும், ஒவ்வொரு வட்டாரத்திலும் சுயேச்சையாகவும் செய்ய வேண்டி இருந்தது. ஒப்பளவில் மிகவும் விரிவான வாணிக வசதிகள் தரப்பட்டாலுங்கூட உயர் வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகள் பூரண நாசத்தில் இருந்து பாதுகாக்கப்படுவது எவ்வளவு அரிது என்பதை பினீசிய வாசிகள்* நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இவர்களது புதுப்புனைவுகள், இந்த நாடு வாணிகத்தில் இருந்து விரட்டப்பட்டதாலும், அலெக்சாந்தரால் படையெடுத்துக் கைப்பற்றப்பட்டதாலும், அதன் பின்விளைவாக ஏற்பட்ட நலிவினாலும் பெரும்பாலும் நீண்ட காலத்துக்கு இல்லாதொழிந்தன. இதே போன்ற ஓர் எடுத்துக்காட்டு மத்திய காலங்களில் நிலவிய கண்ணாடி ஓவியம். வாணிகம் உலக வாணிகமாக மாறி, பெருவீதத் தொழிற் துறையைத் தனது அடித்தளமாக்கும் போது மட்டுமே, எல்லா நாடுகளும் இந்தப் போட்டிப் போராட்டத்தில் ஈர்க்கப்படும் போதே இந்த தேடிப் பெற்ற உற்பத்தி சக்திகளின் நிரந்தரத் தன்மை உத்தரவாதம் செய்யப்படுகிறது.

பல்வேறு நகரங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினையின் நேரடிப் பின்விளைவு கைவினைச்சங்க முறையை விஞ்சி வளர்ந்துவிட்ட உற்பத்திப் பிரிவான பட்டறைத் தொழிலின் எழுச்சியாகும். வெளிநாடுகளுடன் வாணிகம் எனும் வரலாற்று மெய்க்கோளின்கீழ் பட்டறைத் தொழில்கள் முதலில் இத்தாலியிலும் பின்னர் ஃபிளாண்டர்சிலும் தழைத்தோங்கின. இதர நாடுகளில் உதாரணமாக இங்கிலாந்திலும் பிரான்சிலும் பட்டறைத் தொழில்கள் முதலில் உள்நாட்டுச் சந்தை அளவுக்கு வரம்பு கட்டப்பட்டு இருந்தன. ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட காரணத்துடன் கூடவே, பட்டறைத் தொழில்கள் பிரத்தியேகமாயும் நாட்டுப்புறப் பகுதிகளில் மக்கள் தொகையின் அதிகரித்து வரும் ஒருமுகத்தன்மையையும் கைவினைச்சங்க விதிமுறைகள் இருந்தபோதிலும் ஓரளவுக்கு கைவினைச் சங்கங்களிலும்

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''மத்திய காலங்களிலான கண்ணாடி செய்முறையும்.''--ப-ர்.

ஓரளவுக்கு வாணிகர்கள் மத்தியிலும் தனிநபர்கள் கரங்களில் திரட்சி பெறத் தொடங்கிய மூலதனத்தையும் சார்ந்திருந் தன.

[46] துவக்கம் முதலே, மிகவும் முதிரா வகைப்பட்ட தெனினும் கூட அத்தகைய ஓர் இயந்திரத்தை முன் அனுமா னித்த அந்த உழைப்பு விரைவில் தன்னைத்தானே மிகவும் வளர்ச்சி ஆற்றல் கொண்டதாக வெளிப்படுத்திக் கொண் டது. தமது உடைகளைப் பெறுவதற்கான உபதொழிலாக நாட்டுப்புறப்பகுதியில் விவசாயிகள் முன்னாட்களில் நடத்தி வந்த நெசவுத் தொழில்தான் வாணிகத்தின் விரிவாக்கத்தின் மூலம் ஓர் ஊக்குவிப்பையும் ஒரு மேற்பட்ட வளர்ச்சியை யும் பெற்ற முதல் உழைப்பாகும். நெசவுத் தொழிலே முதலாவது முக்கிய பட்டறைத்தொழிலாக நின்று நிலவி யது மக்கள் தொகைப் பெருக்கத்தின் பின்விளைவாக உடை களுக்கான துணிவகைகளுக்கு ஏற்பட்ட அதிகரித்த தேவை யும் வேகமுடுக்கப்பட்ட புழக்கம் மூலம் ஏற்பட்ட இயற்கை மூலதனத்தின் அதிகரித்த திரட்சியும், ஒன்றுசேர்ப்பும் பின்னதால் கொணரப்பட்ட ஆடம்பரப்பொருட்களுக்கான தேவையும். வாணிகம் படிப்படையாக விரிவடைந்ததால் இதற்குப் பொதுவான சாதகம் ஏற்பட்டதும், நெசவுத் தொழிலுக்கு அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் ஓர் ஊக்குவிப்பைக் கொடுத்தன. இந்தத் தொழில் இதுவரை யில் இருந்துவந்த உற்பத்தி வடிவில் இருந்து வலிந்து வெளி யேறியது. விவசாயிகள் தமது சொந்த உபயோகத்துக்காக நெசவு செய்துவருவதுடன் ஒருங்கே, இந்த வகைப்பட்ட வேலையைத் தொடர்ந்து செய்து வந்தார்கள், இன்னும் தொடர்ந்து செய்துவருகிறார்கள். நகரங்களில் நெசவாளர் களின் ஒரு புதிய வர்க்கம் தோற்றமளித்தது. இவர்கள் உற்பத்தி செய்த துணிவகைகள் உள்நாட்டுச் சந்தை முழு வதற்கும் மற்றும் வழக்கமாக வெளிநாட்டுச் சந்தைகளுக் குங்கூட ஒதுக்கி வைக்கப்பட்டன.

பெரும்பாலோர் விஷயத்தில் மிகச் சொற்பமான தேர்ச் சியையே கோருவதும், வெகுவேகத்தில் எண்ணிறந்த பல கிளைகளாகப் பிரிவுறுவதுமான ஒரு தொழிலான நெசவுத்

தொழில் அதன் முழுமையான இயல்பு காரணமாக, கைவினைச் சங்கத்தின் தடைக்கட்டுகளை எதிர்த்தது. எனவே நெசவுத் தொழில் கைவினைச் சங்க நிறுவனம் இன்றியே பெரும்பாலும் கிராமங்களிலும் சந்தைகூடும் மையங்களிலும் நடத்தப்பட்டது. இந்த இடங்கள் படிப்படியாக நகரங்களாக மாறின, உண்மையில் ஒவ்வொரு நாட்டிலும் மிகவும் செழித்து வளர்ந்த நகரங்களாக விளங்கின.

கைவினைச் சங்கத்தில் இருந்து விடுபட்ட பட்டறைத் தொழிலுடன் கூடவே சொத்துடைமை உறவுகளும் வேகமாக மாற்றமடைந்தன. இயற்கையாகப் பெறப்பட்ட உயர்குடியினர் மூலதனத்துக்கும் அப்பாலான முன்னேற்றத்துக்கு வாணிகர்களின் பெருக்கம் வகை செய்தது. அவர்களது மூலதனம் ஆரம்ப முதலே இயங்கும் மூலதனமாக, அந்தக் காலங்களின் புறநிகழ்வுகளை வைத்து ஒருவர் அதைப் பற்றிக் கூறும் அளவுக்கு, நவீன அர்த்தத்திலான மூலதனமாக இருந்தது. இரண்டாவது முன்னேற்றம் பட்டறைத் தொழிலில் இருந்து வந்தது, இது மீண்டும் பேரளவான இயற்கை மூலதனத்தை இயங்கும்படி செய்தது, மற்றும் ஒட்டு மொத்தத்தில் இயற்கை மூலதனத்துடன் ஒப்பிடும்போது, பேரளவான இயங்கு மூலதனத்தை அதிகரித்தது.

அதே சமயம் பட்டறைத் தொழில், விவசாயிகளை விலக்கி வைத்தோ அல்லது அவர்களுக்கு மோசமான ஊதியம் தந்தோ நடத்தி வந்த கைவினைச் சங்கங்களில் இருந்து விடுபட நாடும் விவசாயிகளின் புகலிடமாக மாறியது. முன்நாட்களில் [ஒடுக்கும் நிலவுடைமைப் பிரபுக்குலத்தினரிடமிருந்து] விடுபட விரும்பிய விவசாயிகளுக்கு கைவினைச் சங்க நகரங்கள் புகலிடமாக [47] உதவியது போலவே இதுவும் இருந்தது.*—

பட்டறைத் தொழிலின் துவக்கத்துடன் கூடவே, ஏவலாளிகளின் நிலப்பிரபுத்துவ அமைப்புகள் ஒழிக்கப்பட்டதாலும், கீழடங்கியோருக்கு எதிராக மன்னர்களுக்கு உதவுவதற்

* இங்கு கையெழுத்துப் பிரதி சேதமடைந்துள்ளது.— ப-ர்.

காகத் திரண்டு வந்த அடங்காப்பிடாரிப் படைகள் கலைக்கப் பட்டதாலும் ஒரு நாடோடி இயல்பின் கட்டம் ஏற்பட்டது. விவசாயம் மேம்பட்டது. பெருமளவிலான பயிர் நிலம் மேய்ச் சல் நிலமாக மாற்றப்பட்டது. இதிலிருந்து மட்டுமே இந்த நாடோடி இயல்பு எவ்வாறு நிலப்பிரபுத்துவ முறையின் சீரழிவுடன் கருராயும் தொடர்பு கொண்டுள்ளது என்பது தெளிவாகும். பதின்மூன்ரும் நூற்ருண்டின் ஆரம்ப முதலே இந்த வகைப்பட்ட தனிப்படுத்தப்பட்ட சகாப்தங்களை நாம் காண்கிரேம். ஆனல், பதினைந்தாம் நூற்ருண்டின் கடைசி யிலும் பதிஞரும் நூற்ருண்டின் துவக்கத்திலும் மட்டுமே இந்த நாடோடி இயல்பு பொதுவாயும் நிரந்தரமாயும் தோற்றமளித்தது. இந்த நாடோடிகள் மிகவும் அளவுக்கு மீறிப் பெருகி இருந்தார்கள். இங்கிலாந்து மன்னர் எட் டாம் ஹென்றி இவர்களில் 72,000 பேர்களைத் தூக்கி லேற்றும்படி உத்தரவிட்டார் என்பதை இங்கு குறிப்பிட லாம். இவர்களை வேலை செய்யும்படி நிர்ப்பந்திப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது, மிகமிகக் கடும் தேவை ஏற்பட்டதன் விளைவாக மட்டுமே அதுவும் நீண்ட காலம் மறுத்து நின்ற தன் பிறகு மட்டுமே இவர்கள் வேலை செய்ய முன் வந் தார்கள். குறிப்பாக, இங்கிலாந்தில் வேகமாக வளர்ச்சி யடைந்து வந்த பட்டறைத் தொழில்கள் இவர்களைப் படிப் படியாக ஈர்த்துக் கொண்டன.—

பட்டறைத் தொழில்கள் வந்த கையோடு பல்வேறு தேசங்கள் ஒரு போட்டி உறவில் பிரவேசித்தன, வாணிகத் துக்கான போராட்டம் போர்கள் வடிவில் நடத்தப்பட்டது, காப்பு வரிகள் மற்றும் தடைகள் உருவாயின. அப்படி யிருக்க, முன்நாட்களில் தேசங்கள் தம்மிடையே ஏதேனும் தொடர்பு கொண்டிருக்கும் பட்சத்தில் ஒன்ருெடொன்று தீமை செய்யாத பரிவர்த்தனையையே நடத்தி வந்துள்ளன. இப்போது முதல் வாணிகத்துக்கு ஓர் அரசியல் முக்கியத் துவம் ஏற்பட்டுவிட்டது.

பட்டறைத் தொழில்கள் வந்த கையோடு தொழி லாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான உறவுமுறை மாற்ற மடைந்தது. கைவினைச் சங்கங்களில் கைவினைப் பணியா

ளர் மற்றும் கைவினைச் சங்க ஆண்டான்கள் இடையே தந்தைவழி முறையிலான உறவுகள் தொடர்ந்து நிலவின. பட்டறைத் தொழிலில் இதனிடத்தை தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான பணவியல் உறவு எடுத்துக் கொண்டு விட்டது. இந்த உறவு நாட்டுப் புறத்திலும் சிறு நகரங்களிலும் தந்தை வழி முறையின் சாயலை நீடித்து வைத்திருந்தது. ஆனால் பெரிய மெய்யான பட்டறைத் தொழில் நகரங்களில் வெகு முன்னதாகவே கிட்டத்தட்ட எல்லா தந்தை வழி முறை வண்ணத்தையும் இழந்து விட்டது.

வாணிகம் விரிவடைந்ததன் வாயிலாக பட்டறைத் தொழிலும் பொதுவாகப் பண்ட உற்பத்தி இயக்கமும் பேரளவான ஊக்குவிப்பைப் பெற்றன. இந்த விரிவாக்கம் அமெரிக்கா கண்டமும், கிழக்கு இந்தியத் தீவுகளுக்கான கடல் மார்க்கமும் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டது. அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய பொருட்கள், குறிப்பாகப் பெருமளவிலான தங்கமும் வெள்ளியும் புழக்கத்துக்கு வந்து வர்க்கங்களின் பரஸ்பர நிலைமையை முற்ருக மாற்றிவிட்டன. நிலப்பிரபுத்துவ நிலச் சொத்துடைமைக்கும் தொழிலாளர்களுக்கும் ஒரு கடுமையான அடிகொடுத்தன. துணிச்சல்காரர்களின் பயணங்களும் காலனிகள் நிறுவுதலும் எல்லாவற்றுக்கும் மேலாக சந்தைகள் ஓர் உலகச் சந்தையாக விரிவடைந்ததும் எல்லாம் இப்போது சாத்தியமாகிவிட்டது, மற்றும் நாளுக்கு நாள் மேலும் மேலும் ஒரு மெய் நடப்பாகி விட்டது. இவை வரலாற்று வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தை [48] முன் கொணர்ந்தன, இதனைப் பொதுப்படையாக இதற்கு மேல் நாம் விளக்க முடியாது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட நாடுகளைக் காலனிகளாக்கியதன் வாயிலாக நாடுகள் மத்தியிலான வாணிகப் போராட்டத்திற்கு புதிய ஆக்கம் கிட்டியது, அதற்கேற்ப அது மேலதிகமான விரிவும், பகைமைத் தன்மையும் பெற்றது.

வாணிகம், பட்டறைத் தொழில் ஆகியவற்றின் விரிவாக்கம் இயங்கு மூலதனத்தின் திரட்சியை வேகப்படுத்தியது.

அதே போதில் தமது பொருளுற்பத்தியை விரிவுபடுத்த ஊக்குவிக்கப்படாத கைவினைச் சங்கங்களில், இயற்கை மூல தனம் அளவு மாறாது அப்படியே நீடித்தது, அல்லது குறையவும் கூடச் செய்தது. வாணிகமும் பட்டறைத் தொழிலும் பெரு முதலாளித்துவ வர்க்கத்தைப் படைத்துருவாக்கின, கைவினைச் சங்கங்களில் குட்டிமுதலாளித்துவ வர்க்கம் ஒருமுனைப்பட்டிருந்தது. அது முன்போல நகரங்களில் மேலோங்கிய நிலையில் இனிமேலால் இருக்க முடியவில்லை, மாறாக மாபெரும் வாணிகர்கள் மற்றும் பட்டறைத் தொழில் அதிபர்களின் வலிமைக்கு அடிபணிய வேண்டி இருந்தது.* எனவே பட்டறைத் தொழிலுடன் அவை தொடர்பு கொண்டவுடன் கைவினைச் சங்கங்கள் சரியத் தொடங்கின.

நாம் இங்கு குறிப்பிடும் இந்த சகாப்தத்தில் தேசங்களின் ஒட்டுறவு இருவேறு வடிவங்களை மேற்கொண்டது. முதலில் புழக்கத்தில் இருந்த சிறிய அளவிலான தங்கம் வெள்ளி ஆகியவை இந்த உலோகங்களின் ஏற்றுமதி தடை செய்யப்படுவதை உள்ளடக்கியதாக இருந்தது. மற்றும் பெருமளவுக்கு வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதும், பெருகிவரும் நகரப்புற மக்கள் தொகைக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டிய தேவையால் அவசியமாக்கப்பட்டதுமான தொழில்துறையால் இந்தத் தனியுரிமைகள் இன்றிச் சமாளிக்க முடியவில்லை. இவை உள்நாட்டுப் போட்டிக்கு எதிராக மட்டுமன்றி, அதோடு பிரதானமாயும் வெளிநாட்டுப் போட்டிக்கு எதிராகவும் வழங்கப்படக்கூடியதாக இருந்தன. நாடு முழுவதிலும் பரவலாக இருந்த இந்த ஆரம்ப காலத் தடைகளில் உள்ளூர் கைவினைச் சங்கத்தின் தனியுரிமை இடம் பெற்றது. சுங்கவரிகள், தமது பிரதேசங்களைக் கடந்து செல்லும் வாணிகர்கள் கொள்ளையடிப்பதற்கு எதிராக, நிலப்பிரபுக்கள் கிட்டிமுட்டி வசூலித்த பாதுகாப்பு வரிகள் என்ற முறையிலான கப்பங்களில்

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''குட்டிமுதலாளித்வவ வர்க்கம், நடுத்தர வர்க்கம், பெரு முதலாளித்துவ துர்க்கம்.''—ப-ர்.

இருந்து தோன்றின. இந்தக் கப்பங்கள் இதே போன்று பின்னல் நகரங்களால் திணிக்கப்பட்டன. நவீன அரசுகளின் எழுச்சியை ஒட்டி இவை கஜானுவுக்குப் பணம் திரட்டும் மிகவும் வெளிப்படையான சாதனங்களாக விளங்கின.

ஐரோப்பிய சந்தைகளில் அமெரிக்கத் தங்கமும் வெள்ளியும் தோற்றமளித்ததும், தொழில் துறையின் படிப்படியான வளர்ச்சியும், வாணிகத்தின் வேகமான விரிவாக்கமும், இதன் பின்விளைவாக கைவினைச் சங்கச் சார்பற்ற முதலாளி வர்க்கமும் பணமும் உருவானதும் இந்த நடவடிக்கைகளுக்கு இன்னுமொரு உட்பொருளை ஈந்தது. நாளுக்கு நாள் பணமில்லாமல் எதுவும் செய்ய இயலாததாகிவிட்ட அரசு, பணவருவாய்க் காரணங்களால் தங்கம் வெள்ளி ஏற்றுமதி மீதான தடையை இப்போது தொடர்ந்து நீட்டித்தது. யாருக்காக இந்தப் பேரளவான பணத்தொகைகள் சந்தையில் பொழியப்பட்டு ஊகபேரத்திற்கு முக்கிய இலக்காக்கப்பட்டதோ அந்த முதலாளி வர்க்கம் இதில் முழுநிறைவான திருப்தி அடைந்தது. முன்னுட்களில் நிலைநாட்டப்பட்ட தனியுரிமைகள் அரசாங்கத்துக்கு வருவாய்க்குரிய ஆதாரமாக மாறின, அவை பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டன. சுங்கத் துறைச் சட்டத்தில் ஏற்றுமதி வரி தோற்றமளித்தது. இது தொழில் துறையின் [49] பாதையில் ஒரு தடங்கலை மட்டுமே வைத்தது எனவே அதற்குப் பணவருவாய் நோக்கம் மட்டுமே இருந்தது.—

இரண்டாவது காலப்பகுதி பதினேழாம் நூற்றுண்டின் நடுவில் துவங்கி கிட்டத்தட்ட பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதி வரையில் நீடித்தது. வாணிகமும் கடல்வழிப் போக்குவரத்தும் இரண்டாந்தரமான பாத்திரம் வகித்த பட்டறைத்தொழிலைவிடவும் அதிக வேகமாக விரிவடைந்தன. காலனி நாடுகள் பெருமளவுக்குப் பொருள்களை வாங்கும் நுகர்வாளராயின. நீண்ட காலப் போராட்டத்துக்குப் பிறகு தனித்தனி நாடுகள் உலகச் சந்தை வாய்ப்புகளை தமக்குள் பகிர்ந்து கொண்டன. இந்தக் காலப்பகுதி கடல் போக்குவரத்து விதிகள் மற்றும் காலனியாதிக்க ஏகபோகங்களுடன் தொடங்குகிறது. சுங்கவரிகள், தடைகள் மற்றும்

உடன்படிக்கைகள் மூலம் தேசங்கள் மத்தியில் நிலவிய போட்டி கூடுமான அளவுக்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. கடைசி வகைமுறையாக இந்தப் போட்டிப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு போர்கள் (குறிப்பாயும், கடற் படைப் போர்கள்) மூலம் முடிவு செய்யப்பட்டது. ஆக வல்லமை படைத்த கடற்படை தேசமான இங்கிலாந்து வாணிகம் மற்றும் பட்டறைத்தொழிலில் விஞ்சிய செல் வாக்கைக் கொண்டிருந்தது. இங்கு ஏற்கெனவே நாம் தனி ஒரு நாட்டில் ஓரிடக்குவியல் ஏற்படக் காண்கிறோம்.

பட்டறைத் தொழிலானது உள்நாட்டுச் சந்தையில் காப்பு வரிகள் மூலமும், காலனிகளின் சந்தையில் ஏகபோகங் கள் மூலமும், வெளிநாடுகளில் சாத்தியமான வரை வேற்று நிலை வரிகள் மூலமும் எல்லாக் காலமும் பாதுகாக்கப் பட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவது (இங்கிலாந்தில் கம் பளி மற்றும் துணி, பிரான்சில் பட்டு) ஊக்குவிக்கப்பட்டது. உள்நாட்டில் விளைந்த கச்சாப் பொருட்களின் (இங்கிலாந் தில் கம்பளி) ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் (நடைமுறைக்கு கொண்டுவரு வது) புறக்கணிக்கப்பட்டன அல்லது தடைசெய்யப்பட்டன (இங்கிலாந்தில் பருத்தி). கடல் வாணிகத்திலும், காலனி அதிகாரத்திலும் ஆதிக்கம் வகித்த இந்த தேசம் இயல் பாகவே தனக்கென பட்டறைத் தொழிலில் அளவிலும் தரத்திலும் ஆகமிகப் பெரிய விரிவாக்கத்தை அடைய முடிந்தது. பட்டறைத் தொழிலை பாதுகாப்பு இல்லாமல் தொடர்ந்து நடத்த முடியவில்லை. காரணம், வேறு நாடு களில் மிகச் சிறிய மாற்றம் ஏற்பட்டாலுங்கூட அது தனது சந்தையை இழந்து நாசமடைய முடியும். நியாயமான அளவிலான சாதக நிலைமைகளின் கீழ் இதை ஒரு நாட்டில் எளிதில் புகுத்தலாம். ஆனால் இதே காரணத்தால் அதை எளிதில் அழித்துவிடவும் முடியும். அதே சமயம், குறிப்பாயும் பதினெட்டாம் நூற்றாண்டில் நாட்டுப்புறப் பகுதிகளில் இது செயல்படுத்தப்பட்ட பாணியைப் பார்க்கும் போது, இது பேரளவான தனி நபர்களின் ஜீவாதார நலன்களுடன் மிகப்

பெருமளவுக்குப் பின்னிப் பிணைந்து கிடப்பதால், எந்த ஒரு நாடும் கட்டற்ற போட்டியை அனுமதிப்பது மூலம் தனது நிலையையே ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளத் துணியாது எனலாம். எனவே அது ஏற்றுமதி செய்ய இயலும் அளவுக்கு, வாணிகத்தின் விரிவாக்கம் அல்லது தடை வரம்பையே முற்றிலும் சார்ந்திருக்கிறது, மற்றும் (பின்னதன் மீது) ஒப்பளவில் மிகவும் சிறியளவிலான பிரதிபலிப்பையே பயன் படுத்துகிறது. விளைவு இதன் இரண்டாந்தர (முக்கியத்து வம்) மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் (வணிகர்களின்) செல்வாக்கு. [50] வேறு எவரையும் விட அதிகமாக இந்த வணிகர்கள் விசேஷமாயும் கப்பல் வணிகர்கள் அரசுப் பாது காப்பையும் ஏகபோகங்களையும் வற்புறுத்திக் கோரினார்கள். பட்டறை அதிபர்களும் உண்மையில் பாதுகாப்பைக் கோரிப் பெற்றார்கள். ஆனால் இவர்கள் எல்லாக் காலங்களிலும் அரசியல் முக்கியத்துவத்தில் வணிகர்களை விடவும் கீழ் நிலை யில் தான் இருந்தார்கள். வாணிக நகரங்கள், குறிப்பா யும் கப்பல் வாணிக நகரங்கள் ஓர் அளவுக்கு நாகரிகம் அடைந்தன, பெரிய முதலாளித்துவ வர்க்கத்தின் கண் ணோட்டத்தைப் பெற்றன. ஆனால் ஆலை நகரங்களில் தீவிர மான குட்டிமுதலாளித்துவ கண்ணோட்டம் விடாப்பிடியாக நிலவியது. அய்க்கின்[28], மற்றும் மற்றவர்களை ஒப்பு நோக்குக. பதினெட்டாம் நூற்றாண்டு வாணிகத்தின் நூற் றாண்டாகும். பின்டோ இதைத் துலாம்பரமாகக் கூறுகிறார்: “Le commerce fait la marotte du siecle”* மற்றும்: Depuis Quelque temps ill viest plus question que de commerce de navigation et de marine”** [29]—

கணிசமான அளவுக்கு வேக முடுக்கம் செய்யப்பட்ட போதிலும் மூலதனத்தின் இயக்கம் இன்னும் ஒப்பளவில் மெதுவாகவே நீடித்தது. உலகச் சந்தையை தனிப் பகுதி களாகப் பிரித்ததும், இதில் ஒவ்வொருபகுதியும் ஒரு குறிப்

* ‘‘வாணிகம் இந்த நூற்றாண்டின் பொது நடப்பு.’’—ப-ர்.

** ‘‘இப்போது சில காலமாக மக்கள் வாணிகம் கடற் போக்குவரத்து மற்றும் கடற்படை பற்றி மட்டுமே பேசி வரு கிறார்கள்.’’—ப-ர்.

பிட்ட தேசத்தால் சுரண்டப்பட்டதும், தேசங்களைப் பொருத்தவரை அவை தம்மத்தியில் போட்டியை விலக்கியதும், உற்பத்தியின் ஏடாகோடமான தன்மையும், நிதி அதன் ஆரம்ப கட்டங்களில் இருந்து மட்டுமே உருவாகி வரும் மெய் நடப்பும் மூலதனத்தின் புழக்கத்தை மிகவும் தடங்கல் செய்தன. இதன் விளைவு கேவலமான பேரமும் இழிவான கஞ்சத்தனமான உணர்வும் ஆகும். இவை இன்னமும் எல்லா வணிகர்களையும், வணிகம் புரியும் பாணி முழுவதையும் பற்றி நிற்கின்றன. பட்டறை அதிபர்கள் உடனும் எல்லாவற்றுக்கும் மேலாக கைவினையாளர்களுடனும் ஒப்பிடும் போது அவர்கள் நிச்சயமாயும் பெரு முதலாளி வர்க்கத்தினரே; அடுத்த காலப் பகுதியின் வணிகர்கள் மற்றும் தொழில்துறை அதிபர்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோராகவே நீடித்தனர். ஆதாம் ஸ்மித்[30] ஒப்பு நோக்குக.

இந்தக் காலப் பகுதியும் தங்கம் வெள்ளி ஏற்றுமதி மீதான தடைகளுக்கு முடிவு கட்டல் மற்றும் பணத்தில் வாணிகம் ஆகியவற்றாலும், வங்கிகள் தேசியக் கடன்கள், காகிதப் பணம் ஆகியவற்றாலும், இருப்புக்கள் பங்குகளிலான ஊக பேரம், எல்லாப் பொருட்களிலும் பங்கு ஆதாய வேட்டை, பொதுவான நிதி வளர்ச்சி ஆகியவற்றாலும் இனங்குறிக்கப் படுகிறது. மீண்டும் மூலதனம் அதனுடன் இன்னும் பற்றிப் பிடித்திருந்த இயற்கைத் தன்மையில் மிகப் பெரும் பாகத்தை இழந்தது.

### [4. மிகவும் சிக்கலான உழைப்புப் பிரிவினை. பெரிய தொழில்துறை]

ஒரு நாட்டில்—இங்கிலாந்தில்—வாணிகமும் பட்டறைத் தொழிலும் ஒன்றுகுவிதல் பதினேழாம் நூற்றாண்டில் மிகுந்த வலிமையுடன் வளர்ச்சியடைந்த இங்கிலாந்து, படிப்படியாக இந்த நாட்டுக்கு ஓரளவிலான உலகச் சந்தையைப் படைத்துருவாக்கியது, இவ்வாறாக இதுகாறும் நிலவிவந்த தொழில்துறை உற்பத்தி சக்திகளால் இனிமேல் செய்து சமாளிக்க முடியாத அளவு செய்முறைப் பொருட்களுக்கான தேவையை

இந்த நாட்டில் ஏற்படுத்தியது. உற்பத்தி சக்திகளை விஞ்சி அதிகரித்துவிட்டதான இந்தத் தேவைதான், பெரிய தொழில்துறையை உருவாக்கியது மூலம்—தொழில் துறை நோக்கங்களுக்காக இயற்கை ஆற்றல் சக்திகளைப் பிரயோகித்தல், யந்திரங்கள், மற்றும் மிகவும் சிக்கலான உழைப்புப் பிரிவினை வாயிலாக—மத்திய காலங்களுக்குப் பின்னர் தனியார் உடைமையின் கால கட்டத்தை [51] நிலவில் கொண்டு வந்த இயக்கு சக்தியாகும். இந்தப் புதிய கட்டத்திற்கான இதர முன்நிபந்தனைகள் இங்கிலாந்தில் ஏற்கெனவே இருந்தன: தேசத்துக்குள்ளே போட்டி போடும் உரிமை, அறிமுறை இயந்திரவியலின் வளர்ச்சி இத்தியாதி (உண்மையில், நியூட்டனால் செவ்வையாக்கப்பட்ட இயந்திரவியல் விஞ்ஞானம் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலும் இங்கிலாந்திலும் மிகவும் ஜனரஞ்சகமான விஞ்ஞானமாக விளங்கியது). (தேசத்துக்கு உள்ளேயுங்கூட கட்டற்ற போட்டியை எல்லா இடங்களிலும் ஒரு புரட்சியின் மூலம்—1640 மற்றும் 1688ல் இங்கிலாந்திலும், 1789ல் பிரான்சிலும்—வென்று பெற வேண்டி இருந்தது.)

போட்டியானது, தனது வரலாற்றுப் பாத்திரத்தை நீடித்து வைத்திருக்க விரும்பிய ஒவ்வொரு நாட்டையும் புதுப்பிக்கப்பட்ட சுங்கவரி விதி மூலம் தனது பட்டறைத் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி விரைவில் கட்டாயப்படுத்தியது (பழைய சுங்க வரிகள் பெரிய தொழில் துறையின் முன் இனிமேல் பயனில்லை). பின்னர் காப்பு வரிகளின் கீழ் விரைவில் பெரிய தொழில் துறையைக் கொண்டு வரும்படியும் கட்டாயப்படுத்தியது. இந்தக் காப்பு நடவடிக்கைகள் இருந்த போதிலும் பெரிய தொழில் துறை, போட்டியை சர்வ வியாபகமானதாகச் செய்தது (இது நடைமுறையில் கட்டற்ற வாணிகமே; காப்பு வரி என்பது வெறும் ஒரு கடுமைத் தணிப்பு முறை மட்டுமே, கட்டற்ற வாணிகத்துக்கு அகத்தேயான ஒரு தற்காப்பு நடவடிக்கையே), போக்குவரத்துச் சாதனங்களையும் நவீன உலகச் சந்தையையும் நிறுவியது, வாணிகத்தைத் தனக்குக் கீழடக்கியது, எல்லா மூலதனத்தையும் தொழில் துறை மூலதனமாக உரு மாற்றம்

செய்தது, இவ்வாருக மூலதனத்தின் வேகமான புழக்கத்தைக் கொண்டுவந்தது (நிதி அமைப்பின் வளர்ச்சி), மூலதனத்தை மையப்படுத்தியது. சர்வ வியாபகமான போட்டியின் மூலம் அது எல்லா நபர்களும் தமது ஆற்றலை உச்சபட்சமாகப் பயன்படுத்தி அருமுயற்சி செய்யும்படி நிர்ப்பந்தித்தது. அது சாத்தியமான அளவுக்கு சித்தாந்தம், சமயம், ஒழுங்குநெறி இத்தியாதிகளை அழித்தது, மற்றும் எங்கு இதைச் செய்ய முடியவில்லையோ அங்கு இவற்றை கண்கூடான பொய்யாக ஆக்கியது. நாகரிகமடைந்த எல்லா தேசங்களையும் அவற்றைச் சார்ந்த எல்லாத் தனி நபர்களையும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள முழு உலகையும் சார்ந்து நிற்கும்படி செய்து, இவ்வாருக தனிப்பட்ட தேசங்களின் முன்னுளைய இயல்பான தனிமுக்கியத்துவத்தை அழித்துவிட்ட அளவுக்கு, அது முதல் தடவையாக உலக வரலாற்றை உருவாக்கியது. இயற்கை விஞ்ஞானத்தை அது மூலதனத்துக்கு அடிப்படுத்தியது, மற்றும் உழைப்புப் பிரிவினையிடமிருந்து அதன் இயல்பான பண்பின் கடைசி அடையாளத்தைப் பறித்துக் கொண்டது. உழைப்பு நிலவும் அதே போதில் எந்தளவு சாத்தியமோ அந்த அளவுக்கு அது பொதுவான இயற்கை வளர்ச்சியை அழித்தது, மற்றும் எல்லா இயற்கை உறவுகளையும் பண உறவுகளாக மாற்றியது. இயற்கையாக வளர்ந்து வந்த நகரங்களின் இடத்தில் சற்று முன்னதாகத் தோன்றிய நவீன பெரிய தொழில் துறை மாநகரங்களைப் படைத்துருவாக்கியது. அது எங்கெல்லாம் ஊடுருவியதோ அங்கெல்லாம் கைவினைத் தொழில்களையும் தொழில் துறையின் முந்திய கட்டங்கள் அனைத்தையும் அழித்தொழித்தது. நாட்டுப்புறப் பகுதிகளின் மீதான வாணிக நகரங்களின் வெற்றியை இது பூர்த்தி செய்தது. இதன் [முதல் முற்கோள்]* தானியங்கி அமைப்பாக இருந்தது. [இதன் வளர்ச்சி]* பேரளவிலான உற்பத்தி சக்திகளை உருவாக்கியது. இவற்றுக்கு தனியார் சொத்துடைமை கைவினைச் சங்கம் எந்தளவுக்கு பட்டறைத்

* இந்த இடத்தில் கையெழுத்துப் பிரதி சேதம் அடைந்துள்ளது.—ப-ர்.

தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்கான சிறிய நாட்டுப்புற பணிமனை ஆகியவற்றுக்கு தளையாக மாறியதோ அந்த அளவுக்கு ஒரு தளையாக மாறியது. [52] இந்த உற்பத்தி சக்திகள் தனியார் சொத்துடைமை அமைப்பு முறையின் கீழ் ஒரு சார்பான வளர்ச்சியை மட்டுமே பெற்றன. மற்றும் பெரும்பான்மையோருக்கு அழிவு சக்திகளாக ஆயின. அதோடுகூட இத்தகைய சக்திகளில் மிகப் பல இந்த அமைப்பு முறைக்கு அகத்தே பயன்படுத்தக் கூடியனவாக காணப்படவில்லை. பொதுப்படக் கூறினால், பெரிய தொழில் துறை சமுதாயத்தில் இருந்த வர்க்கங்களின் இடையே எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான உறவுகளையே உருவாக்கியது. மற்றும் இவ்வாறாக பல்வேறு தேசிய இனங்களின் பிரத்தியேகமான தனித்துவத்தை அழித்தது. இறுதியாக, ஒவ்வொரு தேசத்தின் முதலாளித்துவ வர்க்கமும் தனது தேசிய நலன்களை இன்னமும் நீடித்து வைத்திருந்த அதேபோதில் பெரிய தொழில் துறையானது, எல்லா தேசங்களிலும் ஒரே மாதிரி நலன்களைக் கொண்டிருந்த ஒரு வர்க்கத்தைப் படைத்துருவாக்கியது. அதைப் பொருத்தவரையில் தேசிய இனத்தன்மை ஏற்கெனவே மடிந்து போய் விட்டது. அது பழைய உலகம் அனைத்தையும் உண்மையில் தொலைத்துத் தலைமுழுகி அதே சமயம் அதற்கு எதிராக நின்று போரிடும் ஒரு வர்க்கமாக இருந்தது இது. பெரிய தொழில்துறையானது தொழிலாளிக்கு முதலாளியுடனான உறவை மட்டுமன்றி உழைப்பையும் சகிக்க முடியாததாகச் செய்கிறது.

ஒரு நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பெரிய தொழில் துறை ஒரே வளர்ச்சி மட்டத்தை எட்டுவதில்லை என்பது தெளிவு. ஆயினும் இது பாட்டாளிகளின் வர்க்க இயக்கத்தை தடுத்து அதன் வேகத்தைக் குறைக்கவில்லை. காரணம், பெரிய தொழில் துறையால் படைத்துருவாக்கப்பட்ட பாட்டாளிகள் இந்த இயக்கத்தின் தலைமையை மேற்கொண்டு மக்கள் திரள் முழுவதையும் தம்முடன் ஈர்த்துச் செல்கிறார்கள். மற்றும் பெரிய தொழில் துறையில் இருக்கும் தொழிலாளர்களை விடவும் இன்னும் மோசமான நிலையில்

பெரிய தொழில் துறையில் இருந்து விலக்கப்பட்ட தொழிலாளர்கள் அதனுல் வைக்கப்பட்டிருக்கிருர்கள். பெரிய தொழில் துறை வளர்ச்சியடைந்துள்ள நாடுகள் இதே போன்ற விதத்தில் ஏறத்தாழ தொழில் துறை வளர்ச்சி இல்லாத நாடுகள் விஷயத்தில், அவை சர்வ வியாபகமான வாணிகத்தின் மூலம் சர்வ வியாபகமான போட்டிப் போராட்டத்தில் அடித்துச் செல்லப் படும் அளவுக்குச் செயல்படுகின்றன.

*  *  *

இந்த [உற்பத்தியின்] பல்வேறு வடிவங்கள் உழைப்பின் ஒழுங்கமைப்பின் எனவே சொத்துடைமையின் பல்வேறு வடிவங்களாகும். ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிலவில் இருக்கும் உற்பத்தி சக்திகளின் ஒன்றிணைப்பு, இது தேவைகளுக்கு அவசியம் என்று ஆக்கப்படும் அளவுக்கு, ஏற்படுகிறது.

---

### [5. ஒரு சமுதாயப் புரட்சிக்கு அடிப்படை என்ற முறையில் உற்பத்தி சக்திகளுக்கும் ஒட்டுறவு வடிவத்துக்கும் இடையிலான முரண்பாடு]

சென்றகால வரலாற்றில் பல தடவைகள் உற்பத்தி சக்திகளுக்கும் ஒட்டுறவு வடிவத்துக்கும் இடையிலான முரண்பாடு நிகழ்ந்திருப்பதை நாம் பார்த்திருக்கிருேம். ஆயினும், அது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அடிப்படைக்கு இடருண்டாக்காமல், தவிர்க்க முடியாதபடி ஒரு புரட்சியாக வெடித்துள்ளது. அதே சமயம் சகலத்தையும் தழுவியதான மோதல்கள், பல்வேறு வர்க்கங்களின் மோதல்கள், உணர்ச்சியின் முரண்பாடு, கருத்துக்களின் போர் இத்தியாதி, அரசியல் மோதல் இத்தியாதி பல்வேறு துணை வடிவங்களை மேற்கொள்கிறது. ஒரு குறுகிய பார்வை நிலையில் இருந்து எவரும் இந்தத் துணைவடிவங்களில் ஒன்றைத் தனிமைப்படுத்தி அதை இந்தப் புரட்சிகளின் அடிப்படையாகக் கருதலாம். இந்தப் புரட்சிகளைத் துவக்கிவைத்த தனி நபர்கள், அவர்களது கலாசாரத்தின் அளவுக்கும் வரலாற்று வளர்ச்சியின்

கட்டத்துக்கும் ஏற்ப அவர்களது சொந்த நடவடிக்கை பற்றிய பிரமைகளை ஏற்கெனவே கொண்டிருந்ததன் காரண மாக இது இன்னும் அதிக எளிதாகிவிடும்.

---

இவ்வாருக, வரலாற்றில் காணும் எல்லா மோதல்களுக் கும் அவற்றின் தோற்றுவாய் உள்ளது. எமது கருத்துப்படி, இது உற்பத்தி சக்திகளுக்கும் ஒட்டுறவு [53] வடிவத்துக்கும் இடையிலான முரண்பாட்டில் காணக்கிடக்கிறது. இதன் தொடர்பாக ஒரு நாட்டில் மோதல்களுக்கு இட்டுச் செல் வதற்கு, இந்த முரண்பாடு இந்தக் குறிப்பிட்ட நாட்டில் அதன் கடைக்கோடி வரம்பை எட்டியிருக்கத் தேவையில்லை. சர்வதேச ஒட்டுறவின் விரிவாக்கத்தால் ஏற்படுத்தப்பட்ட தொழில் துறையில் மிகவும் முன்னேறிய நாடுகளுடனுன போட்டி, ஒரு பின்தங்கிய தொழில்துறையுடன் கூடிய நாடு களில் இதே போன்ற முரண்பாட்டை உருவாக்கப் போது மானது (உ. ம். ஆங்கில தொழில் துறையின் போட்டியால் வெளிக் கொணரப்பட்ட உட்செறிவான ஜெர்மன் பாட் டாளி வர்க்கம்).

### [6. தனி நபர்களின் போட்டி மற்றும் வர்க்கங்களின் உருவாக்கம். தனி நபர்களுக்கும் அவர்களது வாழ்க்கை நிலைமைகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் வளர்ச்சி. முதலாளித்துவ சமுதாயத்தில் தனி நபர்களின் கற்பனையான மக்கட் சமுதாயமும், கம்யூனிசத்தின் கீழ் தனி நபர்களின் மெய்யான ஒற்றுமையும் ஒன்றிணைந்த தனி நபர்களின் அதிகாரத்துக்கு சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகளை அடிப்படுத்தல்]

போட்டி அவர்களை ஒன்று சேர்க்கிறது என்ற போதிலும், அது முதலாளி வர்க்கத்தினரை மட்டுமன்றி, மாருக இன்னும் அதிக அளவுக்குத் தொழிலாளர்களையும் தனி நபர் களாய் ஒருவரிடமிருந்து இன்னெருவரைப் பிரிக்கிறது. இந்த ஒற்றுமைக்கு வேண்டிய—இது கேவலம் வட்டார அளவுடன் நின்று விடாமல் இருக்க வேண்டுமானல்—அவசிய சாதனங்

களான மாபெரும் தொழில் துறை மாநகரங்கள் மற்றும் மலிவானதும் விரைவானதுமான போக்குவரத்து வசதிகள் பெரும் தொழில் துறையால் முதலில் உருவாக்கப்பட வேண்டும் எனும் உண்மை ஒரு புறமிருக்க, இந்தத் தனிநபர்கள் ஒன்று சேருவதற்கு நீண்ட காலம் எடுக்கும். இதன் விளைவாக, இந்தத் தனிமை நிலையை நாள்தோறும் புனருற்பத்தி செய்து வரும் உறவுகளில் வாழ்ந்து வரும், இந்தத் தனிப் படுத்தப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக மேலோங்கி நிற்கும் ஒவ்வொரு அமைப்புத் திரட்சியுள்ள ஆட்சி அதிகாரத்தையும், நீடித்த போராட்டங்களுக்குப் பிறகு மட்டுமே வென்று சமாளிக்க முடியும். இதற்கு எதிரானதைக் கோருவது என்பது வரலாற்றின் இந்தத் திட்டவட்டமான சகாப்தத்தில் போட்டி நிலவக் கூடாது என்று கோருவதற்கோ, அல்லது தமது தனிமை நிலை காரணமாகத் தமக்கு எவ்விதக் கண்காணிப்பும் இல்லாத உறவுகளைத் தனிநபர்கள் தமது உள்ளங்களில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று கோருவதற்கோ சமமாகும்.

---

வீடுகள் கட்டிக்கொள்வது காட்டுமிராண்டிகளைப் பொருத்தவரை நாடோடிகளின் தனிக் குடும்பக் கூடாரத்தைப் போன்று ஒவ்வொரு குடும்பமும் அதன் சொந்தக் குகை அல்லது குடிசையை இயல்பான நடைமுறையில் கொண்டிருந்தனர். இந்தத் தனி வீட்டுப் பொருளாதாரம் தனியார் சொத்துடைமையின் கூடுதல் வளர்ச்சியால் மேலும் அவசியமாக்கப்பட்டது. விவசாயி மக்களினங்களைப் பொருத்தவரை, ஒரு கூட்டுமுறை வீட்டுப் பொருளாதாரம் என்பது நிலத்தை கூட்டு முறையில் பயிர் செய்வது போன்றே அதே அளவுக்கு அசாத்தியமானதாக இருந்தது. நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டதானது ஒரு மாபெரும் முன்னேற்றமாகும். ஆயினும், முந்திய காலப்பகுதிகள் எல்லாவற்றிலும் தனியார் சொத்துடைமை ஒழிப்பில் இருந்து பிரிக்க வொண்ணாத தனிநபர் பொருளாதாரத்தின் ஒழிப்பு, அதை ஆளுமை செய்யும் பொருளாயத நிலைமைகள் இருக்கவில்லை எனும்

நேரடிக் காரணத்தால் சாத்தியமாகவில்லை. கூட்டு முறையிலான வீட்டுப் பொருளாதாரத்தை நிறுவுவது என்பது யந்திரங்களின் வளர்ச்சி, இயற்கை சக்திகள் மற்றும் இதர பல உற்பத்தி சக்திகளை—உ. ம். நீர் வழங்கீடு [54] காஸ் விளக்கு வசதிகள், நீராவி—வெப்ப வசதிகள் இத்தியாதிகளைப் பயன்படுத்தலையும் நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் உள்ள [பகைமை] அகற்றப்படுவதையும் முன் அனுமானிக்கிறது. இந்த நிபந்தனைகள் இல்லாமல் ஒரு கூட்டுமுறைப் பொருளாதாரம் தானாகவே ஒரு புதிய உற்பத்தி சக்தியாக அமையாது. எவ்விதமான பொருளாயத அடிப்படையும் இல்லாமல் முற்றிலும் ஒரு தத்துவார்த்த அடிப்படை மீது சார்ந்து நிற்கும் இது கேவலம் ஒரு கோளாறாகவே இருக்கும், ஒரு சமயமடத்துப் பொருளாதாரம் தவிர்த்து வேறு எதுவாகவும் போய் முடியாது.—சாத்தியமானது எது என்பதை பல்வேறு திட்டவட்டமான நோக்கங்களுடன் (சிறைகள் படைவீரர் விடுதிகள் இத்தியாதி) சமுதாயக் கட்டடங்கள் எழுப்பப்பட்டதும் ஒருமுகப்படுத்தப்பட்டதும் மூலம் ஏற்பட்டதான நகரங்களில் காண முடியும். தனி நபர் பொருளாதாரத்தின் ஒழிப்பு குடும்பத்தின் ஒழிப்பில் [Aufhebung] இருந்து பிரிக்கவொண்ணாதது என்பது கூறாமலே விளங்கும்.

---

(ஒவ்வொருவரும் அவர் அரசு வாயிலாக உறும் எல்லாம் ஆவார் என்பதாக செயிண்ட் மாக்ஸ் விஷயத்தில் அடிக்கடி வரும் அறிவிப்பும் முதலாளி வர்க்கம் என்பது முதலாளித்துவ உயிரினங்களின் ஒருவகை மாதிரி மட்டுமே என்னும் அறிவிப்பும் அடிப்படையில் ஒன்றே; இந்த அறிவிப்பு இதை உள்ளடக்கிய தனி நபர்களுக்கு முன்பே முதலாளித்துவ வர்க்கம் இருந்தது என்பதை முன் அனுமானிப்பதாகும்.*)

மத்திய காலங்களில் ஒவ்வொரு நகரத்திலும் இருந்த குடிமக்கள் தாக்கப்படாமல் தம்மைத் தற்காத்துக் கொள்ள

---

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''தத்துவஞானிகளைப் பொருத்தவரை வர்க்கத்தின் முற்பட்ட வாழ்வு.''—ப-ர்.

வேண்டி நிலவுடைமைப் பிரபுக்குலத்துக்கு எதிராக ஒன்று சேரும் கட்டாயம் ஏற்பட்டது. அதே பகைவனுடனுன போராட்டத்தில் அதே நலன்களை வலியுறுத்திய இதர நகரங்களை, தனித்தனி நகரங்கள் வாணிகத்தின் விரிவாக்கம், போக்குவரத்து சாதனங்கள் நிறுவப்படுதல் ஆகியவை மூலம் பரஸ்பரம் அறிந்து கொள்ள முடிந்தது. நகரத்தார்களின் பல உள்ளூர் கூட்டமைப்புகளில் இருந்து படிப்படியாக மட்டுமே நகரத்தார் வர்க்கம் உதித்தெழுந்தது. தனிப்பட்ட நகரத்தாரின் வாழ்க்கை நிலைமைகள், நிலவும் உறவுகள் மற்றும் இவற்றால் நிர்ணயிக்கப்படும் உழைப்பு முறையோடான அவர்களது முரண்பாடு காரணமாக, அவர்கள் எல்லோருக்கும் பொதுவானதும், ஒவ்வொரு தனிநபரிடமிருந்தும் சுதந்திரமானதுமான நிபந்தனைகள் ஆயின. அவர்கள் நிலப்பிரபுத்துவ பந்தங்களில் இருந்து தம்மைத்தாமே பிய்த்துக் கொண்டு வெளியேறிவிட்ட அளவுக்கு நகரத்தார்கள் இந்த நிலைமைகளை படைத் துருவாக்கினார்கள். அதோடு அவர்கள் இருக்கக் கண்ட நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையின் பாலான அவர்களது பகைமையால் இந்த நிலைமைகள் நிர்ணயிக்கப்பட்டவை என்ற அளவுக்கு அவற்றால் படைத்துருவாக்கப்பட்டார்கள். தனிப்பட்ட நகரங்கள் இணைப்புகளில் சேரத் தொடங்கிய போது இந்தப் பொதுவான நிலைமைகள் வர்க்க நிலைமைகளாக மாற்றமடைந்தன. இதே நிலைமைகள், இதே முரண்பாடு, இதே நலன்கள் எல்லா இடங்களிலும் ஒட்டு மொத்தத்தில் இதே போன்ற வழக்கங்களைத் தவிர்க்க முடியாதபடி வெளிக் கொணர்ந்தன. முதலாளித்துவ வர்க்கம் தானே தனது நிலைமைகளுடன் கூட படிப்படியாக மட்டுமே வளர்கிறது, உழைப்புப் பிரிவினைக்கு ஏற்றபடி பல்வேறு பிரிவுகளாகப் பிளவுறுகிறது, இறுதியாக அது இருக்கக் காண்கிற எல்லா சொத்துப்படைத்த வர்க்கங்களையும்* ஈர்த்துக் கொள்கிறது (அதே போதில் அது முன்னுள்

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''துவக்கத்தில் இது அரசுக்கு நேரடிச் சொந்தமான உழைப்புப் பிரிவுகளையும் பிறகு எல்லா ± [ஏறத்தாழ்வான] சித்தாந்தப் படிநிலைகளையும் ஈர்த்துக் கொள்கிறது.''—ப-ர்.

சொத்துப்பத்தில்லா வர்க்கங்களில் பெரும்பான்மையையும் இதுவரை சொத்துடைத்த வர்க்கங்களாக இருந்தவற்றில் ஒரு பகுதியையும் ஒரு புதிய வர்க்கமாக பாட்டாளி வர்க்க மாக மாற்றுகிறது). இருக்கக் கண்ட எல்லா சொத்துடைமை யும் தொழில் துறை அல்லது வாணிக மூலதனமாக உரு மாற்றப்படும் அளவுக்கு இந்த மாற்றம் நடைபெறுகிறது.

இன்னொரு வர்க்கத்தை எதிர்த்து அவர்கள் ஒரு பொது வான போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற அளவுக்கு [55] மட்டுமே தனித்தனிநபர்கள் ஒரு வர்க்கமாக அமை கிறார்கள். இல்லாவிடில் அவர்கள் போட்டியாளர்கள் என்ற முறையில் ஒருவருக்கு ஒருவர் பகைமை நிலையில் இருப்பார் கள். மறுபுறம் வர்க்கம் தன் வகைக்கு தனிநபர்களுக்கு எதி ராக ஒரு சுயேச்சையான இருத்தலை அடைகிறது, இதனால் பின்னவர்கள் தமது வாழ்க்கை நிலைமைகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுவதைக் காண்கின்றனர். அதோடு அவர் களது வர்க்கத்தால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அவர்களது சொந்த வளர்ச்சி அதன் கீழ் விதிவகை செய்து உட்படுத்தப் பட்டுவிடுகிறது. இது தனிப்பட்ட நபர்கள் உழைப்புப் பிரிவினைக்குக் கீழடக்கப்படுவது போல அதே புலப்பாடாகும். தனியார் சொத்துடைமை மற்றும் உழைப்பு தன்னையும் ஒழிப்பது* மூலம் மட்டுமே இதனை அகற்ற முடியும். இந்தத் தனிநபர்கள் வர்க்கத்தின் கீழ் விதிவகை செய்து உட் படுத்தப்படுவது என்பது எப்படி அதனுடன் அவர்கள் எல்லா விதமான கருத்துக்களுக்கும் கீழடங்குவதையும் கொண்டு வருகிறது என்பதை நாம் ஏற்கெனவே பலதடவைகள் சுட்டிக் காட்டியுள்ளோம்.—

ஒரு தத்துவவியல் பார்வை நிலையில் இருந்து தனிநபர் களின் இந்தப் பரிணமத்தை, ஒன்றை ஒன்று பின்தொடரும் படிநிலைகள் மற்றும் வர்க்கங்களின் பொதுவான வாழ்க்கை நிலைமைகளில் இருந்தும், அவற்றின் மீது வலுவந்தமாகத் திணிக்கப்படும் உடன் வரும் பொதுவான கருத்துருக்களில்

* இந்தத் தொடரின் அர்த்தம்: ''உழைப்பை ஒழிப்பது'' (Aufhebung der Arbeit) இந்தத் தொகுதியின் 59-61, 112-113, 123-129 பக்கங்களைப் பார்க்க.—ப-ர்.

இருந்தும், ஒருவர் ஆராய்ந்து பார்ப்பாராயின் இந்தத் தனிநபர்களில் இந்த ''உயிரினங்கள்'' அல்லது ''மனிதன்'' பரிணமித்திருப்பதை அல்லது அவை ''மனிதனை'' பரிணமித் திருப்பதை கற்பனை செய்துகொள்வது நிச்சயமாயும் மிக எளிதானதே. மற்றும் இந்த வழியில் ஒருவர் வரலாற்றின் செவி மீது சில பலமான அடிகளையும் தர முடியும். இந்தப் பல்வேறு படிநிலைகள் மற்றும் வர்க்கங்களை பொதுவான வெளிப்பாட்டின் பிரத்தியேக பிரிவுகளாக, உயரினங்களின் கீழ்ப்பட்ட வகை ''இனங்களாக'' அல்லது ''மனிதனது'' பரிணமத்தின் கட்டங்களாகக் கருதிப் பார்க்க முடியும்.

திட்டவட்டமான வர்க்கங்களின் கீழ் தனிநபர்களை விதி வகை செய்து உட்படுத்துவது என்பதை ஒரு வர்க்கம் உருப் பெறும் வரையில் ஒழித்துவிட முடியாது, ஆளும் வர்க்கத் துக்கு எதிராக வலியுறுத்துவதற்கு அதற்கு இனிமேலால் எந்தவொரு குறிப்பிட்ட வர்க்க நலனும் கிடையாது.

---

உழைப்புப் பிரிவினை மூலமாக தனிநபர் சக்திகள் (உறவு கள்) பொருள் வகை சக்திகளாக உருமாற்றப்படுவதை, இது குறித்த பொதுக் கருத்தை ஒருவரது மனதில் இருந்து விலக்குவது மூலம் அகற்றிட முடியாது. மாறாக, தனிநபர்கள் மீண்டும் இந்தப் பொருள் வகை சக்திகளைத் தமக்கெனச் செயலுக்குள்ளாக்கி உழைப்புப் பிரிவினையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே அகற்றிட முடியும்.* குடிவாழ் கூட்டு இல்லாமல் இது சாத்தியமல்ல. குடிவாழ் கூட்டில் மட்டுமே (பிறருடன் கூட) [56] ஒவ்வொரு தனிநபரும் தனது அருந் திறன்களை எல்லாத் திசைகளிலும் வளர்த்துக் கொள்வதற் கான சாதனங்களைப் பெறுகிறான்; எனவே குடிவாழ் கூட்டில் மட்டுமே தனிநபர் சுதந்திரம் சாத்தியம். குடிவாழ் கூட்டின் முன்னுள் பதில் அமைப்புகளில், அரசு இத்தியாதிகளில் தனிநபர் சுதந்திரம், ஆளும் வர்க்கத்தின் உறவுகளுக்குள்

---

* ஓரக்குறிப்பு எங்கெல்ஸ் எழுதியது: ''(ஃபாயர்பாக் இருத்தலும் சாரமும்).'' இந்தத் தொகுதியின் பக்கங்கள் 71-73 பார்க்க.—ப-ர்.

வளர்ந்து வந்த நபர்களுக்கு மட்டுமே இருந்தது, இந்த வர்க்கத்தின் நபர்களாக அவர்கள் இருந்த வரையில் மட்டுமே நிலவியது. இது வரையில் தனிநபர்கள் சேர்ந்து இணைந்திருந்த பொய்யான குடிவாழ் கூட்டு அவர்கள் சம்பந்தமாக ஒரு சுதந்திரமான வாழ்முறையை மேற்கொண்டது. அதே சமயம், இது இன்னொரு வர்க்கத்துக்கு எதிரான ஒரு வர்க்கத்தின் இணைப்பாக இருந்த காரணத்தால், இது முற்றிலும் பொய்யான ஒரு குடிவாழ் கூட்டு மட்டும் அன்றி அதோடு ஒரு புதிய தளையாகவும் ஆயிற்று. ஓர் உண்மையான குடிவாழ் கூட்டில் தனிநபர்கள் தமது இணைவிலும் அதன் வாயிலாகவும் தமது சுதந்திரத்தைப் பெறுகின்றனர்.

தனிநபர்கள் எப்போதும் தம்மைத் தாமே சார்ந்து வளர்ந்து வந்திருக்கிறார்கள், ஆனால் இயல்பாகவே குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகள் உறவுகளின் அகத்தே சித்தாந்திகளின் அர்த்தத்திலான ''தூய'' நபர் என்பதன் மீதன்றி வளர்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் வரலாற்றுப் பரிணாமத்தின் போக்கில், உழைப்புப் பிரிவினையின் அகத்தே சமுதாய உறவுகள் ஒரு சுதந்திரமான வாழ்நிலையை மேற்கொள்கின்றன எனும் தவிர்க்கவொண்ணா மெய்நடப்பின் வாயிலாகத் துல்லியமாயும் ஒவ்வொரு நபரின் வாழ்க்கையின் உள்ளும் ஒரு பிரிவினை தோற்றமளிக்கிறது. இந்த வாழ்க்கை எந்தளவுக்குத் தனிப்பட்டதாக இருக்கிறதோ, எந்தளவுக்கு அது உழைப்பின் ஏதேனும் ஒரு பிரிவாலும் அதன் சம்பந்தப்பட்ட நிலைமைகளாலும் நிர்ணயிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்குத் தோற்றமளிக்கிறது. (இதிலிருந்து, உதாரணமாக சுகஜீவனம் நடத்துவோர் முதலாளி இத்தியாதிப் பேர் நபர்களாக இல்லை என்று புரிந்துகொள்ள வேண்டும் என்பதாக நாம் கருதவில்லை; மாறாக, அவர்களது தனித்தன்மை முற்றும் திட்டவட்டமான வர்க்க உறவுகளால் நெறியாண்மை செய்யப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது, இந்தப் பிரிவினை இன்னொரு வர்க்கத்துடனான அவர்களது எதிர்ப்பிலும்; அவர்களைப் பொருத்தவரை அவர்கள் திவாலாகிப் போகும் போது மட்டுமே தோற்றமளிக்கிறது.) படிநிலை ஆதினத்தில் (பூர்வ குடியில் இன்னும் அதிகமாக)

இது இன்னும் மூடிமறைக்கப்பட்டிருக்கிறது: எடுத்துக்காட்டாக, ஒரு பிரபுக் குலத்தவன் எப்போதும் பிரபுக் குலத்தவனுகவே இருக்கிருன், பிரபுகுலத்திஃனச் சாராத சாமான்ய மனிதன் [roturier] அவனது இதர உறவுகள் ஒரு புறமிருக்க சாமான்ய மனிதனுகவே இருக்கிருன், இந்தப் பண்பு அவனது தனித்துவத்தில் இருந்து பிரிக்க முடியாதது. தனிநபருக்கும் வர்க்க நபருக்கும் இடையிலான பிரிவிஃன, தனிநபரின் வாழ்க்கை நிஃலமைகளின் தற்செயல் தன்மை வர்க்கத்தின் தோற்றத்துடன் மட்டுமே காட்சிதருகிறது. அது தானே முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு விஃளபயனுகும். இந்தத் தற்செயல் தன்மை போட்டியாலும், தனிநபர்கள் தம் மத்தியிலான போராட்டத்தாலும் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது [57]. இவ்வாருகத் தனிநபர்கள் கற்பஃனயில் முன்ஃன விட முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் அதிக சுதந்திரத்துடன் இருப்பதாகத் தோன்றுகிறது, காரணம் அவர்களது வாழ்க்கை நிஃலமைகள் தற்செயலானவையாகத் தோற்றமளிக்கின்றன. உண்மையில் அவர்கள் குறைந்தளவு சுதந்திரத்துடன் தான் இருக்கிருர்கள், என்பது திண்ணம். காரணம் அவர்கள் விவகாரங்களின் வன்முறைக்குக் கூடுதல் ஆளாக்கப்பட்டிருக்கிருர்கள். படிநிஃல ஆதினத்தில் இருந்து வரும் வேறுபாடு, குறிப்பாயும் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் இடையிலான பகைமையிலிருந்து வருகிறது. நிலவுடைமைப் பிரபுக்குலத்துக்கு எதிராக நகர்ப்புற நகரத்தார்கள், கூட்டமைப்புகள் இத்தியாதி படிநிஃலகள் தோற்றமளித்த போது, அவர்களது வாழ்க்கை நிஃலமை—அவர்கள் நிலப்பிரபுத்துவ பந்தங்களில் இருந்து தனிப்பிரிவதற்கு முன்பாக ஏற்கெனவே மறைந்திருந்த ஜங்கம சொத்து மற்றும் கைவிஃன உழைப்பு—நேருறுதியுள்ளதாகத் தோற்றமளித்தது. இது பிரபுத்துவ நிலச் சொத்துக்கு எதிராகத் துணிந்து நின்றது, எனவே துவக்கத்தில் அதன் சொந்த வழியில் ஒரு பிரபுத்துவ வடிவை மேற்கொண்டது. அகதிகளாக வெளியேறிய பண்ஃண அடிமைகள் தமது முன்ஞஃய அடிமை வாழ்வை தமது தனித்தன்மைக்கு நேர்ந்த தற்செயல் நிகழ்வாக

நிச்சயமாயும் கருதினார்கள். ஆனால் இங்கு அவர்கள், ஒரு தளையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒவ்வொரு வர்க்கமும் என்ன செய்கிறதோ அதை மட்டுமே செய்தார்கள். ஆனால் அவர்கள் ஒரு வர்க்கமாகத் தம்மை விடுவித்துக் கொள்ளவில்லை, மாறாகத் தனித்தனியே விடுவித்துக் கொண்டார்கள். இதற்கும் மேல் அவர்கள் படிநிலை அமைப்பு முறைக்கு அப்பால் செல்லவில்லை. மாறாக, ஒரு புதிய படிநிலையை மட்டுமே அமைத்துக் கொண்டார்கள். அவர்களது இந்தப் புதிய நிலைமையிலுங்கூட அவர்களது முந்திய உழைப்பு முறையை நீடித்து வைத்திருந்தார்கள், அதன் முந்திய தளைகளில் இருந்து அதனை விடுவித்து மேலும் அபிவிருத்தி செய்தார்கள். இது ஏற்கெனவே அடைந்த முன்னேற்றத்திற்கு இனிமேற்பட சரி ஒப்பாக இருக்க முடியாது.

மறுபுறத்தில், பாட்டாளிகளுக்கு நவீன சமுதாயத்தை ஆளுமை செய்யும் எல்லா வாழ்க்கை நிலைமைகளுடன் கூடவே, அவர்களது வாழ்க்கை நிலைமையும் உழைப்பும் தற்செயலான ஏதோ சிலவாக, தனிப்பட்ட நபர்கள் என்ற முறையில் எவ்வித அதிகாரமும் இல்லாத, அவர்களுக்கு இதன் மீதான அதிகாரத்தை சமுதாய அமைப்பு எதனாலும் தர முடியாத ஏதோ சிலவாக மாறிவிட்டன. ஒவ்வொரு தனிப்பட்ட பாட்டாளியின் தனித்தன்மைக்கும் அவன் மீது வலுவந்தமாகத் திணிக்கப்பட்ட வாழ்க்கை நிலைமையான உழைப்புக்கும் இடையிலான முரண்பாடு, அவனுக்குத் தானே தெளிவாகத் தெரியவரும். ஏனெனில் அவன் வாலிபப் பருவம் முதல் தனது சொந்த வர்க்கத்தின் உள்ளே பலியாக்கப்படுகிறான், மற்ற வர்க்கத்தில் அவனை அமர்த்தக் கூடியதான நிலைமைகளை எட்டும் வாய்ப்பு அவனுக்குக் கிடையாது.

[58] பி. கு. பண்ணையடிமையின் வாழ்நிலைக்கான மெய்யான தேவையும், பண்ணையடிமைகள் இடையே பங்கு நிலங்கள் வினியோகத்தை உள்ளடக்கியதான பெரு வீதப் பொருளாதாரத்தின் சாத்தியமின்மையும், வெகு விரைவில் அவர்களது எஜமானுக்காக பண்ணையடிமைகள் புரியும் சேவைகளை பண்டமாகப் பெறும் ஊதியம் மற்றும் சட்டக்கட்டான

உழைப்பின் சராசரிக்குத் தாழ்த்திவிட்டது. இது பண்ணை யடிமை ஜங்கம சொத்துக்களைத் திரட்டுவதை சாத்திய மாக்கியது, இதன் விளைவாக அவன் அவனது எஜமானின் உடைமையாக இருப்பதில் இருந்து தப்பி வெளியேறுவது எளிதாக்கப்பட்டது, அவன் ஒரு நகர்ப்புறக் குடிமகனுக மாறுவதற்கு வழிவகுக்கும் வாய்ப்பினை அளித்தது; அதோடு இது பண்ணையடிமைகள் மத்தியில் வரிசைகளை உருவாக் கியது. இதன் மூலம் ஓடித்தப்பிய பண்ணையடிமைகள் ஏற் கெனவே பாதி நகரத்தார்கள் ஆகிவிட்டனர். இதே போன்று கைவினைத் தொழிலில் மிகுதிறன் படைத்த பண்ணையடிமை களுக்கு ஜங்கம சொத்துக்களைப் பெறுவதற்கான நல்ல வாய்ப்பும் கிட்டியது என்பது கண்கூடு.

இவ்வாருக, அகதிகளாக வெளியேறிய பண்ணையடிமை கள் ஏற்கெனவே இருந்த அந்த வாழ்க்கை நிலைமைகளை வளர்க்கவும் வலியுறுத்தவுமே சுதந்திரர்களாக இருக்க விரும் பினுர்கள், இதனுல் இறுதியில் கட்டற்ற உழைப்பை வந்து அடைந்தார்கள். அதே போதில் பாட்டாளிகள் அவர்கள் தம்மைத் தாமே தனிநபர்களாகத் துணிந்து நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமானுல், இதுவரையிலான தமது வாழ்க் கையின் மெய்யான நிபந்தனையை (இதுவே இன்று வரை எல்லா சமுதாயங்களின் விஷயத்திலும் கிட்டத்தட்ட இருந்து வந்துள்ளது), அதாவது உழைப்பை ஒழித்தாக வேண்டும். இவ்வாருக, அவர்கள் சமுதாயத்தில் உள்ளடங்கி யிருந்த தனிநபர்கள் இது காறும் தமது கூட்டுக்கருத்து வெளிப்பாட்டை எந்த வடிவில் உருவாக்கிக் கொண்டிருந் தார்களோ அந்த வடிவை, அதாவது அரசை தாம் நேரடி யாக எதிர்க்கும் நிலையில் இருக்கக் கண்டார்கள். எனவே தம்மைத் தாமே தனிநபர்களாக நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டு அவர்கள் அரசைத் தூக்கி எறிய வேண்டும்.

---

இதுவரையில் நாம் கூறிவந்துள்ள அனைத்திலும் இருந்து, ஒரு வர்க்கத்தின் தனி நபர்கள் மேற்கொண்டதும், மூன்ரு வது தரப்பு மீதும் அதற்கு எதிராகவுமான அவர்களது

பொதுவான நலன்களால் நிர்ணயம் செய்யப்படுவதுமான சமுதாய உறவு, எப்போதும் ஒரு குடிவாழ் கூட்டாகவே இருந்து வந்துள்ளது, என்பது தொடர்கிறது. இதில் இந்த நபர்கள் சராசரி நபர்கள் என்ற முறையில் மட்டுமே தமது வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளின் அகத்தே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அளவுக்கு மட்டுமே உரியவர்களாக இருந்தார்கள். இந்த உறவில் அவர்கள் தனிநபர்களாக அன்றி, மாறாக ஒரு வர்க்கத்தின் உறுப்பினர்களாகப் பங்கேற்றார்கள். மறுபுறத்தில், தமது வாழ்க்கை நிலைமைகளையும் [59] சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களின் வாழ்க்கை நிலைமைகளையும் தமது கண்காணிப்பின் கீழ் எடுத்துக் கொண்டுள்ள புரட்சிகரப் பாட்டாளி சமுதாயத்தைப் பொருத்தவரை இந்தப் போக்கு நேர் எதிரானதாகும். இதில் தனிநபர்கள் என்ற முறையில்தான் தனி நபர்கள் பங்கேற்கிறார்கள். தனி நபர்களின் இந்த இணைப்புத்தான் (நிச்சயமாயும் நவீன உற்பத்தி சக்திகளின் முன்னேறிய கட்டத்தை கருத்தில் கொண்டு அவர்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள தனிநபர்களின் சுதந்திரமான வளர்ச்சி மற்றும் இயக்கத்தின் நிபந்தனைகளை முன்வைக்கிறது. இந்த நிபந்தனைகள் முன்னால் எதிர்பாராது கைவிடப்படப்பட்டவை, தனி நபர்கள் என்ற முறையிலான அவர்களது தனிப்பிரிதல் காரணமாக தனிப்பட்ட நபர்கள் மீதும் அவர்களுக்கு எதிராகவும் சுயேச்சையான இருத்தலை வென்று பெற்றவை. அதோடு உழைப்புப் பிரிவினையால் நிர்ணயிக்கப்பட்டதும், அவர்களது தனிப்பிரிதலால் அவர்களுக்கு அன்னியமாகிவிட்டதுமான அவர்களது இணைப்பின் அவசியமும் இதற்குக் காரணமாகும். இதுவரையிலான இணைப்பு (சமுதாய ஒப்பந்தத்தில்[31] முன் எடுத்துரைத்துள்ளது போன்று எவ்விதத்திலும் தன்னிச்சையானதல்லாத, மாறாக அவசியமான ஒன்றாக இருப்பது) இந்த நிபந்தனைகள் மீதான ஓர் உடன்பாடாகும். இதன் அகத்தே தனி நபர்கள் அதிருஷ்டத்தின் சபலங்களை அனுபவிக்கும் சுதந்திரம் பெற்றிருந்தார்கள் (உதாரணமாக, வட அமெரிக்க அரசின் உருவாக்கத்தையும் தென் அமெரிக்கக் குடியரசுகளையும் ஒப்புநோக்குக). ஒரு சில நிபந்தனைகளின் கீழ்

இந்தத் தற்செயல் நிகழ்வையும் வாய்ப்பையும் தொல்லை இன்றி அனுபவிக்கும் இந்த உரிமைதான் இதுவரையில் தனி நபர் சுதந்திரம் என்று அழைக்கப்பட்டுவந்தது. இந்த வாழ்க்கை நிலைமைகள், நிச்சயமாயும் உற்பத்தி சக்திகளும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சமயத்திலான ஒட்டுறவின் வடிவங்களும் மட்டுமே ஆகும்.

---

கம்யூனிசம், அது முந்திய உற்பத்தி உறவுகள் மற்றும் ஒட்டுறவின் அடிப்படையைத் தலைகீழாகப் புரட்டுகிறது, முதல் தடவையாக எல்லா இயற்கையான முற்கோள்களும் இதுவரையில் வாழ்ந்து வந்த மனிதர்களின் கைப்படைப்பு என்று உணர்வுபூர்வம் கருதுகிறது, அவற்றின் இயற்கைத் தன்மையை அகற்றி அவற்றை ஒன்றிணைந்த தனிநபர்களின் அதிகாரத்துக்கு கீழடக்குகிறது என்ற அளவுக்கு, முந்திய எல்லா இயக்கங்களில் இருந்தும் வேறுபடுகிறது. எனவே இதன் ஒழுங்கமைப்பு முக்கியமாயும் பொருளாதாரத் தன்மையுடையது, இந்த ஒற்றுமை நிலைமைகளின் பௌதிக உருவாக்கத்தைச் சார்ந்தது; இது இருக்கும் நிலைமைகளை ஒற்றுமையின் நிலைமைகளாக மாற்றுகிறது. கம்யூனிசம் படைத்துருவாக்கி வரும் எதார்த்தம், தனிநபர்கள் தம்மின் முந்திய ஒட்டுறவின் ஒரு விளைபயன் மட்டுமே. எதார்த்தம் என்ற அளவுக்கு, தனிநபர்களில் இருந்து சுயேச்சையாக எதுவும் நிலவுவதை சாத்தியமற்றதாக்கும் மெய்யான அடிப்படையாக இது துல்லியமாயும் காட்சி தருகிறது. இவ்வாருக, இதுவரையில் உற்பத்தியாலும் ஒட்டுறவாலும் படைத்துருவாக்கப்பட்ட நிலைமைகளை கம்யூனிஸ்டுகள் நடைமுறையில் வகைதொகையற்ற நிலைமைகள் என்று கருதுகிருர்கள். ஆயினும், இது அவர்களுக்கு விவரப் பொருட்களைத் தருவதற்கு வேண்டி முந்திய தலைமுறையினர் போட்ட திட்டம் அல்லது விதி என்பதை அவர்கள் கற்பனை செய்வதில்லை, இந்த நிலைமைகள் இவற்றைப் படைத்துருவாக்கும் நபர்களுக்கு வகைதொகையற்றவை என்பதை அவர்கள் நம்புவதில்லை.

### [7. தனிநபர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கை நிலைமைகளின் இடையிலான முரண்பாடு உற்பத்தி சக்திகள் மற்றும் ஒட்டுறவு வடிவத்துக்கு இடையிலான ஒரு முரண்பாடாக. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் ஒட்டுறவு வடிவங்களின் மாற்றமும்]

*[60] ஓர் ஆள் என்ற முறையில் தனிநபருக்கும் அவருக்குத் தற்செயலாக நிகழ்வனவற்றுக்கும் இடையிலான வேறுபாடு கருத்தோட்டம் தொடர்பான ஒரு வேறுபாடல்ல, மாருக ஒரு வரலாற்று மெய்நடப்பாகும். இந்தத் தனித்தன்மைக்கு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு உட்பொருள் உண்டு. உ—ம். பதினெட்டாம் நூற்ருண்டில் படிநிலை அமைப்பு தனிநபருக்கு தற்செயலான ஒன்ருக இருக்கிறது, குடும்பமும் கிட்டத்தட்ட அப்படியே. இது நாம் ஒவ்வொரு யுகத்துக்கும் உண்டு பண்ண வேண்டிய தனித் தன்மை அல்ல, மாருக இருக்கக் காணும் வெவ்வேறு சக்திகளின் மத்தியில் இருந்து ஒவ்வொரு யுகமும் தானே உண்டு பண்ணுவதாகும், இது உண்மையில் எந்தத் தத்துவத்திற்கு ஏற்பவும் அன்றி, வாழ்க்கையின் பொருளாய மோதலால் கட்டாயப்படுத்தி உண்டு பண்ணப்படுவதாகும்.*

*முந்திய யுகத்துக்கு எதிர்ப்பாக பிந்திய யுகத்துக்கு எது தற்செயலானதாகத் தோன்றுகிறதோ—இது முந்திய யுகத்தால் மரபாக ஒப்புவிக்கப்பட்ட சக்திகளுக்கும் கூடப் பொருந்தும்—அது உற்பத்தி சக்திகளின் ஒரு திட்டவட்டமான வளர்ச்சி கட்டத்துக்கு சரி ஒப்பாக இருந்த ஒட்டுறவின் ஒரு வடிவமாகும். ஒட்டுறவு வடிவத்திற்கான உற்பத்தி சக்திகளின் உறவு, தனி நபர்களின் தொழில் அல்லது நடவடிக்கையுடனுன ஒட்டுறவு வடிவின் உறவாகும். (இந்த நடவடிக்கையின் அடிப்படையான வடிவம் பொருள்வகைப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. இதன் மீது சிந்தனை, அரசியல், சமயம் இத்தியாதிகளின் இதர வடிவங்கள் அனைத்தும் சார்ந்து நிற்கின்றன. பொருளாயத வாழ்வை பல்வேருக உருவாக்குவது என்பது, ஒவ்வொன்றிலும், ஏற்கெனவே வளர்ச்சியடைந்து விட்ட தேவைகளைச் சார்ந்திருக்கிறது என்பது திண்ணம். பொருள் உற்பத்தியும், இந்தத்*

தேவைகளை நிறைவு செய்வதும் ஒரு வரலாற்று நடைமுறை. இது ஓர் ஆடு அல்லது நாயின் விஷயத்தில் காணப்படுவதில்லை. [ஸ்டிர்னரின் வக்கரிப்பு கோட்பாடு வாதம்[32] "adversus hominem*] இருப்பினும் ஆடுகளும் நாய்களும் அவற்றின் இன்றைய வடிவில் நிச்சயமாயும், ஆனால் malgré eux,** ஒரு வரலாற்று நடைமுறையின் விளை பயன்களே.) மேலே சுட்டப்பட்ட முரண்பாடு இல்லாத காலம் வரை தனிநபர்கள் ஒருவருக்கொருவர் [எந்த நிலைமைகளின் கீழ் ஒட்டுறவு கொள்கிறார்களோ அந்த நிலைமைகள் அவர்களது தனித்துவத்துக்குப் பொருத்தமானவை,] எந்த வழியிலும் அவர்களுக்குப் புறம்பானதல்ல. இந்த நிலைமைகளில் திட்டவட்டமான உறவுகளின் கீழ் வாழும் இந்தத் திட்டவட்டமான நபர்கள் மட்டுமே தமது பொருளாயத வாழ்க்கையையும் அதனுடன் எது தொடர்பு கொண்டிருக்கிறதோ அதையும் உருவாக்க முடியும். இவை அவர்களது சுயநடவடிக்கையும் இந்த சுயநடவடிக்கையால் விளைவனவும் ஆகும்.*** அவர்கள் உற்பத்தி செய்யும் திட்டவட்டமான நிலைமைகள் இவ்வாறாக — [இந்த] முரண்பாடு [61] இன்னும் தோற்றமளிக்காத வரை—அவர்களது நெறியாண்மை செய்யப்பட்ட இயல்பின் எதார்த்தம், அவர்களது ஒரு சார்புத் தன்மையான வாழ்நிலை ஆகியவற்றுக்குச் சரி ஒப்பானதாக இருக்கிறது. முரண்பாடு அரங்கத்தில் பிரவேசித்து இவ்வாறாகப் பிந்திய நபர்களுக்கு என இருக்கும் போது மட்டுமே, இந்த ஒரு சார்பான தன்மை தெளிவாகத் தெரிய வருகிறது. பிறகு இந்த நிலைமை ஒரு தற்செயல் தளையாகத் தோற்றமளிக்கிறது. இது ஒரு தளை எனும் உணர்வு முந்திய யுகத்துக்கும் கூடக் காரணமாகக் காட்டப்படுகிறது.

முதலில் சுயநடவடிக்கையின் நிலைமைகளாகவும், பின்னர் அதன் மீதான தளைகளாகவும், இந்தப் பல்வேறு நிலைமைகள் தோற்றமளிக்கின்றன. இவை வரலாற்றின் முழுமை

*—மனிதனை எதிர்த்து.—ப-ர்.

**—அவர்கள் விருப்பத்திற்கு எதிராக.—ப-ர்.

***ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''ஒட்டுறவு வடிவம் தன்னையே உருவாக்குதல்,''—ப-ர்.

யான பரிணுமத்தில் ஒட்டுறவு வடிவங்களின் ஒரு ஒத்திசைவான வரிசையாக அமைகின்றன. இவற்றின் ஒத்திசைவு இதில் அடங்கியுள்ளது: ஒரு தளையாக மாறிவிட்டதான முந்திய ஒட்டுறவு வடிவத்தின் இடத்தில் புதிதான ஒன்று வைக்கப்படுகிறது. இது மேலும் அதிக வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளுக்கு எனவே, தனிநபர்களின் சுயநடவடிக்கைகளின் முன்னேறிய பாணிக்குச் சரி ஒப்பானதாக இருக்கிறது. இந்த வடிவம் தன் பங்குக்கு ஒரு தளையாக மாறி பின்னர் இன்னென்றுல் பதிலீடு செய்யப்படுகிறது. இந்த நிலைமைகள் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தி சக்திகளின் உடன் நிகழ்வான வளர்ச்சிக்குச் சரி ஒப்பானதாக உள்ளன. எனவே அவற்றின் வரலாறு அதே சமயம் ஒவ்வொரு புதிய தலைமுறையினராலும் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டதான பரிணமித்துவரும் உற்பத்தி சக்திகளின் வரலாருகவும் விளங்குகிறது. ஆகையால் தனிநபர்களின் சொந்த சக்திகளின் வளர்ச்சியின் வரலாருகவும் திகழ்கிறது.

இந்தப் பரிணுமம் இயற்கையாகவே நடைபெறுகிறது, அதாவது, இது சுதந்திரமாக ஒன்றிணைந்த தனிநபர்களின் ஒரு பொதுப்பட்ட திட்டத்திற்குக் கீழடக்கப்படவில்லை. எனவே, இது பல்வேறு வட்டாரங்கள், பூர்வ குடிகள், தேசங்கள், உழைப்புத் துறைக் கிளைகள் இத்தியாதிகளில் இருந்து முன்செல்கிறது. இவை ஒவ்வொன்றும் துவக்கத்தில் மற்றவற்றில் இருந்து சுயேச்சையாகவே வளர்ச்சியடைகின்றன, படிப்படியாக மட்டுமே பிறவற்றுடன் உறவு கொள்கின்றன. இதற்கும் மேலாக இது மிகவும் மெதுவாக மட்டுமே நடைபெறுகிறது. பல்வேறு கட்டங்களும் நலன்களும் என்றுமே முழுமையாக வென்று சமாளிக்கப்படுவதில்லை, மாருக இவை மேலோங்கி நிற்கும் நலனுக்குக் கீழடக்கப்பட்டுப் பின்னதன் பக்கத்தில் பிற்பாடு பல நூற்ருண்டுகளுக்கு நெடுகிலும் வால் பிடித்துச் செல்லுகின்றன. ஒரு தேசத்திற்கு உள்ளேயே தனிநபர்கள், அவர்களது பணவகைப்பட்ட சூழ்நிலைமைகள் ஒருபுறமிருக்க முற்றும் வேறுபட்ட வளர்ச்சிகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதும், பிந்திய நலனுக்குச்

சொந்தமான ஒட்டுறவு வடிவால் ஏற்கெனவே விரட்டப் பட்ட பிரத்தியேக வடிவிலான ஒட்டுறவின் முந்திய நலன், பின்னுல் நீண்ட காலத்துக்கு போலியான சமுதாயத்தின் மரபான ஆட்சி அதிகாரத்திடம் (அரசு, சட்டம்) உடைமையாக இருக்கிறது என்பதும், இது தனிநபர்களில் இருந்து சுயேச்சையான முறையில் நிலவுகிறது என்பதும், இந்த ஆட்சி அதிகாரம் கடைசியாக ஒரு புரட்சியால் மட்டுமே தகர்க்கப்பட முடியும் என்பதும் இதிலிருந்து தொடர்கிறது. மேலும் [62] பொதுப்படையாகத் தொகுத்துக் கூறுவதை அனுமதிக்கும் தனிப்பட்ட அம்சங் களைப் பொருத்தவரை, ஏன் சில சமயம் உணர்வு சமகால அனுபவவாத உறவுகளைக் காட்டிலும் அதிகமுன்னேற்ற மானதாக இருக்கிறது என்பதை இது விளக்குகிறது. இதன் மூலம் ஒரு பிந்திய சகாப்தத்தின் போராட்டத்தில் எவரும் முந்திய தத்துவாளர்களை நிபுணர்களாகக் குறிப் பிட முடியும்.

மறுபுறத்தில், வட அமெரிக்கா போன்று, ஏற்கெனவே முன்னேறிவிட்ட வரலாற்று சகாப்தத்தில் இருந்து துவங்கும் நாடுகளில் வளர்ச்சி மிகவும் துரிதமாக நடக்கிறது. இத் தகைய நாடுகளுக்கு இந்தத் தனிநபர்களைத் தவிர்த்து வேறு இயற்கையான ஆதாரங்கள் எதுவும் கிடையாது. இந்த நபர்கள் அங்கு குடியேறி வாழ்கிருர்கள், பழைய நாடுகளின் ஒட்டுறவு வடிவங்கள் அவர்களது தேவைகளுக்கு சரி ஒப்பானதாக இல்லாத காரணத்தால் அவர்கள் இவ்வாறு செயல்பட நேர்ந்தது. இவ்வாறு இவை பழைய நாடுகளின் மிகவும் முன்னேற்றமடைந்த நபர்களுடன், எனவே இதற்குச் சரி ஒப்பான மிகவும் முன்னேறிய ஒட்டுறவு வடிவங்களுடன், பழைய நாடுகளில் இந்த வடிவிலான ஒட்டுறவு தன்னை நிலை நாட்டிக் கொள்ள இயல்வதற்கு முன்பாகவே, வளரத் தொடங்குகின்றன. அவை வெறும் ராணுவ அல்லது வாணிக நிலையங்கள் என்பதாக இல்லாத வரையில் இதுவே எல்லாக் காலனிகளின் நிலையுமாகும். கார்த்தேஜ், கிரேக்கக் காலனி கள், மற்றும் பதினொன்றும், பன்னிரண்டாம் நூற்ருண்டு களில் ஐஸ்லாந்து இவை இதற்கான உதாரணங்களை வழங்கு

கின்றன. இதே போன்றதான ஓர் உறவு படைவென்று நாடு கொள்வதில் இருந்தும் பிறக்கிறது. அப்போது, இன்னொரு மண்ணில் மலர்ந்த ஒட்டுறவு வடிவம் வென்று கொள்ளப் பட்ட நாட்டுக்கு முழுமையாகக் கொண்டுவரப்படுகிறது. அதேபோதில், அதன் தாய்நாட்டில் இந்த உறவு முந்திய காலப்பகுதிகளில் மீதமாக விடப்பட்ட நலன்கள் மற்றும் உறவுகளால் இன்னும் தடைப்படுத்தப்படுகிறது. இங்கு, வென்று பிடித்தவர் நிலையான ஆட்சி அதிகாரத்தை உறுதிப் படுத்த மட்டுமே கூட இது முழுமையாயும் தடங்கல் இன்றி யும் நிலைநாட்டப்பட முடியும் நிலைநாட்டப்பட வேண்டும். (நார்மன் படையெடுப்புக்குப்[33] பின்னர் இங்கிலாந்தும் நேபிள்சும் அப்போது அவை மிகவும் செவ்வையான வடி. விலான நிலப்பிரபுத்துவ அமைப்பைப் பெற்றன.)

## [8. வரலாற்றில் வன்முறையின் (படையெடுப்பின்) பாத்திரம்]

வரலாற்றின் இந்த வியாக்கியானம் முழுவதும் படை யெடுப்பின் மெய்நடப்பு மூலம் மறுத்துரைக்கப்படுவதாகத் தோன்றுகிறது. இந்தச் சமயம் வரையில் வன்முறை, போர், கொள்ளையிடல், கொலை மற்றும் திருட்டு ஆகியவை வரலாற் றின் இயக்கு சக்தி என ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தன. இங்கு நாம் பிரதான அம்சங்கள் அளவுக்கு வரையறுத்துக் கொண்டு, எனவே மிகவும் எடுப்பான உதாரணத்தை மட் டும்—காட்டுமிராண்டி மக்களால் ஒரு பழைய நாகரிகம் அழிக்கப்பட்டதை—எடுத்துக் கொள்ள வேண்டும் (ரோமா புரியும் காட்டுமிராண்டிகளும்; நிலப்பிரபுத்துவமும் கால் நாடும்; பைசான்ஷியன் சாம்ராஜ்யமும் துருக்கியரும்[34]).

[63] படைகொண்டு வென்ற காட்டுமிராண்டி மக்கள் விஷயத்தில் மேலே சுட்டிக்காட்டியது போல போர் இன்ன மும் ஒரு முறையான வடிவிலான ஒட்டுறவாகவே இருக் கிறது. மக்கள் தொகைப் பெருக்கமும், அதோடு மரபான தும் அதற்குரிய ஒரே சாத்தியமான முதிராத உற்பத்தி முறையும் சேர்ந்து புதிய உற்பத்தி சாதனங்களுக்கான

தேவையை ஏற்படுத்துவதன் காரணமாக போர்முறை மிகவும் ஆர்வத்துடன் பயன்படுத்தப்படுகிறது. மறுபுறத்தில் இத்தாலியில் நிலச் சொத்துடைமையின் ஒன்று குவிப்பும் (இது நிலங்களை விலைக்கு வாங்குவதாலும் கடன்பட்டதாலும் மட்டுமன்றி வாரிசுரிமை மூலமும் நேர்ந்தது, காரணம் ஒழுக்கம் கெட்ட வாழ்க்கை மிகுந்து, திருமணங்கள் அரிதாகிப் பழைய குடும்பங்கள் படிப்படியாகச் செத்தழிந்தன அவற்றின் உடைமைகள் சிலர் கைகளில் சிக்கினதாலும் நேர்ந்தது) இவை மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்பட்டதும் (இது இன்றும் செயல்பட்டுவரும் வழக்கமான பொருளாதார சக்திகளால் மட்டுமன்றி, அதோடு கொள்ளையடிக்கப்பட்டும் கப்பமாகப் பெறப்பட்டும் வந்த தானியத்தின் இறக்குமதியாலும், இதன் பின்விளைவாக இத்தாலிய தானியத்துக்கு கிராக்கி இல்லாததாலும் நேர்ந்தது) சுயேச்சையான மக்கள் கிட்டத்தட்ட முற்றிலும் மறைந்துவிடும் நிலையைக் கொண்டு வந்தன. இதே அசல் அடிமைகள் மீண்டும் மீண்டும் செத்து மறைந்தார்கள், புதியவர்களைக் கொண்டு இடைவிடாமல் அவர்களைப் பதிலீடு செய்ய வேண்டி இருந்தது. உற்பத்தி அமைப்பு முறை முழுவதன் அடித்தளமாயும் அடிமை முறை நீடித்தது. சுதந்திரமுடையாருக்கும் அடிமைகளுக்கும் இடைவழியில் தோன்றிய பிளெபியன்கள் எனும் பாமரக் குடியோன்கள், ஒரு பாட்டாளி மந்தையாக மாறுவதைத் தவிர அதிகமாக எந்த சாதனையையும் காணவில்லை. ரோமாபுரி ஒரு மாநகரம் என்பதற்கு மேல் என்றுமே அதிகமாக மாற்றமடையவில்லை. மாகாணங்களுடனான அதன் தொடர்பு கிட்டத்தட்ட முழுமையாயும் அரசியல் தன்மை வாய்ந்தது, எனவே அரசியல் நிகழ்வுகளால் மீண்டும் எளிதில் தகர்க்கப்படக் கூடியது.

---

வரலாற்றில் இதுவரையில் **பறித்துக்கொள்வது** என்பதான காரியம் மட்டுமே இருந்து வந்துள்ளது, எனும் கருத்துப்படிவத்தை விடவும் மிகச் சாதாரணமான கூற்று வேறு எதுவும் இல்லை. காட்டு மிராண்டிகள் ரோமன் சாம்ராஜ்யத்தைப் **பறித்துக்கொள்கின்றனர்,** இந்தப் பறித்துக்

கொள்ளல் மெய்நடப்பு பழைய உலகில் இருந்து பிரபுத்துவ அமைப்புக்கு மாறிச் செல்வதை விளக்குவதற்குப் பயன் படுத்தப்படுகிறது. எனினும், காட்டுமிராண்டிகளின் இந்தப் பறித்துக் கொள்ளலில் இருந்து எழுவது, நவீன கால மக்கள் விஷயத்தில் இருப்பது போல, வென்று கைப்பற்றப்பட்ட தேசம் தொழில்துறை உற்பத்தி சக்திகளை உருவாக்கியுள் ளதா, அல்லது அவற்றின் உற்பத்தி சக்திகள் பெரும்பாலும் அவற்றின் இணைப்பின் மீதும் மக்கட் சமுதாயம் [Gemeinwesen] மீதும் மட்டுமே நிறுவப்பட்டதாக இருக்கிறதா எனும் கேள்வியாகும். பறித்துக் கொள்ளல் பறித்துக்கொள்ளப் பட்ட பொருளாலும் மேலும் வரையறுக்கப்படுகிறது. பறித்துக் கொள்பவர் பறித்துக் கொள்ளப்பட்ட நாட்டின் உற்பத்தி மற்றும் ஒட்டுறவு நிபந்தனைகளுக்கு இணங்கிப் போகாமல் பங்குப் பத்திரத்தைக் கூறுகக்கொண்ட ஒரு வங்கியதிபர் செல்வத்தைப் பறித்துக் கொள்ளவே முடியாது. இதே போலத்தான் ஒரு நவீனத் தொழில்வள நாட்டின் ஒட்டுமொத்த தொழில்துறை மூலதனமும். இறுதியாக, எல்லா இடங்களிலும் வெகுவிரைவில் பறித்துக்கொள்வதற்கு முடிவு ஏற்பட்டுவிடும்; பறித்துக் கொள்வதற்கு என இனி எதுவும் இல்லை எனும் போது, நீங்கள் உற்பத்தி செய்யத் தொடங்கித்தீர வேண்டும். வெகு விரைவில் தன்னைத் தானே வலியுறுத்திக் கொள்ளும் உற்பத்திசெய்ய வேண்டியதன் இந்த அவசியத்தில் இருந்து தொடர்வது, [64] நிரந்தர மாகக் குடியேறி விட்ட நாடுபிடியாளர்கள் ஏற்றுக் கொள் ளும் மக்கட் சமுதாய [Gemeinwesen] வடிவம் அவர்கள் இருக்கக் காண்கிற உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டத் துக்குச் சரி ஒப்பானதாக இருக்க வேண்டும்; அல்லது துவக் கம் முதலே நிலைமை இத்தகையதாக இல்லை எனும் பட்சத் தில் அது உற்பத்தி சக்திகளுக்கு ஏற்றபடி மாற்றமடைய வேண்டும் என்பதே. இதன் மூலமும் கூட, மக்களின் குடிப் பெயர்ச்சியை ஒட்டிய காலப்பகுதியில் எல்லா இடங்களிலும் மக்கள் தாம் கண்ணுற்றதாக கூறும் மெய்நடப்பு விளக்கப் படுகிறது. அதாவது, வேலைக்காரன் எஜமானுக இருந்தான், படையெடுப்பாளர்கள் வெகுவிரைவில் படைவென்று கீழடக்

கப்பட்டோரிடமிருந்து மொழி, கலாசாரம், நடைப் பாங்குகளை எடுத்துக்கொண்டு விட்டார்கள். என்று விளக்கப்படுகிறது. பிரபுத்துவ அமைப்பு எவ்வகையிலும் ஜெர்மனியில் இருந்து முழுமையாகக் கொண்டுவரப்படவில்லை, ஆனால் படையெடுப்பாளர்களைப் பொருத்தவரை இதன் தோற்றம் உண்மையான படையெடுப்பின் போதான சைனியத்தின் போர்க்கால அமைப்பில் காணப்பெற்றது. இது படையெடுத்து வென்ற பின்னால், கைப்பற்றப்பட்ட நாடுகளில் காணப்பெற்ற உற்பத்தி சக்திகளின் செயல் மூலமாக மட்டுமே சரியான பிரபுத்துவ அமைப்பு முறையாகப் பரிணமித்தது. இந்த வடிவம் எந்த அளவுக்கு உற்பத்தி சக்திகளால் வரையறை செய்யப்பட்டது என்பது, தொன்மையான ரோமாபுரி (மாமன்னர் கார்ல் இத்தியாதி) நினைவுக் குறிப்புகளில் இருந்து பெறப்பெற்ற, இதர வடிவங்களைச் சித்திபெறச் செய்ய நடத்திய குலைந்து போன முயற்சிகளால் புலப்படுத்தப்படுகிறது.

---

### [9. பெரிய தொழில்துறை மற்றும் கட்டற்ற போட்டி எனும் நிலைமைகளில் உற்பத்தி சக்திகளுக்கும் ஒட்டுறவு வடிவத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் வளர்ச்சி. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரண்நிலை]

பெரிய தொழில் துறையிலும் போட்டியிலும், இருத்தல் பற்றிய முழுத் திரளான நிலைமைகளும், வரம்புகளும், தனி நபர்களின் பட்சபாதத் தன்மைகளும், இரண்டு மிக எளிதான வடிவங்களில் சேர்த்து ஒன்றாக்கப்பட்டுள்ளன: தனியார் சொத்துடைமை மற்றும் உழைப்பு. பணம் வந்ததோடு, எல்லா வடிவிலுமான ஒட்டுறவும், மற்றும் தன்னிலையான ஒட்டுறவு தனிநபர்களுக்குரிய தற்செயலான நிகழ்ச்சி என்று கருதப்படுகிறது. இவ்வாறாக பணமானது, முந்திய ஒட்டுறவுகள் எல்லாம், தனிநபர்கள், தனிநபர்கள் என்ற முறையில் ஏற்பட்டவை அல்ல, மாறாக, குறிப்பிட்ட நிலைமைகளின் கீழிலான தனிநபர்களின் ஒட்டுறவே என்பதாக

உணர்த்துகிறது. இந்த நிலைமைகள் இரண்டாகக் குறுக்கப் படுகின்றன: திரட்டப்பட்டதான உழைப்பு அல்லது தனியார் சொத்துடைமை, மற்றும் உண்மையான உழைப்பு. இவை இரண்டுமோ அல்லது இவற்றில் ஒன்றோ இல்லாதாகிவிடு மானால் ஒட்டுறவு அசையாமல் நின்று விடும். நவீனப் பொருளியலாளர்கள் தாமே, உதாரணமாக சிஸ்மோந்தீ, செர்புலியே இத்தியாதியோர், ''மூலதனத்தின் இணைப்புக்கு'' ''தனிநபர்களின் இணைப்பை'' எதிராக வைக்கிறார்கள். மறுபுறம் தனி நபர்கள் தாமே உழைப்புப் பிரிவினைக்கு முற்றிலும் கீழடக்கப்பட்டிருக்கிறார்கள், எனவே ஒருவர் இன்னொருவரை மிகவும் முழுமையாகச் சார்ந்து நிற்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். தனியார் சொத்துடைமை,—இது உழைப்புக்கு உள்ளேயே உழைப்பினை எதிர்க்கிறது என்ற அளவுக்கு—திரட்டலின் அவசியத்தில் இருந்து பரிணமிக்கிறது. இன்னும் துவக்கத்தில் சமுதாயத்தன்மையின் வடிவத்தை [Gemeinwesen] சற்றே கொண்டதாக இருக்கிறது. ஆனால் அதன் இனிமேற்பட்டதான வளர்ச்சியில் தனியார் சொத்துடைமையின் நவீன வடிவத்தை மேலும் மேலும் நெருங்கி வருகிறது. உழைப்புப் பிரிவினை துவக்கம் முதலே, உழைப்பு நிலைமைகளின், கருவிகள் சாதனங்களின் பிரிவினையை உணர்த்துகிறது. இவ்வாறாக, திரட்டப்பட்ட மூலதனம் பல்வேறு உரிமையாளர்கள் மத்தியில் பிரிவினை செய்யப்படுவதையும், மற்றும் இவ்வாறாக மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான பிரிவையும், பல்வேறு வடிவிலான சொத்தையும் கூடக் குறிப்பிடுகிறது. உழைப்புப் பிரிவினை அதிகமாக வளர்ச்சியடையும் தோறும், [65] திரட்சி பெருகும் தோறும் இந்தப் பாகுபாடு செய்யும் நடைமுறை மேற்கொள்ளும் வடிவங்கள் மேலும் கூர்மையடைகின்றன. உழைப்பு தானேகூட இந்தக் கூறுபாட்டின் ஆதாரத்தின் மீது மட்டுமே நிலவ முடியும்.

---

(பல்வேறு தேசிய இனங்களின்—ஜெர்மானியர், அமெரிக்கர்—தனிநபர்களின் சொந்த ஆற்றல்—இனக் கலப்பு

வாயிலாகவும் கூட வரும் ஆற்றல்—எனவே ஜெர்மானியரின் மந்தப் போக்கு, அன்னிய மக்களினங்கள் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவற்றில் ஏற்கெனவே வளப்படுத்தப்பட்ட மண்ணிலும், அமெரிக்காவில் முற்றிலும் புதிய மண்ணிலும் குடி மாற்றம் செய்யப்படுதல்; ஜெர்மனியில் இயற்கையான மக்கள் தொகை இருந்த இடத்திலேயே அமைதியாக இருந்தது.)

---

இவ்வாருக, இங்கு இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன.* முதலில் உற்பத்தி சக்திகள் தனிநபர்களிடம் இருந்து முற்றிலும் சுயேச்சையாய், அவர்களிடம் இருந்து விலகி, தனிநபர்களின் ஒருங்கே, தன்வயமான வாழ்க்கை முறையாகத் தோற்றமளிக்கின்றன. இதற்குக் காரணம் எந்தத் தனிநபர்களின் சக்திகளாக இவை இருக்கின்றனவோ அந்தத் தனிநபர்கள் பிளவுண்டு ஒருவருக்கு ஒருவர் எதிராக நிலவுகிருர்கள். அதேபோதில் மறுபுறம் இந்த சக்திகள் மட்டுமே இந்தத் தனிநபர்களின் ஒட்டுறவிலும் இணைப்பிலும் மெய்யான சக்திகளாக நிலவுகின்றன. இவ்வாருக, ஒருபுறம் நம் வசம் முழுமையான உற்பத்தி சக்திகள் இருக்கின்றன. அவை ஒருவிதத்தில் ஒரு பொருளாயத வடிவை மேற்கொண்டுள்ளன. மேலும் இவை தனி நபர்களுக்கு இனிமேல் தனிநபர்களின் சக்திகளாக இருக்க மாட்டா, மாருக தனியார் சொத்துடைமையாக இருக்கும். இதன் விளைவாக, அவர்கள் தாமே தனிச்சொத்தின் உரிமையாளர்களாக இருந்துவரும் அளவுக்கு இது அந்தத் தனிநபர்களது மட்டுமேயான தனிச் சொத்தாக இருக்கும். முந்திய காலப் பகுதிகள் எதிலும் தனி நபர்கள் என்ற முறையில் தனிநபர்களின் ஒட்டுறவுக்கு இவ்வளவு அசிரத்தையான ஒரு வடிவை உற்பத்தி சக்திகள் மேற்கொண்டதே இல்லை. காரணம் அவர்களது ஒட்டுறவு தானே முன்நாட்களில் வரையறை செய்யப்பட்ட ஒன்ருக இருந்தது. மறுபுறத்தில், எவரிடம் இருந்து இந்த சக்திகள்

---

* ஓரக்குறிப்பு எங்கெல்ஸ் எழுதியது: ''சிஸ்மோந்தீ.'' —ப-ர்.

வலிந்து பறிக்கப்பட்டனவோ அந்தத் தனிநபர்களில் பெரும்பான்மையினர் இந்த உற்பத்தி சக்திகளுக்கு எதிராக நிற்கக் காண்கிறோம். இவ்வாறாக, மெய்யான வாழ்க்கையின் சாரம் அனைத்தும் பறிக்கப்பட்ட இவர்கள், கருத்தியலான தனிநபர்களாகி விட்டார்கள். ஆனால் இவர்கள் இந்த மெய்நடப்பு காரணமாக மட்டுமே **தனிநபர்கள் என்ற** முறையில் ஒருவர் இன்னொருவருடன் உறவு கொள்ளும் ஒரு நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உற்பத்தி சக்திகளுடனும் தமது சொந்த வாழ்நிலையுடனும் அவர்களை இன்னும் பிணைத்திருக்கும் ஒரே தொடர்பான — உழைப்பு — அதன் சுயச்செயல்பாட்டின் சாயல் அனைத்தையும் இழந்துவிட்டது, அதை மட்டுப்படுத்துவது மூலம் அவர்களது வாழ்க்கை [66] நீடித்து நடக்கும்படி மட்டுமே செய்கிறது. முந்திய காலப்பகுதிகளில் சுயச்செயல்பாடும். பொருளாயத வாழ்க்கை வசதிகளின் உற்பத்தியும் தனிப்பிரிந்து இருந்தன. அவை வெவ்வேறு நபர்கள் மீது பொறுப்பை ஒப்படைத்திருந்தன. தனிநபர்கள் தம்மிலான குறுகியபோக்கு காரணமாக பொருளாயத வாழ்க்கை வசதிகளின் உற்பத்தி சுயச்செயல்பாட்டின் ஒரு கீழடங்கிய முறை என்பதாகக் கருதப்பட்டது. அதே போதில் இப்போது அவர்கள் எந்தளவுக்கு விரிந்த போக்கில் செல்கிறார்கள் என்பதைக் காணும் போது ஒட்டு மொத்தத்தில் பொருளாயத வாழ்க்கையே முடிவாகவும், இந்தப் பொருளாயத வாழ்க்கையை எது உருவாக்குகிறதோ அந்த உழைப்பு (இப்போது இது சாத்தியமான ஒரே, ஆனால் எதிர்மறை வடிவிலான சுயசெயற்பாடாக இருக்கக் காண்கிறோம்) சாதனமாகவும் தோற்றமளிக்கின்றன.

### [10. தனியார் சொத்துடைமை ஒழிப்பின் அவசியம், நிபந்தனைகள், பின்விளைவுகள்]

காரியங்கள் இப்போது வந்து எட்டியுள்ள நிலையில், தனிநபர்கள் சுயச்செயல்பாட்டை அடைவதற்கு மட்டுமன்றி, அவர்களது வாழ்நிலையையே பாதுகாத்துக் கொள்

வதற்கும் கூட, இப்போது நிலவும் உற்பத்தி சக்திகள் முழுவதையும் சுவிகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்த சுவிகரிப்பு முதலில் சுவிகரித்துக் கொள்ள வேண்டிய பொருளால், உற்பத்தி சக்திகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இவை முழு நிறைவான வளர்ச்சி அடைந்து விட்டன, ஒரு சர்வப்பொதுவான ஒட்டுறவுக்குள் மட்டுமே நிலவுகின்றன. ஆகவே, இந்த அம்சத்தில் இருந்து மட்டுமே இந்த சுவிகரிப்பு உற்பத்தி சக்திகளுக்கும் ஒட்டுறவுக்கும் சரி ஒப்பானதான ஒரு சர்வப்பொதுத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். இந்த சக்திகளின் சுவிகரிப்பு என்பது தன்னளவில், பொருள்வகை உற்பத்தி கருவிகளுக்குச் சரி ஒப்பானதான தனி நபர்களின் ஆற்றல்களின் வளர்ச்சிக்கு அப்பால் அதிகமான வேறு எதுவும் அல்ல. உற்பத்திக் கருவிகள் முழுவதன் சுவிகரிப்பு என்பது இந்த மெய்யான காரணத்தால் தனிநபர்கள் தம்மிலேயே ஆற்றல்கள் முழுவதும் வளர்ச்சியடைவதைக் குறிக்கிறது.

இந்த சுவிகரிப்பு, சுவிகரிப்பை நடத்தும் நபர்களால் மேலும் நிர்ணயிக்கப்படுகிறது. சுயச்செயல்பாடுகள் அனைத்தில் இருந்தும் முற்றாகத் தடுக்கப்பட்டிருக்கும் இன்றைய பாட்டாளிகள் மட்டுமே ஒரு முழுமையான இனிமேலால் வரையறுக்கப்படாத சுயச்செயல்பாட்டை சாதனையாக்கும் நிலையில் இருக்கிறார்கள். இதில் உற்பத்தி சக்திகளை முழுமையாக சுவிகரிப்பது இடம் பெறும், மற்றும் இவ்வாறு முற்பட்டு வரும் மொத்த ஆற்றல்களின் வளர்ச்சியும் உள்ளடங்கும். முந்தைய புரட்சிகரமான சுவிகரிப்புகள் யாவும் வரம்புக்குட்பட்டவை: தமது சுயச்செயல்பாடுகள் ஒரு பக்குவப்படாத உற்பத்திக் கருவியாலும் ஒரு வரையறைக்குட்பட்ட ஒட்டுறவாலும் வரம்பு செய்யப்பட்டு இருந்த தனி நபர்கள் இந்த பக்குவப்படாத உற்பத்திக் கருவியை [67] சுவிகரிப்பு செய்தனர், இதன் விளைவாக ஒரு புதிய வரையறுப்பு நிலையை மட்டுமே அடைந்தார்கள். அவர்கள் உற்பத்திக் கருவி அவர்களது சொத்தாக மாறியது. ஆனால் அவர்கள் உழைப்புப் பிரிவினைக்கும், தமது சொந்த உற்பத்திக் கருவிக்கும் கீழடங்கியே இருந்தார்கள். இது

வரையிலான உடைமை நீக்கங்கள் அனைத்திலும் தனிநபர்களின் திரளினர் தனி ஓர் உற்பத்திக் கருவிக்குக் கீழடங்கி இருந்தார்கள். பாட்டாளிகளால் நடத்தப்படும் சுவீகரிப்பில் பெருந்திரளான உற்பத்திக் கருவிகள் ஒவ்வொரு தனிநபருக்கும் கீழடக்கப்பட்டு, எல்லோரின் சொத்தாக மாற்றப்பட வேண்டும். எனவே நவீன உலகளாவிய ஒட்டுறவு எல்லோராலும் கண்காணிக்கப்படும் போது மட்டுமே தனிநபர்களாலும் கண்காணிக்கப்பட முடியும்.

இந்த சுவிகரிப்பு அது செயலாக்கப்படும் தன்மையின் மூலமும் மேலும் நிர்ணயிக்கப்படுகிறது. இதை ஓர் ஒன்றியம் வாயிலாக மட்டுமே செயலாக்க முடியும், இந்த ஒன்றியம் பாட்டாளி வர்க்கத்தின் சுயத்தன்மை காரணமாக உலகு தழுவிய ஒன்றாக மட்டுமே இருக்க முடியும். மற்றும் இதை ஒரு புரட்சியின் வாயிலாகவே செய்ய முடியும். இதில் ஒரு புறம் முந்திய உற்பத்தி முறை, ஒட்டுறவு மற்றும் சமுதாய அமைப்பின் ஆட்சி அதிகாரம் வீழ்த்தப்படுகிறது. மறு புறம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வவியாபகமான தன்மையும் சக்தியும் வளர்ச்சியடைகின்றன. இவை இல்லாமல் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடியாது. அதோடு இப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தில் அது வகித்திருந்த முந்திய நிலைமைகளில் விடாது பற்றிக் கொண்டிருந்த சகலத்தையும் ஒழித்துக் கட்டிவிடுகிறது.

இந்த கட்டத்தில் மட்டுமே சுயச்செயல்பாடு பொருள்வகை வாழ்க்கையுடன் ஒத்துமேவுகிறது. இது, தனிநபர்கள் முழுமையான தனிநபர்களாக வளர்ச்சியுற்று, இயற்கையான எல்லா வரம்புகளையும் அகற்றி எறிவதற்குச் சரி ஒப்பானதாகும். உழைப்பு சுயச்செயல்பாடாக உருமாற்றப் படுவது, முந்திய வரம்புக்குட்பட்டதான ஒட்டுறவு தனிநபர்களின் ஒட்டுறவு என்பதாக உருமாற்றப்படுவதற்குச் சரி ஒப்பானதாகும். ஒன்றிணைந்த தனிநபர்கள் வாயிலாக முழுமையான உற்பத்தி சக்திகள் சுவிகரிக்கப்படுவதோடு தனியார் சொத்துடைமை முடிவுக்கு வருகிறது. முன் நாட்களில் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நிலைமை எப்போதும் தற்செயலானதாகத் தோற்றமளித்துள்ள அதே போதில், இப்

போது தனிநபர்கள் தனிமைப்படுதலும், ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட லாபமும் தாமே தற்செயலானவையாக மாறிவிட்டன.

உழைப்புப் பிரிவினைக்கு இனிமேலால் ஆட்பட்டிருக்காத [68] தனிநபர்கள் ''மனிதன்'' என்ற பேரால் தத்துவஞானிகளால் ஒரு லட்சியமாகக் கருதிப்பார்க்கப்பட்டார்கள். ''மனிதனது'' பரிணும வளர்ச்சிப் போக்கு என்பதாக நாம் உருவரை செய்துள்ள முழு நிகழ்ச்சி முறையையும் அவர்கள் கருதிப் பார்த்திருக்கிறுர்கள். இதன் விளைவாக வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் ''மனிதன்'' தனிநபர்களுக்கு மாற்றீடு செய்யப்பட்டு வரலாற்றின் விசைச் சக்தியாகக் காட்டப்படுகிறுன். இந்த நிகழ்ச்சிமுறை முழுவதும் ''மனிதனின்''* சுய ஒதுக்கத்தின் நிகழ்ச்சி முறையாகக் கருதிப்பார்க்கப்பட்டது. இதற்கு முக்கியமான காரணம், பிந்திய கட்டத்தின் சராசரி நபர் முந்திய கட்டத்தின் மீது எப்போதும் திணிக்கப்பட்டதும், பிந்திய யுகத்தின் உணர்வு முந்திய யுகத்தின் நபர் மீது திணிக்கப்பட்டதுமேயாகும். துவக்க முதலே மெய்யான நிலைமைகளின் கருத்தியலான பிம்பமாக இருந்து வரும் இந்தத் தலைகீழ் மாற்றம் வாயிலாக வரலாறு முழுவதையும் உணர்வின் பரிணும நிகழ்ச்சி முறையாக உருமாற்றுவது சாத்தியமாக இருந்தது.

* * *

குடியுரிமை சமுதாயம் தனிநபர்களின் முழுமையான பொருளாயத ஒட்டுறவையும் உற்பத்தி சக்திகளின் ஒரு திட்டவட்டமான வளர்ச்சி கட்டத்தின் அகத்தே அரவணைத்துக் கொள்கிறது. அது ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் வாணிக மற்றும் தொழிற் துறை வாழ்க்கை முழுவதையும் அரவணைத்துக் கொள்கிறது. அந்த அளவுக்கு அது அரசு மற்றும் தேசத்தைக் கடந்து நிற்கிறது. மறுபுறத்தில் இது மீண்டும் தனது அயல்துறை உறவுகளில் ஒரு தேசிய இன

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''சுய ஒதுக்கம்''. —ப-ர்.

மாக, தன்னை வலியுறுத்திக் கொள்ளவும், உள்ளுக்குள் தன்னை ஓர் அரசாக ஒழுங்கமைத்துக் கொள்ளவும் வேண்டியுள்ளது. ''குடியுரிமை சமுதாயம்'' [bürgerliche Gesellschaft]* எனும் தொடர் பதினெட்டாம் நூற்றுண்டில் சொத்துடைமை உறவுகள் தம்மை புராதன மற்றும் மத்திய காலத்திய குடிவாழ் கூட்டு சமுதாயத்திடமிருந்து [Gemeinwesen]) ஏற்கெனவே விடுவித்துக் கொண்டுவிட்ட போது தோற்றமளித்தது. குடியுரிமை சமுதாயம் என்ற முறையில் அது முதலாளித்துவ வர்க்கத்துடன் தான் வளர்ச்சியுறுகிறது. உற்பத்தி மற்றும் வாணிகத்தில் இருந்து நேரடியாகப் பரிணமிப்பதும், எல்லா யுகங்களிலும் அரசுக்கும் மீதமுள்ள சித்தாந்த** மேற்கட்டு மானத்தினத்தினதும் அடித்தளமாக இருப்பதுமான சமுதாய அமைப்பு எப்போதும் இதே பெயரால் அறியப்படுவதாகும்.

## [11.] சொத்துடைமை மீது அரசு மற்றும் சட்டத்தின் உறவு

புராதன உலகில் மத்திய யுகங்களில் போலவே, சொத்துடைமையின் ஆரம்ப வடிவம் பூர்வகுடிபாணி சொத்துடைமையே. இது ரோமானியர்களைப் பொருத்தவரை பிரதானமாயும் போர்கள் மூலமும், [69] ஜெர்மானியரைப் பொருத்தவரை கால்நடை வளர்ப்பு மூலமும் நிர்ணயிக்கப்பட்டது. புராதன கால மக்கள் விஷயத்தில், ஒரு நகரில் பல பூர்வகுடிகள் சேர்ந்து வாழ்ந்து வந்ததால் பூர்வ குடி பாணி சொத்துடைமை அரசுச் சொத்துடைமையாக தோற்றமளிக்கிறது. வெறும் ''உடைமை'' என்ற முறையில் அதன் மீது தனிநபருக்கு உள்ள உரிமை ஒட்டுமொத்தத்தில் நிலச்சொத்துக்களுக்குள் [possessio] மட்டுமே அடங்கும். நவீன தேசங்களில் போலவே புராதன தேசங்களிலும் மெய்யான தனி

* "bürgerliche Gesellschaft" என்பது ஒன்று ''முதலாளித்துவ சமுதாயம்'' அல்லது ''குடியுரிமை சமுதாயம்'' என்று பொருள்படுவதாகும்.—ப-ர்.

** அதாவது லட்சியமான, சித்தாந்த ரீதியான.—ப-ர்.

யார் சொத்து என்பது ஜங்கமச் சொத்துக்களுடன் (அடிமை முறை மற்றும் குடிவாழ் கூட்டுக்கள் [Gemeinwesen] [dominium ex jure Quiritum]*) துவங்கியது. மத்திய யுகங்களில் இருந்து பிறந்த தேசங்கள் விஷயத்தில், பூர்வகுடி பாணி சொத்து—பிரபுத்துவ நிலச் சொத்து, இணைப்புருவிலான ஜங்கமச் சொத்து, பட்டறைத் தொழிலில் முதலீடு செய்யப் பட்ட மூலதனம்—ஆகிய பல்வேறு கட்டங்கள் மூலமாக—நவீன மூலதனமாகப் பரிணமித்தது. இது பெரிய தொழில் துறை மற்றும் உலகு தழுவிய போட்டியால் நிர்ணயிக்கப் படுகிறது, அதாவது கலப்பற்ற தனியார் சொத்தாகிறது. இது ஒரு சமுதாய நிலையத்தின் [Gemeinwesen] சகல சாயல் களையும் அகற்றி எறிகிறது, சொத்தின் வளர்ச்சி மீது அரசு எவ்விதச் செல்வாக்கும் செலுத்த முடியாதபடி தடை செய் கிறது. இந்த நவீன தனியார் சொத்துடைமைக்குச் சரி ஒப் பானதாக நவீன அரசு விளங்குகிறது. இது சொத்தின் உரிமை யாளர்களால் வரிகள் மூலம் படிப்படியாக விலைக்கு வாங்கப் பட்டு, தேசியக் கடன் மூலம் அவர்களது கரங்களுக்குள் முழுமையாகச் சிக்கிக் கொண்டிருக்கிறது. இதன் வாழ்வு சொத்தின் உரிமையாளர்களான முதலாளித்துவ வர்க்கத் தினர் இதற்கு வழங்கும் வாணிகக் கடனையே முற்றிலும் சார்ந்ததாக உள்ளது. இது பங்கு மார்க்கெட்டிலான அரசு நிதிகளின் ஏற்ற இறக்கங்களில் பிரதிபலிக்கிறது. முதலாளித் துவ வர்க்கம் இனிமேலால் ஒரு **படிநிலை ஆதீனமாக** இருக் காது அது ஒரு **வர்க்கமாக** இருக்கிறது எனும் வெறும் மெய் விவரம் காரணமாகவே முதலாளித்துவ வர்க்கம் தன்னை இனி மேலால் வட்டார அடிப்படையில் அன்றி தேசிய அளவில் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் திற்கு ஆளாகியுள்ளது, அதோடு தனது நிலையான சராசரி நலனுக்கு ஒரு பொது வடிவம் கொடுக்க வேண்டியுள்ளது. குடி வாழ் கூட்டில் [Gemeinwesen] இருந்து தனியார் சொத்து விடுவிக்கப்பட்டதன் மூலம் அரசு குடியுரிமை சமுதாயத்

* முழுவுரிமையுள்ள ரோமன் குடிமகனுக்குப் பயன்படுத் தப்படும் சட்டத்துக்கு ஏற்றதான உடைமையுரிமை.—**ப-ர்.**

திற்கு அருகேயும் புறத்தேயுமான ஒரு தனிப்பட்ட வாழ்க்கைக் கூருக மாறிவிட்டது. ஆனால் இது முதலாளித்துவ வர்க்கம் தனது அகத்துறை வெளித்துறை நோக்கங்களுக்காகவும், தமது சொத்து மற்றும் நலன்களின் பரஸ்பர உத்தரவாதத்திற்காகவும் தவிர்க்க முடியாத வகையில் மேற்கொள்ளும் ஸ்தாபன வடிவமே தவிர அதற்கு அதிகமாக வேறு எதுவும் இல்லை. எங்கு படிநிலை ஆதீனங்கள் இன்னும் வர்க்கங்களாக முழுமையாக வளர்ச்சியடையவில்லையோ, எங்கு மேலும் முன்னேறிய நாடுகளில் ஒழிக்கப்பட்ட படிநிலை ஆதீனங்கள் இன்னும் பங்கு வகிக்கும் நிலையில் உள்ளனவோ, எங்கு ஒரு கலவை நிலவுகிறதோ அந்த நாடுகளில் மட்டுமே இந்த நாட்களில் அரசின் சுயாதீனம் காணப்படுகிறது, அதாவது மக்கள் தொகையில் ஒரு பகுதி இன்னொரு பகுதி மீது மேலாதிக்கம் பெற முடியாத நாடுகள் இவை. ஜெர்மனியில் குறிப்பாயும் இந்த நிலை உள்ளது. நவீன அரசுக்கு மிகச் செவ்வையான உதாரணம் வட [70] அமெரிக்கா. நவீன பிரெஞ்சு, ஆங்கில, அமெரிக்க எழுத்தாளர்கள் அனைவரும் அரசு தனியார் சொத்துடைமைக்காகவே நிலவுகிறது எனும் கருத்தை வெளியிடுகின்றனர். எனவே இந்த உண்மை சாதாரண மனிதனின் உணர்வில் ஊடுருவியுள்ளது.

அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் தனிநபர்கள் தமது பொதுவான நலன்களை வலியுறுத்துவதற்குரிய ஒரு வடிவமாகவும், ஒரு குடியுரிமை சமுதாயத்தின் முழு சகாப்தமும் பொழிப்புச் செய்யப்பட்ட ஒன்ருகவும் இருப்பதன் தொடர்பாக அரசு எல்லாப் பொது நிலையங்களின் உருவாக்கத்திலும் இடைபடுகிறது, இந்த நிலையங்கள் ஓர் அரசியல் வடிவத்தைப் பெறுகின்றன. இதன் விளைவே, சட்டமானது சித்தத்தின் மீது, மெய்யான அடிப்படையில் இருந்து தனி விலகிய சித்தத்தின் மீது, கட்டற்ற சித்தத்தின் மீது நிறுவப்பட்டுள்ளது எனும் பிரமை ஏற்படுகிறது. இதே போன்று நீதி தன் வகைக்கு எதார்த்தச் சட்டங்களாக குறுக்கப்படுகிறது.

குடியுரிமைச் சட்டம், இயற்கையான குடிவாழ் கூட்டின் [Gemeinwesen] சீர்குலைவில் இருந்து, தனியார் சொத்துடைமையுடன் சேர்ந்து ஏககாலத்தில் வளர்ச்சியடைகிறது.

ரோமானியர் விஷயத்தில் அவர்களது உற்பத்தி முறை முழுவதும் மாற்றம் அடையாத காரணத்தால், தனியார் சொத்து மற்றும் குடியுரிமைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு மேற்பட்டதான தொழில்துறை மற்றும் வாணிகப் பின் விளைவுகள் ஏற்படவில்லை.* நவீன மக்களினங்களைப் பொருத்த வரை, எங்கு பிரபுத்துவ சமுதாயம் [Gemeinwesen] தொழில் துறையாலும் வாணிகத்தாலும் சிதைவுறுத்தப்பட்டதோ அங்கு தனியார் சொத்துடைமை மற்றும் குடியுரிமைச் சட்டத்துடன் கூட ஒரு புதிய கட்டம் தொடங்கியது, இது மேலும் வளர்ச்சியுறும் ஆற்றலுடையது. மத்திய காலத்தில் விரிவான கடல்வாணிகம் நடத்திய ஆக முதல் நகரமான அமால்ஃபி கடல் சட்டத்தையும் உருவாக்கியது.[35] முதலில் இத்தாலியிலும் பின்னர் இதர நாடுகளிலும் தொழிலும் வாணிகமும் தனியார் சொத்தை மேலும் அபிவிருத்தி செய்த உடனேயே, உயர் வளர்ச்சியடைந்த ரோமன் குடி யுரிமைச் சட்டம் மீண்டும் நேரடியாக ஏற்கப்பட்டு அதிகார பீடத்துக்கு உயர்த்தப்பட்டது. பின்னால் முதலாளித்துவ வர்க்கம் மிக அதிகளவிலான ஆட்சி அதிகாரத்தைப் பெற்றிருந்த போது, முதலாளித்துவ வர்க்கத்தை சாதகமாக்கி நிலவுடைமைப் பிரபுக் குலத்தை வீழ்த்தும் பொருட்டு அரச குடியினர் அதன் நலன்களை மேற்கொண்ட போது [71] எல்லா நாடுகளிலும், பிரான்சில் பதினாறும் நூற்றாண்டில், சட்டத்தின் மெய்யான வளர்ச்சி தொடங்கியது. இது இங்கிலாந்து தவிர்த்த எல்லா நாடுகளிலும் ரோமன் சட்டத் தொகுப்பேட்டின் அடிப்படையில் முன்னேறியது. இங்கிலாந்திலுங்கூட, குடியுரிமைச் சட்டத்தை (குறிப்பாயும் ஜங்கம சொத்துக்கள் விஷயத்தில்) மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ரோமன் சட்டம் கோட்பாடுகளைப் புகுத்த வேண்டி இருந்தது. (சட்டத்துக்கும் சமயத்தைப் போலவே ஆகச் சொற்பமான சுயேச்சையான வரலாறே உள்ளது என்பதை மறந்து விடக் கூடாது.)

---

* ஓரக்குறிப்பு எங்கெல்ஸ் எழுதியது: (''கடுவட்டி!)''.
—ப-ர்.

குடியுரிமைச் சட்டத்தில் நிலவும் சொத்துடைமை உறவுகள் பொதுச் சித்தத்தின் விளேவே என்று சாற்றப்படுகிறது. இந்த jus utendi et abutendi* தானே ஒரு புறத்தில் தனியார் சொத்துடைமை மக்கட் சமுதாயத்தில் [Gemeinwesen] இருந்து முற்றிலும் சுயேச்சையாகி விட்டது என்ற மெய் விவரத்தையும் மறுபுறத்தில் தனியார் சொத்துடைமை தானே தனியார் சித்தம் மற்றும் பொருளேத் தன்னிச்சையாகச் செயலாட்சி செய்வதை முற்றிலும் சார்ந்ததாக இருக்கிறது என்ற பிரமையையும் வலியுறுத்துகிறது. நடைமுறையில் இந்த abuti** தனியார் சொத்தின் உரிமையாளர் தமது சொத்தை பார்க்க விரும்பாவிட்டால், இதன் விளேவாக அவரது jus abutendi*** மற்றவர்கள் கரங்களுக்குப் போகும் பட்சத்தில், அவருக்கு மிகவும் திட்டவட்டமான பொருளாதார வரம்புகள் ஏற்படும். காரணம் உள்ளபடியே ஒரு பொருள். அவரது சித்தத்தை மட்டுமே வைத்துக் கருதிப் பார்க்கையில் ஒரு பொருளாக இருக்க முடியாது. ஆனல் அது ஒட்டுறவில், சட்டத்தில் இருந்து சுயேச்சையாகவே ஒரு பொருள் ஆகிறது, மெய்யான சொத்தாகிறது (இது தத்துவஞானிகள் ஒரு கருத்து**** என்று அழைக்கும் ஓர் உறவாகும்). சட்டத்தை வெறும் சித்தத்தின் அளவுக்குக் குறுக்கிவிடும் இந்தச் சட்டம் சார்ந்த பிரமை, சொத்துடைமை உறவுகளின் இனிமேற்பட்டதான வளர்ச்சியில், மனிதன் ஒரு பொருளே உண்மையில் வைத்திராமலே ஒரு பொருள்மீதான சட்ட உரிமையை வைத்திருக்கும் நிலேமைக்குத் தவிர்க்க

*—பயன்படுத்தும் மற்றும் நுகரும் உரிமை (அதோடு வீணுக்கும்), அதாவது தன் சித்தப்படி ஒரு பொருளேச் செயலாட்சி செய்யும் உரிமை.—**ப-ர்.**

**—நுகர்தல் அல்லது வீணுக்கல்.—**ப-ர்.**

***—வீணுக்குவதற்கான உரிமை.—**ப-ர்.**

**** ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: "**தத்துவஞானிகளின் உறவு-கருத்து.** அவர்களுக்கு 'மனிதன்' தன்னுடன் கொண்டுள்ள உறவு மட்டுமே தெரியவரும், எனவே அவர்களுக்கு எல்லா மெய்யான உறவுகளும் கருத்துகளாக மாறுகின்றன." —**ப-ர்.**

முடியாத வகையில் இட்டுச் செல்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு துண்டு நிலத்தில் இருந்து கிடைக்கும் வருவாய் போட்டியின் காரணமாக நஷ்டப்படுமானுல் பின்னர் இதன் உரிமையாளருக்கு jus utendi et abutendiயுடன் கூடவே அதன் மீதான சட்ட உரிமையும் உண்டு. ஆனுல் இதை வைத்துக் கொண்டு அவர் எதுவும் செய்ய முடியாது: இதற்கும் கூடுதலாகத் தன் நிலத்தில் பயிர்செய்யப் போதிய மூலதனமும் அவரிடம் இல்லாத பட்சம் ஒரு நில உரிமையாளர் என்ற முறையில் அவருக்கு எதுவும் உடைமையாக இல்லே. சட்ட நிபுணர்களின் இந்தப் பிரமை, அவர்களேப் பொருத்தவரை ஒவ்வொரு சட்டத் தொகுப்பும் போலவே தனிநபர்கள் தம் மத்தியில் உறவுகளே ஏற்படுத்திக் கொள்வதும் (உ. ம். கண்ட்ராக்டுகள்) முற்றிலும் எதிர்பாராத நிகழ்ச்சியே என்ற உண்மையையும் விளக்குகிறது. இந்த உறவுகளே சித்தப்படி மேற்கொள்ள (முடியும்), அல்லது முடியாது [72] என்று அவர்கள் ஏன் கருதுகிருர்கள் என்பதையும், அவற்றின் உள்ளடக்கம் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தரப்புக்களின் தனிப்பட்ட (சுய) சித்தத்தையே முற்றும் சார்ந்திருக்கிறது எனவும் விளக்குகிறது.

எப்போதெல்லாம் தொழில்துறை மற்றும் வாணிகத்தின் வளர்ச்சி மூலம் புது வடிவிலான ஒட்டுறவுகள் உருவாக்கப் படுகின்றனவோ (உ—ம். இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இத்தியாதி) அப்போது அவற்றை சொத்தை அடைவதற்கான முறைகளாக ஒப்புக்கொள்ளும் படி சட்டம் எப்போதும் கட்டாயப்படுத்தப்பட்டு வந்துள்ளது.*

### [12. சமுதாய உணர்வின் வடிவங்கள்]

விஞ்ஞானத்தின் மீது உழைப்புப் பிரிவினேயின் செல்வாக்கு.

---

* மேலும் கையெழுத்துப் பிரதியின் கடைசியில் அவரது மேற்பட்ட விளக்கத்திற்கு என உத்தேசிக்கப்பட்ட குறிப்புகளே மார்க்ஸ் தம் கைப்பட எழுதியுள்ளார்.—ப-ர்.

அரசு, உரிமை, ஒழுக்க நெறி இத்தியாதி சம்பந்தமாக அடக்கு முறையின் பாத்திரம்.

சட்டத்தில், முதலாளித்துவ வர்க்கம் அவர்கள் ஒரு வர்க்கம் என்ற முறையில் ஆட்சி புரியும் காரணத்தால் துல்லியமாயும் தமக்கு ஒரு பொது வெளித் தோற்றத்தைத் தர வேண்டும்.

இயற்கை விஞ்ஞானமும் வரலாறும்.

அரசியல், சட்டம், விஞ்ஞானம் இத்தியாதிகளின், கலை சமயம் இத்தியாதிகளின் வரலாறு இல்லை.*

---

சித்தாந்தவாதிகள் ஏன் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டுகிறார்கள்.

சமயவாதிகள், சட்டவாதிகள், அரசியல்வாதிகள்.

சட்டவாதிகள், அரசியல்வாதிகள் (பொதுவாக அரசுறவாளர்) ஒழுக்க நெறியாளர், சமயவாதிகள்.

ஒரு வர்க்கத்துக்குள்ளேயான இந்த சித்தாந்த உபபிரிவுக்கு: 1) உழைப்புப் பிரிவினை காரணமாக இந்த தொழில் சுயேச்சையான இருத்தலை மேற்கொள்கிறது. ஒவ்வொருவரும் தனது கைவினைத் தொழிலே மெய்யானது என்று கருதுகிறார்கள். அவர்களது கைவினைத் தொழிலின் மெய்யான இயல்பே அவர்கள் தமது கைவினைத் தொழிலுக்கும் எதார்த்தத்திற்கும் இடையிலான தொடர்பு சம்பந்தமான பிரமைகளுக்கு எளிதில் இரையாகும்படி செய்கிறது. அவர்களது உணர்வு சட்ட இயல் அரசியல் இத்தியாதிகளில், உறவுகள் கருத்துருக்களாகின்றன, அவை இந்த உறவுகளுக்கு அப்பால் செல்லாத காரணத்தால் இந்த உறவுகளின் கருத்துருக்கள் அவர்களது மனதில் திடமான கருத்துருக்களாகி விடுகின்றன. உதாரணமாக, நீதிபதி நடைமுறைச் சட்டத்தைப் பிர

* ஓரக்குறிப்பு மார்க்ஸ் எழுதியது: ''புராதன அரசிலும் நிலப்பிரபுத்துவம் மற்றும் வரம்பிலா மன்னராட்சியிலும் தோன்றும் ''மக்கட் சமுதாயத்துக்கு'', [dem "Gemeinwesen"] இந்த பந்தத்துக்கு, (கத்தோலிக்க) சமயக் கருத்தோட்டங்கள் குறிப்பாயும் சரி ஒப்பாக உள்ளன.''—ப-ர்.

யோகிக்கிறார் எனவே அவர் சட்டம் இயற்றலை மெய்யான செயலூக்கமுள்ள இயக்கு சக்தியாகக் கருதுகிறார்.

நீதி பற்றிய கருத்து. அரசு பற்றிய கருத்து. சாதாரண உணர்வில் இந்த விவகாரம் தலைகீழாகப் புரட்டப்பட்டிருக்கிறது.

---

சமயம் என்பது துவக்கமுதலே மெய்யான அவசியத்தில் இருந்து எழும் அறிவெல்லை கடந்ததான உணர்வாகும்.

இதை மேலும் ஜனரஞ்சகமான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

---

சட்டம், சமயம் இத்தியாதி சம்பந்தமான மரபு.

* * *

*[73]** தனிநபர்கள் தம் இடமிருந்தே எப்போதும் துவங்கியுள்ளனர், எப்போதும் துவங்குவார்கள். அவர்களது உறவுகள் அவர்களது மெய்யான வாழ்க்கையின் உறவுகளாகும். அவர்களது உறவுகள் அவர்களுக்கு எதிராக அவர்களை விஞ்சி ஒரு சுயேச்சையான இருத்தலை மேற்கொள்வது என்பது எப்படி நேருகிறது? அவர்களது சொந்த வாழ்க்கையின் சக்திகள் அவர்களை அடக்கி ஆட்கொள்வது எங்ஙனம்?

சுருங்கக் கூறின்: **உழைப்புப் பிரிவினை,** இதன் மட்டம் எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலுமான உற்பத்தி ஆற்றலின் வளர்ச்சியைச் சார்ந்ததாக இருக்கும்.

---

நிலச் சொத்து. சமுதாயச் சொத்து. நிலப்பிரபுத்துவ சொத்து. நவீன சொத்து.

---

* கையெழுத்துப் பிரதியின் இந்தக் கடைசிப் பக்கத்தில் எண் இடப்படவில்லை. இதில் வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தோட்டம் பற்றிய ஆசிரியரின் விளக்கவுரையின் ஆரம்பம் சம்பந்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இங்கு வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் அத்தியாயத்தின் பாகம் I ல் பிரிவு 3ல் விவரிக்கப்பட்டுள்ளது.—ப-ர்.

பிரபுத்துவபடிநிலை ஆதீனச் சொத்து. பட்டறைத் தொழில் சொத்து. தொழில் துறை மூலதனம்.

*1845 நவம்பர் மற்றும் 1846 ஆகஸ்டுக்கும் இடையே பிரஸ்ஸல்சில் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவராலும் எழுதப்பட்டது*

*ருஷ்யனில் முதன் முதலாக* **மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணங்கள்,** *நூல் 1, 1924ல் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதிப் படி அச்சிடப்பட்டது. ஜெர்மனில் இருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது*

பிரெடெரிக் எங்கெல்ஸ்

# கம்யூனிசத்தின் கோட்பாடுகள்[36]

**கேள்வி 1:** *கம்யூனிசம் என்றால் என்ன?*

**பதில்:** *கம்யூனிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்துக்கான சூழ்நிலைகள் பற்றிய போதனை.*

**கேள்வி 2:** *பாட்டாளி வர்க்கம் என்றால் என்ன?*

**பதில்:** *பாட்டாளி வர்க்கம் என்பது தனது பிழைப்புச் சாதனங்களை ஏதேனும் மூலதனத்திடம் இருந்து கிடைக்கும் லாபத்தில் இருந்து பெறாமல், முழுமையாகவும் தனது உழைப்பை விற்பனை செய்வது மூலம் மாத்திரமே பெறுகிற, சமுதாயத்தின் அத்தகைய வர்க்கமாகும். இதன் இன்பமும் துன்பமும், வாழ்வும் மரணமும் இதன் முழுமையான வாழ்நிலையும் உழைப்புக்கான கிராக்கி மீது சார்ந்திருக்கின்றன, எனவே, நல்ல வியாபாரக் காலம் மோசமான வியாபாரக் காலம் எனும் மாற்றங்களின் மீதும் கடிவாளமற்ற போட்டியின் விளைவான ஏற்ற இறக்கங்கள் மீதும் சார்ந்திருக்கின்றன.*

**கேள்வி 3:** *இவ்வாறாக, பாட்டாளிகள் எப்போதும் இருந்து வந்திருக்கிறார்கள் அல்லவா?*

**பதில்:** *இல்லை. ஏழ்மைப்பட்ட மக்களும் தொழிலாளி வர்க்கத்தினரும் எப்போதும் இருந்து வந்திருக்கின்றனர், தொழிலாளிவர்க்கத்தினர் மிகப்பெரும்பாலும் ஏழைகளாகவே இருந்து வந்துள்ளனர். ஆனால் இப்போது குறிப்பிடப்பட்ட நிலைமைகளின் கீழ் வாழ்ந்து வந்த அத்தகைய ஏழை மக்கள் அத்தகைய தொழிலாளர்கள், அதாவது பாட்டாளிகள்,*

எப்படி போட்டி எப்போதும் கட்டற்றதாயும் தடையற்ற தாயும் இருக்கவில்லையோ, அதே போன்று இந்த நிலையில் எப்போதும் வாழ்ந்திருக்கவில்லை.

**கேள்வி 4:** பாட்டாளிவர்க்கம் எப்படி உதித்தெழுந்தது?

**பதில்:** கடந்த நூற்றுண்டின் பிந்திய பாதியில் இங்கிலாந்தில் உருவாகி வந்ததும் அதன்பின்னர் உலகின் எல்லா நாகரிக நாடுகளிலும் திரும்பவும் நிகழ்ந்ததுமான தொழில் புரட்சியின் விளைவாகவே பாட்டாளி வர்க்கம் உதித்தெழுந்தது. இந்தத் தொழில் புரட்சி, நீராவி எஞ்சின் பல்வேறு நூற்பு யந்திரங்கள், விசைத்தறி மற்றும் மிகப்பலவான இதர தொழில் நுணுக்கக் கருவிகள் ஆகியவை கண்டுபிடிக்கப் பட்டதால் ஏற்பட்டதாகும். இந்த யந்திரங்கள் மிகவும் அதிகவிலையுள்ளனவாயும் அதன் விளைவாக பெரிய முதலாளிகளால் மட்டுமே வாங்கக் கூடியனவாயும் இருந்தபடியால் இவை இது காறும் நிலவி வந்த உற்பத்தி முறை முழுவதையும் மாற்றிவிட்டன. மேலும் இது வரையில் இருந்து வந்த தொழிலாளர்களை வெளியேற்றின. காரணம் தொழிலாளர்கள் தமது செவ்வையற்ற ராட்டைகள் மற்றும் கைத்தறிகளில் உற்பத்தி செய்யக் கூடியதை விடவும் அதிக மலிவான மேலும் சிறந்த பண்டங்களை யந்திரங்கள் உற்பத்தி செய்தன. இவ்வாருக, இந்த யந்திரங்கள் தொழில் துறையை முழுமையாயும் பெரிய முதலாளிகள் வசம் ஒப்படைத்துவிட்டன, மற்றும் தொழிலாளர்களின் அற்பமான சொத்தான (கருவிகள், கைத்தறிகள் இத்தியாதிகளை) பயனற்றவை ஆக்கிவிட்டன. இதனுல் விரைவில் முதலாளிகள் எல்லாவற்றையும் உடைமையாக்கிக் கொண்டனர். தொழிலாளர்களிடம் எதுவுமே இல்லை. இந்த வழியில் ஜவுளி உற்பத்தித் துறையில் ஆலை முறை புகுத்தப்பட்டது. யந்திரங்கள் மற்றும் ஆலை முறையைப் புகுத்துவதற்கு ஊக்குவிப்பு அளிக்கப் பட்ட உடன் ஆலை முறை தொழில் துறையின் இதர பிரிவுகளில் குறிப்பாயும் ஜவுளித் தொழில், புத்தக அச்சடிப்புத் தொழில், மண்பாண்டத் தொழில் மற்றும் உலோகச் சாமான்தொழில் ஆகியவற்றை அளவு கடந்து கைப்பற்றலாயிற்று. உழைப்பு மேலும் மேலும் பல தொழிலாளர்களின்

இடையில் பிரிவினை செய்யப்பட்டது, இதனால் முன்னாட்களில் ஒரு பொருள் முழுவதையும் செய்த தொழிலாளி இப்போது அந்தப் பொருளின் ஒரு பகுதியை மட்டுமே உற்பத்தி செய்தான். இது ஒவ்வொரு தொழிலாளியின் உழைப்பையும் மிகவும் எளிதான, இடையறாது திரும்பத்திரும்ப நிகழும் யந்திர முறைப் பணித்திட்டமாக மாற்றியது. இதை ஒரு யந்திரம் இதே அளவு நன்றாக மட்டும் அன்றி மிகப் பெருமளவு மேலும் சிறப்பாகவுங்கூடச் செய்ய முடியும். இந்த வழியில், நூற்பு மற்றும் நெசவுத் தொழில்களைப் போலவே தொழில் துறையின் இந்தப் பிரிவுகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நீராவி விசை, யந்திரங்கள் மற்றும் ஆலை முறையின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. இதன் மூலம் இவையாவும் பெரிய முதலாளிகள் கரங்களில் சிக்குண்டன. இங்கும் கூட தொழிலாளர்கள் அவர்களது சுதந்திரத்தின் கடைசி எச்சமிச்சங்களை இழக்க நேர்ந்தது. அப்பட்டமான பட்டறைத்தொழிலுடன் சேர்ந்து, அதே முறையில் கைவினைத் தொழில்களும் படிப்படியாக ஆலை முறையின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. காரணம் இங்கும் கூட பெரிய முதலாளிகள் பெரிய பணிமனைகளை நிறுவியது மூலம் சிறிய கைவினைச் சங்க ஆண்டான்களை மேலும் மேலும் வெளியே தள்ளி விட்டார்கள். இந்தப் பணிமனைகளால் செலவு பெருமளவு மிச்சமாயிற்று. அதோடு உழைப்பைத் தொழிலாளர்கள் இடையே வசதியாகப் பிரிவினை செய்யவும் முடிந்தது. இந்த வழியில், எல்லா நாகரிக நாடுகளிலும் உழைப்பின் கிட்டத்தட்ட எல்லாக் கிளைகளும் ஆலைமுறையின் கீழ் அமுல் செய்யப்படுவதும், இந்தக் கிளைகளில் கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் கைவினைத் தொழிலும் பட்டறைத்தொழிலும் பெருவீதத் தொழில் துறையால் வெளித்தள்ளப்பட்டுவிட்டதும் நிகழ்ந்துள்ளன.—இதன் விளைவாக முன்னாள் நடுத்தர வர்க்கத்தினர், குறிப்பாயும் சிறிய கைவினைத்தொழில் ஆண்டான்கள் பெருமளவு அழிவை நோக்கி விரட்டப் பட்டனர், தொழிலாளர்களின் முந்தைய நிலைமை முற்றாக மாறிவிட்டது, படிப்படியாக எல்லா வர்க்கங்களையும் தன்வயமாக்கிவரும் இரண்டு புதிய வர்க்கங்கள் தோன்றி விட்டன, அவையாவன:

I. பெரிய முதலாளிகளின் வர்க்கம். இவர்கள் எல்லா நாகரிக நாடுகளிலும் இப்போது ஏற்கெனவே கிட்டத்தட்ட முற்ற முழுமையாக எல்லா உழைப்புச் சாதனங்கள் மற்றும் இந்தப் பிழைப்புச் சாதனங்களின் உற்பத்திக்கு தேவைப் படும் மூலப் பொருட்கள் மற்றும் கருவிகள் (யந்திரங்கள், ஆலைகள் இத்தியாதி) ஆகியவற்றை உடைமையாக வைத் திருக்கிறார்கள். இந்த வர்க்கம் தான் முதலாளித்துவ வகைப் பட்ட வர்க்கம் அல்லது முதலாளிகள் (பூர்ஷுவாக்கள்).

II. அறவே எதையும் உடைமையாக வைத்திராத எனவே தேவையான பிழைப்புச் சாதனங்களைப் பரிவர்த்தனையாகப் பெறும் பொருட்டுத் தமது உழைப்பை முதலாளிகளுக்கு விற்பனை செய்யும் கட்டாயத்திற்கு உள்ளானவர்களின் வர்க் கம். இந்த வர்க்கம் பாட்டாளிகளின் வர்க்கம் அல்லது பாட் டாளி வர்க்கம் ஆகும்.

**கேள்வி 5:** முதலாளிகளுக்கு பாட்டாளிகளின் உழைப்பு விற்பனை செய்யப்படுவது எந்த நிலைமைகளின் கீழ் நடை பெறுகிறது?

**பதில்:** உழைப்பு என்பது இதர பண்டங்களைப் போலவே ஒரு பண்டமாகும், அதன் விலையும் இதர பண்டங்களின் விலை களைப் போலவே அதே விதிகளால் வரையறுக்கப்படுகிறது. பெருவீதத் தொழில்துறை அல்லது கட்டற்ற போட்டியின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு பண்டத்தின் விலை சராசரியாக அந்தப் பண்டத்தின் உற்பத்திச் செலவுக்கு எப்போதும் சமமான தாக இருக்கும். இதன் பொருள் இதுவே என்பதை நாம் பின்னர் காண்போம். எனவே உழைப்பின் விலையும் இதே போல உழைப்பின் உற்பத்திச் செலவுக்குச் சமமானதாக இருக்கும். பிந்திய செலவில், தொழிலாளியை இந்த உழைப் பைச் செய்யும் தகுதியுள்ளவனுக்கவும், தொழிலாளி வர்க்கம் மடிந்தழிவதைத் தடுக்கவும் தேவைப்படும் பிழைப்புச் சாதனங்களின் அந்தத் தொகை துல்லியமாயும் உட்படும். இவ்வாறாக, தொழிலாளி அந்த நோக்கத்துக்கு அவசியமாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாகத் தனது உழைப்புக்குப் பெற மாட்டான். உழைப்பின் விலை அல்லது கூலி ஆகக் குறைந்ததாக, வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் ஆகக்

குறைந்தபட்ச அளவினதாக இருக்கும். தொழில் நடப்பு சில சமயம் மோசமாயும் சில சமயம் நன்ருயும் இருப்பதால், ஆலைச்சொந்தக்காரர் தமது பண்டத்துக்குச் சில சமயம் அதிகமாயும் சில சமயம் குறைவாயும் பெறுவதைப் போலவே, தொழிலாளியும் சில சமயம் அதிகமாயும் சில சமயம் குறைவாயும் பெறுகிருர். ஆனுல் ஆலைச் சொந்தக் காரர் நல்ல காலமோ கெட்ட காலமோ எதுவாயினும் சரி, தனது பண்டத்துக்கு அதன் உற்பத்திச் செலவை விட அதிக மாகவோ அல்லது குறைவாகவோ அன்றி, சராசரியாக எப்படிப் பெறுகிருரோ அதே போல தொழிலாளியும் ஆகக் குறைந்த பட்சத்துக்கு அதிகமாகவோ அல்லது குறை வாகவோ இன்றி சராசரியாகப் பெறுகிருன். உழைப்பின் எல்லாப் பிரிவுகளும் பெருவீதத் தொழில் துறையால் மேற் கொள்ளப்படும் போது கூலி சம்பந்தமான இந்தப் பொரு ளாதார விதி மேலும் கண்டிப்பாகப் பிரயோகிக்கப்படும்.

**கேள்வி 6:** தொழில் புரட்சிக்கு முன்னுல் இருந்த தொழி லாளி வர்க்கங்கள் எவை?

**பதில்:** சமுதாய வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களைச் சார்ந்து நின்று, தொழிலாளி வர்க்கங்கள் வெவ்வேறு நிலை மைகளில் வாழ்ந்திருந்தன, உடைமை வர்க்கங்கள் ஆளும் வர்க்கங்களுடன் வெவ்வேருன உறவுகளில் நின்றிருந்தன. பண்டைக் காலங்களில் உழைக்கும் மக்கள் அவர்களது உடைமையாளர்களிடம் **அடிமைகளாக** இருந்தார்கள், பல பின்தங்கிய நாடுகளிலும், அமெரிக்காவின் தென் பகுதியிலும் கூட இன்னும் அத்தகைய நிலையில் இருப்பது போல மத்திய காலங்களில் அவர்கள் நிலவுடைமைப் பிரபுக் குலத்துக்குச் சொந்தமான **பண்ணை அடிமைகளாக** இருந்தார்கள், ஹங் கேரி, போலந்து மற்றும் ருஷ்யாவில் இன்றும் அத்தகைய நிலையில் இருப்பது போல. மத்திய காலங்களிலும் தொழில் புரட்சி வரையிலும் நகரங்களில் குட்டிமுதலாளித்துவ கைவினை ஆண்டான்களிடம் வேலை செய்து வந்த கைவினைப் பணியாளர்கள் இருந்தார்கள். பட்டறைத் தொழில் அபி விருத்தியுடன் கூடவே இப்போது கிட்டத்தட்ட பெரிய முத லாளிகளால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள பட்டறைத்

தொழில் தொழிலாளர்கள் படிப்படியாக தோற்றமளித்தார்கள்.

**கேள்வி 7:** பாட்டாளி அடிமை இடம் இருந்து எந்த வழியில் வேறுபடுகிறான்?

**பதில்:** அடிமை ஒரே அடியாக விற்பனை செய்யப்பட்டு விடுகிறான், பாட்டாளி தன்னை நாள் கணக்கில் மணிக் கணக்கில் விற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட அடிமையும் தனி ஒரு அடிமை எஜமானனின் சொத்தாவான், அவனது எஜமானின் நலனை ஒட்டி மட்டுமே, ஆயினும் அவனுக்கு ஒரு ஜீவனோபாயம், அது எவ்வளவு கடைகெட்டதாக இருந்த போதிலும் சரி, உத்தரவாதம் செய்யப் படுகிறது. ஒவ்வொரு தனிப்பாட்டாளியும் ஒரு விதத்தில் முதலாளித்துவ வர்க்கம் முழுவதன் உடைமை என்பதால் அவனது உழைப்பு யாருக்காவது தேவைப்படும் போது மட்டுமே விலைக்கு வாங்கப்படுகிறது, அவனுக்கு உத்தரவாதமான ஜீவனோபாயம் இல்லை. இந்த ஜீவனோபாயம் பாட்டாளி வர்க்கம் முழுவதற்குமாக வெறுமே உத்தரவாதம் செய்யப்படுகிறது. அடிமை போட்டிக்கு வெளியே நிற்கிறான் பாட்டாளி, அதனுள் நிற்கிறான், அதன் எல்லா ஏற்ற இறக்கங்களையும் உணர்கிறான். அடிமை குடியுரிமை சமுதாயத்தின் ஓர் உறுப்பினனாக அன்றி ஒரு பொருளாகவே கருதப்படுகிறான். பாட்டாளி ஒரு நபராக குடியுரிமை சமுதாயத்தின் உறுப்பினராகக் கருதப்படுகிறான். இவ்வாறாக ஓர் அடிமை ஒரு பாட்டாளியை விடவும் நல்ல வாழ்க்கையை நடத்தலாம். ஆனால் பாட்டாளி சமுதாய வளர்ச்சியின் ஓர் உயர்ந்த கட்டத்துக்கு உரியவன், தானே அடிமையை விடவும் ஓர் உயர்ந்த மட்டத்தில் நிற்கிறான். அடிமை, அடிமை உறவாக மட்டுமே இருக்கும் எல்லா தனிச் சொத்துடைமை உறவுகளையும் முறித்துக் கொள்வது மூலம் தன்னை விடுவித்துக் கொள்கிறான், அதன் வழி தானே ஒரு பாட்டாளி ஆகிறான். பாட்டாளியோ பொதுவில் தனியார் சொத்துடைமையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே தன்னை விடுவித்துக் கொள்ள முடியும்.

கேள்வி 8: பாட்டாளி பண்ணை அடிமையிடம் இருந்து எந்த வழியில் வேறுபடுகிறான்?

பதில்: பண்ணை அடிமை ஓர் உற்பத்திக் கருவியான துண்டு நிலத்தை உடைமையாய்க் கொண்டு அதைப் பயன் படுத்துகிறான். இதற்கு ஈடாக அவன் தனது விளைச்சலில் ஒரு பகுதியை ஒப்படைக்கிறான், அல்லது வேலை செய்கிறான். பாட்டாளி இன்னொருவனுக்குச் சொந்தமான உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்தி வேலை செய்கிறான் பதிலாக தனது விளைவில் ஒரு பகுதியை பெறுகிறான், பண்ணை அடிமை கொடுக்கிறான், பாட்டாளி கொடுக்கப் பெறுகிறான். பண்ணை அடிமைக்கு உத்தரவாதமான ஜீவனோபாயம் உள்ளது, பாட்டாளிக்கு இல்லை. பண்ணை அடிமை போட்டிக்கு வெளியே நிற்கிறான், பாட்டாளி போட்டியின் உள்ளே நிற்கிறான். பண்ணை அடிமை ஒன்று நகரத்துக்குத் தப்பி ஓடி அங்கே ஒரு கைவினைப் பணியாளனாக மாறுவது மூலமோ அல்லது தனது நிலப்பிரபுவுக்கு உழைப்பையும் விளைபொருட் களையும் கொடுப்பதற்குப் பதில் பணத்தைக் கொடுத்து அதன் மூலம் கட்டற்ற குத்தகைதாரனாகியோ தன்னை விடு வித்துக் கொள்கிறான். அல்லது தனது நிலப்பிரபுவை வெளியே விரட்டி தானே ஓர் உடைமையாளனாகி, சுருங்கக் கூறின், ஏதேனும் ஒரு வழியில் உடைமை வர்க்கத்தின் மற்றும் போட்டியின் அணிகளில் சேருவது மூலம் தன்னை விடுவித்துக் கொள்கிறான். பாட்டாளி போட்டி, தனியார் சொத்துடைமை மற்றும் எல்லா வர்க்க வேற்றுமைகளையும் ஒழிப்பது மூலம் தன்னைத்தானே விடுவித்துக் கொள்கிறான்.

கேள்வி 9: பாட்டாளி கைவினைப் பணியாளனிடமிருந்து எந்த வழியில் வேறுபடுகிறான்?*

கேள்வி 10: பாட்டாளி ஒரு பட்டறைத் தொழிலாளி யிடமிருந்து எந்த வழியில் வேறுபடுகிறார்?

பதில்: பதினாறாவது நூற்றாண்டு முதல் பதினெட்டாவது நூற்றாண்டு வரையில் பட்டறைத் தொழில் தொழிலாளி

* கையெழுத்துப் பிரதியில் பதிலுக்காக எங்கெல்ஸ் இடம் விட்டிருந்தார்.—ப-ர்.

கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் தனது உற்பத்திக் கருவியை, அவனது குடும்பத்தின் நூற்புராட்டினம், தனது ஓய்வு நேரத்தில் பயிர் செய்த சிறுதுண்டு நிலம் ஆகியவற்றை உடைமையாக வைத்திருந்தான். பாட்டாளியிடம் இவை எதுவுமே இல்லை. பட்டறைத் தொழில் தொழிலாளி கிட்டத்தட்ட முழுமையாயும் நாட்டுப் புறத்திலேயே, தனது நிலப்பிரபு அல்லது பணியாண்மையருடன் ஏழத்தாழ தந்தைவழி உறவுகளின் கீழ் வாழ்கிறன். பாட்டாளி பெரும்பாலும் பெரிய நகரங்களில் வாழ்கிறன். அவனது முதலாளியுடனை அவனது உறவு முற்றிலும் பண உறவே. பட்டறைத் தொழில் தொழிலாளி அவனது தந்தை வழிப்பாணி நிலைமைகளில் இருந்து பெருவீதத் தொழில்துறையால் வலிந்து பறிக்கப்பட்டு, தான் வைத்திருந்த சொத்தை இழக்கிறன். அதன் வழி தானே ஒரு பாட்டாளியாக மாறுகிறன்.

கேள்வி 11: தொழில் புரட்சியின் மற்றும் சமுதாயம் முதலாளித்துவ வர்க்கத்தினர் பாட்டாளிகள் என்று பிரிந்ததன் நேரடி விளைவுகள் என்ன?

பதில்: முதற்கண் யந்திர உழைப்புக் காரணமாக தொழிற்துறை உற்பத்திப் பொருட்களின் விலைகள் இடைவிடாது குறைந்தன. உடல் உழைப்பை ஆதாரமாக்கிய பட்டறைத் தொழில் மற்றும் தொழில் துறையின் பழைய முறை உலகின் எல்லா நாடுகளிலும் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டது. இது வரையில் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் இருந்து கிட்டத்தட்டத் துண்டிக்கப்பட்டிருந்ததும், அதன் தொழில்களில் இது வரையில் பட்டறைத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டிருந்ததுமான எல்லா அரை—அநாகரிக நாடுகளும் இவ்வாறு அவற்றின் தனிமை நிலையில் இருந்து வலுவந்தமாக வெளியே இழுக்கப்பட்டன. அவை ஆங்கிலேயர்களின் மலிவான பண்டங்களை விலைக்கு வாங்கித் தமது சொந்த பட்டறைத் தொழில் தொழிலாளர் அழிவுற இடமளித்தன. இவ்வாருக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் தேக்கமுற்று நின்ற நாடுகள், உதாரணமாக இந்தியா, முடிமுதல் அடித்தளம் வரைப் புரட்சிகரமாற்றமடைந்தன, இப்போது சீனவுங்கூட ஒரு புரட்சியை நோக்கி நடைபோடு

கிறது. இவ்வாறாக, இன்று இங்கிலாந்தில் புதுப்புனைவு செய்யப்பட்டதான ஒரு யந்திரம் ஓராண்டுக்குள் சீனாவில் இருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் அன்றாட உணவைச் சூறையாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வழியில் பெருவீதத் தொழில்துறை இந்தப் புவியின் அனைத்து மக்களினங்களையும் ஒருவரோடு ஒருவர் உறவு பூணுமாறு செய்துள்ளது, சிறிய வட்டார மார்க்கெட்டுகள் அனைத்தையும் ஓர் உலக மார்க்கெட்டாக மொத்தமாகத் திரட்டியுள்ளது. எல்லா இடங்களிலும் நாகரிகத்துக்கும் முன்னேற்றத்துக்குமான பாதை அமைத்துள்ளது. நாகரிகம் படைத்த நாடுகளில் நிகழும் சகலமும் இதர நாடுகள் அனைத்திலும் அவற்றின் பிரதிபலிப்புகளைக் காணும் விதத்தில் காரியங்கள் ஒரு கட்டத்தை எட்டிவிட்டன. இவ்வாறாக, இங்கிலாந்திலோ பிரான்சிலோ உள்ள தொழிலாளர்கள் தம்மை இப்போது விடுவித்துக் கொண்டார்களானால் இது எல்லா இதர நாடுகளிலும் புரட்சிகளை ஊக்குவிக்க வேண்டும் . இவை விரைவிலோ பின்னரோ அங்கேயும் கூட தொழிலாளர் விமோசனத்துக்கு நிச்சயம் இட்டுச் செல்லும்.

இரண்டாவதாக, எங்கெல்லாம் பெருவீதத் தொழில்துறை பட்டறைத் தொழிலை பதிலீடு செய்ததோ அங்கு தொழில் புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தையும், அதன் செல்வத்தையும் அதன் அதிகாரத்தையும் ஆக உயர்ந்த அளவுக்கு வளர்த்து அதை நாட்டிலேயே முதலாவது வர்க்கமாக மாற்றியது. இதன் விளைவு, எங்கெல்லாம் இது நிகழ்ந்ததோ அங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் அரசியல் அதிகாரத்தைத் தன் கரங்களில் எடுத்துக் கொண்டு இதுகாறும் இருந்துவந்த ஆளும் வர்க்கங்களை—பிரபுக்குலம், கைவினைச் சங்க நகரத்தார் மற்றும் இவை இரண்டையும் பிரதிநிதித்துவப் படுத்திய வரம்பிலா முடியாட்சி—வெளியேற்றியது. நிரந்தர உடைமைகளை ஒழித்தும், நிலச் சொத்துக்களின் விற்பனையைத் தடை செய்தும் பிரபுக்குலத்தின் முன்னுரிமைகளை தடை செய்தும் முதலாளித்துவ வர்க்கம் உயர் குடியினர், பிரபுக்குலத்தினரின் ஆட்சி அதிகாரத்தைப் பூண்டோடு அழித்து ஒழித்தது. கைவினைச் சங்கங்கள் அனைத்

தையும், கைவினைஞர் தனி உரிமைகளையும் ஒழித்தது மூலம் முதலாளித்துவ வர்க்கம் கைவினைச் சங்க நகரத்தார் அதிகாரத்தை அழித்தது. இவை இரண்டையும் கட்டற்ற போட்டி மூலம் பதிலீடு செய்தது. அதாவது ஒவ்வொருவரும் தொழில் துறையின் எந்தப் பிரிவில் வேண்டுமாயினும் ஈடுபடுவதற்கு உரிமை தருவதும், தேவையான மூலதனம் இல்லை, என்பதொழிய வேறு எதுவும் அவரைத் தடங்கல் செய்யாததுமான ஒரு சமுதாய அமைப்பு முறை மூலம் பதிலீடு செய்தது. எனவே, கட்டற்ற போட்டி கொண்டு வரப்பட்டதில், இனிமேற்பட்டு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அவர்களது மூலதனம் சமமற்றது என்ற அளவுக்கு மட்டுமே சமமற்றவர்கள் எனவும், மூலதனமே நிர்ணயகரமான சக்தி எனவும், எனவே முதலாளிகள், முதலாளித்துவ வர்க்கத்தினர் சமுதாயத்தில் முதலாவது வர்க்கம் ஆகிவிட்டார்கள் எனவும் சாற்றும் ஒரு பகிரங்கப் பிரகடனம் இதில் உள்ளடங்கும். ஆனால் பெருவீதத் தொழில் துறையின் துவக்கத்தில் கட்டற்ற போட்டி அவசியம். ஏனெனில் பெருவீதத் தொழில்துறை வளர்ச்சியடைவதற்குரிய சமுதாய நிலைவரம் இது மட்டுமே. முதலாளித்துவ வர்க்கம் இவ்வாறு பிரபுக்குலம் மற்றும் கைவினைச்சங்க நகரத்தாரின் சமுதாய அதிகாரத்தைப் பூண்டோடு அழித்த உடனேயே அது அவர்களது அரசியல் அதிகாரத்தையும் பூண்டோடு அழித்தது. சமுதாயத்தில் முதல் வர்க்கம் ஆகிவிட்ட முதலாளித்துவ வர்க்கம் அரசியல் துறையிலும் கூடத் தன்னைத் தானே முதல் வர்க்கமாகப் பிரகடனம் செய்து கொண்டது. பிரதிநிதித்துவ அமைப்பு முறையை நிறுவியதன் மூலம் அது இதைச் செய்தது. இந்த முறை சட்டத்தின் முன் முதலாளித்துவ சமத்துவம் மற்றும் கட்டற்ற போட்டிக்குச் சட்டரீதியான அங்கீகாரம் ஆகியவற்றைச் சார்ந்து நிற்கிறது. இது ஐரோப்பிய நாடுகளில் அரசியலமைப்புக்கிசைந்த முடியாட்சி வடிவில் புகுத்தப்பட்டது. இந்த அரசியலமைப்புக்கிசைந்த முடியாட்சிகளில் ஒரளவு மூலதனம் வைத்திருப்பவர்கள் மட்டுமே, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தினர் மட்டுமே தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர்கள்; இந்த முதலாளித்

துவத் தேர்வாளர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள், இந்த முதலாளித்துவப் பிரதிநிதிகள் தேவைப் பொருள்களை மறுதலிக்கும் உரிமை வாயிலாக ஒரு முதலாளித்துவ வகைப்பட்ட அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

மூன்றாவதாக, தொழில் புரட்சி எந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கத்தைக் கட்டி உருவாக்கியதோ அதே அளவுக்குப் பாட்டாளி வர்க்கத்தையும் கட்டி உருவாக்கியது. எந்த உறவுகளின் வாயிலாக முதலாளித்துவ வர்க்கத்தினர் செல்வத்தை அடைந்தார்களோ அதே உறவின் மூலம் பாட்டாளிகள் தமது தொகை அதிகரிக்கப் பெற்றார்கள். பாட்டாளிகளை மூலதனம் மூலம் மட்டுமே வேலைக்கு அமர்த்த முடியும் என்பதாலும், மூலதனத்தை அது உழைப்பை வேலைக்கு அமர்த்தும் போது மட்டுமே அதிகரிக்க முடியும் என்பதாலும், பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி மூலதனத்தின் வளர்ச்சியுடன் சரிவேகத்தில் தொடர்கிறது. ஏக காலத்தில் இது, தொழில்கள் மிகவும் லாபகரமான முறையில் நடத்தப்படக் கூடியதான பெரிய நகரங்களில் முதலாளித்துவ வர்க்கத்தினரையும் பாட்டாளிகளையும் ஒன்று சேர்க்கிறது. இவ்வாறு ஒரு இடத்தில் மிகப்பெரும் மக்கள் திரளினரை நெருக்கமாக ஒன்றிணைப்பதால் பாட்டாளிகள் தமது சக்தி குறித்து உணர்வு பெறுகின்றனர். இதற்கும் மேல் இது அதிகமாக வளர்ச்சியுறுந்தோறும், அதிகமான யந்திரங்கள், புதுப்புனைவு செய்யப்படுகின்றன, இவை உடலுழைப்பை புறம்தள்ளுகின்றன. நாம் ஏற்கெனவே கூறியுள்ளபடி பெருவீதத் தொழில்துறை எந்தளவுக்கு அதிகமாக கூலிகளைக் குறைந்தபட்சத்துக்குத் தாழ்த்துகிறதோ அந்தளவுக்கு பாட்டாளிகளின் நிலைமைகள் மேலும் மேலும் சகிக்க முடியாதனவாகின்றன. இவ்வாறாக, பாட்டாளிகளின் பெருகிவரும் அதிருப்தி ஒருபுறமும், அதன் அதிகரித்துவரும் வல்லமை மறுபுறமுமாக, தொழில் புரட்சியானது பாட்டாளிகள் மூலமான சமுதாயப் புரட்சிக்கு வழி சமைக்கிறது.

**கேள்வி 12:** தொழில் புரட்சியின் இதற்கும் மேலான விளைவுகள் என்ன?

**பதில்:** நீராவி எஞ்சின் மற்றும் இதர யந்திரங்களைக் கொண்டு பெருவீதத் தொழில்துறை, குறுகிய காலப்

பகுதிக்குள், சொற்பச் செலவில், தொழில்துறை உற்பத்தியை வரம்பு கடந்த அளவுக்கு அதிகரிப்பதை சாத்தியமாக்கும் சாதனங்களை உருவாக்கியது. பெருவீதத் தொழில்துறையின் முக்கியமான விளைவான கட்டற்ற போட்டி, உற்பத்தி வசதி காரணமாக மிகவும் முனைப்பான தன்மையை விரைவில் மேற்கொண்டது. பெருந்தொகையான முதலாளிகள் தொழில்துறையைப் பயன்படுத்தலாயினர், வெகு விரைவில் பயன்படுத்தக் கூடியதை விடவும் அதிகமான பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இதன் விளைவு, தொழிற்சாலைகளின் செய்பொருட்களை விற்பனை செய்ய முடியவில்லை, மற்றும் வாணிக நெருக்கடி எனப்படுவது ஏற்பட்டது. ஆலைகள் வேலை செய்யவில்லை, ஆலை உரிமையாளர்கள் திவாலாயினர், தொழிலாளர்கள் சோற்றுக்கு வழி இன்றித் திண்டாடினர். படுமோசமான வறுமை நிலவியது. சில காலத்துக்குப் பின் உபரியான பொருட்கள் விற்கப்பட்டன, ஆலைகள் மீண்டும் இயங்கத் தொடங்கின, கூலிகள் உயர்ந்தன, படிப்படியாக வியாபாரம் முன் என்றையும் விடச் சுறுசுறுப்பாக இருந்தது. ஆனால் மீண்டும் சிறிது காலத்துக்குள் அளவுக்கு மேல் மிக அதிகமான பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டன, இன்னொரு நெருக்கடி ஏற்பட்டது, முந்தியதைப் போல அதே போக்கில் சென்றது. இவ்வாறு, இந்த நூற்றுண்டின் ஆரம்பம் முதலே தொழில்துறையின் நிலைவரம் சுபிட்ச காலப்பகுதிகள் மற்றும் நெருக்கடிக் காலப்பகுதிகள் என்று இடைவிடாமல் ஏற்றமும் இறக்கமுமாக இருந்தது. மேலும் இதே போன்ற நெருக்கடி ஐந்து முதல் ஏழாண்டுகளுக்கு இடையில் கிட்டத்தட்ட முறையாக மீண்டும் மீண்டும் நிகழ்ந்தபடி இருந்தன. இவை தமது பின் விளைவாக தொழிலாளர்களுக்கு மேலும் சகிக்க முடியாத துயரத்தையும், ஒரு பொதுவான புரட்சிகரப் பொங்குணர்வையும் நிலவில் இருக்கும் அமைப்பு முழுவதற்கும் மிகப் பெரிய அபாயத்தையும் கொண்டு வந்தன.

கேள்வி 13: முறையாக மீண்டும் மீண்டும் நிகழும் வாணிக நெருக்கடிகளில் இருந்து பெறக் கூடிய முடிவுகள் எவை?

பதில்: முதலாவதாக, பெருவீதத் தொழில்துறை தனது வளர்ச்சியின் துவக்கக் கட்டங்களில் தானே கட்டற்ற போட்டியை உருவாக்கிய போதிலும், அது இப்போது கட்டற்ற போட்டியை விஞ்சிக் கடந்து விட்டது. இந்தப் போட்டியும் பொதுவாக தொழில்துறை உற்பத்தியை தனி நபர்கள் நடத்தி வருவதும் பெருவீதத் தொழில்துறை மீது ஒரு தளையாகிவிட்டது. அது அதை கட்டாயம் உடைக்கும், உடைக்க வேண்டும். இந்தப் பெருவீதத் தொழில்துறை இன்றைய அடிப்படையில் நடத்தப்படும் காலம் வரை, ஒவ்வொரு ஏழாண்டுகளிலும் திரும்பத் திரும்ப நிகழும் பொதுக் குழப்பத்தின் வாயிலாக மட்டுமே நீடித்து வாழ முடியும். இது ஒவ்வொரு தடவையும் நாகரிகம் முழுவதையும் அச்சுறுத்துகிறது. இது பாட்டாளிகளை ஒரு துன்பக் கேணியில் தள்ளுவது மட்டுமன்றி, அதே போன்று பெருமளவிலான முதலாளித்துவ வர்க்கத்தினருக்கும் நாசம் விளைக்கிறது. எனவே ஒன்று பெருவீதத் தொழில்துறை கைவிடப்பட வேண்டும், இது முற்றிலும் அசாத்தியம், அல்லது ஒருவருக்கு எதிராக ஒருவர் போட்டியிடும் தனிப்பட்ட ஆலை உரிமையாளர்களால் அன்றி சமுதாயம் முழுவதாலும் ஒரு நிர்ணயமான திட்டத்திற்கு ஏற்ற முறையிலும், எல்லோருடைய தேவைகளுக்கும் ஏற்பவும், தொழில்துறை உற்பத்தி நடத்தப்படுவதற்குரிய முற்றிலும் புதிய ஒரு சமுதாய அமைப்பு பரம அவசியமானதாகும்.

இரண்டாவதாக, பெருவீதத் தொழில்துறையும் அதனுல் சாத்தியமாக்கப்பட்டதான உற்பத்தியின் அளப்பரிய விரிவாக்கமும், வாழ்க்கையின் சகல தேவைகளையும் மிகப் பெரும் அளவில் உற்பத்தி செய்யக் கூடியதான ஒரு சமுதாய அமைப்பைப் புதிதாகக் கொண்டுவர முடியும். இதனுல் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தனது சகல சக்திகளையும் ஆற்றல்களையும் ஆகமுழுமையான சுதந்திரத்துடன் வளர்த்துப் பயன்படுத்த முடியும். இவ்வாறு இன்றைய சமுதாயத்தில் சகல துன்பதுயரங்களையும் எல்லா வாணிக நெருக்கடிகளையும் விளைவிக்கும்பெருவீதத் தொழில் துறையின் துல்லியமான அதே தன்மை, வேறுபட்டதான

ஒரு சமுதாய அமைப்பின் கீழ் கண்டிப்பாயும் அந்தத்துன் பதுயரங்களையும் இந்தப் பேரிடரான ஏற்ற இறக்கங்களை யும் அழித்தொழிக்கும்.

இவ்வாறு தெட்டத்தெளிவாக நிரூபிக்கப்படுவதாவது:

1. இப்போது முதல் இந்தத் தீமைகள் அனைத்தையும், இன்று நிலவும் நிலைமைகளுக்கு இனிமேலால் சரி ஒப்பான தாக இராத சமுதாய அமைப்பின் மீது முற்றமுழுமையா யும் சாட்டிக் கூறலாம் என்பதும்;

2. ஒரு புதிய சமுதாய அமைப்பை நிறுவுவது மூலம் இந்தத் தீமைகளை முழுமையாக ஒழிப்பதற்குரிய சாதனங் கள் தயாராக கிடைக்கவிருக்கின்றன என்பதுமாகும்.

**கேள்வி 14:** இது எந்த வகைப்பட்ட புதிய சமுதாய அமைப்பாக இருக்க வேண்டும்?

**பதில்:** முதற்கண், இந்தப் புதிய சமுதாய அமைப்பு, தம் இடையே போட்டியிட்டுக் கொண்டு இருக்கும் இணைப் பற்ற தனி நபர்கள் கரங்களில் இருந்து, பொதுவாக தொழில்துறை நிர்வாகத்தையும் உற்பத்தியின் எல்லாப் பிரிவுகளையும் எடுத்துக்கொள்ளும், பதிலாக பொருளுற்பத்தி யின் இந்தப் பிரிவுகள் அனைத்தையும், சமுதாயம் முழுவதன் சார்பாக, அதாவது ஒரு சமுதாயத் திட்டத்துக்கு ஏற்ப வும், சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையிலும் எடுத்து நிர்வாகம் செய்யும். இவ்வாறு அது போட்டியை ஒழித்து அதனிடத்தில் இணைப்பை நாட்டும். தனி நபர்கள் தொழில்களை நிர்வகிப்பது தவிர்க்க முடியாத வகையில் தனியார் உடைமைக்கு இட்டுச் செல்வதாலும், போட்டி என்பது தனிப்பட்ட உரிமையாளர்கள் தொழிலை நிர்வகிக்கும் தன்மையே தவிர வேறு எதுவுமல்ல என்பதா லும், தனியார் உடைமையைத் தனி நபர்கள் தொழில்களை நிர்வாகம் செய்வதில் இருந்தும் போட்டியில் இருந்தும் பிரிக்க முடியாது. எனவே தனியார் உடைமையும் ஒழிக்கப் பட வேண்டும். இதற்குப் பதிலாக எல்லா உற்பத்திக் கருவி களும் பொதுவாகப் பயன்படுத்தப்படும், பொது உடன்பாடு மூலம் எல்லாப் பொருட்களும் வினியோகிக்கப்படும் அல்லது பொருட்களின் சமுதாய உரிமை நிலை நாட்டப்படும். தனி

யார் உடைமை ஒழிப்பு என்பது, தொழில்துறை வளர்ச்சியில் இருந்து தவிர்க்க முடியாத வகையில் தொடரும், சமுதாய அமைப்பு முழுவதன் உருமாற்றத்தின் மிகவும் மணிச்சுருக்க மான மற்றும் மிகவும் தனிக்குறிப்பான மொத்தமான வெளி யீடாகும். எனவே இதுவே கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் பிரதான கோரிக்கையாக இருக்கிறது என்பது முற்றிலும் சரியே.

**கேள்வி 15:** இதன் பின்விளைவாக, தனியார் சொத்து டைமை ஒழிப்பு முன்நாட்களில் சாத்தியமற்றதாக இருந் ததா?

**பதில்:** ஆம். சமுதாய அமைப்பிலான ஒவ்வொரு மாற்ற மும், சொத்துடைமை உறவுகளிலான ஒவ்வொரு புரட்சி யும், புதிய உற்பத்தி சக்திகள் படைத்துருவாக்கப் படுவதன் முக்கியமான விளைவேயாகும். இந்த உற்பத்தி சக்திகள் இனி என்றுமே பழைய சொத்துடைமை உறவுகளுடன் சரி ஒப்பாக இரா. தனியார் சொத்துடைமையே இந்த வழியில் தான் உதித்தது. ஏனெனில் தனியார் சொத்துடைமை என்றென் றும் நிலவவில்லை. மாறாக, மத்திய காலங்களின் இறுதியில் பட்டறைத் தொழில் வடிவில் ஒரு புதிய உற்பத்தி முறை புகுத்தப்பட்ட போது அன்று நிலவிவந்த பிரபுத்துவ மற்றும் கைவினைச் சங்கச் சொத்துடைமையுடன் ஒவ்வாததாயும், பழைய சொத்துடைமை உறவுகளை விஞ்சிக் கடந்து விட்டது மான பட்டறைத் தொழில், ஒரு புது வடிவிலான உடை மையை—தனியார் உடைமையைப் படைத்துருவாக்கியது. பட்டறைத் தொழில் காலப்பகுதியிலும், பெருவீதத் தொழில்துறை வளர்ச்சியின் முதல் கட்டத்தின் போதும் தனியார் உரிமையுடைமை தவிர்த்த வேறு சொத்துடைமை வடிவம் எதுவும் சாத்தியமல்ல. தனியார் உடைமை மீது நிறுவப்பட்டதல்லாத வேறு சமுதாய அமைப்பு முறை எது வும் சாத்தியமல்ல. எந்தக் காலம் வரை எல்லோருக்கும் வழங்குவதற்காக மட்டுமன்றி, சமுதாய மூலதனத்தின் அதி கரிப்புக்காகவும், உற்பத்தி சக்திகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருட்களை உபரியாக வழங்குவதற்கு வகை செய்யும் முறையில், போதுமான அளவுக்கு உற்பத்தி செய்ய

முடியாது போகிறதோ, அந்தத் காலம் வரையில் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகள் மீது ஆட்சி செலுத்தும் ஓர் ஆதிக்க வர்க்கமும், ஓர் ஏழ்மைப்பட்ட ஒடுக்கப்பட்ட வர்க்கமும் எப்போதும் இருந்தே தீர வேண்டும். இந்த வர்க்கங்கள் எந்த வழியில் அமைகின்றன என்பது உற்பத்தி வளர்ச்சியின் கட்டத்தைச் சார்ந்ததாக இருக்கும். விவசாயத்தின் மீது சார்ந்து நின்ற மத்திய காலங்களில் நாம் நிலப் பிரபுவையும் பண்ணை அடிமையையும் காண்கிறோம்; மத்திய காலங்களின் பிந்திய பகுதி நமக்கு கைவினைச் சங்க ஆண்டானையும், அவனது பணி பயில்வோனையும், நாள் தொழிலாளர்களையும் வழங்குகிறது. பதினேழாம் நூற்றாண்டில் பட்டறை அதிபர்களும் பட்டறைத் தொழிலாளர்களும் உள்ளனர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரிய தொழிற்சாலை உடைமையாளரும் பாட்டாளியும் வாழ்கின்றனர். எல்லோருக்கும் போதுமான அளவு உற்பத்தி செய்யவும், இந்த உற்பத்தி சாதனங்களுக்கு தனியார் சொத்துடைமையை ஒரு தளையாகவும் ஒரு தடை வேலியாகவும் செய்ய வல்லதுமான உற்பத்தி சக்திகள் போதிய அளவு பரவலாக இன்னும் வளர்ச்சி அடையவில்லை என்பது கண்கூடு. ஆயினும் இப்போது, பெருவீதத் தொழில்துறையின் வளர்ச்சியானது, முதலாவதாக, இது காறும் கேட்டிராத அளவுக்கு மூலதனத்தையும் உற்பத்தி சக்திகளையும் படைத்துருவாக்கியுள்ளதோடு, இந்த உற்பத்தி சக்திகளை மிகக்குறுகிய கால அளவிற்குள் எல்லையின்றி பல்கிப் பெருகவைப்பதற்கான சாதனங்களும் இருக்கும் இப்போது, இரண்டாவதாக, இந்த உற்பத்தி சக்திகள் ஒரு சில முதலாளிகளிடம் ஒருமுனையில் குவிந்திருக்க அதே போதில் மாபெரும் மக்கள் திரளினர் முன் என்றையும் விட அதிகமாகப் பாட்டாளிகளின் அணிகளுக்குத் தள்ளப்பட்டு, முதலாளி வர்க்கத்தின் செல்வம் பன்மடங்காய்ப் பெருகி வரும் அதே அளவுக்கு அவர்களது நிலைமை மேலும் அதிகத் துன்பகரமானதாய் தாங்க முடியாததாய் மாறிவரும் இப்போது; மூன்றாவதாக, இந்த வலிமை மிக்கதும் எளிதில் பன்மடங்காகப் பெருகக் கூடியதுமான உற்பத்தி சக்திகள் தனியார் சொத்துடைமையையும் முதலாளித்துவ வர்க்கத்

தையும் மிகப் பெருமளவு விஞ்சிக் கடந்து, இதன் விளைவாக அவை சமுதாய அமைப்பில் வன்மையான அமளி அடிக்கடி ஏற்படுத்திவரும் இப்போது—இப்போது மட்டுமே தனியார் சொத்துடைமையை ஒழிப்பது என்பது சாத்தியம் மட்டுமல்ல, மாறுகக் கண்டிப்பாயும் இன்றியமையாததாகி விட்டது.

**கேள்வி 16:** தனியார் சொத்துடைமை ஒழிப்பை சமாதானமான முறைகளில் ஏற்பாடு செய்ய முடியுமா?

**பதில்:** இது நடைபெறக் கூடும் எனில் அது விரும்பத்தக்க காரியம். இதைக் கம்யூனிஸ்டுகள் நிச்சயமாயும் எதிர்க்க மாட்டார்கள். சதித்திட்டங்கள் எல்லாம் பயனற்றவை என்பது மட்டுமல்ல, கேடுவிளைப்பவையுங்கூட என்பதைக் கம்யூனிஸ்டுகள் நன்ருக அறிவார்கள். புரட்சிகள் முன் கருதலுடனே தன்னிச்சையாகவோ செய்யப்படுவதில்லை என்பதையும், மாருக அவை எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் முழு வர்க்கங்களின் சித்தம் மற்றும் தலைமையில் இருந்து அறவே சுதந்திரமான புறநிகழ்வுகளின் இன்றியமையாத விளைவே என்பதையும் அவர்கள் நன்ருக அறிவார்கள். அவர்கள் இதே போன்று, கிட்டத்தட்ட எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பலவந்தமாக அடக்கப்படுகிறது என்பதையும், இதன் வழி கம்யூனிசத்தின் எதிராளிகள் எல்லா வழிகளிலும் புரட்சியை ஊக்குவிக்க நாடுகிருர்கள் என்பதையும் காண்கிருர்கள். கடைசியாக, ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சியில் இறங்குமாறு தூண்டப்படுமாளுல், கம்யூனிஸ்டுகளாகிய நாம் பாட்டாளிகளின் லட்சியத்துக்கு இப்போது சொல் மூலம் எதைச் செய்து வருகிருேமோ அதைச் செயல் மூலமும் புரிவோம்.

**கேள்வி 17:** ஒரே அடியில் தனியார் சொத்துடைமையை ஒழித்து விட முடியுமா?

**பதில்:** இல்லை. சமுதாயம் முழுவதற்கும் படைத்தளிக்கக் கூடிய அளவுக்கு இப்போது இருக்கும் உற்பத்தி சக்திகளை ஒரே அடியில் பன்மடங்காக்குவது எப்படி சாத்தியமல்லவோ அது போலவே இந்தக் காரியமும் சாத்தியமல்ல. எனவே

தான் பாட்டாளி வர்க்கப் புரட்சி—இது எப்படியும் நெருங்கி வருகிறது—மட்டுமே இன்று நிலவும் சமுதாயத்தைப் படிப் படியாக மாற்றியமைக்க முடியும், தேவையான அளவில் உற்பத்தி சாதனங்கள் உருவாக்கப்படும் போது மட்டுமே அது தனியார் உடைமையை ஒழிக்க முடியும்.

**கேள்வி 18:** இந்தப் புரட்சியின் செல்வழி எதுவாக இருக்கும்?

**பதில்:** முதன் முதலாக அது ஒரு ஜனநாயக அரசியல மைப்பைத் தொடங்கிவைக்கும், அதன் மூலம் நேரடி யாகவோ நேரடி இன்றியோ பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சியைத் தொடங்கி வைக்கும். பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே மக்களில் பெரும்பான்மையாக இருக் கும் இங்கிலாந்தில் நேரடியாகவே இதைச் செய்யும். ஜெர் மனியிலும் பிரான்சிலும் நேரடி இன்றி இதைச் செய்யும் இவற்றில் பெரும்பான்மை மக்கள் இடையே பாட்டாளி களுடன் கூடவே சிறுதர விவசாயிகள், குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோர் உள்ளனர். இவர்கள் இப்போது பாட் டாளிகளாக மாற்றப்படுகிறுர்கள், அவர்களது அரசியல் நலன்களைப் பொருத்தவரை பாட்டாளி வர்க்கத்தை மேலும் மேலும் சார்ந்து நிற்பவர்களாக மாறிவருகிறுர்கள். ஆகவே விரைவில் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு இணங்கி வருவார்கள். ஒருவேளை இது இரண்டாவது போராட்டத்தை உள்ளடக்கலாம், அது பாட்டாளி வர்க் கத்தின் வெற்றியில் மட்டுமே சென்று முடியும்.

தனியார் உடைமையை நேரடியாகத் தாக்குவதற்கும், பாட்டாளி வர்க்கத்தின் வாழ்நிலையை உறுதியாக நிலைநாட்ட வும், மேற்கொண்டு பல நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கான சாதனமாக ஜனநாயகத்தை உடனடி யாகப் பயன்படுத்தாவிட்டால், பாட்டாளி வர்க்கத்துக்கு அதனுல் எவ்விதப் பயனும் கிடையாது. இப்போது நிலவும் உறவுகளின் மீது ஏற்கெனவே பின்விளைவாக உருவாகிவிட்ட நடவடிக்கைகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. படிப்படியாக அதிகரிக்கும் வருமான வரிகள், மர புரிமைச் சொத்து மீது உயர் வரிகள், கிளைவழிவந்தோர்

(சகோதரர், சகோதர சகோதரிகளின் புதல்வர்கள்) மரபுரிமைச் சொத்துப் பெறுவதை ஒழித்தல், கட்டாயக் கடன்கள் இத்தியாதிகள் வாயிலாக தனியார் உடைமைக்கு வரம்பு கட்டுதல்.

2. நில உரிமையாளர்கள், ஆலைச் சொந்தக்காரர்கள், ரயில்வே மற்றும் கப்பல் கம்பெனி அதிபர்கள் ஆகியோரை, படிப்படியாக உடைமை நீக்கம் செய்வது. இது ஓரளவு அரசுத்துறைத் தொழில்கள் தோற்றுவிக்கும் போட்டி மூலமும், ஓரளவு நேரடியாக காகித நோட்டுகளிலான இழப்பீடு கொடுப்பல்கள் மூலமும் செய்யப்படும்.

3. பெரும்பான்மை மக்களுக்கு எதிராக இருக்கும் எல்லா வெளியேறிகள் மற்றும் கலகக்காரர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வது.

4. உழைப்பை ஒழுங்கமைத்தல், அல்லது தேசிய நிலச் சொத்துக்கள், தேசிய ஆலைகள் மற்றும் பணிமனைகளைப் பாட்டாளிகள் கைப்பற்றிக் கொள்வது. இதன் மூலம் தொழிலாளர் தம்மிடையேயான போட்டிக்கு முடிவு கட்டுதல், அதோடு ஆலைச் சொந்தக்காரர்கள் இருக்கும் வரை அரசு கொடுக்கும் அதே உயர் ஊதியங்களைக் கொடுக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவது.

5. தனியார் உடைமை ஒழிப்பு பூர்த்தியாகும் வரை சமுதாயத்தின் உறுப்பினர் அனைவரும் வேலை செய்ய வேண்டும் எனும் சமப்பொறுப்புக்கு உள்ளாக்கப்படுதல். தொழில்துறை ஊழியர் படைகள் குறிப்பாயும் விவசாயத்தில் நிறுவப்படுதல்.

6. அரசு மூலதனத்துடனான தேசிய வங்கி மூலமும், தனியார் வங்கிகள் வங்கி அதிபர்களை அடக்குவது மூலமும் அரசின் கரங்களில் கடன் வசதி மற்றும் வங்கி அமைப்புகளை மையப்படுத்துவது.

7. தேசிய ஆலைகள், பணிமனைகள் ரயில்வேக்கள் கப்பல்கள் ஆகியவற்றை அதிகரிப்பது, சாகுபடி செய்யப்படாத எல்லா நிலங்களிலும் பயிர் செய்தல், ஏற்கெனவே சாகுபடி நடத்திய நிலங்களை மேம்படுத்துதல். இது தேசத்தின் செயலாட்சியில் வரும் மூலதனம் மற்றும் தொழிலாளர் பெருக்

கத்தின் அதே விகிதாச்சாரத்தில் செய்யப்பட வேண்டும்.

8. தாயின் பராமரிப்பில் இருந்து விடுபடும் அளவுக்கு வயது வந்த எல்லாக் குழந்தைகளுக்கும் தேசியக் கல்வி நிறுவனங்களில் தேசத்தின் செலவில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். கல்வி பொருள் உற்பத்தியோடு இணைக்கப்பட வேண்டும்.

9. தொழில் துறையிலோ விவசாயத்திலோ ஈடுபட்டு வேலை செய்து வரும் குடி மக்கட் சமுதாயங்களுக்குப் பொது வசிப்பிடமாக தேசிய எஸ்டேட்டுகள் மீது பெரிய மாளிகைகள் கட்டப்பட வேண்டும். நாட்டுப்புற நகரப்புற வாழ்க்கைகளின் சாதனங்களை இணைத்தும், குடி மக்கள் ஏதாவதொன்றின் ஒரு சார்புத் தன்மை அல்லது பாதக அம்சங்களால் துன்புறுத வகையில் ஆவன செய்ய வேண்டும்.

10. சுகாதாரமற்றதும் மோசமாகக் கட்டப்பட்டதுமான வீடுகள் மற்றும் வசிப்பிடத் தொகுதிகள் இடித்துத் தகர்க்கப்பட வேண்டும்.

11. முறையிலா மணப்படிப் பிறந்த குழந்தைகளுக்கும் முறைப்படியான மணப்படிப் பிறந்த குழந்தைகளுக்கும் சமமான மரபுரிமைச் சொத்துரிமை உண்டு.

12. எல்லாப் போக்குவரத்து சாதனங்களும் தேசத்தின் உடைமையில் ஒரு முனைப்படுத்தல்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாகக் கொண்டுவர முடியாது என்பது மெய்யே. ஆனால் ஒன்று எப்போதும் இன்னொன்றுக்கு இட்டுச் செல்லும். தனியார் உடைமை உரிமை மீது முதல் அடிப்படைத் தாக்குதல் தொடுக்கப்பட்டு விட்ட உடனேயே பாட்டாளி வர்க்கம் மேலும் முன்னே சென்று, அரசின் கரங்களில் சகல மூலதனத்தையும், விவசாயம் அனைத்தையும், தொழில்துறை எல்லாவற்றையும், போக்குவரத்து சர்வத்தையும், பரிவர்த்தனை சாதனங்கள் பூராவையும் மேலும் மேலும் ஒரு முனைப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் முழுமையும் இத்தகைய பலன்களை நோக்கியே செயல்படுகின்றன. அதோடு பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பால் நாட்டின் உற்பத்தி சக்திகள் பன்மடங்காகப் பெருகும் அதே

விகிதாச்சாரத்தில் அவை நிறைவேற்றம் பெறும், மற்றும் அவற்றின் மையப்படுத்தும் பின்விளைவுகள் அபிவிருத்திய டையும் என்பது திண்ணம். இறுதியாக எல்லா மூலதனமும், சகல பொருள் உற்பத்தியும் அனைத்துப் பரிவர்த்தனையும் தேசத்தின் கரங்களில் ஒரு முனைப்படுத்தப்படும் போது, தனி யார் உடைமை உரிமை தானாகவே இல்லாதபடி போய் விடும், பணம் தேவையற்றதாகி விடும், பழைய சமுதாய உறவுகளின் இறுதி வடிவங்கள் தேய்ந்தழிந்து போக இயலும் வகையில் பொருள் உற்பத்தி அந்தளவு அதிகரித்திருக்கும், மனிதர்கள் அம்முறையில் மாற்றம் அடைந்திருப்பார்கள்.

**கேள்வி 19:** இந்தப் புரட்சி ஒரு நாட்டில் மட்டும் நடை பெறுவது சாத்தியமா?

**பதில்:** இல்லை. உலக மார்க்கெட்டை ஏற்கெனவே படைத்து உருவாக்கியதன் மூலம், பெருவீதத் தொழில்துறை உலகின் மக்களினங்கள் அனைத்தையும் சிறப்பாக நாகரிக மடைந்த மக்களினங்களைப் பிணைத்திருக்கும் தன்மையை கண்டால், ஒவ்வொரு மக்களும் இன்னொரு மக்களுக்கு என்ன நேருமோ அதைச் சார்ந்திருக்கின்றனர் என்பது தெரிய வரும். மேலும், பெருவீதத் தொழில்துறை நாகரிகமடைந்த எல்லா நாடுகளின் சமுதாய வளர்ச்சியையும் பெருமளவுக்கு சமனப்படுத்தியுள்ளது. எனவே இந்த நாடுகள் அனைத்திலும் முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் சமுதாயத் தின் இரண்டு தீர்மானகரமான வர்க்கங்களாகி விட்டன. அதோடு அவற்றின் இடையிலான போராட்டம் இன்றைய பிரதான போராட்டமாகி விட்டது. எனவே கம்யூனிஸ்டுப் புரட்சி ஒரு தேசத்தின் புரட்சியாக மட்டும் இராது. அது நாகரிகமடைந்த நாடுகள் எல்லாவற்றிலும் நடைபெறும், அதாவது குறைந்த பட்சம் இங்கிலாந்து அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் ஏககாலத்தில் நடக்கும். இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும், எதனிடம் அதிக வளர்ச்சி யடைந்த தொழில்துறை, அதிகச் செல்வம் மற்றும் பெருந் திரளான உற்பத்தி சக்திகள் இருக்கின்றனவோ அதைப் பொருத்து இப்புரட்சி வளர்ச்சியுற நீடித்த காலமோ அல் லது குறைந்த காலமோ பிடிக்கும். எனவே ஜெர்மனியில்

இது ஆக மெதுவான கதியை மேற்கொள்ளும், இது அங்கு சாதனையாவது மிகவும் கடினமாக இருக்கும் என்பதும் திண்ணம். இங்கிலாந்தில் இது மிக வேகமாகவும் மிகவும் எளிதாகவும் நிறைவேற்றப்பட முடியும். இது, இதுகாறும் நிலவி வந்த அவற்றின் வளர்ச்சிப் பாணியை முற்ருக மாற்றியமைத்தும், அதைப் பெருமளவு வேக முடுக்கம் செய்தும், உலகின் இதர நாடுகள் மீது கணிசமாகச் செல்வாக்கும் செலுத்தும். இது உலகப் புரட்சியாகவே இருக்க வேண்டும், எனவே இது உலகம் முழுவதையும் தனது அரங்கமாகக் கொள்ள வேண்டும்.

**கேள்வி 20:** தனியார் உடைமையுரிமை இறுதியாக ஒழிக்கப்படுவதன் பின்விளைவுகள் எவை?

**பதில்:** தனியார் முதலாளிகள் பயன்படுத்தி வரும் எல்லா உற்பத்தி சக்திகள் மற்றும் போக்குவரத்து சாதனங்களையும், பொருட்களின் பரிவர்த்தனை மற்றும் வினியோகத்தையும் கூட சமுதாயம் உடைமை நீக்கம் செய்து, சமுதாயம் முழுவதற்கும் கிடைக்கக் கூடிய சாதனங்கள் மற்றும் அதன் தேவைகளை அடிப்படையாக்கிய ஒரு திட்டத்திற்கு ஏற்ப அவற்றின் நிர்வாகத்தை ஏற்பாடு செய்யும் பட்சத்தில், தற்போது தவிர்க்க முடியாதபடி நிலவும் பெருவீதத் தொழில் துறையின் கெடுவிளைவுகளை முதன் முதலாக அகற்றி நீக்கம் செய்ய முடியும். நெருக்கடிகள் இனி இல்லாதொழியும், இன்றைய சமுதாய அமைப்பில் அமித உற்பத்தியாக வந்துவிடுவதும், துன்ப துயரங்களுக்கு இத்தகைய வன்மையான காரணமாக இருப்பதுமான விரிவுபடுத்தப்பட்ட உற்பத்தி, பின்னுல் போதுமானதாகக் கூட இல்லாமல், மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும். சமுதாயத்தின் உடனடித் தேவைகளை விஞ்சிடும் அமித உற்பத்தி அடுத்துத் தொடர்ந்து துன்ப துயரங்களைக் கொண்டுவருவதற்கு மாருக, எல்லோரின் தேவைகளையும் நிறைவு செய்யும், புதிய தேவைகளையும் அதோடு கூடவே அவற்றை நிறைவேற்றும் சாதனங்களையும் படைத்து உருவாக்கும். இது இனி மேற்பட்டதான முன்னேற்றத்துக்கு உரிய நிபந்தனையாகவும் தூண்டு கோலாகவும் மாறும். இதுகாறும் சமுதாய

அமைப்பைக் குழப்பத்தில் எப்போதும் ஆழ்த்தி வந்தது போல இல்லாமல் இது முன்னேற்றத்தைச் சாதனையாக்கும். தனியார் உடைமையின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட உடனேயே, பெருவீதத் தொழில்துறை, நமது காலத்தின் பெருவீதத் தொழில்துறையுடன் ஒப்பிடும் போது பட்டறைத் தொழில் அமைப்பு எப்படித் தோற்றமளித்ததோ அதைப் போல, அதன் இன்றைய வளர்ச்சி மட்டம் வெகு அற்பமாகத் தோன்றும் அளவுக்குப் பெரு வளர்ச்சியடையும் என்பது திண்ணம். தொழில்துறையின் இந்த வளர்ச்சி, எல்லோருடைய தேவைகளையும் நிறைவு செய்வதற்குப் போதுமான அளவிலான பொருட்களை சமுதாயத்துக்கு நிச்சயம் வழங்கும். கிடைக்கக் கூடிய மேம்பாடுகளையும் விஞ்ஞான சாதனைகளையும் கொண்டுவந்து புகுத்துவதிலிருந்து தனியார் உடைமையின் நிர்ப்பந்தத்தாலும், நிலத்தைத் துண்டாடியது மூலமும் தடங்கல் செய்யப்பட்டு வந்த விவசாயமும் கூட ஒரு புதிய முன்னேற்றத்தைக் காண்பது நிச்சயம், மற்றும் அது சமுதாயத்தின் வசம் அமோகமான அளவில் திரளான பல பொருட்களை ஒப்படைக்கும். இவ்வாருக, சமுதாயம் அதன் உறுப்பினர்கள் அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடிய அளவுக்கு வினியோகத்தை ஏற்பாடு செய்வதற்குப் போதுமான பொருட்களை உற்பத்தி செய்யும். சமுதாயம் பல்வேறு பகைமை வர்க்கங்களாகப் பிளவுறுவது என்பது இதனுல் தேவையற்றதாகிவிடும். இது தேவையற்றதாகிவிடுவது மட்டுமல்ல, அதோடு புதிய சமுதாய அமைப்புக்கு இது ஒவ்வாததாகவும் கூட ஆகிவிடும். உழைப்புப் பிரிவினையின் வாயிலாகவே வர்க்கங்கள் தோன்றின. இந்த உழைப்புப் பிரிவினை இது காறும் நிலவி வந்த வடிவில் முற்றுக மறைந்து விடும். இங்கு சித்தரிக்கப்பட்ட சிகரங்களுக்கு தொழில்துறை மற்றும் விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு யந்திர மற்றும் இரசாயனத் துணைக் கருவிகள் மட்டும் போதுமானதல்ல. இந்தத் துணைக் கருவிகளை இயங்க வைக்கும் மக்களின் ஆற்றல்களும் இதற்குச் சரி ஒப்பான முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கடந்த நூற்றுண்டில் விவசாயிகளும் பட்டறைத் தொழி

லாளர்களும் பெருவீதத் தொழில்துறையில் ஈர்க்கப்பட்ட போது எப்படித் தமது வாழ்க்கை முறை முழுவதையும் மாற்றிக் கொண்டு முற்றிலும் வேறுவகையான மக்களாக மாற வேண்டி இருந்ததோ, அது போலவே சமுதாயம் முழுது மாக உற்பத்தியைக் கூட்டாக நிர்வாகம் செய்வதும், இதன் விளைவாக உற்பத்தியில் ஏற்பட்டுவரும் புதிய வளர்ச்சிக்கும் கூட அறவே புதிய மக்கள் தேவைப்படுகின்றனர், மற்றும் அவர்கள் உருவாக்கவும் படுகின்றனர். இன்று மக்கள் இருக் கும் நிலைமையில், ஒவ்வொரு தனி நபரும் உற்பத்தியின் தனி ஒரு பிரிவுக்கு என ஒதுக்கப்பட்டு அதில் கட்டுண்டு, அதனுல் சுரண்டப்படும், இதர ஆற்றல்கள் அனைத்துக்கும் பிரதிகூலமான முறையில் தனது ஆற்றல்களில் ஒன்றை மட்டுமே வளர்த்துக் கொண்டும், ஒட்டுமொத்தமான உற் பத்திப் பிரிவில் ஒரு கிளையை மட்டுமே தெரிந்து கொண்டும் இருக்கும் போது உற்பத்தியின் கூட்டு நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியாது. சமகாலத் தொழில் துறையில் கூட இத் தகைய பேர்களால் பயன் இல்லை. சமுதாயம் முழுவதாலும், திட்டப்படி, கூட்டாக நிர்வகிக்கப்படும் தொழில்துறை சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்த ஆற்றல்களைக் கொண்ட மக்களை, உற்பத்தி அமைப்பு முறை அனைத்தையும் மேற் பார்வை செய்ய வல்ல மக்களை எதிர் நோக்குகிறது. இதன் பின்விளைவாக, யந்திர முறையால் ஏற்கெனவே தகர்க்கப் பட்டதும் ஒரு மனிதனை விவசாயியாயும், இன்னொருவனை காலணி செய்பவனுயும், மூன்ரும் நபரை ஆலைத்தொழிலாளி யாயும், நான்காமவனை பங்குமார்க்கெட் லாப வேட்டை யாளனுயும் செய்துவரும் இந்த உழைப்புப் பிரிவினை இவ் வாறு முழுமையாக மறைந்துவிடும். கல்வி போதனை, இளம் மக்கள் உற்பத்தி முறை பூராவையும் தாமே பரிச்சயம் செய்து கொள்ள இயலுமாறு உதவும், சமுதாய தேவைகள் அல்லது அவர்களது சொந்த நாட்டங்களுக்கு ஏற்ப அவர் கள் தொழில்துறையின் ஒரு பிரிவில் இருந்து இன்னொரு பிரி வுக்குக் கடந்து செல்லத் துணை செய்யும். எனவே இது இன் றைய உழைப்புப் பிரிவினையால் எல்லாவற்றின் மீதும் திணிக் கப்பட்டிருக்கும் வளர்ச்சியின் ஒரு தலைப் போக்கை ஒழித்துக்

கட்டும். இவ்வாறாக, கம்யூனிச முறையில் ஒழுங்கமைக்கப் பட்ட சமுதாயம் அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது சர்வாம்ச ரீதியில் வளர்க்கப்பட்ட ஆற்றல்களை ஒரு சர் வாம்ச வழியில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க முடியும். இதனுடன் இணைவாக தவிர்க்க முடியாத வகையில் பல்வேறு வர்க்கங்களும் மறைந்து போகும். இவ்வாறாக, ஒரு புறத்தில் கம்யூனிச முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயம் வர்க்கங்கள் நிலவுவதற்கு அறவே ஒவ்வாதது என்பதோடு, இந்த சமுதாயத்தின் உருவாக்கமே இந்த வர்க்க வேறுபாடுகளை அகற்றுவதற்கான சாதனங்களை வழங் கும்.

நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண் நிலை இதே போன்று மறைந்து விடும் என்பது இவை எல் லாவற்றில் இருந்தும் தொடர்கிறது. முற்றிலும் பொரு ளாயதக் காரணங்களுக்காகவே என்றாலுங்கூட, விவசாயத் தையும் தொழில்துறை உற்பத்தியையும் இரண்டு வெவ் வேறு வர்க்கங்களுக்குப் பதிலாக ஒரே மக்களைக் கொண்டு நடத்துவது என்பது கம்யூனிச முறையிலான இணைப்பின் இன்றியமையாத நிபந்தனையாகும். பெரிய நகரங்களில் தொழிற்துறை மக்கள் தொகை நெருங்கி மொய்த்துக் கொண்டிருப்பதுடன் கூடவே, விவசாயி மக்கள் தொகை நாடு முழுதும் சிதறிக்கிடப்பது என்பது விவசாயம் மற்றும் தொழில்துறையின் வளர்ச்சி குன்றிய கட்டத்துக்கு மட்டுமே தகுதியான நிலைமையாகும், இது இனிமேற்பட்டதான எல்லா வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாகும். இது இப்போதே மிக வும் துலாம்பரமாகத் தெரியவருகிறது.

உற்பத்தி சக்திகளை எல்லோருக்குமாகவும் திட்டமிட்ட முறையிலும் பயன்படுத்த சமுதாயத்தின் எல்லா உறுப்பினர் களும் அடங்கிய பொது இணைப்பை நிறுவுதல், எல்லோ ருடைய தேவைகளையும் வழங்குவதற்குப் போதுமான அளவுக்குப் பொருள் உற்பத்தியை விரிவுபடுத்தல், சிலரது தேவைகள் நிறைவு செய்யப்படும் போது வேறு சிலர் பிரதி கூலத்திற்கு உள்ளாகும் நிலைமைக்கு முடிவு கட்டுதல், வர்க் கங்களையும் அவற்றின் முரண் நிலையையும் முற்றாக ஒழித்துக்

கட்டுதல்; இதுவரையில் மேலோங்கி இருந்த உழைப்புப் பிரிவினையை ஒழித்துக்கட்டுவதன் மூலமும், தொழில்துறைக் கல்வி போதனை வாயிலாகவும் செயல்பாட்டில் மாற்றம் செய்வதன் வழியாகவும், எல்லோரும் உற்பத்தி செய்யும் வாழ்க்கை வளங்களில் எல்லோரும் பங்கு பெறுவதாலும், நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் கலந்து ஒன்றுக்குவதன் ஊடேயும் சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரின் ஆற்றல்களை சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்தல்—இவையே தனியார் சொத்துடைமை ஒழிக்கப்படுவதில் இருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான விளைவுகளாகும்.

**கேள்வி 21:** கம்யூனிச முறையிலான சமுதாய அமைப்பு குடும்பத்தின் மீது என்ன செல்வாக்குச் செலுத்தும்?

**பதில்:** ஆடவர் மகளிர் இருபாலினர் இடையிலான உறவுகளை, இதில் ஈடுபட்ட நபர்கள் மட்டுமே சம்பந்தப்பட்டதும், சமுதாயத்தின் தலையீட்டுக்கு அவசியமில்லாததுமான, முற்றிலும் தனிப்பட்ட விவகாரமாகச் செய்யும். இது இவ்வாறு செய்ய முடிந்ததற்குக் காரணம் இது தனியார் சொத்துடைமையை ஒழித்துக் கட்டுகிறது, குழந்தைகளுக்கு சமுதாய முறையில் கல்விபோதிக்கிறது. இதன் மூலம் இது காறும் நிலவிய திருமண முறையின் இரண்டு அடிக்கல்களை, அதாவது தனியார் சொத்துடைமையால் நெறியாக்கம் செய்யப்பட்டு மனைவி அவளது கணவனைச் சார்ந்திருப்பது, குழந்தைகள் பெற்றோரைச் சார்ந்திருப்பது எனும் அடிக்கல்களைத் தகர்த்தழிக்கிறது. கம்யூனிசத்தின் கீழ் மனைவிகள் பொதுவாக்கிக் கொள்ளப்படுவதாக, ஒழுக்கநெறி பசப்பும் அற்பவாதிகள் எழுப்பும் கூக்குரலுக்கு அளிக்கப்படும் பதிலாகும் இது. மனைவிகளைப் பொதுவாக்கிக் கொள்ளும் உறவு முற்றிலும் முதலாளித்துவ சமுதாய அமைப்புக்கு உரியது, மற்றும் அது இன்று விபசாரம் எனும் முற்றமுழு வடிவில் நிலவி வருகிறது. விபசாரத்துக்கு வேராக இருப்பது தனியார் சொத்துடைமை, அது அதனுடன் சம்பந்தப்பட்டது. எனவே கம்யூனிச முறையிலான அமைப்பு மகளிரை பொதுவாக்கிக் கொள்வதை நிலைநாட்டுவதற்குமாறாக அந்த முறைக்கு முடிவு கட்டுகிறது.

**கேள்வி 22:** *தற்போது நிலவும் தேசிய இனங்கள் விஷயத்தில் கம்யூனிச முறையிலான அமைப்பின் தோரணை எதுவாக இருக்கும்?*

*—இருக்கிறது.*[37]

**கேள்வி 23:** *தற்போது நிலவும் சமயங்கள் விஷயத்தில் அதன் தோரணை எதுவாக இருக்கும்?*

*—இருக்கிறது.*

**கேள்வி 24:** *கம்யூனிஸ்டுகள் சோஷலிஸ்டுகளிடமிருந்து எவ்வழியில் வேறுபடுகிறார்கள்?*

**பதில்:** சோஷலிஸ்டுகள் எனப்படுவோரை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம்.

முதல் குழு நிலப்பிரபுத்துவ மற்றும் தந்தை வழி சமுதாயத்தின் ஆதரவாளர்களைக் கொண்டது. இந்த சமுதாயம் பெருவீதத் தொழில்துறை மற்றும் உலக வாணிகம் ஆகியவற்றாலும், இவை இரண்டாலும் தோற்றுவிக்கப்பட்ட முதலாளித்துவ சமுதாயத்தாலும் அழிக்கப்பட்டது, இன்னும் நாள்தோறும் அழிக்கப்பட்டு வருகிறது. இன்றைய சமுதாயத்தின் தீமைகளில் இருந்து இந்தக் குழு நிலப்பிரபுத்துவ மற்றும் தந்தைவழி சமுதாயம் இந்தத் தீமைகள் இல்லாதபடி இருந்தமையால், அதை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் எனும் முடிவை எடுக்கிறது. அவர்களது யோசனைகள் எல்லாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த குறிக்கோளுக்கே இட்டுச் செல்கின்றன. **பிற்போக்கான** சோஷலிஸ்டுகளின் இந்தக் குழுவினர், அவர்கள் பாட்டாளிகளின் துன்பதுயரங்கள் பற்றி அனுதாப வேடம்போட்ட போதிலும், கண்ணீர் வடித்த போதிலும் கம்யூனிஸ்டுகளால் வன்மையாக எதிர்க்கப்படுவார்கள், காரணம்:

1. அவர்கள் முற்றிலும் சாத்தியமல்லாத சிலவற்றுக்காக முயல்கிறார்கள்;

2. அவர்கள் எதேச்சாதிகார அல்லது பிரபுத்துவ முடிமன்னர்கள், அதிகாரிகள் படையாளர் மற்றும் புரோகிதர்களின் பரிவாரம் கொண்டதான பிரபுக்குலத்தின் கைவினைச் சங்க ஆண்டான்கள் மற்றும் பட்டறை அதிபர்களின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட முயன்று வருகிறார்கள். அது

இன்றைய சமுதாயத்தின் குறைபாடுகள் இல்லாததாக இருந்த போதிலும் சரி, அதற்கே உரியதான குறைந்தபட்சம் இதே போன்ற பல தீமைகளைக் கொண்டிருந்தது, ஒரு கம்யூனிச முறையிலான அமைப்பு மூலமாக ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களை விடுவிப்பது என்பதற்கான எதிர்கால வாய்ப்பையும் கூட அது கொண்டிருக்கவில்லை;

3. பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமானதாகவோ அல்லது கம்யூனிச முறையிலோ மாறும் போதெல்லாம் அவர்கள் எப்போதும் தமது மெய்யான உள்நோக்கத்தை வெளிப் படுத்துகிறார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பாட்டாளிகளுக்கு எதிராக முதலாளித்துவ வர்க்கத்துடன் உடனடியாகச் சேர்ந்து கொள்கின்றார்கள்.

இரண்டாவது குழுவானது இன்றைய சமுதாயத்தின் ஆதரவாளர்களைக் கொண்டதாகும், இவர்களைப் பொருத்த வரை இதன் தவிர்க்க முடியாத விளைவான இந்தத் தீமைகள் இந்த சமுதாயத்தின் வாழ்நிலைகுறித்த கவலையை எழுப் பியுள்ளன. எனவே இவர்கள் இதனுடன் இணைந்துள்ள தீமைகளை அகற்ற முனையும் அதேபோதில் இன்றைய சமு தாய அமைப்பை அலுங்காமல் வைத்திருக்க முயல்கிறார் கள். இந்த நோக்கத்துடன் அவர்களில் சிலர் பல்வேறு நல வாழ்வு நடவடிக்கைகளை முன்வைக்கிறார்கள், வேறு சிலர் அருமையான சீர்திருத்த முறைகளை ஆதரிக்கிறார்கள். இவை, இந்த சமுதாயத்தை மறுசீரமைக்கும் சாக்கில் இன்றைய சமுதாய அமைப்பின் அடித்தளங்களை அதன் வழி இன்றைய சமுதாய அமைப்பு தன்னையே நீடித்து வைத்திருக்கின்றன. இந்த முதலாளித்துவ வகைப்பட்ட சோஷலிஸ்டுகளையும் இதே போன்று கம்யூனிஸ்டுகள் உறுதியாக எதிர்க்க வேண் டும். காரணம் அவர்கள் கம்யூனிஸ்டுகளின் விரோதிகளுக் காக வேலை செய்கிறார்கள், கம்யூனிஸ்டுகள் ஒழித்தழிக்க முனைந்து நிற்கும் அந்த சமுதாயத்தைத் தாங்கி ஆதரிக்கிறார் கள்.

இறுதியாக, மூன்றாவது குழுஜனநாயக சோஷலிஸ்டுகளைக் கொண்டதாக விளங்குகிறது. இவர்கள் கம்யூனிஸ்டுகளைப்

போலவே சம்பந்தப்பட்ட* நடவடிக்கைகளில் ஒரு பகுதியை அமுலாக்க விரும்புகிறார்கள், ஆனால் கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் சாதனம் என்ற முறையில் அல்ல. மாறாக, இன்றைய சமுதாயத்தின் துன்பதுயரங்கள் மற்றும் தீமைகளை ஒழிக்கப் போதுமான நடவடிக்கைகள் என்று கருதியே இவ்வாறு செய்கிறார்கள். இந்த **ஜனநாயகச் சோஷலிஸ்டுகள்** ஒன்றா, தமது வர்க்கத்தின் விமோசனத்துக்குரிய நிபந்தனைகள் குறித்து இன்னும் போதிய அறிவொளி பெறாத பாட்டாளிகளாக இருக்கிறார்கள், அல்லது குட்டிமுதலாளித்துவப் பிரிவின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த வர்க்கத்துக்கு, ஜனநாயகம் வென்று பெறப்படும் வரை, இதனைத் தொடர்ந்து சோஷலிஸ்டு நடவடிக்கைகள் நிறைவேற்றம் பெறும்வரை பல வழிகளில் பாட்டாளிவர்க்கத்தோடு முற்றொருமையான நலன்கள் இருக்கக் காணலாம். எனவே போராட்டத் தருணங்களில் கம்யூனிஸ்டுகள் ஜனநாயகச் சோஷலிஸ்டுகளுடன் உடன்பாடு கொள்ள வேண்டுவது அவசியம். மற்றும் குறைந்தபட்சம் இந்த சமயத்திலாவது, இது சாத்தியமாக இருக்கும் போது, இந்த ஜனநாயகச் சோஷலிஸ்டுகள் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் சேவையில் இறங்கி கம்யூனிஸ்டுகளைத் தாக்காத வரையில், அவர்களுடன் ஒரு பொதுவான கொள்கையைப் பொதுப்பட பின்பற்றுவதும் அவசியம். இந்தப் பொதுவான போராட்டம் அவர்களுடனான வேறுபாடுகள் விவாதிக்கப்படுவதை விலக்கிவிடவில்லை.

**கேள்வி 25:** நமது காலத்திய இதர அரசியல் கட்சிகள் விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தோரணை என்ன?

**பதில்:** இந்த தோரணை நாட்டுக்கு நாடு வேறுபடும்: முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிபுரியும் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் பெல்ஜியத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு தற்போது, பல்வேறு ஜனநாயகக் கட்சிகளுடன் பொதுவான நலன்கள் இன்னும் இருக்கின்றன. இந்தப் பொது நலன்கள்,

* கையெழுத்துப் பிரதியில் இங்கு வெற்றிடம் காணப்படுகிறது, கேள்வி 18க்கான பதிலைப் பார்க்கவும்.—ப-ர்.

இந்த ஜனநாயகவாதிகள் ஆதரித்துவரும் சோஷலிஸ்டு நடவடிக்கைகள் எல்லா இடங்களிலும் எவ்வளவு நெருக்கமாக கம்யூனிஸ்டுகளின் நோக்கங்களுக்குத் தோராயமாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அதிகமாக உள்ளன, அதாவது அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் குறித்து எந்தளவு அதிகத் தெளிவு பெறுகிறார்களோ, எந்தளவு அதிகமாக அவற்றைத் திட்டவட்டமாக ஆதரித்து நிற்கிறார்களோ அந்தளவுக்கு அதிகமாக அவர்கள் பாட்டாளி வர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டிருப்பார்கள். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் சாசனவாதிகள்[38] —அவர்கள் எல்லோரும் தொழிலாளிகளே — ஜனநாயக குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் அல்லது தீவிரவாதிகள் எனப்படுவோர்களை விடவும் மிகப் பெரிய அளவுக்கு கம்யூனிஸ்டுகளுடன் நெருக்கமாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஒரு ஜனநாயகமான அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசியல் சட்டத்தை முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகப் பிரயோகித்து, இதைப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பயன்படுத்தும் கட்சியுடன், அதாவது தேசிய நிலச் சீர்திருத்தவாதிகளுடன் கம்யூனிஸ்டுகள் ஒத்துழைக்க வேண்டும்.

சுவிட்சர்லாந்தில் இந்தத் தீவிரவாதிகள், அவர்கள் இன்னும் ஒரு கலப்படக் கட்சியாக அமைந்திருந்த போதிலும், இவர்கள் மட்டுமே இன்னும் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ஏதேனும் செய்யக் கூடிய மக்களாக இருக்கிறார்கள், இந்தத் தீவிரவாதிகள் மத்தியிலும் வாட் மற்றும் ஜினீவா வட்டாரங்களில் உள்ளவர்களே மிகவும் முற்போக்கானவர்களாக விளங்குகிறார்கள்.

இறுதியாக, ஜெர்மனியில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் எதேச்சாதிகார முடியாட்சிக்கும் இடையிலான தீர்மானகரமான போராட்டம் இன்னும் அருகே காணப்படுகிறது. எனினும் கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி நடத்தும் வரையில் அதனுடன் தீர்மானகரமான போராட்டத்தை நடத்துவதெனக் கருத முடியாத காரணத்தால், அதைக் கூடிய விரைவில் வீழ்த்தும் பொருட்டு முத

லாளித்துவ வர்க்கம் அந்த ஆட்சியை எவ்வளவு வேக மாக முடியுமோ அந்தளவு வேகத்தில் பெறும்படி உதவுவது கம்யூனிஸ்டுகளின் நலன்களுக்கு உகந்ததாகும். ஆகவே கம் யூனிஸ்டுகள் அரசாங்கங்களுக்கு எதிராக மிதவாத முத லாளித்துவ வர்க்கத்தின் பக்கம் எப்போதும் நிற்க வேண் டும். ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தின் சுய ஏமாற்றை ஒப்புக்கொள்ளவோ, அல்லது அதன் வெற்றி பாட்டாளி வர்க்கத்துக்கு சாதகமான பலன்களைத் தரும் எனும் முத லாளித்துவ வர்க்கத்தின் கவர்ச்சியூட்டும் பிரகடனங்களை நம்பவோ இடமளிக்காதபடி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி கம்யூனிஸ்டு களுக்கு வழங்கக்கூடிய சாதகங்கள் இவை மட்டுமே: 1. கம்யூனிஸ்டுகள் தமது கோட்பாடுகளை தாங்கி ஆதரிக்கவும், விவாதிக்கவும், பரப்பவும் செய்யும் பணிகளை எளிதாக்க உதவும் பல்வேறு சலுகைகள், இதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தை ஒரு கச்சிதமான, போராடும் திறனுடைய சிறந்த அமைப்புத் திரட்சியுள்ள வர்க்கமாக ஒன்றிணைக்க முடியும். 2. எதேச்சாதிகார அரசாங்கங்கள் வீழ்த்தப்பட்ட நாள் தொட்டு முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி களுக்கும் இடையிலான போராட்டத்துக்கான திருப்பம் இயல்பாகவே ஏற்படும் என்பதும் நிச்சயம். அந்த நாள் முத லாக, கம்யூனிஸ்டுகள் மேற்கொள்ள வேண்டியதான கட்சிக் கொள்கை, முதலாளித்துவ வர்க்கம் ஏற்கெனவே ஆட்சி நடத்தும் நாடுகளில் அனுசரிக்கப்படும் அதே கட்சிக்கொள் கையாகவே இருக்கும்.

*1847 அக்டோபர்-நவம்பர் இறுதியில்*
*எங்கெல்சால் எழுதப்பட்டது*

*1914ல் தனிப் பதிப்பாக*
*முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதி*
*யின்படி அச்சிடப்பட்*
*டது. ஜெர்மன் மொழி*
*யில் இருந்து மொழி*
*பெயர்க்கப்பட்டது*

**கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்**

# கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை[39]

## 1872ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரை

தொழிலாளர்களது சர்வதேச நிறுவனமாகிய கம்யூனிஸ்டுக் கழகம்[40] அக்காலத்திய நிலைமைகளில் இரகசியமாகவே செயல்பட வேண்டியிருந்தது. 1847 நவம்பரில் லண்டனில் நடைபெற்ற காங்கிரசில் இந்தக் கழகம் கட்சியின் விவரமான தத்துவார்த்த, நடைமுறை வேலைத் திட்டத்தை வெளியீட்டுக்காக வகுத்திடும்படி அடியில் கையொப்பமிட்டுள்ளோரைப் பணித்தது. இவ்வாறு பிறப்பெடுத்ததே பின்வரும் அறிக்கை. அச்சிடப்படுவதற்காக இதன் கையெழுத்துப் பிரதி பிப்ரவரி புரட்சிக்கு[41] ஒருசில வாரங்களுக்கு முன்னால் லண்டன் போய்ச் சேர்ந்தது. முதற்கண் ஜெர்மன் மொழியில் வெளிவந்தது, பிறகு ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமாய் வெவ்வேறான பன்னிரண்டு பதிப்புகளுக்குக் குறையாமல் இம்மொழியில் வெளிவந்திருக்கிறது. முதன் முறையாய் ஆங்கிலத்தில் இது 1850ல் லண்டன் *Red Republican*[42] பத்திரிகையில் வெளியாயிற்று, இந்த மொழிபெயர்ப்பைச் செய்தவர் மிஸ் ஹெலன் மக்ஃபர்லேன். 1871ல், அமெரிக்காவில் மூன்றுக்குக் குறையாத வெவ்வேறு ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்தன. பிரெஞ்சு மொழிபெயர்ப்பு 1848ஆம் ஆண்டு ஜூன் எழுச்சிக்குச்[43] சிறிதுகாலத்துக்கு முன் முதன்முதல் பாரிசில் வெளியாயிற்று, அண்மையில் நியூயார்க் *Le Socia-*

*liste*[44] பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது. புதிய மொழி பெயர்ப்பு ஒன்று தயாராகி வருகிறது. முதன்முதல் ஜெர்மன் மொழியில் வெளிவந்தபின் சிறிது காலத்துக்கு எல்லாம் போலிஷ் பதிப்பு ஒன்று லண்டனில் வெளியிடப்பட்டது. அறுபதாம் ஆண்டுகளில் ருஷ்யப் பதிப்பு ஒன்று ஜினீவாவில் வெளிவந்தது. முதன்முதல் வெளியாகியபின் சிறிது காலத்துக்குள் டேனிஷிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நிலைமைகள் எவ்வளவுதான் மாறியிருப்பினும், இந்த அறிக்கையில் குறிக்கப்படும் பொதுக் கோட்பாடுகள் ஒட்டுமொத்தத்தில் என்றும் போல் இன்றும் சரியானவையே. இங்கும் அங்கும் சிற்சில விவரங்களைச் செம்மை செய்யலாம். அறிக்கையே கூறுவது போல், இந்தக் கோட்பாடுகளை நடைமுறையில் கையாளுதல், எங்கும் எக்காலத்திலும், அவ்வப்போது இருக்கக்கூடிய வரலாற்று நிலைமைகளைச் சார்ந்ததாகவே இருக்கும். இந்தக் காரணத்தால்தான், இரண்டாம் பிரிவின் இறுதியில் முன்மொழியப்படும் புரட்சிகர நடவடிக்கைகள் தனி முறையில் வலியுறுத்திக் கூறப்படவில்லை. அந்தப் பகுதியின் வாசகத்தை பல விஷயங்களில் இன்று வேறு விதமாய் வரைய வேண்டியிருக்கும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நவீனத் தொழில் துறை பெரு நடை போட்டுப் பிரமாதமாய் முன்னேறியிருக்கிறது, இதனுடன் கூடவே தொழிலாளி வர்க்கத்தின் கட்சி நிறுவன ஒழுங்கமைப்பும் மேம்பாடுற்றும் விரிவடைந்தும் உள்ளது. இவற்றையும், மற்றும் முதலில் பிப்ரவரிப் புரட்சியிலும், பிறகு இன்னும் முக்கியமாய், முதன்முதலாய்ப் பாட்டாளி வர்க்கம் முழுதாய் இரு மாதங்களுக்கு அரசியல் ஆட்சியதிகாரம் வகித்த பாரிஸ் கம்யூனிலும்[45] கிடைத்த நடைமுறை அனுபவத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வோமாயின், இந்த வேலைத்திட்டம் சில விவரங்களில் காலங் கடந்ததாகி விடுகிறது. கம்யூனானது முக்கியமாய் ஒன்றை நிரூபித்துக் காட்டிற்று; அதாவது ''ஏற்கெனவே பூர்த்தியான தயார் நிலையிலுள்ள அரசுப் பொறியமைவைத் தொழிலாளி வர்க்கம் அப்படியே கைப்பற்றித் தனது சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடி

யாது’’ என்பதை நிரூபித்துக் காட்டிற்று. (பார்க்கவும்: **பிரான்சில் உள்நாட்டுப் போர்; அகிலத் தொழிலாளர் சங்கப் பொது அவையின் பேருரை**, ஜெர்மன் பதிப்பு, பக்கம் 19; இந்த விவரம் மேலும் விளக்கமாய் அங்கே பரிசீலிக்கப் படுகிறது.*) தவிரவும், சோஷலிச இலக்கியத்தைப் பற்றிய விமர்சனம் இன்றைய நிலைவரத்துக்குப் பற்றாக்குறையானது என்பதைக் கூறத் தேவையில்லை, ஏனெனில் 1847ஆம் ஆண்டு வரையிலான நிலைவரம் மட்டும்தான் இந்த விமர்சனத்தில் இடம் பெறுகிறது. அதோடு, பற்பல எதிர்க் கட்சிகள் சம்பந்தமாய் கம்யூனிஸ்டுகளுடைய உறவுநிலை பற்றிய குறிப்புகள் (நான்காம் பிரிவு) கோட்பாடு அளவில் இன்றும் பிழையற்றவையே என்றாலுங்கூட, நடைமுறையில் காலங் கடந்தவை என்பதும் தெளிவு. ஏனென்றால் அரசியல் நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது, வரலாற்றின் முன்னேற்றமானது அப்பிரிவில் குறிக்கப்படும் அரசியல் கட்சிகளில் மிகப் பெரும்பாலானவற்றைப் புவிப்பரப்பிலிருந்து துடைத்து அகற்றியிருக்கிறது.

ஆனால் இந்த **அறிக்கை** வரலாற்று ஆவணமாகிவிட்டது, இனி இதைத் திருத்த எங்களுக்கு உரிமை இல்லை. 1847க்கும் இன்றைக்கும் உள்ள இந்த இடைவெளியை நிரப்பும் ஒரு முன்னுரையோடு பிற்பாடு ஒரு பதிப்பு வெளிவரலாம், தற்போது இந்த மறுபதிப்பு எதிர்பாராத முறையில் வெளியாவதால் இதைச் செய்ய எங்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**

லண்டன், 1872, ஜூன் 24

*Das Kommunistische Manifest. Neue Ausgabe mit einem Vorwort der Verfasser*. Leipzig, 1872 எனும் பிரசுரத்தில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

* இப்பதிப்பின் தொகுதி 2 பார்க்க.—ப-ர்.

## 1882ஆம் ஆண்டு ருஷ்யப் பதிப்பின் முகவுரை

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் முதலாவது ருஷ்யப் பதிப்பு, பக்கூனின் மொழிபெயர்த்தது, அறுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கோலகல்[46] ஏட்டின் அச்சகத்தால் வெளியிடப்பட்டது. மேலைய நாட்டினர் அப்போது அதை (அந்த ருஷ்யப் பதிப்பை) அரியதோர் இலக்கிய நிகழ்வாய் மட்டுமே பார்க்க முடிந்தது. அம்மாதிரியான ஒரு கருத்து இன்று சாத்தியமாய் இராது.

பாட்டாளி வர்க்க இயக்கம் அந்தக் காலத்தில் (1847 டிசம்பர்) எவ்வளவு குறுகலான வட்டத்துள் அடங்குவதாய் இருந்தது என்பதை அறிக்கையின் கடைசிப் பிரிவு: ''பல்வேறு நாடுகளிலும் பற்பல எதிர்க் கட்சிகள் சம்பந்தமாய் கம்யூனிஸ்டுகளின் நிலையைக் கூறும்''* இந்தப் பிரிவு, மிகத் தெளிவாய்த் தெரியப்படுத்துகிறது குறிப்பாயும் ருஷ்யாவும் அமெரிக்க ஐக்கிய நாடும் இப்பிரிவில் காணப்படவே இல்லை. ருஷ்யாவானது அனைத்து ஐரோப்பியப் பிற்போக்கின் கடைசிப் பெரும் கோட்டையாகவும், அமெரிக்க ஐக்கிய நாடு ஐரோப்பாவின் உபரிப் பாட்டாளி அணிகளைக் குடியேற்றத்தின் மூலம் உட்கவர்ந்து கொள்ளும் நாடாகவும் இருந்து வந்த காலம் அது. இரு நாடுகளும் ஐரோப்பாவுக்கு மூலப்பொருள்களை வழங்கின, அதேபோது ஐரோப்பியத் தொழில் துறை உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைகளாகவும் இருந்தன. ஆகவே அந்தக் காலத்தில் இரு நாடுகளும் ஐரோப்பாவிலுள்ள அமைப்புக்கு ஏதேனும் ஒரு வகையில் ஆதாரத் தூண்களாய் இருந்தன.

நிலைமை இன்று எப்படி மாறிவிட்டது! ஐரோப்பாவிலிருந்து நடைபெற்ற இந்தக் குடியேற்றம் தான் வட அமெரிக்காவைப் பிரம்மாண்ட அளவிலான விவசாயப் பொருளுற்பத்திக்குத் தயார் செய்தது; இப்போது இந்த அமெரிக்க விவசாயப் பொருளுற்பத்தியின் போட்டி ஐரோப்பாவின் சிறிதும் பெரிதுமான நிலவுடைமைகளது அடித்தளங்

* இத்தொகுதியின் பக்கங்கள் 247-249 பார்க்க.—பர்.

களையே ஆட்டிக் குலுக்குகிறது. அதோடு இந்தக் குடியேற்றம், இது காறும் மேற்கு ஐரோப்பாவும் இன்னும் முக்கியமாய் இங்கிலாந்தும் தொழில் துறையில் வகித்து வரும் ஏகபோக நிலை சீக்கிரமே தகர்க்கப்படுமெனக் கூறும்படி அத்தனை விறு விறுப்போடும் அவ்வளவு பெரிய அளவிலும் அமெரிக்க ஐக்கிய நாடு தனது அளவிலாத் தொழில் துறைச் செல்வாதாரங்களைப் பயன்படுத்திக் கொள்வதைச் சாத்தியமாக்கிற்று. இவ்விரு நிலைமைகளும் புரட்சிகர முறையிலான எதிர்வினையை அமெரிக்காவினுள் நடைபெறச் செய்கின்றன. அனைத்து அரசியல் அமைப்புக்கும் அடிநிலையான சிறுதிற, நடுத்தர உழவர் நிலவுடைமைகள் பெரும் பண்ணைகளுடைய போட்டியைச் சமாளிக்க முடியாமல் படிப்படியாய் நசித்து வருகின்றன. அதேபோது பெருந்திரளான பாட்டாளி வர்க்கமும், வியக்கத்தக்க மிகப் பெரிய அளவிலான மூலதன ஒன்றுகுவிப்பும் தொழில் துறைப் பிரதேசங்களில் வளர்ச்சியுறுகின்றன.

அடுத்து இப்போது ருஷ்யா! 1848-49ஆம் ஆண்டுகளது புரட்சியின் போது ஐரோப்பிய முடிமன்னர்கள் மட்டுமல்ல, ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தாரும், அப்போது தான் விழித்தெழ முற்பட்டிருந்த பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தப்பிக்க ருஷ்யத் தலையீடு ஒன்றே வழி என்று இருந்தனர். ஜார் மன்னர் ஐரோப்பியப் பிற்போக்கின் அதிபதியாய்ப் பிரகடனம் செய்யப்பட்டார். இன்று ஜார் மன்னர் புரட்சியின் போர்க் கைதியாய்க் காட்சினுவில் இருக்கிறுர்;[47] ருஷ்யாவானது ஐரோப்பாவில் புரட்சி நடவடிக்கையின் முன்னணியாய்த் திகழ்கிறது.

நவீன கால முதலாளித்துவச் சொத்துடைமையின் தகர்வு தவிர்க்க முடியாதபடி நெருங்கி வருவதைப் பிரகடனம் செய்வதே கம்யூனிஸ்டு அறிக்கையின் குறிக்கோள். ஆனல் ருஷ்யாவில் நாம் காண்பது என்ன? அதிவேகமாய் வளர்ந்து வரும் முதலாளித்துவ முறையோடு கூடவே, வளர்ச்சியின் துவக்க நிலையிலுள்ள முதலாளித்துவ நிலவுடைமையுடன் கூடவே, ருஷ்ய நாட்டின் நிலங்களில் பாதிக்கு மேற்பட்டவை விவசாயிகளது பொதுவுடைமையாய் இருக்கக்

காண்கிறேம். இப்போது எழும் கேள்வி இதுதான்: ருஷ்ய 'ஒப்ஷீஞ'* வெகுவாய்ச் சீர்குலேக்கப்பட்டிருப் பினும், இன்னமும் நிலத்திலான புராதனப் பொதுவுடைமை யின் ஒரு வடிவமாகவே இருக்கும் இது, நேரடியாய்க் கம் யூனிசப் பொதுவுடைமை எனும் உயர்ந்த வடிவமாய் வளர முடியுமா? அல்லது இதற்கு நேர்மாருய், மேற்கு நாடுகளது வரலாற்றின் பரிஞம வளர்ச்சியாய் அமைந்த அந்தச் சிதைந் தழியும் நிகழ்முறையை முதலில் அது கடக்க வேண்டி யிருக்குமா?

இதற்கு இன்று சாத்தியமான ஒரே பதில் இதுதான்: ருஷ்யப் புரட்சியானது மேற்கு நாடுகளில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முன்னறிவிப்பாகி இவ்விதம் இரண் டும் ஒன்றுக்கொன்று துணை நின்று நிறைவு பெறுமாயின், தற்போது ருஷ்யாவில் நிலத்திலுள்ள பொதுவுடைமை கம் யூனிச வளர்ச்சிக்குரிய துவக்க நிலையாய்ப் பயன்படக்கூடும்

**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**

லண்டன், 1882, ஜனவரி 21

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை.** ஜினீவா, 1882 எனும் நூலில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதி யின்படி அச்சிடப்பட் டது. ஜெர்மன் மொழி யில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

## 1883ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரை

தற்போதைய இந்தப் பதிப்பின் முகவுரைக்கு நான்—அந்தோ!—தனியே கையெழுத்திட்டாக வேண்டும். ஐரோப் பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த அனைத்துத் தொழி லாளி வர்க்கமும் மற்றவர் எவரையும்விட அதிகமாய் மார்க்

* 'ஒப்ஷீஞ'—கிராம சமுதாயம்.—**ப-ர்.**

சுக்கே கடமைப்பட்டிருக்கிறது, மார்க்ஸ் ஹைகேட் இடு காட்டில் உறங்குகிறார், அவருடைய சமாதியின் மேல் இப்போதுதான் பசும்புல் தளிர்க்க ஆரம்பித்திருக்கிறது. மார்க்சின் மறைவுக்குப் பிறகு அறிக்கையில் திருத்தம் செய்யலாமென்றோ, செருகிச் சேர்க்கலாமென்றோ நினைப்பது முன்னினும் முடியாத காரியம். பின்வருவதை வெளிப்படையாய்த் திட்டவட்டமாய் மீண்டும் இங்கு எடுத்துரைப்பது முன்னினும் அத்தியாவசியமெனக் கருதுகிறேன்:

அறிக்கையில் இழையோடி நிற்கும் அடிப்படை கருத்து—வரலாற்றின் ஒவ்வொரு சகாப்தத்திலும் பொருளாதார உற்பத்தியும் தவிர்க்க முடியாதபடி இதிலிருந்து எழும் சமூகக்கட்டமைப்பும் அந்தச் சகாப்தத்தின் அரசியல், அறிவுத்துறை வரலாற்றுக்குரிய அடித்தளமாய் அமைகின்றன; ஆகவே (புராதன நிலப் பொதுவுடைமை சிதைந்து போன காலம் முதலாய்) அனைத்து வரலாறும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறாகவே, சமூக வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் சுரண்டப்படும் வர்க்கத்துக்கும் சுரண்டும் வர்க்கத்துக்கும், ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்படும் வர்க்கத்துக்கும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்துக்கும் இடையே நடைபெறும் போராட்டங்களின் வரலாறாகவே இருந்து வருகிறது; ஆனால் இந்தப் போராட்டம் தற்போது வந்தடைந்திருக்கும் கட்டத்தில் சுரண்டப்படும் ஒடுக்கப்பட்டும் வரும் வர்க்கம் (பாட்டாளிவர்க்கம்) சுரண்டியும் ஒடுக்கியும் வரும் வர்க்கத்திடமிருந்து (முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து) இனி தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால், சமுதாயம் அனைத்தையும் அதே போது சுரண்டலிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் என்றென்றுக்குமாய் விடுவித்தே ஆக வேண்டும் என்கிற இந்த அடிப்படை கருத்து—முற்றிலும் மார்க்ஸ் ஒருவருக்கு மட்டுமே உரியதாகும்.*

* ''டார்வினுடைய தத்துவம் உயிரியலுக்கு ஆற்றிய சேவையை இந்த வரையறுப்பு, என் கருத்துப்படி, வரலாற்றியலுக்கு ஆற்றப் போகிறது'' என்று ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் நான் எழுதினேன். ''1845க்கு முந்திய சில ஆண்டுகளாகவே நாங்கள் இருவரும் இந்த

முன்பே இதை நான் பல தடவை கூறியிருக்கிறேன். முக்கியமாய் இப்பொழுது அறிக்கையின் முகவுரையில் இதுவும் குறிக்கப்படுதல் அவசியமாகும்.

**பிரெடெரிக் எங்கெல்ஸ்**

லண்டன், 1883, ஜூன் 28

*Das Kommunistische Manifest.* Hottingen-Zürich, எனும் நூலில் 1883ல் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது

## 1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பின் முகவுரையிலிருந்து

**அறிக்கையானது** அதற்குரிய ஒரு வரலாற்றை உடையதாகும். அது வெளிவந்த காலத்தில், எண்ணிக்கையில் அதிகம் இல்லாத விஞ்ஞான சோஷலிச முன்னணிப் படையினர் அதை ஆர்வத்தோடு வரவேற்றனர் (முதலாவது முகவுரையில் குறிக்கப்படும் மொழிபெயர்ப்புகளின் விவரம்

---

வரையறுப்பைப் படிப்படியாய் நெருங்கி வந்து கொண்டிருந்தோம். சுயேச்சையாய் நான் எந்த அளவுக்கு இதை நோக்கி முன்னேறி வந்தேன் என்பதை எனது நூலான இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை நன்கு தெரிவிக்கின்றது. ஆனால் 1845ஆம் ஆண்டு வசந்தத்தில் நான் பிரஸ்ஸெல்சில் மார்க்சை மீண்டும் சந்தித்த போது, அவர் இந்த வரையறுப்பைப் பூரணமாய் வகுத்து வைத்திருந்தார், இங்கு நான் எடுத்துரைத்திருப்பது போல் ஏறத்தாழ இதே அளவுக்குத் தெளிவான வாசகத்தில் எனக்கு அறிவித்தார்.'' [1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]

இதற்கு நிரூபணமாகும்*). அதன்பின் சீக்கிரமே அது பின்னிலைக்குத் தள்ளப்பட்டது, 1848 ஜூனில் பாரிஸ் தொழிலாளர்களின் தோல்வியைத் தொடர்ந்து மூண்ட பிற்போக்கு இப்படி அதைத் தள்ளிற்று. முடிவில், 1852 நவம்பரில்[48] கொலோன் கம்யூனிஸ்டுகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட போது "சட்டத்தின்படி" அது தீண்டாததாய் விலக்கி வைக்கப்பட்டது. பிப்ரவரிப் புரட்சியுடன் ஆரம்பமான தொழிலாளர் இயக்கம் பொது அரங்கிலிருந்து மறைந்துவிடவே, அதோடு கூட அறிக்கையும் பின்னிலைக்குப் போய்ச் சேர்ந்தது.

ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கம் திரும்பவும் ஆளும் வர்க்கங்களது ஆட்சியதிகாரத்தின் மீது தாக்குதல் தொடுக்கப் போதிய பலத்தைத் திரட்டியதும் அகிலத் தொழிலாளர் சங்கம் உருப்பெற்று எழுந்தது. ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த போர்க் குணம் படைத்த தொழிலாளி வர்க்கம் அனைத்தையும் ஒரே பெரும் படையாய் ஒருசேர இணைத்திடுவதே இந்தச் சங்கத்தின் நோக்கமாய் இருந்தது. ஆகவே இச்சங்கம் அறிக்கையில் வகுத்தளிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளிலிருந்து தொடங்க முடியவில்லை. ஆங்கிலேயத் தொழிற் சங்கங்களையும் பிரெஞ்சு, பெல்ஜிய, இத்தாலிய, ஸ்பெயின் நாடுகளது புரூதோனியர்களையும் ஜெர்மன் லஸ்ஸாலியர்களையும்** வெளியே வைத்துக் கதவடைக்காத ஒரு வேலைத்திட்டத்தை இந்தச் சங்கம் ஏற்க வேண்டியிருந்தது. அகிலத்தின் விதிகளது முகப்புரையாய்

---

* இத்தொகுதியின் பக்கம் 170 பார்க்க.—ப-ர்.

** லஸ்ஸால் எங்களுடன் பேசுகையில் எப்போதுமே தாம் மார்க்சின் "சீடராய்" இருப்பதாகவும், எனவே அறிக்கையையே அடிநிலையாய்க் கொண்டிருப்பதாகவும் கூறி வந்தார். ஆனல் அவரைப் பின்பற்றியோரின் நிலை முற்றிலும் வேறு விதமாய் இருந்தது, அரசுக் கடன்களை ஆதாரமாய்க் கொண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டுமென்ற லஸ்ஸாலின் கோரிக்கைக்கு மேல் அவர்கள் செல்லவில்லை, தொழிலாளி வர்க்கம் முழுவதையுமே அவர்கள் அரசு உதவியின் ஆதரவாளர்களாகவும் தன்னுதவியின் ஆதரவாளர்களாகவும் பிளவுபடுத்தினர்கள். [எங்கெல்ஸ் குறிப்பு.]

அமைந்த இந்த வேலைத்திட்டத்தை மார்க்ஸ் வகுத்தளித்தார், பக்கூனினும் அராஜகவாதிகளுங்கூட அங்கீகரிக்கும்படி தேர்ந்த திறமையுடன் இதைச் செய்தார். அறிக்கையில் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின் இறுதி வெற்றிக்கு, ஒன்றுபட்ட செயற்பாட்டிலிருந்தும் விவாதத்திலிருந்தும் நிச்சயம் ஏற்பட்டாக வேண்டிய தொழிலாளி வர்க்க ஞான வளர்ச்சியைத் தான் முற்றும் நம்பியிருந்தார். மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தின் நிகழ்வுகளும், நல்லதும் கெட்டதுமான மாறுதல்களும், போராட்டத்தின் வெற்றிகளையும்விட அதிகமாய்த் தோல்விகளும், போராடுவோருக்கு எல்லா நோய்களையும் தீர்க்கவல்ல சஞ்சீவியாய் இதுகாறும் அவர்கள் கருதியிருந்தவை எவ்வளவு குறைபாடானவை என்பதைத் தெரியப்படுத்தவே செய்யும், தொழிலாளர்களது விடுதலைக்கு வேண்டிய மெய்யான நிலைமைகளைத் தீர்க்கமாய்ப் புரிந்து கொள்வதற்கு அவர்களது மனத்தைப் பக்குவமுடையதாக்கவே செய்யும். மார்க்ஸ் எதிர்பார்த்தபடியே நடைபெற்றது. அகிலம் கலைக்கப்பட்ட ஆண்டான 1874ல் இருந்த தொழிலாளி வர்க்கம், அகிலம் துவக்கப்பட்ட காலமாகிய 1864ஆம் ஆண்டின் தொழிலாளி வர்க்கத்திலிருந்து முற்றிலும் மாறுனதாய் இருந்தது. லத்தீனிய நாடுகளில் புரூதோனியமும் ஜெர்மனிக்கு உரியதாய் இருந்த தனிவகை லஸ்ஸாலியமும் மடிந்து மறைந்து கொண்டிருந்தன. அக்காலத்தில் கடைந்தெடுத்த பழமைவாதப் போக்கு கொண்டிருந்த ஆங்கிலேயத் தொழிற் சங்கங்களுங்கூட படிப்படியாய் முன்னேறி 1887ல் அவற்றின் ஸ்வான்சி காங்கிரசில் அவற்றின் தலைவர்* ''கண்டத்தின் சோஷலிசம் எங்களுக்குக் கிலியூட்டுவதாய் இருந்த காலம் மறைந்துவிட்டது'' என்பதாய் அச்சங்கங்களின் சார்பில் அறிவிக்கத் துணியும்படியான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. ஆயினும் கண்டத்து சோஷலிசமானது 1887க்குள் அனேகமாய் முழு அளவுக்கு, முன்பு அறிக்கை முரசறைந்து அறிவித்த அதே தத்துத்தைக் குறிப்பதாய் இருந்தது. இவ்

*—வி. பெவான்.—ப-ர்.

வாறு அறிக்கையின் வரலாறு 1848ஆம் ஆண்டு முதலான நவீனத் தொழிலாளி வர்க்க இயக்க வரலாற்றை ஓரளவுக்குப் பிரதிபலிக்கிறது. தற்போது சோஷலிச இலக்கியம் அனைத்திலும் அறிக்கை தான் மிகவும் அதிகமாய்ப் பல்கிப் பரவி, மிகப் பெரும் அளவுக்கு சர்வதேசியத் தன்மை கொண்ட படைப்பாகும், சைபீரியாவிலிருந்து கலிபோர்னியா வரை எல்லா நாடுகளிலும் கோடானு கோடியான தொழிலாளர்களது பொது வேலைத்திட்டமாகும் என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

ஆயினும் முதலில் வெளிவந்த போது நாங்கள் அதற்கு சோஷலிஸ்டு அறிக்கை என்று பெயரளிக்க முடியவில்லை. 1847ல் இரு வகையானோர் சோஷலிஸ்டுகளாய்க் கருதப்பட்டனர். ஒருபுறத்தில் பற்பல கற்பனாவாதக் கருத்தமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள்; இங்கிலாந்தில் ஓவனியர்களும், பிரான்சில் ஃபூரியேயர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்; இரு தொகுதியோரும் அக்காலத்திலேயே சிறிது சிறிதாய் மறைந்து சென்ற குறுங் குழுக்களாய்க் குறுகிச் சிறுத்துவிட்டவர்கள். மறுபுறத்தில் மிகப் பல்வேறுபட்ட ரகங்களைச் சேர்ந்த சமூக மருத்துவப் புரட்டர்கள் இருந்தார்கள்; மூலதனத்துக்கும் இலாபத்துக்கும் இம்மியளவும் தீங்கு நேராதபடி இவர்கள் தமது சர்வரோக நிவாரணிகள் மூலமும் எல்லா விதமான ஒட்டையடைப்புச் சில்லறைப் பணிகள் மூலமும் சமூகக் கேடுகளைக் களைய விரும்பினார்கள். இவ்விரு வகையினரும் தொழிலாளர் இயக்கத்துக்கு வெளியே இருந்தவர்கள், ''படித்த'' வகுப்பாரின் ஆதரவையே அதிகமாய் நாடியவர்கள். ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி வெறும் அரசியல் புரட்சிகள் மட்டும் நடைபெற்றால் போதாது என்பதை ஐயமற உணர்ந்து கொண்டு, சமுதாயத்தில் அடிப்படை மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று கோரிற்று; இந்தப் பகுதி அன்று தன்னைக் கம்யூனிஸ்டு என்று அழைத்துச் கொண்டது. இன்னமும் அது அரைகுறையானதாகவே, உள்ளுணர்வால் உந்தப்பட்டதாகவே, பல சந்தர்ப்பங்களிலும் அவ்வளவாய்ப் பக்குவமில்லாத ஒரு கம்யூனிசமாகவே இருந்தது. என்றாலும் அது இரண்டு கற்பனாவாதக்

கம்யூனிச அமைவுகளை—பிரான்சில் காபேயின் ''ஐகேரியக்'' கம்யூனிசம்,* ஜெர்மனியில் வைட்லிங்கின் கம்யூனிசம்—தோற்றுவிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாய் இருந்தது. 1847ல் சோஷலிசம் முதலாளித்துவ இயக்கத்தையும், கம்யூனிசம் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் குறிப்பனவாய் இருந்தன. சோஷலிசமானது, எப்படியும் கண்டத்திலேனும் கண்யவான் மனப்பாங்குடைத்ததாய் இருந்தது, ஆனால் கம்யூனிசம் இதற்கு நேர்மாறானதாய் இருந்தது. நாங்கள் அந்த ஆரம்பக் காலத்திலேயே ''தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை நேரடியாய்த் தொழிலாளி வர்க்கத்தின் செயலால் தான் பெறப்பட்டாக வேண்டும்''[49] என்ற உறுதிமிக்க கருத்துடையோராய் இருந்ததால், இரண்டு பெயர்களில் எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதென்பது குறித்து எங்களிடம் தயக்கத்துக்கு இடமில்லை. அன்று முதலாய் இந்தப் பெயரை நிராகரிக்கும் எண்ணம் ஒருபோதும் எங்களுக்கு ஏற்பட்டதில்லை.

''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' நாற்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாட்டாளி வர்க்கம் தனது சொந்தக் கோரிக்கைகளை முன்வைத்து எழுந்த அந்த முதலாவது பாரிஸ் புரட்சியின் தறுவாயில் நாங்கள் இந்த முழக்கத்தைப் பிரகடனம் செய்தோம், அப்போது ஒருசில குரல்களே இதை எதிரொலித்து எழுந்தன. ஆனால் 1864 செப்டம்பர் 28ல் பெருவாரியான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாட்டாளிகள் அழியாப் புகழ் நினைவுக்குரிய அகிலத் தொழிலாளர் சங்கத்தில் கைகோத்து நின்றார்கள். இந்த அகிலம் ஒன்பது ஆண்டுகளுக்கே நீடித்தது என்பது மெய்தான். ஆனால் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளிடத்தே அது உருவாக்கிய அமர ஐக்கியமானது இன்றும் நிலைத்து நிலவுகிறது என்பதோடு, என்றையும்விட வலிமை மிக்கதாய் இருக்கிறது என்பதற்கு இன்றைய தினத்தைக் காட்டிலும் சிறப்பான சான்று ஏதுமில்லை. நான் இந்த வரிகளை எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய தினம்[50] ஐரோப்பாவையும்

---

* பி. எங்கெல்சின் குறிப்பு, பக்கம் 245 பார்க்க.—ப-ர்.

அமெரிக்காவையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தனது போர்ப் படைகளை ஒத்திகை நடத்திப் பார்வையிடுகின்றது. இந்தப் படைகள் முதன்முதலாய் ஒரே சேனையாய், ஒரே கொடியின் கீழ், ஒரே உடனடிக் குறிக்கோளுக்காகத் திரட்டப் பெற்றனவாய் அணிவகுத்து நிற்கின்றன. 1866ல் அகிலத்தின் ஜினீவா காங்கிரசாலும், மீண்டும் 1889ல் பாரிஸ் தொழிலாளர் காங்கிரசாலும் பறைசாற்றப்பட்டது போல் சட்டம் இயற்றி முறையான எட்டு மணி நேர வேலைநாளை நிலைநாட்ட வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையை எழுப்பிப் பாட்டாளிப் படை வரிசைகள் அணி திரண்டிருக்கின்றன. இன்றைய இந்தக் காட்சி எல்லா நாடுகளின் தொழிலாளர்களும் மெய்யாகவே இன்று ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்பதை எல்லா நாடுகளின் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் தெற்றெனப் புலப்படுத்தும்.

இதை நேரில் தம் கண் கொண்டு கண்டு களிக்க என் பக்கத்தில் மார்க்ஸ் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

**பி. எங்கெல்ஸ்**

*லண்டன், 1890, மே 1*

*Das Kommunistische Manifest*, London, 1890 எனும் நூலில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

## 1892ஆம் ஆண்டுப் போலிஷ் பதிப்பின் முகவுரை

கம்யூனிஸ்டு அறிக்கையின் ஒரு புதிய போலிஷ் பதிப்பு அவசியமாகியிருப்பதானது பற்பல சிந்தனைகளை எழச் செய்கிறது.

முதலாவதாக, அண்மையில் அறிக்கை ஐரோப்பாக் கண்டத்தில் பெருவீதத் தொழில் துறையின் வளர்ச்சியைக்

காட்டும் ஒரு குறியீடு போலாகியிருப்பது குறிப்பிடத் தக்க தாகும். குறிப்பிட்ட ஒரு நாட்டில் பெருவீதத் தொழில்துறை விரிவடைவதற்கு ஒத்த வீதத்தில் அந்நாட்டின் தொழிலாளர் களிடத்தே, சொத்துடைத்த வர்க்கங்கள் சம்பந்தமாய்த் தொழிலாளி வர்க்கம் என்ற முறையில் தமது நிலை என்ன என்பது குறித்து அறிவொளி பெற வேண்டிய தேவை அதிக மாகிறது, அவர்களிடையே சோஷலிஸ்டு இயக்கம் பரவு கின்றது, **அறிக்கையின்** தேவையும் அதிகரிக்கின்றது. இவ் விதம் அந்தந்த நாட்டிலும் தொழிலாளர் இயக்கத்தின் நிலையை மட்டுமின்றி, பெருவீதத் தொழில் துறையினது வளர்ச்சி நிலையையும்கூட, அந்நாட்டு மொழியில் வினி யோகமாகின்ற **அறிக்கையின்** பிரதிகளது எண்ணிக்கையைக் கொண்டு பெருமளவுக்குச் சரியான படி அளவிட முடி கின்றது.

புதிய போலிஷ் பதிப்பு இவ்வாறு போலிஷ் தொழில் துறையானது குறிப்பிடத்தக்கவாறு முன்னேற்றம் கண்டிருப் பதைச் சுட்டிக் காட்டுவதாய் உள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு முந்திய பதிப்பு வெளிவந்தபின் இந்த முன்னேற்றம் மெய்யாகவே ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. ருஷ்யப் போலந்து, காங்கிரஸ் போலந்து,[51] ருஷ்ய முடிப்பேரரசின் பெரிய தொழிற் பிராந்தியமாகியிருக் கிறது. ருஷ்யாவின் பெருவீதத் தொழில் துறை அங்கு மிங்குமாய் சிதறுண்டு காணப்படுகிறது—ஒரு பகுதி பின் லாந்து வளைகுடாவைச் சுற்றிலும், இன்னொன்றுமையப் பிரி விலும் (மாஸ்கோவிலும் விளதீமிரிலும்), மூன்றாவது ஒன்று கருங்கடல், அஸோவ் கடல் கரையோரங்களிலும், மற்றும் சில பகுதிகள் வேறு இடங்களிலுமாய் அமைந்திருக்கிறது. ஆனால் போலந்தின் தொழில் துறை இவ்வாறன்றி ஒப்பள வில் சிறிய பரப்பில் நெரிசலாய் அமைந்து, இந்த ஒன்று குவிந்த நிலையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒருங்கே அனுபவிக்கிறது. போட்டியிடும் ருஷ்யத் தொழிலதி பர்கள் போலிஷ்காரர்களை ருஷ்யர்களாக்குவதில் தமக்குள்ள ஆர்வத்தையும் மீறி போலந்துக்கு எதிராய்க் காப்புச் சுங்க வரிகள் வேண்டுமெனக் கோரியதன் மூலம் இந்த அனுகூலங்

கள் இருப்பதை ஒப்புக் கொண்டார்கள். பிரதிகூலங்கள்—போலிஷ் தொழிலதிபர்களுக்கும் மற்றும் ருஷ்ய அரசாங்கத்துக்கும்—இருப்பதானது, போலிஷ் தொழிலாளர்களிடையே சோஷலிசக் கருத்துகள் வேகமாய்ப் பரவுவதிலும் அறிக்கையிற்கு இருக்கும் கிராக்கி பெருகிச் செல்வதிலும் காணக்கிடக்கிறது.

ருஷ்யத் தொழில் துறை வளர்ச்சியை விஞ்சிச் செல்லும் படியான வேகத்தில் போலிஷ் தொழில் துறை வளர்ச்சியானது, போலிஷ் மக்களுடைய வற்றாத ஜீவசக்திக்கு ஒரு புதிய நிரூபணமாவதோடு, போலந்தின் தேசிய மீட்சி விரைவில் நடந்தேறப் போகிறது என்பதற்கு ஒரு புதிய உத்தரவாதமும் ஆகிறது. வலுமிக்க சுதந்திரப் போலந்து மீட்சியுற்று எழ வேண்டியது போலிஷ்காரர்களுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே அக்கறைக்குரியதாகும். ஐரோப்பியத் தேசம் ஒவ்வொன்றும் அதன் சொந்த வீட்டில் முழு அளவுக்குத் தன்னுட்சி செலுத்துவதாய் இருந்தால்தான் ஐரோப்பியத் தேசங்களிடையே உளப் பூர்வமான சர்வதேச ஒத்துழைப்பு சாத்தியமாகும். 1848ஆம் ஆண்டுப் புரட்சி, பாட்டாளி வர்க்கக் கொடியின் கீழ் நடைபெற்றுலும் பாட்டாளி வர்க்கப் போர் வீரர்களை முதலாளித்துவ வர்க்கத்தாரின் வேலையை மட்டுமே செய்ய இடமளித்த இந்தப் புரட்சி, அதன் இறுதி விருப்ப ஆவணத்தை நிறைவேற்றியவர்களான லுயீ போனப்பார்த், பிஸ்மார்க் இவர்கள் மூலம் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் ஹங்கேரிக்கும் சுதந்திரம் கிடைக்கச் செய்தது. ஆனால் புரட்சிக்கு இம்மூன்று நாடுகளும் சேர்ந்து செய்ததைக் காட்டிலும் அதிகமாய் 1792 முதலாய்ச் சேவை புரிந்துள்ள போலந்து அதன் சொந்த சக்தியைச் சார்ந்திருக்கும்படி தனியே விடப்பட்டது, 1863ல் அது தன்னிலும் பத்து மடங்கு கூடுதலான ருஷ்யப் படைகளுக்குப் பணிய வேண்டியதாயிற்று.[52] போலிஷ் பிரபுக் குலத்தோரால் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் முடியவில்லை, மீட்கவும் முடியவில்லை. குறைந்த பட்சமாய்ச் சொல்வதெனில் இன்று முதலாளித்துவ வர்க்கத்துக்கு இந்தச் சுதந்திரம் குறித்து கவலையில்லை. எனினும் ஐரோப்பியத் தேசங்கள்

இசைவுடன் ஒத்துழைப்பதற்குப் போலந்தின் சுதந்திரம் இன்றியமையாதது.* போலந்தின் இளம் பாட்டாளி வர்க்கத்தால் தான் இந்த சுதந்திரத்தைப் பெற முடியும், அதன் கரங்களில்தான் இந்த சுதந்திரம் பாதுகாப்புடன் இருக்க முடியும். போலந்துத் தொழிலாளர்களுக்குப் போலந்தின் சுதந்திரம் எவ்வளவு அவசியமோ அதே அளவுக்கு அது ஐரோப்பாவின் ஏனைய எல்லாப் பகுதிகளிலுமுள்ள தொழிலாளர்களுக்கும் அவசியமாகும்.

பி. எங்கெல்ஸ்

லண்டன், 1892, பிப்ரவரி 10

*Przedświt* எனும் சஞ்சிகையிலும், (இதழ் 35, 1892ல் பிப்ரவரி 27) K. Marx i F. Engels. *Manifest Komunistyczny*. Londyn, 1892 எனும் நூலிலும் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

## 1893ஆம் ஆண்டு இத்தாலியப் பதிப்பின் முகவுரை

இத்தாலிய வாசகருக்கு

கம்யூனிடுஸ்க் கட்சி அறிக்கை வெளியான நிகழ்ச்சியானது, மிலானிலும் பெர்லினிலும் புரட்சிகள் நடைபெற்ற 1848 மார்ச் 18ஆம் நாளுடன் ஒன்றித்து நடந்தேறியதாய்ச் சொல்லலாம். மிலானிலும் பெர்லினிலும் நடைபெற்ற புரட்சிகள், ஒன்று ஐரோப்பா கண்டத்தின் மையத்திலும் மற்ருென்று மத்தியதரைக் கடற் பிரதேசத்தின் மையத்திலுமாய் அமைந்த இரு தேசங்களது ஆயுதமேந்திய எழுச்சிகளாகும். இரு தேசங்களும் அதுகாறும் பிளவுபட்டு உட்பூசலால் நலிவுற்று அதன் பலனுய் அன்னிய ஆதிக்கத்தில் இருத்தப்பட்டுக் கிடந்தவை. இத்தாலியானது ஆஸ்திரியாவின்

* போலந்தின் பதிப்பில் இவ்வாசகம் இல்லே.—ப-ர்

பேரரசனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்க, ஜெர்மனியானது இதனிலும் மறை முகமானதாயினும் வினைவலிமையில் குறைவாயிராத ஆதிக்கமாகிய அனைத்து ருஷ்யாவின் ஜார் மன்னனது ஆதிக்கத்தில் இருத்தப்பட்டிருந்தது. 1848 மார்ச் 18ன் விளைவுகள் இத்தாலியையும் ஜெர்மனியையும் இந்த அவக்கேட்டிலிருந்து விடுவித்தன. இம்மாபெரும் இரு தேசங் களும் 1848க்கும் 1871க்கும் இடையே மீட்டமைக்கப் பெற்று தன்னுரிமையோடு மீண்டும் எழ முடிந்ததெனில், கார்ல் மார்க்ஸ் அடிக்கடி கூறியது போல், 1848ஆம் ஆண்டுப் புரட்சியை அடக்கியவர்கள் தம்மையும் மீறி இந்தப் புரட்சியின் இறுதி விருப்ப ஆவணத்தை நிறைவேற்ற வேண்டி வந்ததே அதற்குக் காரணமாகும்.

எங்கும் அந்தப் புரட்சி தொழிலாளி வர்க்கம் புரிந்த செயலாகவே இருந்தது, தெருவில் தடுப்பரண்கள் அமைத்து உயிர் இரத்தத்தையும் அளித்துப் போராடியது தொழிலாளி வர்க்கம் தான். ஆனால் பாரிஸ் தொழிலாளர்கள் மட்டும் தான் அரசாங்கத்தை வீழ்த்துகையில் முதலாளித்துவ ஆட்சியமைப்பை வீழ்த்திடும் திட்டவட்டமான நோக்கம் கொண்டோராய் இருந்தார்கள். தமது வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலுள்ள ஜென்மப் பகையை அவர்கள் உணர்ந்திருப்பினும்கூட, நாட்டின் பொருளாதார முன்னேற்றமோ, பிரெஞ்சுத் தொழிலாளர் களில் பெருந் திரளானோரின் அறிவுத்துறை வளர்ச்சியோ சமுதாயப் புத்தமைப்பைச் சாத்தியமாக்கக் கூடிய கட்டத் தினை இன்னமும் வந்தடைந்துவிடவில்லை. ஆகவே இறுதியில் புரட்சியின் பலன்களை முதலாளித்துவ வர்க்கம் வசப்படுத்திக் கொண்டு விட்டது. பிற நாடுகளாகிய இத்தாலியிலும் ஜெர் மனியிலும் ஆஸ்திரியாவிலும் ஆரம்பத்திலிருந்தே தொழி லாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தை உயர்த்தி ஆட்சியதி காரத்தில் அமர்த்துவதை அன்றி எதுவும் செய்யவில்லை. தேச சுதந்திரம் பெறாமல் எந்த நாட்டிலும் முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியதிகாரம் பெறுவது சாத்தியமன்று. எனவே 1848ஆம் ஆண்டுப் புரட்சி அதுகாறும் ஒற்றுமையும் தன்னாட்சியும் பெறாதிருந்த தேசங்களுக்கு இவை கிடைக்கச்

செய்தாக வேண்டியிருந்தது. இத்தாலியும் ஜெர்மனியும் ஹங்கேரியும் இவ்வாறுதான் இவற்றைப் பெற்றுக் கொண்டன. அடுத்து போலந்தும் இவற்றைப் பெற்றுக் கொள்ளும்.

1848ஆம் ஆண்டுப் புரட்சி இவ்விதம் சோஷலிசப் புரட்சியாய் இருக்கவில்லை; ஆயினும் அது சோஷலிசப் புரட்சிக்குப் பாதையைச் செப்பனிட்டது. எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ ஆட்சியமைப்பு பெருவீதத் தொழில் துறைக்குத் தூண்டுதல் அளித்ததன் மூலம் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளில் எங்கும் மிகுந்த எண்ணிக்கையுடையதாய், ஒன்று குவிந்திருக்கும், சக்தி மிக்கதான பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இவ்வாறு அது, அறிக்கையின் சொற்களில் சொல்வோமாயின், தனக்குச் சவக்குழி தோண்டுவோரை எழச் செய்திருக்கிறது. ஒவ்வொரு தேசத்துக்கும் தன்னாட்சியையும் ஐக்கியத்தையும் மீட்டளிக்காமல் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையை உண்டாக்குவதோ, பொது நோக்கங்களுக்காக இந்தத் தேசங்களிடையே சமாதான வழிப்பட்ட அறிவார்ந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதோ முடியாத காரியம். 1848க்கு முன்பிருந்த அரசியல் நிலைமைகளில் இத்தாலிய, ஹங்கேரிய, ஜெர்மன், போலிஷ், ருஷ்யத் தொழிலாளர்கள் கூட்டாய்ச் சர்வதேச நடவடிக்கை எடுத்திருக்க முடியுமென நினைப்பதும்கூட, சாத்தியம் அல்லவே!

ஆகவே, 1848ல் புரியப்பட்ட போர்கள் வீணாகிவிடவில்லை. அந்தப் புரட்சி சகாப்தத்துக்குப் பின் கடந்து சென்ற நாற்பத்தைந்து ஆண்டுகளும் வீணில் கழிந்து விரயமாகிவிடவில்லை. இவற்றின் பலன்கள் முற்றிப் பக்குவமடைந்து வருகின்றன. நான் விரும்புவது எல்லாம், முன்பு மூல மொழிப்பதிப்பு சர்வதேசப் புரட்சிக்குக் கட்டியங் கூறுவதாய் அமைந்தது போல், இப்போது இந்த இத்தாலிய மொழிபெயர்ப்பு இத்தாலியத் தொழிலாளிவர்க்கத்தின் வெற்றிக்குக் கட்டியங் கூறுவதாய் இருத்தல் வேண்டும் என்பதுதான்.

கடந்த காலத்தில் முதலாளித்துவம் ஆற்றிய புரட்சிகரப் பங்கினை அறிக்கை தக்கச் சிறப்புடன் எடுத்துரைக்கிறது. இத்தாலிதான் முதலாவது முதலாளித்துவ தேசம். பிரபுத்

துவ மத்திய காலத்தின் இறுதியையும் நவீன முதலாளித் துவச் சகாப்தத்தின் துவக்கத்தையும் குறிப்பனவாய் விசுவ உருவம் தரிந்து நிற்கும் மாமனிதன் ஓர் இத்தாலியன், மத்திய காலத்தின் கடைசிக் கவிஞனும் நவீன காலத்தின் முதற் கவிஞனுமான தாந்தே என்பான். 1300ஆம் ஆண்டைப் போலவே இன்றும் ஒரு புதிய வரலாற்றுச் சகாப்தம் நெருங்கி வருகின்றது. இந்தப் புதிய, பாட்டாளி வர்க்கச் சகாப் தத்தைக் குறிப்பவனாய் ஒரு புதிய தாந்தேயை இத்தாலி நமக்கு அளிக்குமா?

பிரெடெரிக் எங்கெல்ஸ்

*லண்டன், 1893, பிப்ரவரி 1*

Karlo Marx e Federico Engels. *Il Manifesto del Partito Comunista*. Milano, 1893 எனும் நூலில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. பிரெஞ்சு மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது

# கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை

ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம்—கம்யூனிசம் என்னும் பூதம். போப்பாண்டவரும் ஜாரரசனும், மெட்டர் னிகும் கிசோவும், பிரெஞ்சுத் தீவிரவாதிகளும் ஜெர்மன் உளவாளிகளுமாய், பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத் தும் இந்தப் பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றன.

ஆட்சியிலுள்ள தனது எதிராளிகளால் கம்யூனிஸ்டு என்று ஏசப்படாத எதிர்க் கட்சி எங்கேனும் உண்டா? கம்யூனிசம் என்று இடித்தரைத்துத் தன்னிலும் முன்னேறிய எதிர்த்தரப்பாருக்கும், மற்றும் பிற்போக்கான தனது எதி ராளிகளுக்கும் பதிலடி கொடுக்காத எதிர்க் கட்சிதான் உண்டா?

இரண்டு முடிவுகள் இவ்வுண்மையிலிருந்து எழுகின்றன:

1. கம்யூனிசமானது ஒரு தனிப்பெரும் சக்தியாகிவிட் டதை ஐரோப்பிய சக்திகள் அனைத்தும் ஏற்கெனவே ஏற்றுக் கொண்டுவிட்டன.

2. பகிரங்கமாய் அனைத்து உலகும் அறியும் வண்ணம் கம்யூனிஸ்டுகள் தமது கருத்துக்களையும் தமது நோக்கங்களை யும் தமது போக்குகளையும் வெளியிட்டு, நேரடியாய்க் கட்சி யின் அறிக்கை மூலம் கம்யூனிசப் பூதமெனும் இந்தக் குழந்தைப் பிள்ளைக் கதையை எதிர்க்க வேண்டிய தருணம் வந்து விட்டது.

இந்த நோக்கத்துடன், பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் லண்டனில் கூடி, அடியிற் கண்ட அறிக்கையை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி யன், ஃபிளெமிஷ், டேனிஷ் மொழிகளில் வெளியிடுவதற் காக வகுத்திட்டனர்.

I

## முதலாளிகளும் பாட்டாளிகளும்*

இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும்** வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்.

---

* இக்காலத்து முதலாளிகளாகிய முதலாளித்துவ வர்க்கத்தார் [பூர்ஷுவா வர்க்கத்தார்] சமூகப் பொருளுற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள், கூலி உழைப்பை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறவர்கள். இக்காலத்துக் கூலித் தொழிலாளர்களது வர்க்கமே பாட்டாளி வர்க்கம் எனப்படுவது; இத்தொழிலாளர்கள் சொந்தத்தில் தம்மிடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாத காரணத்தால் தமது உழைப்பு சக்தியை [labour power] விற்று வாழ்க்கை நடத்தும் படி தாழ்த்தப்பட்டிருக்கிறவர்கள். [1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]

** அதாவது, ஏட்டிலேறிய வரலாறு அனைத்தும். வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, எழுத்தில் பதிவாகியுள்ள வரலாற்றுக்கு முன்பு நிலவிய சமூக ஒழுங்கமைப்பு குறித்து, 1847ல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு, ஹாக்ஸ்த்ஹாவுசன் ருஷ்யாவில் நிலம் பொதுவுடைமையாய் இருந்ததென்று கண்டுபிடித்தார்; டியூட்டானிய இனங்கள் யாவுமே நிலத்திலான பொதுவுடைமையாகிய இந்தச் சமூக அடித்தளத்திலிருந்துதான் வரலாற்றை ஆரம்பித்தன என்று மெளரர் நிரூபித்துக் காட்டினர்; இந்தியாவிலிருந்து ஐயர்லாந்து வரை எங்குமே நிலத்தைப் பொதுவுடைமையாய்க் கொண்ட கிராம சமுதாயங்கள்தான் சமுதாயத்தின் புராதன ஆதி வடிவமாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாவட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றுக்கு எல்லாம் மணிமுடி வைத்தாற் போல், கணம் என்பதன் மெய்யான தன்மையையும் அதற்கும் பூர்வகுடிக்குமுள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்ததானது, இந்தப் புராதனக் கம்யூனிச சமுதாயத்தின்

சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீஷிய உயர் குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும்* கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப் பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடையறுப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று.

வரலாற்றின் முந்திய சகாப்தங்களில் அனேகமாய் எங்குமே பல்வேறு வகுப்புகளாலாகிய சிக்கலான சமூகப் பாகுபாடு, சமூக அந்தஸ்தின் பன்மடிப் படிநிலை அமைவு இருக்கக் காண்கிறோம். பண்டைய ரோமாபுரியில்: சீமான்கள், வீரமறவர், பாமரக் குடியோர், அடிமைகள்; மத்திய காலத்தில்: பிரபுத்துவக் கோமான்கள், மான்யக்காரர்கள், கைவினைச் சங்க ஆண்டான்கள், கைவினைப் பணியாளர்கள், பண்ணையடிமைகள். இந்த வகுப்புகளில் அனேகமாய் ஒவ்வொன்றிலும் படிநிலை உட்பிரிவுகளும் இருக்கக் காண்கிறோம்.

பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்

---

உள்ளமைப்பை அதன் தூய வகையிலான வடிவில் தெளிவாய்ப் புலப்படுத்திற்று. இந்தப் புராதன சமுதாயங்களின் சிதைவைத் தொடர்ந்து சமுதாயமானது பாகுபாடுற்றுத் தனித்தனியான, முடிவில் ஒன்றுக்கொன்று பகைமையான வர்க்கங்களாய்ப் பிரிய முற்படுகிறது. இந்தச் சிதைவு நடந்தேறிய நிகழ்ச்சிப்போக்கினை *Der Ursprung der Familie, Des Privateigentums und des Staats* [''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்''] என்ற நூலில் (இரண்டாம் பதிப்பு, ஷ்டுட்கார்ட், 1886) நான் விவரித்துக் காட்ட முயன்றிருக்கிறேன். **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**[53]

* கைவினைச் சங்க ஆண்டான் [guild-master], அதாவது கைவினைச் சங்கத்தின் முழு உறுப்பினன், இச்சங்கத்துக்கு உட்பட்டுள்ள ஆண்டான்; இதன் தலைவனல்ல. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

தெழுந்துள்ள தற்கால முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டி விடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்கிறதே அன்றி வேறில்லை.

ஆயினும் நமது சகாப்தமாகிய இந்த முதலாளித்துவ வர்க்கச் சகாப்தத்தின் ஒரு தனி இயல்பு என்னவெனில், வர்க்கப் பகைமைகளை இது சுருக்கி எளிமையாக்கியுள்ளது: சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இரு பெரும் வர்க்கங்களாய்—முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய்—பிளவுண்டு வருகிறது.

மத்திய காலத்துப் பண்ணையடிமைகளிடமிருந்து ஆதி நகரங்களின் சுதந்திர நகரத்தார் உதித்தெழுந்தார்கள். இந்த நகரத்தாரிடமிருந்து முதலாளித்துவ வர்க்கத்தின் ஆரம்பக் கூறுகள் வளரலாயின.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதாலும், ஆப்பிரிக்க நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்லும் கடல்வழி கண்டறியப்பட்டதாலும், தலைதூக்கி வந்த முதலாளித்துவ வர்க்கத்துக்குப் புதிய வாய்ப்புகள் கிடைத்தன. கிழக்கு இந்திய, சீனச் சந்தைகள், அமெரிக்காவில் குடியேற்றம், காலனிகளுடனான வாணிபம், பரிவர்த்தனைச் சாதனங்களிலும் பொதுவாய்ப் பரிவர்த்தனைப் பண்டங்களிலும் ஏற்பட்ட பெருக்கம் ஆகிய இவை எல்லாம் வாணிபத்துக்கும் கப்பல் போக்குவரத்துக்கும் தொழில் துறைக்கும் இதன்முன் என்றும் கண்டிராத அளவுக்கு ஊக்கமூட்டின; ஆட்டங்கண்டுவிட்ட பிரபுத்துவ சமுதாயத்தில் புரட்சிகரக் கூறு வேகமாய் வளர்வதற்கு இவ்விதம் இவை தூண்டுதல் அளித்தன.

பிரபுத்துவ முறையில் அமைந்த தொழில் அமைப்பில் தொழிற் பண்டங்களது உற்பத்தியானது தனியுரிமை பெற்ற கைவினைச் சங்கங்களின் ஏகபோகமாய் இருந்தது. இப்போது இந்தப் பிரபுத்துவத் தொழில் அமைப்பு புதிய சந்தைகளின் வளர்ந்து பெருகும் தேவைகளுக்கு ஒவ்வாததாகியது. இதன் இடத்தில் பட்டறைத் தொழில் முறை வளரலாயிற்று.

கைவினைச் சங்க ஆண்டான்களைப் பட்டறைத் தொழில் மத்தியதர வர்க்கத்தார் அப்புறப்படுத்தினர். பல்வேறு கூட்டிணைவுகளாய் அமைந்த கைவினைச் சங்கங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினை தனித்தனி தொழிலகத்திலுமான உழைப்புப் பிரிவினையின் முன்னால் நிற்க முடியாமல் மறைந்தொழிந்தது.

இதற்கிடையில் சந்தைகள் தொடர்ந்து மென்மேலும் வளர்ந்து விரிவடைந்தன, தேவை மென்மேலும் உயர்ந்து சென்றது. பட்டறைத் தொழில் முறையுங்கூட இப்போது போதாததாகியது. இந்நிலையில் தான் நீராவியும் இயந்திரங்களும் தொழிற் பண்டங்களின் உற்பத்தியில் புரட்சியை உண்டாக்கின. பட்டறைத் தொழில்முறை போய் அதனிடத்தில் பிரம்மாண்டமான நவீனத் தொழில் துறை எழுந்தது; பட்டறைத் தொழில் மத்தியதர வர்க்கத்தாரின் இடத்தில் கோடீஸ்வரத் தொழிலதிபர்கள், பெரும் பெரும் தொழில் துறைப் பொருளுற்பத்திச் சேனைகளது அதிபதிகள், தற்காலத்து முதலாளிகள் உருவாயினர்.

நவீனத் தொழில் துறை அனைத்து உலகச் சந்தையை நிறுவியிருக்கிறது; அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதானது இதற்குப் பாதையைச் செப்பனிட்டது. வாணிபத்தையும் கடல்வழிப் போக்குவரத்தையும் நிலவழிப் போக்குவரத்தையும் அனைத்து உலகச் சந்தை பிரமாதமாய் வளரச் செய்திருக்கிறது. இந்த வளர்ச்சி அதன் பங்கிற்கு மீண்டும் தொழில் துறையின் விரிவகற்சியை ஊக்குவித்தது. எந்த அளவுக்குத் தொழில் துறையும் வாணிபமும் கப்பல் போக்குவரத்தும் ரயில்பாதைகளும் விரிவடைந்து சென்றனவோ, அதே அளவுக்கு முதலாளித்துவ வர்க்கமும் வளர்ச்சியுற்று ஓங்கிற்று, தனது மூலதனத்தைப் பெருகச் செய்து கொண்டது, மத்திய காலம் விட்டுச் சென்றிருந்த ஒவ்வொரு வர்க்கத்தையும் பின்னிலைக்குத் தள்ளிற்று.

இவ்வாறு, நவீன முதலாளித்துவ வர்க்கம் நீண்டதொரு வளர்ச்சிப் போக்கின் விளைவாய், உற்பத்தி முறைகளிலும் பரிவர்த்தனை முறைகளிலும் வரிசையாய் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாய் உருவானதே என்பதைக் காண்கிறோம்.

முதலாளித்துவ வர்க்கம் அதனுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கும் ஏற்றவாறு அரசியல் வெற்றிகளும் அடைந்தது. பிரபுத்துவக் கோமான்களது ஆதிக்கத்தில் ஒடுக்கப்பட்ட ஒரு வகுப்பாகவும், மத்திய காலக் கம்யூனில்* ஆயுதமேந்திய தன்னாட்சிக் கழகமாகவும் இருந்தது; இங்கே (இத்தாலியிலும் ஜெர்மனியிலும் காணப்பட்டது போல) சுயேச்சை நகரக் குடியரசாகவும், அங்கே (பிரான்சில் காணப்பட்டது போல) வரிக்குரிய ''மூன்றாவது ஆதீன''மாகவும் விளங்கிற்று; பிற்பாடு பட்டறைத் தொழில் மேலோங்கிய காலத்தில் பிரபுத்துவக் கோமான்களுக்கு எதிராய் அரைப் பிரபுத்துவ முடியரசுக்கோ, வரம்பிலா முடியரசுக்கோ துணை நின்றது, மொத்தத்தில் முடிப் பேரரசுகளுக்கு ஆதாரத் தூணாயிற்று; முடிவில் நவீனத் தொழில் துறையும் அனைத்து உலகச் சந்தையும் நிறுவப்பட்டதும் தனக்கு நவீன காலப் பிரதிநிதித்துவ அரசினில் ஏகபோக அரசியல் ஆதிக்கம் வென்று கொண்டது. நவீன கால அரசின் ஆட்சியதிகாரமானது முதலாளித்துவ வர்க்கம் அனைத்துக்குமான பொது விவகாரங்களை நிர்வகிக்கும் குழுவே அன்றி வேறல்ல.

வரலாற்று அரங்கில் முதலாளித்துவ வர்க்கம் மிகவும் புரட்சிகரமான பங்கு ஆற்றியிருக்கிறது.

---

* ''கம்யூன்'' என்பது பிரெஞ்சு நாட்டில் உதித்தெழுந்து வந்த நகரங்கள், அவற்றின் பிரபுத்துவக் கோமான்களிடமிருந்தும் ஆண்டான்களிடமிருந்தும் வட்டாரத் தன்னாட்சியும் அரசியல் உரிமைகளும் வென்று ''மூன்றாவது ஆதீனம்'' ["Third Estate"] ஆகும் முன்னரே தமக்கு இட்டுக் கொண்ட பெயராகும். பொதுவாய் இங்கு முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இங்கிலாந்தும், அதன் அரசியல் வளர்ச்சிக்கு பிரான்சும் மாதிரி நாடுகளாய்க் கொள்ளப்படுகின்றன. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

**கம்யூன்**—இத்தாலியிலும் பிரான்சிலும் நகரவாசிகள் தன்னாட்சிக்கான முதலாவது உரிமைகளைத் தமது பிரபுத்துவக் கோமான்களிடமிருந்து விலை கொடுத்தோ, போராடியோ பெற்ற பிறகு தமது நகர சமுதாயங்களுக்கு இட்டுக் கொண்ட பெயர். **[1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

எங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் ஆதிக்க நிலை பெற்றதோ, அங்கெல்லாம் அது எல்லாப் பிரபுத்துவ உறவுகளுக்கும், தந்தைவழிச் சமுதாய உறவுகளுக்கும், கிராமாந்திரப் பாரம்பரிய உறவுகளுக்கும் முடிவு கட்டியது. மனிதனை ''இயற்கையாகவே மேலானோருக்குக்'' கீழ்ப்படுத்திக் கட்டிப் போட்ட பல்வேறு வகையான பிரபுத்துவ பந்தங்களையும் ஈவிரக்கமின்றி அறுத்தெறிந்துவிட்டு, மனிதனுக்கும் மனிதனுக்கும் அப்பட்டமான தன்னலத்தைத் தவிர, பரிவு உணர்ச்சியில்லாப் ''பணப் பட்டுவாடா''வைத் தவிர வேறு—ஒட்டுமில்லை உறவுமில்லை என்றாக்கிற்று. சமயத் துறைப் பக்திப் பரவசம், பேராண்மையின் வீராவேசம், சிறுமதியோராது உணர்ச்சிப் பசப்பு ஆகிய புனிதப் பேரானந்தங்களை எல்லாம் தன்னலக் களிப்பெனும் உறைபனிக் குளிர் நீரில் மூழ்கடித்துள்ளது. மனிதனது மாண்பினைப் பரிவர்த்தனை மதிப்பாய் மாற்றியிருக்கிறது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விலக்கவோ துறக்கவோ முடியாத எண்ணிலடங்காச் சுதந்திரங்களுக்குப் பதிலாய், வெட்கங்கெட்ட வாணிபச் சுதந்திரமெனும் ஒரேயொரு சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. சுருங்கச் சொல்வதெனில் சமயத்துறைப் பிரமைகளாலும் அரசியல் பிரமைகளாலும் திரையிட்டு மறைக்கப்பட்ட சுரண்டலுக்குப் பதிலாய், முதலாளித்துவ வர்க்கம் வெட்க உணர்ச்சியற்ற அம்மணமான, நேரடியான, மிருகத்தனமான சுரண்டலை நிலைநாட்டியிருக்கிறது.

இதுகாறும் போற்றிப் பாராட்டப்பட்டு, பணிவுக்கும் பக்திக்குமுரியதாய்க் கருதப்பட்ட ஒவ்வொரு பணித் துறையையும் முதலாளித்துவ வர்க்கம் மகிமை இழக்கச் செய்துள்ளது. மருத்துவரையும் வழக்கறிஞரையும் சமய குருவையும் கவிஞரையும் விஞ்ஞானியையும் அது தனது கூலியுழைப்பாளர்கள் ஆக்கிவிட்டது.

குடும்பத்திடமிருந்து முதலாளித்துவ வர்க்கம் அதன் உணர்ச்சி நய முகத்திரையைக் கிழித்தெறிந்து, குடும்ப உறவை வெறும் காசுபண உறவாய்ச் சிறுமையுறச் செய்து விட்டது.

பிற்போக்கர்கள் போற்றிப் பாராட்டுகிருர்களே மத்திய காலத்துப் பேராண்மையின் முரட்டுக் கூத்து, அது எவ்வளவு மூடத்தமான செயலின்மையைத் தனது உற்ற துணையாய்க் கொண்டிருந்தது என்பதை முதலாளித்துவ வர்க்கம் நிதர்சனமாக்கியிருக்கிறது. மனிதச் செயற்பாடு என்னவெல்லாம் செய்ய வல்லது என்பதை முதன்முதலாய்த் தெரியப்படுத்தியது முதலாளித்துவ வர்க்கம்தான். எகிப்திய பிரமிடுகளையும் ரோமானியக் கட்டுக்கால்வாய்களையும் கோதிக் தேவாலயங்களையும் மிஞ்சிய மாபெரும் அதிசயங்களை அது சாதித்திருக்கிறது; முற்காலத்துக் குடிப் பெயர்ச்சிப் பயணங்களும் சிலுவைப் போர்ப் பயணங்களும்[54] அற்ப காரியங்களாய்த் தோன்றும்படியான தீரப் பயணங்களை நடத்தியிருக்கிறது.

முதலாளித்துவ வர்க்கத்தால் ஓயாது ஒழியாது உற்பத்திக் கருவிகளிலும், இதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும், இவற்றுடன் கூடவே சமூக உறவுகள் அனைத்திலுமே புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தாமல் வாழ முடியாது. ஆனால் இதற்கு முந்திய தொழில் வர்க்கங்களுக்கு எல்லாம் பழைய உற்பத்தி முறைகளை மாற்றமில்லா வடிவில் அப்படியே பாதுகாத்துக் கொள்வதுதான் வாழ்வதற்குரிய முதலாவது நிபந்தனையாய் இருந்தது. ஓயாது ஒழியாது உற்பத்தியில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்களும் சமூக உறவுகள் யாவும் இடையருது அமைதி குலைதலும் முடிவே இல்லாத நிச்சயமற்ற நிலைமையும் கொந்தளிப்பும் முதலாளித்துவச் சகாப்தத்தை அதற்கு முந்திய எல்லாச் சகாப்தங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. நிலையான, இறுகிக் கெட்டிப்பிடித்துப் போன எல்லா உறவுகளும், அவற்றுடன் இணைந்த பழங்காலத் தப்பெண்ணங்களும் கருத்துகளும் துடைத்தெறியப்படுகின்றன, புதிதாய் உருவாகியவை எல்லாம் இறுகிக் கெட்டியாவதற்கு முன்பே பழமைப்பட்டுவிடுகின்றன. கெட்டியானவை யாவும் கரைந்து காற்றிலே கலக்கின்றன, புனிதமானவை யாவும் புனிதம் இழக்கின்றன, முடிவில் மனிதன் தெளிந்த புத்தியுடன் தனது வாழ்க்கையின் மெய்யான நிலைமைகளையும் தனது சக மனிதர்களுடன்

தனக்குள்ள உறவுகளையும் நேர்நின்று உற்று நோக்க வேண்டியதாகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் உற்பத்திப்பொருள்களுக்குத் தொடர்ந்து மேலும் மேலும் விரிவடைந்து செல்லும் சந்தை அவசியமாகும். இந்த அவசியம் முதலாளித்துவ வர்க்கத்தைப் புவிப்பரப்பு முழுதும் செல்லும்படி விரட்டுகிறது. அது எல்லா இடங்களுக்கும் சென்று ஒட்டிக் கொள்ள வேண்டியதாகிறது, எல்லா இடங்களிலும் குடியேற வேண்டியதாகிறது, எல்லா இடங்களிலும் தொடர்புகள் நிறுவிக் கொள்ள வேண்டியதாகிறது.

அனைத்து உலகச் சந்தையைப் பயன்படுத்திச் செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியையும் நுகர்வையும் அனைத்துலகத் தன்மை பெறச் செய்திருக்கிறது. பிற்போக்கர்கள் கடுங்கோபங் கொள்ளும்படி அது தொழில்களது காலுக்கு அடியிலிருந்து அவற்றின் தேசிய அடிநிலத்தை அகற்றியுள்ளது. நெடுங் காலமாய் நாட்டிலே இருந்துள்ள தொழில்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன, அல்லது நாள் தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களால் அவை அப்புறப்படுத்தப்படுகின்றன. இந்தப் புதிய தொழில்களைத் தோன்றச் செய்வது நாகரிக நாடுகள் யாவற்றுக்கும் ஜீவ மரணப் பிரச்சினையாகிவிடுகிறது. முன்பிருந்தவற்றைப் போல் இந்தப் புதிய தொழில்கள் உள்நாட்டு மூலப் பொருள்களை மட்டும் உபயோகிப்பவை அல்ல, தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து தருவிக்கப்படும் மூலப் பொருள்களை உபயோகிப்பவை. இவற்றின் உற்பத்திப் பொருள்கள் தாய்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டு எல்லாப் பகுதிகளிலும் நுகரப்படுகிறவை. தாய்நாட்டு உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்பட்ட பழைய தேவைகளுக்குப் பதில், தொலைதூர நாடுகள், மண்டலங்களது உற்பத்திப் பொருள்களால் பூர்த்தி செய்யப்படும் புதிய தேவைகள் எழுகின்றன. வட்டாரங்கள், நாடுகள் இவற்றின் பழைய ஒதுக்க நிலைக்கும் தன்னிறைவுக்கும் பதில், எல்லாத் திசைகளிலுமான நெருங்கிய தொடர்பும் உலக

அளவில் நாடுகளுக்கிடையிலான சார்புடைமையும் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தியில் எப்படியோ அப்படியே தான் அறிவுத் துறை உற்பத்தியிலும். தனித் தனி நாடுகளுடைய அறிவுத் துறைப் படைப்புகள் எல்லா நாடுகளுக்குமான பொதுச் சொத்தாகின்றன. தேசிய ஒரு தலைப்பட்ச பார்வையும் குறுகிய மனப்பாங்கும் மேலும் மேலும் இயலாதனவாகின்றன. நாட்டளவிலும் மண்டல அளவிலுமான எத்தனையோ பல இலக்கியங்களிலிருந்து ஓர் அனைத்துலக இலக்கியம் உருவாகின்றது.

உற்பத்திக் கருவிகள் அனைத்தின் அதிவேக அபிவிருத்தியின் மூலமும், போக்குவரத்துச் சாதனங்களின் பிரமாதமான மேம்பாட்டின் மூலமும் முதலாளித்துவ வர்க்கம் எல்லாத் தேசங்களையும், மிகவும் அநாகரிகக் கட்டத்தில் இருக்கும் தேசங்களையும்கூட, நாகரிக வட்டத்துக்குள் இழுக்கிறது. தன்னுடைய பண்டங்களின் மலிவான விலைகளை அது சக்திவாய்ந்த பீரங்கிகளாய்க் கொண்டு, சீன மதிலை ஒத்த எல்லாத் தடைமதில்களையும் தகர்த்திடுகிறது; அநாகரிகக் கட்டத்தில் இருப்போருக்கு அந்நியர்பால் உள்ள முரட்டுப் பிடிவாத வெறுப்பைப் பணிய வைக்கிறது. ஏற்காவிடில் அழியவே நேருமென்ற நிர்ப்பந்தத்தின் மூலம் அது எல்லாத் தேசங்களையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை ஏற்கச் செய்கிறது; நாகரிகம் என்பதாய்த் தான் கூறிக் கொள்வதைத் தழுவும்படி, அதாவது முதலாளித்துவமயமாகும்படி எல்லாத் தேசங்களையும் பலவந்தம் செய்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, அப்படியே தன்னை உரித்து வைத்தாற் போன்றதோர் உலகைப் படைத்திடுகிறது அது.

முதலாளித்துவ வர்க்கம் நாட்டுப்புறத்தை நகரங்களது ஆட்சிக்குக் கீழ்ப்படச் செய்துள்ளது, மாபெரும் நகரங்களை அது உதித்தெழ வைத்திருக்கிறது; கிராம மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் நகர மக்கள் தொகையை வெகுவாய் அதிகரிக்கச் செய்திருக்கிறது; இவ்விதம் மக்களில் ஒரு கணிசப் பகுதியோரை கிராம வாழ்க்கையின் மடமையிலிருந்து மீட்டிருக்கிறது. எப்படி அது நாட்டுப்புறத்தை நகரங்களைச் சார்ந்திருக்கச் செய்துள்ளதோ, அதே போல அநாகரிக

நிலையிலும் குறை நாகரிக நிலையிலுமுள்ள நாடுகளை நாகரிக நாடுகளையும், விவசாயிகளது நாடுகளை முதலாளிகளது நாடுகளையும், கிழக்கு நாடுகளை மேற்கு நாடுகளையும் சார்ந்திருக்கச் செய்துள்ளது.

மக்கள் தொகை, உற்பத்திச் சாதனங்கள், சொத்து இவற்றின் சிதறுண்ட நிலைக்கு முதலாளித்துவ வர்க்கம் மேலும் மேலும் முடிவு கட்டி வருகிறது. மக்கள் தொகையை அது அடர்ந்து திரட்சி பெறச் செய்திருக்கிறது, உற்பத்திச் சாதனங்களை மையப்படுத்தியிருக்கிறது, சொத்துகளை ஒரு சிலர் கையில் குவிய வைத்திருக்கிறது. இதன் தவிர்க்க வொண்ணாத விளைவு என்னவெனில், அரசியல் அதிகாரமும் மையப்படுத்தப்பட்டது. தனித்தனி நலன்களும் சட்டங்களும் அரசாங்கங்களும் வரிவிதிப்பு முறைகளும் கொண்டனவாய்ச் சுயேச்சையாகவோ, அல்லது தளர்ந்த இணைப்புடனோ இருந்த மாநிலங்கள் ஒரே அரசாங்கத்தையும் ஒரே சட்டத் தொகுப்பையும் தேச அளவிவான ஒரே வர்க்க நலனையும் ஒரே தேச எல்லையையும் ஒரே சுங்கவரி முறையும் கொண்ட ஒரே தேசமாய் ஒருசேர இணைக்கப்பட்டன.

முதலாளித்துவ வர்க்கம் ஒரு நூறுண்டுகூட நிறைவுறாத அதன் ஆட்சிக் காலத்தில், இதற்கு முந்திய எல்லாத் தலைமுறைகளுமாய்ச் சேர்ந்து உருவாக்கியதைக் காட்டிலும் மலைப்பு தட்டும்படியான பிரம்மாண்ட உற்பத்தி சக்திகளைப் படைத்தமைத்திருக்கின்றது. இயற்கை சக்திகளை மனிதனுக்கு அடிபணியச் செய்தல், இயந்திரச் சாதனங்கள், தொழில் துறையிலும் விவசாயத்திலும் இரசாயனத்தைப் பயன்படுத்தல், நீராவிக் கப்பல் போக்குவரத்து, ரயில்பாதைகள், மின்விசைத் தந்தி, முழுமுழு கண்டங்களைத் திருத்திச் சாகுபடிக்குச் செப்பனிடுதல், ஆறுகளைக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றவாய் ஒழுங்கு செய்தல், மனிதன் அடியெடுத்து வைத்திராத இடங்களில் மாயவித்தை புரிந்தாற் போல் பெரும் பெரும் தொகுதிகளிலான மக்களைக் குடியேற்றுவித்தல்—இம்மாதிரியான பொருளுற்பத்தி சக்திகள் சமூக உழைப்பின் மடியில் சயனம் புரியுமென இதற்கு முந்திய எந்த நூற்றுண்டாவது கனவிலும் நினைத்திருக்குமா?

ஆக நாம் காண்பது என்னவெனில்: முதலாளித்துவ வர்க்கம் உருப்பெற்று எழுவதற்கு அடிப்படையாய் இருந்த பொருளுற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்கள் பிரபுத்துவ சமுதாயத்தில் ஜனித்தவை. இந்தப் பொருளுற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், பிரபுத்துவ சமுதாயத்தின் பொருளுற்பத்தி, பரிவர்த்தனை உறவுகள், விவசாயத்துக்கும் பட்டறைத் தொழிலுக்குமான பிரபுத்துவ ஒழுங்கமைப்பு—சுருக்கமாய்ச் சொல்வதெனில் பிரபுத்துவச் சொத்துடைமை உறவுகள்—வளர்ச்சியுற்றுவிட்ட உற்பத்தி சக்திகளுக்கு ஒவ்வாதனவாயின; அவை பொருளுற்பத்திக்குப் பூட்டப்பட்ட கால் விலங்குகளாய் மாறின. அந்த விலங்குகளை உடைத்தெறிய வேண்டியிருந்தது; அவை உடைத்தெறிப்பட்டன.

அவற்றின் இடத்தில் தடையில்லாப் போட்டியும், அதனுடன் கூடவே அதற்குத் தகவமைந்த சமூக, அரசியல் அமைப்பும் முதலாளித்துவ வர்க்கத்தினுடைய பொருளாதார, அரசியல் ஆதிக்கமும் வந்தமர்ந்து கொண்டன.

இதைப் போன்றதோர் இயக்கம் இப்போது நம் கண்ணெதிரே நடைபெற்று வருகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி, பரிவர்த்தனை உறவுகளையும் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளையும் கொண்டதாகிய நவீன முதலாளித்துவ சமுதாயம், மாயவித்தை புரிந்து தோற்றுவித்தாற் போல் இவ்வளவு பிரம்மாண்டப் பொருளுற்பத்திச் சாதனங்களையும் பரிவர்த்தனைச் சாதனங்களையும் தோற்றுவித்திருக்கும் இச்சமுதாயம், பாதாள உலகிலிருந்து தனது மந்திரத்தின் வலிமையால் தருவித்த சக்திகளை அடக்கியாள முடியாமற் போன மந்திரவாதியின் நிலையில் இருக்கக் காண்கிறோம். கடந்த சில பத்தாண்டுகளது தொழில், வாணிப வரலாறே, நவீனப் பொருளுற்பத்தி சக்திகள் நவீனப் பொருளுற்பத்தி உறவுகளை எதிர்த்து, முதலாளித்துவ வர்க்கமும் அதனுடைய ஆதிக்கமும் நிலவுவதற்கு அவசியமான நிலைமைகளாகிய சொத்துடைமை உறவுகளை எதிர்த்துப் புரிந்திடும் கலகத்தின் வரலாறுதான் இதைத் தெளிவுபடுத்த, கால அலைவட்ட முறையில் திரும்பத் திரும்ப எழும்

வாணிப நெருக்கடிகளைக் குறிப்பிட்டால் போதும்—திரும்பத் திரும்ப எழுந்து, ஒவ்வொரு தரமும் முன்னிலும் அபாயகரமான முறையில் இந்நெருக்கடிகள் முதலாளித்துவ சமுதாயம் அனைத்தின் நிலவுதலை ஆட்சேபக் கேள்விக்குரிய தாக்குகின்றன. இந்த வாணிப நெருக்கடிகளின் போது ஒவ்வொரு தரமும் இருப்பிலுள்ள உற்பத்திப் பொருள்களில் மட்டுமின்றி, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உற்பத்தி சக்திகளிலும் ஒரு பெரும் பகுதி அழிக்கப்படுகிறது. இந்த நெருக்கடிகளின் போது, இதற்கு முந்திய எல்லாச் சகாப்தங்களிலும் அடி முட்டாள்தனமாய்த் தோன்றியிருக்கும் படியான ஒரு கொள்ளை நோய்—அமித உற்பத்தி என்னும் கொள்ளை நோய்—மூண்டு விடுகிறது. திடுமென சமுதாயம் பின்னோக்கி இழுக்கப்பட்டுச் சிறிது காலத்துக்குக் காட்டுமிராண்டி நிலையில் விடப்படக் காண்கிறோம். பெரும் பஞ்சம், சர்வநாச முழுநிறைப் போர் ஏற்பட்டு வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் எவையும் கிடைக்காதபடி செய்துவிட்டாற் போலாகிறது; தொழிலும் வாணிபமும் அழித்தொழிக்கப்பட்டுவிட்டதாய்த் தோன்றுகிறது—ஏன் இப்படி? ஏனென்றால் நாகரிகம் மிதமிஞ்சிவிட்டது, வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் அளவு மீறிவிட்டன, தொழிலும் வாணிபமும் எல்லை கடந்துவிட்டன. சமுதாயத்தின் வசமுள்ள உற்பத்தி சக்திகள் முதலாளித்துவச் சொத்துடைமை உறவுகளின் வளர்ச்சிக்கு இனி உதவுவதாய் இல்லை. மாறாக, அவை இந்த உறவுகளுக்குப் பொருந்தாத படி அளவுமீறி வலிமை மிக்கவையாகிவிட்டன, இந்த உறவுகள் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டன. பொருளுற்பத்தி சக்திகள் இந்தத் தடைகளைக் கடக்க முற்பட்டதும் அவை முதலாளித்துவ சமுதாயம் முழுமையிலும் குழப்பம் உண்டாக்குகின்றன, முதலாளித்துவச் சொத்துடைமை நிலவுதற்கே அபாயத்தை ஏற்படுத்துகின்றன. அவை உற்பத்தி செய்யும் செல்வத்துக்குத் தம்முள் இடம் போதாதபடி முதலாளித்துவச் சமூக உறவுகள் குறுகலாயிருக்கின்றன. இந்த நெருக்கடிகளை முதலாளித்துவ வர்க்கம் எப்படிச் சமாளிக்கிறது? ஒரு புறத்தில், வலுக்கட்டாயமாய் உற்பத்தி சக்தி

களில் ஒரு பெரும் பகுதியை அழிப்பதன் மூலமும், மறு புறத்தில் புதிய சந்தைகளை வென்று கைப்பற்றுவதன் மூலமும் பழைய சந்தைகளை இன்னும் அழுத்திப் பிழிவதன் மூலமும்—அதாவது மேலும் விரிவான, மேலும் நாசகரமான நெருக்கடிகளுக்கு வழி கோலுவதன் மூலமும் நெருக்கடிகளைத் தடுப்பதற்கான வழிதுறைகளைக் குறைப்பதன் மூலமும்.

எந்த ஆயுதங்களைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கம் பிரபுத்துவத்தை வீழ்த்திற்றோ, அதே ஆயுதங்கள் இப்பொழுது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்த் திருப்பப்படுகின்றன.

முதலாளித்துவ வர்க்கம் தன்னை அழித்தொழிக்கப் போகும் ஆயுதங்களை வார்த்தெடுத்திருப்பதோடு அன்னியில், அந்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்குரிய ஆட்களையும்—பாட்டாளிகளாகிய நவீனத் தொழிலாளி வர்க்கத்தையும்—தோன்றியெழச் செய்திருக்கிறது.

எந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கம், அதாவது மூலதனம் வளர்கிறதோ, பாட்டாளி வர்க்கமாகிய நவீனத் தொழிலாளி வர்க்கமும் அதே அளவுக்கு வளர்கிறது. இந்தத் தொழிலாளர்கள் தமக்கு வேலை தேடிக் கொள்ள முடிகிற வரைதான் வாழ முடியும், தமது உழைப்பு மூலதனத்தைப் பெருகச் செய்யும் வரைதான் வேலை தேடிக் கொள்ள முடியும். சிறுகச் சிறுகத் தம்மைத் தாமே விலைக்கு விற்க வேண்டிய நிலையிலுள்ள இந்தத் தொழிலாளர்கள், ஏனைய எல்லா விற்பனைப் பொருள்களையும் போல் தாமும் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகவே இருக்கிறார்கள்; ஆகவே போட்டா போட்டியின் எல்லா அசம்பாவிதங்களுக்கும், சந்தையின் எல்லா ஏற்றயிறக்க அலைவுகளுக்கும் இலக்காகிறார்கள்.

விரிந்த அளவில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதன் விளைவாகவும், உழைப்புப் பிரிவினையின் விளைவாகவும் பாட்டாளிகளுடைய வேலையானது தனித்தன்மையை முற்றும் இழந்துவிட்டது; ஆதலால் தொழிலாளிக்கு அவரது வேலை அறவே சுவையற்றதாகிவிட்டது. இயந்திரத்தின் துணையுறுப்பு ஆகிவிடுகிறார் அவர்; மிகவும் எளிமையானதும்,

அலுப்புத் தட்டும்படியாய் ஒரே விதமானதும், ஆகவே சுலபமாய்ப் பெறத் தக்கதுமாகிய கைத்திறன்தான் அவருக்கு வேண்டியிருக்கிறது. எனவே தொழிலாளியினது உற்பத்திச் செலவு அனேகமாய் முற்றிலும் அவரது பராமரிப்புக்கும் அவரது இன விருத்திக்கும் தேவையான பிழைப்புச் சாதனங்களுக்கு மேற்படாதபடி குறுகிவிடுகிறது. ஆனால் பரிவர்த்தனைப் பண்டத்தின் விலை—ஆகவே உழைப்பின் விலை[55]—அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமாகும். இதனால் வேலை எவ்வளவுக்கு எவ்வளவு வெறுக்கத் தக்கதாய் அமைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு கூலியும் குறைகிறது. அது மட்டுமல்ல, இயந்திரங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுவதும் உழைப்புப் பிரிவினையும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேலைப் பளுவும் அதிகமாகிறது — வேலை நேரத்தை அதிகமாக்குவதன் மூலமோ, குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்படும் வேலையைக் கூடுதலாக்குவதன் மூலமோ, இயந்திரங்களின் வேகத்தை அதிகரிப்பதன் மூலமோ, இன்ன பிற வழிகளிலோ இது நடந்தேறுகிறது.

நவீனத் தொழில் துறையானது தந்தைவழிக் குடும்ப ஆண்டானுடைய சிறிய தொழிற்கூடத்தைத் தொழில் முதலாளியினது பெரிய தொழிற்சாலையாய் மாற்றியுள்ளது. தொழிற்சாலையினுள் நெருக்கமாய்க் கூட்டப்பட்டிருக்கும் திரளான தொழிலாளர்கள் படையாட்களைப் போல் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் துறைச் சேனையின் படையாட்களாகிய இவர்கள், ஆபீசர்கள் என்றும் சார்ஜெண்டுகள் என்றும் முற்றும் படிநிலைக் கிரமத்தில் அமைந்த படைத்தலைமையின் கீழ் இருத்தப்படுகிறார்கள். இவர்கள் அடிமைகளாய் இருப்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவ அரசுக்கும் மட்டுமல்ல; நாள் தோறும் மணி தோறும் இயந்திரத்தாலும், மேலாளர்களாலும், யாவருக்கும் முதலாய்த் தனித்தனி முதலாளித்துவ ஆலையதிபராலும் இவர்கள் அடிமைகளாக்கப்படுகிறார்கள். இந்தக் கொடுங்கோன்மை எவ்வளவுக்கு எவ்வளவு பகிரங்கமாய் இலாபத்தைத் தனது இறுதி முடிவாகவும்

குறிக்கோளாகவும் பிரகடனம் செய்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இது இழிவானதாய், வெறுக்கத்தக்கதாய், கசப்பூட்டுவதாய் இருக்கிறது.

உடலுழைப்புக்கு வேண்டிய திறமையும் உடல் வலியும் குறையக் குறைய, அதாவது நவீனத் தொழில் துறையின் வளர்ச்சி மட்டம் உயர உயர, ஆடவரின் உழைப்பு மேலும் மேலும் அகற்றப்பட்டு அதனிடத்தில் பெண்களின் உழைப்பு அமர்த்தப்படுகிறது. வயது வேறுபாடும் ஆண், பெண் வித்தியாசமும் இனி தொழிலாளி வர்க்கத்துக்குத் தனியான எந்த சமூக முக்கியத்துவமும் இல்லாமல் போய்விட்டன. எல்லோருமே உழைப்புக் கருவிகள்தான், உபயோகித்துக் கொள்வதற்கு ஆகும் செலவுதான் வயதுக்கும் பாலுக்கும் ஏற்ப அதிகமாகவோ குறைவாகவோ இருக்கிறது.

ஆலை முதலாளியால் இதுவரை சுரண்டப்பட்ட தொழிலாளி, இந்தச் சுரண்டல் முடிவுற்று தனது கூலியைப் பண வடிவில் பெற்றுக் கொண்டவுடனே, முதலாளித்துவ வர்க்கத்தின் பிற பகுதியோரான வீட்டுச் சொந்தக்காரராலும் கடைக்காரராலும் அடகு வட்டிக்கடைக்காரராலும் இன்ன பிறராலும் தாக்கப்படுகிறார்.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்த் தட்டுகளைச் சேர்ந்த சிறு உற்பத்தியாளர்கள், கடைக்காரர்கள், சிறு வாடகை, வட்டி வருவாயினர், கைவினைஞர்கள், விவசாயிகள் ஆகிய எல்லோரும் சிறிது சிறிதாய்த் தாழ்வுற்று பாட்டாளி வர்க்கத்தை வந்தடைகிறார்கள். காரணம் என்னவெனில், முதலாவதாக அவர்களிடமுள்ள சொற்ப அளவு மூலதனம் நவீனத் தொழிலின் வீச்சுக்குப் போதாமல் பெரிய முதலாளிகளுடைய போட்டிக்குப் பலியாகிவிடுகிறது, இரண்டாவதாக அவர்களுடைய தனித் தேர்ச்சியானது பொருளுற்பத்தியின் புதிய முறைகளால் மதிப்பற்றதாக்கப்படுகிறது. இவ்விதம் தேச மக்கள் தொகுதியைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடமிருந்தும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆட்கள் திரட்டப்படுகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி பல்வேறு கட்டங்களைக் கொண்டதாகும். பிறந்ததுமே அது முதலாளித்துவ

வர்க்கத்தை எதிர்த்துத் தனது போராட்டத்தைத் துவக்கி விடுகிறது. ஆரம்பத்தில் இந்தப் போராட்டத்தைத் தனிப்பட்ட தொழிலாளர்களும், அடுத்து ஓர் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களும், பிறகு ஒரு வட்டாரத்தில் ஒரு தொழிற் கிளையைச் சேர்ந்த தொழிலாளர்களும் தம்மை நேரடியாய்ச் சுரண்டும் தனிப்பட்ட முதலாளிகளை எதிர்த்து நடத்துகிறார்கள். முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளை எதிர்த்து அவர்கள் தமது தாக்குதல்களைத் தொடுக்கவில்லை; உற்பத்திக் கருவிகளையே தாக்குகிறார்கள். தமது உழைப்புக்குப் போட்டியாய் வந்த இறக்குமதிப் பொருள்களை அவர்கள் அழிக்கிறார்கள்; இயந்திரங்களைச் சுக்கு நூறாய்த் தகர்க்கிறார்கள்; ஆலைகளுக்குத் தீவைத்து எரிக்கிறார்கள்; மறைந்து விட்ட மத்திய காலத்துத் தொழிலாளி நிலையை வன்முறையின் மூலம் மீட்டமைக்க முயலுகிறார்கள்.

இந்தக் கட்டத்தில் தொழிலாளர்கள் இன்னமும் தம்மிடையே தொடர்பின்றி நாடெங்கிலும் சிதறியமைந்த திரளினராய் இருக்கிறார்கள்; தம்மிடையிலான போட்டியால் பிளவுபட்டிருக்கிறார்கள். எங்காவது ஒன்றுபட்டு முன்னிலும் ஒருங்கிணைந்த தொகுப்புகள் ஆகிறார்கள் என்றால், இன்னமும் அது அவர்களது செயல் திறன் மிக்க சொந்த ஒற்றுமையின் விளைவு அல்ல; முதலாளித்துவ வர்க்கத்தின் ஒற்றுமையால் ஏற்பட்டதாகவே இருக்கிறது. முதலாளித்துவ வர்க்கம் தனது சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் இயங்க வைக்க வேண்டியிருக்கிறது; சிறிது காலத்துக்கு அதனால் இப்படி இயங்க வைக்கவும் முடிகிறது. ஆகவே இந்தக் கட்டத்தில் பாட்டாளிகள் தமது பகைவர்களை எதிர்த்துப் போராடவில்லை; பகைவர்களின் பகைவர்களாகிய எதேச்சாதிகார முடியாட்சியின் மீதமிச்சக் கூறுகளையும் நிலச்சுவான்தார்களையும் தொழில்துறையைச் சேராத முதலாளிகளையும் குட்டிமுதலாளித்துவப் பிரிவோரையும்தான் எதிர்த்துப் போராடுகிறார்கள். இவ்விதம் வரலாறு வழிப்பட்ட இந்த இயக்கம் முற்றிலும் முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்குள் இருக்கிறது; இவ்வழியில் பெறப்படும் ஒவ்வொரு

வெற்றியும் முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றியாகிறது.

ஆனல் தொழில்துறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகமாவதோடு கூட, மேலும் மேலும் பெருந் திரள்களாய் ஒன்றுகுவிகிறது; அதன் பலம் கூடுதலாகிச் செல்கிறது; அது இந்தப் பலத்தை மேன்மேலும் உணர்கின்றது. இயந்திரச் சாதனங்கள் உழைப்பின் இடையிலான பாகுபாடுகளை ஒழித்து அனேகமாய் எங்கும் கூலி விகிதங்களைக் கீழ்நிலையிலான ஒரே மட்டத்துக்குக் குறையச் செய்வதற்கு ஏற்ப, பாட்டாளி வர்க்க அணிகளினுள் வெவ்வேறு நலன்களும் வாழ்க்கை நிலைமைகளும் மேலும் மேலும் சமனமாக்கப்படுகின்றன. முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே வளரும் போட்டியும் இதன் விளைவாய் மூளும்வாணிப நெருக்கடிகளும் தொழிலாளர்களுடைய கூலிகளை மேன்மேலும் அலைவுறச் செய்கின்றன. இயந்திரச் சாதனங்கள் ஓயாது ஒழியாது மேம்பாடடைந்து தொடர்ந்து மேலும் மேலும் வேகமாய் வளர்ந்து பெருகுவதானது, அவர்களுடைய பிழைப்பை மேன்மேலும் நிலையற்றுச்சரியச் செய்கிறது. தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கும் இடையில் எழும் மோதல்கள் மேலும் மேலும் ஒரு வர்க்கங்களுக்கு இடையிலான மோதல்களின் தன்மையைப் பெறுகின்றன. இதனல் தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராய் இணைவுகள் (தொழிற் சங்கங்கள்) அமைத்துக் கொள்ள முற்படுகிறார்கள்; கூலிகள் குறையாதவாறு பாதுகாத்துக் கொள்ள அவர்கள் ஒன்றிணைகிறார்கள், அவ்வப்போது மூண்டுவிடும் இந்த மோதல்களுக்கு முன்னேற்பாடாய் நிரந்தரமான சங்கங்களை நிறுவிக் கொள்கிறார்கள். சிற்சில இடங்களில் இந்தப் போராட்டம் கலகங்களாய் வெடிக்கின்றன.

சிற்சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் வெற்றியடைகிறார்கள், ஆனல் இவ்வெற்றிகள் சிறிது காலத்துக்கு மேல் நீடிப்பதில்லை. அவர்களுடைய போராட்டங்களது மெய்யான பலன் உடனடி விளைவில் அல்ல, தொழிலாளர்களது இடையருது விரிவடையும் ஒற்றுமையில் காணக்கிடக்கிறது. நவீனத் தொழில் துறையால் தோற்றுவிக்கப் பட்டிருக்கும்

வளர்ச்சியுற்ற போக்குவரத்துச் சாதனங்கள், வெவ்வேறு வட்டாரங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒருவரோடொருவர் தொடர்பு பெறச் செய்து இந்த ஒற்றுமைக்குத் துணை புரிகின்றன. யாவும் ஒரே தன்மையனவாய் இருக்கும் எண்ணற்ற வட்டாரப் போராட்டங்களை வர்க்கங்களுக்கு இடையே தேச அளவில் நடைபெறும் ஒருமித்த போராட்டமாய் மையப்படுத்த இந்தத் தொடர்புதான் தேவையாய் இருந்தது. வர்க்கப் போராட்டம் ஒவ்வொன்றும் ஓர் அரசியல் போராட்டமாகும். மத்திய கால நகரத்தார் அக்காலத்திய படுமோசமான சாலைகளின் துணை கொண்டு பெறுவதற்குப் பன்னூறு ஆண்டுகள் தேவைப்பட்ட அந்த ஒற்றுமையை நவீனப் பாட்டாளிகள் ரயில் பாதைகளின் துணை கொண்டு ஒருசில ஆண்டுகளிலேயே பெறுகிறார்கள்.

பாட்டாளிகள் இவ்விதம் ஒரு வர்க்கமாகவும், ஆகவே ஓர் அரசியல் கட்சியாகவும் ஒழுங்கமைப்பு பெறும் நிகழ்வானது தொழிலாளர்களிடத்தே ஏற்படும் போட்டியால் ஓயாமல் மீண்டும் குலைக்கப்படுகிறது. ஆயினும் இந்த ஒழுங்கமைப்பு முன்னிலும் வலிவும் உறுதியும் சக்தியும் மிக்கதாய்த் திரும்பத் திரும்ப உயர்ந்து எழுகிறது. இது முதலாளித்துவ வர்க்கத்தாரிடத்தே இருக்கும் பிளவுகளைப் பயன்படுத்தி வலுக்கட்டாயம் செய்து, தொழிலாளர்களுக்குரிய தனி நலன்களுக்குச் சட்ட அங்கீகாரம் பெறுகிறது. இங்கிலாந்தில் பத்து மணி நேர வேலை நாள் மசோதா இவ்வாறுதான் சட்டமாய் நிறைவேற்றப்பட்டது.

பொதுவாய்ப் பேசுமிடத்து, தொழிலாளி வர்க்க வளர்ச்சிப் போக்குக்குப் பழைய சமுதாயத்தின் வர்க்கங்களிடையே எழும் மோதல்கள் பல வழிகளிலும் உதவியாய் இருக்கின்றன. முதலாளித்துவ வர்க்கம் இடையறாத போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது: ஆரம்பத்தில் பிரபுக் குலத்தோருடனும், பிற்பாடு முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த சில பகுதிகளின் நலன்கள் தொழில் முன்னேற்றத்துக்கு விரோதமாகிவிடும் போது இந்தப் பகுதிகளுடனும், எக்காலத்துமே அன்னிய நாடுகளின் முதலாளித்

துவ வர்க்கத்துடனும் அது போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டங்களின் போது முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை அணுகி வேண்டுகோள் விடுக்கும்படியும், அவ்வர்க்கத்தின் உதவியை நாடும்படியும், இவ்விதம் அதை அரசியல் அரங்கில் பிரவேசிக்குமாறு இழுக்கும்படியும் நேருகிறது. ஆகவே முதலாளித்துவ வர்க்கமே பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டிய அரசியல் கல்வி, பொதுக் கல்வி ஆகியவற்றின் கூறுகளை அதற்கு அளித்திடுகிறது; அதாவது, தன்னையே எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதங்களை அது பாட்டாளி வர்க்கத்துக்கு வழங்குகிறது.

தவிரவும், மேலே நாம் கண்ணுற்றது போல, தொழில் முன்னேற்றத்தின் விளைவாய் ஆளும் வர்க்கங்களில் முழு முழுப்பிரிவுகள் பாட்டாளி வர்க்கத்துக்குள் தள்ளப்படுகின்றன, அல்லது குறைந்தது அவை தமது வாழ்வு நிலைமைகளை இழக்கும்படியான ஆபத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன. இப்பிரிவுகளும் பாட்டாளி வர்க்கம் அறிவொளி பெறுவதற்கும் முன்னேறுவதற்கும் பல புதிய கூறுகளை வழங்குகின்றன.

இறுதியில், வர்க்கப் போராட்டம் முடிவு கட்டும் நிலையை நெருங்கும் நேரத்தில் ஆளும் வர்க்கத்தினுள்ளும் பழைய சமுதாயம் அனைத்தினுள்ளும் நடந்தேறும் சிதைவுப் போக்கானது அவ்வளவு உக்கிரமுற்றுப் பட்டவர்த்தனமாகிவிடுவதால், ஆளும் வர்க்கத்திலிருந்து ஒரு சிறு பிரிவு துண்டித்துக் கொண்டு அதனிடமிருந்து விலகி எதிர்காலத்தைத் தன் பிடியில் கொண்டிருக்கும் வர்க்கமாகிய புரட்சி வர்க்கத்துடன் சேருகிறது. இதற்கு முந்திய காலத்தில் எப்படிப் பிரபுக்களில் ஒரு பிரிவினர் முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்குச் சென்றார்களோ, அதே போல இப்போது முதலாளித்துவ வர்க்கத்தாரில் ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர்; குறிப்பாய் முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளில் வரலாற்று இயக்கத்தை ஒட்டுமொத்தமாய்த் தத்துவார்த்த வழியில் புரிந்து கொள்ளும் நிலைக்கு உயர்ந்துவிட்ட ஒரு பிரிவினர் பாட்டாளி வர்க்கத் தரப்புக்குச் செல்கின்றனர்.

இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது.

மத்தியதர வர்க்கத்தின் கீழ்ப் பகுதிகளாகிய சிறு பட்டறையாளர், கடைக்காரர், கைவினைஞர், விவசாயி இவர்கள் எல்லோரும் தொடர்ந்து த்ாம் மத்தியதர வகுப்பினராய் நீடித்திருப்பதற்காக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆகவே இவர்கள் பழமைப் பற்றாளர்களே அன்றி புரட்சித்தன்மை வாய்ந்தோரல்லர். அது மட்டுமல்ல, இவர்கள் பிற்போக்கானவர்களும்கூட; ஏனெனில் வரலாற்றின் சக்கரத்தை இவர்கள் பின்னோக்கி உருளச் செய்யமுயலுகிறார்கள். சந்தர்ப்பவசமாய்ப் புரட்சிகரமாய் இருப்பார்களாயின், இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்குப் போய்விடும் தறுவாயில் இருக்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம்; இவ்வாறு இவர்கள் பாதுகாப்பது தமது எதிர்கால நலன்களையே அன்றி நிகழ்கால நலன்களை அல்ல; பாட்டாளிவர்க்கத்தின் நோக்குநிலையை ஏற்கும் பொருட்டு, தமது சொந்த நோக்குநிலையைக் கைவிடுகிறார்கள்.

பழைய சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்குகளிலிருந்து எறியப்பட்டுச் செயலற்று அழுகிக் கொண்டிருக்கும் சமூகக் கசடாகிய ''அபாயகரமான வர்க்கம்'' பாட்டாளி வர்க்கப் புரட்சியால் எங்கேனும் ஒருசில இடங்களில் இயக்கத்துக்குள் இழுக்கப்படலாம், ஆனால் அதன் வாழ்க்கை நிலைமைகள் பிற்போக்குச் சதியின் கைக்கருவியாய் லஞ்சம் பெற்று ஊழியம் புரியவே மிகப் பெரும் அளவுக்கு அதைத் தயார் செய்கின்றன.

பாட்டாளிவர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளில் பழைய சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகள் ஏற்கெனவே அனேகமாய்ப் புதையுண்டு விடுகின்றன. பாட்டாளிக்குச் சொத்து ஏதும் இல்லை, மனைவி மக்களிடத்து அவனுக்குள்ள உறவுக்

கும் முதலாளித்துவக் குடும்ப உறவுகளுக்கும் பொதுவானது இப்போது எதுவும் இல்லே. பிரான்சில் எப்படியோ அதே போல் இங்கிலாந்திலும், ஜெர்மனியில் எப்படியோ அதே போல் அமெரிக்காவிலும், நவீனத் தொழில் துறை உழைப்பானது, மூலதனத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கும் நவீன அடிமை நிலேயானது, பாட்டாளியிடமிருந்து தேசியத் தனித் தன்மையில் எந்தச் சாயலேயும் விட்டு வைக்காமல் துடைத்தெடுத்து விட்டது. இந்தப் பாட்டாளிக்கு, சட்டம், ஒழுக்க நெறி, சமயம் ஆகியவை அத்தனேயும் அத்தனே விதமான முதலாளித்துவ நலன்கள் பதுங்கிக்கொண்டிருக்கும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களே அன்றி வேறல்ல.

மேலாதிக்கம் பெற்ற முந்திய வர்க்கங்கள் யாவும் வாழ்க்கையில் ஏற்கெனவே தாம் அடைந்திருந்த உயர் நிலேக்கு அரண் அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தமது சுவீகரிப்பு முறைக்கு சமுதாயம் முழுவதையும் கீழ்ப்படுத்த முற்பட்டன. ஆனுல் பாட்டாளிகள் தமது முந்திய சுவீகரிப்பு முறையையும், ஆகவே ஏனேயோரது முந்திய சுவீகரிப்பு முறைகள் யாவற்றையும் ஒழித்திடாமல் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளுக்கு எஜமானர்களாக முடியாது. அவர்கள் பாதுகாத்துக்கொள்ளவும் அரண் அமைத்துக் கொள்ளவும் சொந்தத்தில் ஏதும் இல்லாதவர்கள், தனியார் சொத்துடைமைக்கு இதன் முன்பிருந்த பாதுகாப்புகளேயும் காப்புறுதிகளேயும் தகர்த்து ஒழிப்பதே அவர்களது இலட்சியப் பணி.

முந்திய வரலாற்று இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மையோரது இயக்கங்களே, அல்லது சிறுபான்மையோரது நலனுக்கான இயக்கங்களே ஆகும். ஆனுல் பாட்டாளி வர்க்க இயக்கம் மிகப் பெருவாரியானேரது நலனுக்காக மிகப் பெருவாரியானேர் தன்னுணர்வோடு நடத்தும் சுயேச்சையான இயக்கமாகும். தற்கால சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்காகிய பாட்டாளி வர்க்கமானது அங்கீகாரம் பெற்ற சமுதாயத்தில் மேலமைந்த அத்தனே அடுக்குகளேயும் காற்றிலே பறந்தெழச் செய்யாமல் அசையவோ நிமிர்ந்து நிற்கவோ முடியாது.

முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனும் எப்படியும் வடிவத்தில், ஆரம்பத்தில் தேசியப் போராட்டமாகவே இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தனது நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன்தான் முதலில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தினது வளர்ச்சியின் மிகப் பொதுவான கட்டங்களை விவரித்த நாம், தற்கால சமுதாயத்தில் ஏறக்குறைய திரை மறைவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை, அது பகிரங்கப் புரட்சியாய் வெடித்து, முதலாளித்துவ வர்க்கம் பலாத்காரமாய் வீழ்த்தப்படுவதன் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்துக்கு அடித்தளம் இடப்படும் நிலை வரையில் உருவரை தீட்டிக் காட்டினோம்.

இதுகாறும் சமூக அமைப்பு ஒவ்வொன்றும், ஏற்கெனவே நாம் கண்ணுற்றது போல், ஒடுக்கும் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் வர்க்கத்துக்கும் இடையிலான பகைமையையே அடிப்படையாய்க் கொண்டிருந்தது. ஆனால் ஒரு வர்க்கத்தை ஒடுக்கி வைக்க வேண்டுமாயின், அந்த வர்க்கம் தொடர்ந்து தனது அடிமை நிலையிலாவது நீடிப்பதற்கு அவசியமான குறிப்பிட்ட நிலைமைகளை அதற்கு உத்தரவாதம் செய்து தந்தாக வேண்டும். பண்ணையடிமை முறை நிலவிய காலத்தில் பண்ணையடிமை தன்னை நகர சமுதாய உறுப்பினனாய் உயர்த்திக் கொள்ள முடிந்தது, அதே போல் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தின் ஒடுக்குமுறையில் குட்டிமுதலாளித்துவப் பிரிவினர் முதலாளியாய் வளர முடிந்தது. ஆனால் நவீன காலத்திய தொழிலாளி இதற்கு மாறாய், தொழில் முன்னேற்றத்துடன் கூடவே தொடர்ந்து செல்வதற்குப் பதில், தனது வர்க்கம் நிலவுதற்கு அவசியமான நிலைமைகளுக்கும் கீழே மேலும் மேலும் தாழ்ந்து செல்கிறான். அவன் ஓட்டாண்டியாகி ஏதும் இல்லாதான் ஆகின்றான்; மக்கள் தொகையையும் செல்வத்தையும் காட்டிலும் இல்லாமை அதிவேகமாய் அதிகரிக்கிறது. ஆகவே இப்போது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது—முதலாளித்துவ வர்க்கம் இனி சமுதாயத்தின் ஆளும் வர்க்கமாய்

இருக்கத் தகுதியற்றது, தான் நீடித்து நிலவுதற்கு வேண்டிய நிலைமைகளை யாவற்றுக்கும் மேலான சட்டவிதியாய் இனியும் சமுதாயத்தின் மீது பலவந்தமாய் இருக்கத் தகுதியற்றது என்பது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது. அது ஆளத் தகுதியற்றதாகிறது—ஏனெனில் அதன் அடிமை அவனது அடிமை நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு அதனால் வகை செய்ய முடியவில்லை; அவன் அதற்கு உண்டி அளிப்பதற்குப் பதில் அது அவனுக்கு உண்டி அளிக்க வேண்டிய ஒரு நிலைக்கு அதன் அடிமை தாழ்ந்து செல்வதை அதனால் தடுக்க முடியவில்லை. சமுதாயம் இனி இந்த முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பணிந்து வாழ முடியாது, அதாவது முதலாளித்துவ வர்க்கம் இனியும் தொடர்ந்து நீடிப்பது சமுதாயத்துக்கு ஒவ்வாததாகிவிட்டது.

மூலதனம் உருவாதலும் பெருகிச் செல்லுதலும்தான் முதலாளித்துவ வர்க்கம் நிலவுதற்கும் ஆதிக்கம் புரிவதற்குமான அத்தியாவசிய நிபந்தனை. கூலியுழைப்புதான் இந்த மூலதனத்துக்கு அத்தியாவசிய நிபந்தனையாய் அமைகிறது. கூலியுழைப்பானது தொழிலாளர்களுக்கு இடையிலான போட்டியையே ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ வர்க்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஊக்குவிக்க வேண்டியிருக்கும் தொழில் முன்னேற்றமானது, தொழிலாளர்களிடையே போட்டியின் விளைவான தனிமைப்பாட்டை நீக்கி, ஒற்றுமையின் விளைவான புரட்சிகர இணைவை உண்டாக்குகிறது. இவ்விதம் நவீனப் பெருவீதத் தொழிலின் வளர்ச்சியானது, எந்த அடிப்படையில் முதலாளித்துவ வர்க்கம் பொருள்களை உற்பத்தி செய்தும் சுவீகரித்தும் வருகிறதோ அந்த அடிப்படைக்கே உலை வைக்கிறது. ஆகவே முதலாளித்துவ வர்க்கம் தனக்குச் சவக்குழி தோண்டுவோரையே அனைத்துக்கும் மேலாய் உற்பத்தி செய்கிறது. இவ்வர்க்கத்தின் வீழ்ச்சியும், அதேபோல் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் தவிர்க்கவொண்ணாதவை.

## II

## பாட்டாளிகளும் கம்யூனிஸ்டுகளும்

ஒட்டுமொத்தமாய்ப் பாட்டாளிகளுடன் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் உறவு என்ன?

கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு தனிக் கட்சியாய் இருக்கவில்லை.

அவர்கள் பாட்டாளி வர்க்கம் அனைத்துக்குமுள்ள நலன்களை அன்னியில் தனிப்பட்ட நலன்கள் எவையும் இல்லாதவர்கள்.

பாட்டாளி வர்க்க இயக்கத்தை வடிவமைக்க அவர்கள் தமக்கெனக் குறுங்குழுக் கோட்பாடுகள் எவற்றையும் வகுத்துக் கொள்ளவில்லை.

ஏனைய தொழிலாளி வர்க்கக் கட்சிகளிடமிருந்து கம்யூனிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறவை பின்வருவன மட்டுமேதான்: 1. வெவ்வேறு நாடுகளிலும் தேச அளவில் பாட்டாளிகள் நடத்தும் போராட்டங்களில் அவர்கள் தேசிய இனம் கடந்து பாட்டாளி வர்க்கம் அனைத்துக்கும் உரித்தான பொது நலன்களைச் சுட்டிக்காட்டி முன்னிலைக்குக் கொண்டு வருகிறார்கள். 2. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் கடந்து செல்ல வேண்டியிருக்கும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் அவர்கள் எப்போதும் எங்கும் இயக்கம் அனைத்துக்குமான நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன்னேக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள்; தத்துவார்த்தத்தில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதிவிளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளுடைய உடனடி நோக்கம் ஏனைய எல்

லாப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளது உடனடி நோக்கம் என்னவோ அதுவேதான்: பாட்டாளிகளை ஒரு வர்க்கமாய் உருப் பெறச்செய்வதும், முதலாளித்துவ மேலாதிக்கத்தை வீழ்த்துவதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதும்தான்.

கம்யூனிஸ்டுகளுடைய தத்துவார்த்த முடிவுகள் உலகைப் புத்தமைக்க நினைக்கும் இந்த அல்லது அந்தச் சீர்திருத்தாளர் புனைந்தமைத்தோ, கண்டுபிடித்தோ கூறிய கருத்துக்களை அல்லது கோட்பாடுகளை எவ்வகையிலும் அடிப்படையாய்க் கொண்டவையல்ல.

நடப்பிலுள்ள வர்க்கப் போராட்டத்திலிருந்து, நம் கண்ணெதிரே நடைபெற்று வரும் வரலாற்று இயக்கத்திலிருந்து உதிக்கும் மெய்யான உறவுகளையே இந்த முடிவுகள் பொதுப்பட எடுத்துரைக்கின்றன. நடப்பிலுள்ள சொத்துடைமை உறவுகளை ஒழிப்பது எவ்விதத்திலும் கம்யூனிசத்துக்கு உரித்தான ஒரு தனிச் சிறப்பல்ல.

வரலாற்று நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாய்ச் சொத்துடைமை உறவுகள் யாவும் கடந்த காலத்தில் தொடர்ந்தாற்போல் வரலாற்று வழியில் மாற்றமடைந்தே வந்திருக்கின்றன.

எடுத்துக் காட்டாய் பிரெஞ்சுப் புரட்சியானது பிரபுத்துவச் சொத்துடைமையை ஒழித்து அதனிடத்தில் முதலாளித்துவச் சொத்துடைமையை நிலைநாட்டிற்று.

பொதுப்பட சொத்துடைமையை ஒழிப்பதல்ல, முதலாளித்துவச் சொத்துடைமையை ஒழிப்பதே கம்யூனிசத்திற்குரிய சிறப்பியல்பு. ஆனால் நவீன முதலாளித்துவத் தனிச்சொத்துடைமையானது வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில், ஒருசிலர் மிகப் பலரைச் சுரண்டுவதன் அடிப்படையில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் சுவீகரிப்பதற்குமான அமைப்பின் இறுதியான, மிகவும் நிறைவான வெளிப்பாடாகும்.

இந்த அர்த்தத்தில் கம்யூனிஸ்டுகளுடைய தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாய், தனிச் சொத்துடைமையை ஒழித்திடல் என்பதாய்க் கூறலாம்.

ஒருவர் தமது சொந்த உழைப்பின் பயனைப் பெறுவதைத் தமது தனிச் சொத்தாக்கிக் கொள்ளும் உரிமையைக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாய் எங்களை ஏசுகிறார்கள்; இந்தத் தனிச் சொத்துதான் தனியாளின் சுதந்திரம், செயற்பாடு, சுயேச்சை வாழ்வு ஆகியவற்றுக்கு எல்லாம் அடிநிலை என்கிறார்கள்.

பாடுபட்டுப் பெற்ற, சொந்த முயற்சியால் சேர்த்த, சுயமாய்ச் சம்பாதித்த சொத்தாம் இது! இங்கே நீங்கள் குறிப்பிடுவது எந்தச் சொத்து? சிறு கைவினைஞர், சிறு விவசாயி ஆகியோரது சொத்தா? அதாவது முதலாளித்துவச் சொத்து வடிவத்துக்கு முற்பட்டதாகிய சொத்து வடிவமா? இம்மாதிரியான சொத்தை ஒழிக்கத் தேவை இல்லை; தொழில் வளர்ச்சியானது இதை ஏற்கெனவே பெருமளவுக்கு அழித்து விட்டது, இனியும் தொடர்ந்து நாள்தோறும் அழித்து வருகிறது.

அல்லது நவீன கால முதலாளித்துவத் தனிச் சொத்தையா குறிப்பிடுகிறீர்கள்?

ஆனால் கூலியுழைப்பானது பாட்டாளிக்குச் சொத்தையா படைத்தளிக்கிறது? இல்லவே இல்லை. அது படைப்பது மூலதனம்தான்; அதாவது கூலியுழைப்பைச் சுரண்டுவதும், புதிதாய்ச் சுரண்டுவதற்குப் புதிதாய்க் கூலியுழைப்பு கிடைக்காவிடில் அதிகரிக்க முடியாததுமாகிய சொத்து வகைதான். சொத்தானது அதன் தற்கால வடிவில் மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்கும் இடையிலான பகைமையை அடிப்படையாய்க் கொண்டதாகும். இந்தப் பகைமையின் இரு தரப்புகளையும் பரிசீலிப்போம்.

முதலாளியாய் இருப்பதற்கு அர்த்தம் பொருளுற்பத்தியில் தனியாள் வழியில் மட்டுமின்றி சமூக வழியிலுமான அந்தஸ்து வகிப்பதாகும். மூலதனமானது கூட்டுச் செயற்பாட்டினால் விளைவதாகும்; சமுதாயத்தின் பல உறுப்பினர்களது ஒன்றுபட்ட செயலால் மட்டுமே, இறுதியாய்ப் பார்க்குமிடத்து சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களது ஒன்று பட்ட செயலால் மட்டுமே அதை இயங்க வைக்க முடியும்.

எனவே மூலதனம் தனியாளின் சக்தியல்ல, சமூக சக்தி.

ஆகவே மூலதனமானது பொதுச் சொத்தாய், சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்குமான சொத்தாய் மாற்றப்படும் போது, தனியாளின் சொத்து அதன் மூலம் சமூகச் சொத்தாய் மாற்றப்படவில்லை. சொத்தின் சமூகத் தன்மை தான் மாற்றப்படுகிறது. சொத்தானது அதன் வர்க்கத் தன்மையை இழந்துவிடுகிறது.

இனி கூலியுழைப்பைப் பரிசீலிப்போம்.

கூலியுழைப்பின் சராசரி விலைதான் குறைந்தபட்சக் கூலி, அதாவது தொழிலாளி தொழிலாளியாய்த் தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும் பிழைப்புச் சாதனங்களின் மொத்த அளவு. ஆகவே கூலித் தொழிலாளி தமது உழைப்பின் மூலம் சுவீகரித்துக் கொள்வது எல்லாம், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கும் இவ்வாழ்வினைப் புனருற்பத்தி செய்வதற்கும் மட்டும்தான் போதுமானது. உழைப்பின் உற்பத்திப் பொருள்களிலான இந்தத் தனியாள் சுவீகரிப்பை, மனித உயிர் வாழ்வின் பராமரிப்புக்காகவும் புனருற்பத்திக்காகவும் வேண்டியதை மட்டும் அளித்து, ஏனையோரது உழைப்பின் மீது ஆண்மை செலுத்த உபரியாய் எதையும் விட்டு வைக்காத இந்தச் சுவீகரிப்பை ஒழிக்க வேண்டுமென்ற விருப்பம் எங்களுக்குக் கிஞ்சித்தும் இல்லை. இந்தச் சுவீகரிப்பின் இழிவான தன்மையைத்தான், மூலதனத்தைப் பெருகச் செய்வதற்கு மட்டுமே தொழிலாளிவாழ்கிறான், ஆளும் வர்க்கத்தின் நலனுக்குத் தேவைப்படும் வரை மட்டுமே தொழிலாளிக்கு வாழ அனுமதி உண்டு என்ற இந்த இழிவான தன்மையைத்தான் நாங்கள் ஒழித்திட விரும்புகிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் உயிருள்ள உழைப்பு சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பைப் பெருகச் செய்வதற்குரிய ஒரு சாதனமாகவே இருந்து வருகிறது. கம்யூனிச சமுதாயத்தில் சேமித்துத் திரட்டப்பட்ட உழைப்பானது தொழிலாளியின் வாழ்வை விரிவுபெற்று வளமடைந்து ஓங்கச் செய்வதற்கான ஒரு சாதனமாகவே இருக்கும்.

ஆகவே முதலாளித்துவ சமுதாயத்தில் கடந்த காலம் நிகழ் காலத்தின் மீது ஆதிக்கம் புரிகிறது; கம்யூனிச சமுதாயத்தில் நிகழ் காலம் கடந்த காலத்தின் மீது ஆதிக்கம் புரியும். முதலாளித்துவ சமுதாயத்தில் மூலதனம் சுயேச்சையானதாய் தனித்தன்மை கொண்டதாய் இருக்கிறது; அதேபோது உயிருள்ள ஆள் சுயேச்சையற்றவனுய், தனித்தன்மை இல்லாதவனுய் இருக்கின்ருன்.

இப்படிப்பட்ட உறவுகளை ஒழிப்பதைத்தான் தனியாளது தனித்தன்மையின் ஒழிப்பாய், சுதந்திரத்தின் ஒழிப்பாய்க் கூறுகிருர்கள் முதலாளிகள்! சந்தேகமே வேண்டாம், முதலாளித்துவத் தனித்தன்மையையும் முதலாளித்துவ சுயேச்சையையும் முதலாளித்துவ சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்.

தற்போதுள்ள முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளில், சுதந்திரம் என்பதற்கு சுதந்திரமான வாணிபம், சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் என்றே அர்த்தம்.

ஆனுல் விற்பனையும் வாங்குதலும் மறையும் போது சுதந்திரமான விற்பனையும் வாங்குதலும் கூடவே மறைந்து போகும். சுதந்திரமான விற்பனை, வாங்குதல் என்ற பேச்சுக்கும் பொதுப்பட சுதந்திரத்தை பற்றிய நமது முதலாளித்துவ வர்க்கத்தாரது ஏனைய எல்லாத் ''தீரச் சொல்வீச்சுகளுக்கும்'' ஏதாவது அர்த்தம் இருக்குமாயின், அது மத்தியகாலத்திய கட்டுண்ட விற்பனையுடனும் வாங்குதலுடனும் வணிகர்களுடனும் ஒப்பிடும்போது மட்டும்தான். ஆனுல் விற்பனையும் வாங்குதலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளும், இவற்ருேடு முதலாளித்துவ வர்க்கமுங்கூட கம்யூனிசத்தின் மூலம் ஒழிக்கப்படுவதற்கு எதிராய் முன்வைக்கப்படுகையில் இந்தப் பேச்சுகள் யாவும் அர்த்தமற்றுப் போகின்றன.

தனிச் சொத்தை நாங்கள் ஒழித்துக் கட்ட விரும்புகிருேம் என்று நீங்கள் கிலி கொண்டு பதறுகிறீர்கள். ஆனுல் தற்போதுள்ள உங்களுடைய சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்குத் தனிச் சொத்து ஏற்கெனவே இல்லாமல்

ஒழிக்கப்பட்டுவிட்டது; ஒருசிலரிடத்தே தனிச் சொத்து இருப்பதற்கே காரணம் இந்தப் பத்தில் ஒன்பது பங்கானோரிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான். ஆக சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோரிடம் எந்தச் சொத்தும் இல்லா தொழிவதையே தனக்குரிய அவசிய நிபந்தனையாய்க் கொண்ட ஒரு சொத்து வடிவத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று எங்களை ஏசுகிறீர்கள்.

சுருங்கச் சொல்வதெனில், உங்களுடைய சொத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று ஏசுகிறீர்கள். ஆம், உண்மையில் அதுவேதான் நாங்கள் செய்ய விரும்பும் காரியம்.

எத்தருணம் முதல் உழைப்பை மூலதனமாய், பணமாய், நிலவாடகையாய்—ஏகபோகமாக்கிக் கொண்டுவிடுவதற்கு ஏற்ற ஒரு சமூக சக்தியாய்—மாற்ற முடியாமற் போகிறதோ, அதாவது எத்தருணம் முதல் தனியாளின் சொத்தினை முதலாளித்துவச் சொத்தாய், மூலதனமாய் மாற்ற முடியாமற்போகிறதோ, அத்தருணம் முதற்கொண்டே தனியாளின் தனித்தன்மை மறைந்து விடுவதாய் நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆதலால் ''தனியாள்'' என்னும் போது நீங்கள் முதலாளியையே தவிர, மத்தியதர வர்க்கச் சொத்துடைமையாளரையே தவிர, வேறு யாரையும் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டாக வேண்டும். இம்மாதிரியான தனியாள் மெய்யாகவே மறையத்தான் வேண்டும், இருக்க முடியாதபடிச் செய்யப்படத்தான் வேண்டும்.

சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களைச் சுவீகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கம்யூனிசம் எம்மனிதனிடமிருந்தும் பறிக்கவில்லை; இப்படிச் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் அவன் ஏனையோரது உழைப்பை அடிமைப் படுத்துகிறவனுகும் வாய்ப்பைத்தான் அது அவனிடமிருந்து பறிக்கிறது.

தனிச் சொத்தை ஒழித்ததும் எல்லாச் செயற்பாடுகளும் நின்று போய்விடும், அனைத்து மக்களும் சோம்பேறித்தனத்

தால் பீடிக்கப்படுவர் என்பதாய் ஆட்சேபம் கூறப்படு கிறது.

இது மெய்யானுல், முதலாளித்துவ சமுதாயம் நெடு நாட்களுக்கு முன்பே முழுச் சோம்பேறித்தனத்தில் மூழ்கி மடிந்திருக்கவேண்டும். ஏனெனில் முதலாளித்துவ சமுதாயத்தின் உறுப்பினர்களில் உழைப்போர் சொத்து ஏதும் சேர்ப்பதில்லை, சொத்து சேர்ப்போர் உழைப்பதில்லை. மூலதனம் இல்லாமற் போகும் போது கூலியுழைப்பு இருக்க முடியாதென்ற ஒருண்மையையே திருப்பித் திருப்பிப் பலவாருய்ச் சொல்லும் கூற்றே ஆகும் இந்த ஆட்சேபம் அனைத்தும்.

பொருளாயதப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராய் எழுப்பப்படும் எல்லா ஆட்சேபங்களும், அறிவுத் துறைப் படைப்புகளின் உற்பத்திக்கும் சுவீகரிப்புக்குமான கம்யூனிச வழிமுறைக்கு எதிராகவும் எழுப்பப்படுகின்றன. எப்படி வர்க்கச் சொத்துடைமையின் மறைவு முதலாளிக்குப் பொருளுற்பத்தியே மறைந்து போவதைக் குறிப்பதாகின்றதோ, அதே போல வர்க்கக் கலாசாரத்தின் மறைவு அவருக்கு எல்லாக் கலாசாரமுமே மறைவதற்கு ஒப்பானதாகின்றது.

அழிந்து விடுமென அவர் அழுது புலம்பும் அந்தக் கலாசாரம் மிகப் பெருவாரியான மக்களுக்கு இயந்திரமாய்ச் செயல்படுவதற்கு வேண்டிய பயிற்சியாகவே இருந்து வருகிறது.

ஆனுல் முதலாளித்துவச் சொத்துடைமையின் ஒழிப்பை நீங்கள் சுதந்திரத்தையும் கலாசாரத்தையும் சட்டநெறியையும் இன்ன பிறவற்றையும் பற்றிய உங்களது முதலாளித்துவக் கருத்துக்களைப் பிரமாணமாய்க் கொண்டு மதிப்பீடு செய்யும் வரை எங்களுடன் சர்ச்சைக்கு வர வேண்டாம். உங்களுடைய சட்டநெறி உங்கள் வர்க்கத்தின் சித்தத்தை எல்லோருக்குமான சட்டமாய் விதித்திடுவதுதான்; உங்களது இந்தச் சித்தத்தின் சாரத்தன்மையும் போக்கும் உங்களது வர்க்கம் நிலவுதற்கு வேண்டிய பொருளாதார நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறவைதாம். இதே போல் உங்கள்

கருத்துகள் எல்லாமே உங்களது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவச் சொத்துடைமைக்கும் வேண்டிய நிலைமைகளிலிருந்து பிறந்தெழுகிறவைதாம்.

தற்போதுள்ள உங்களுடைய பொருளுற்பத்தி முறையிலிருந்தும் சொத்துடைமை வடிவிலிருந்தும் உதித்தெழும் சமூக அமைப்பு வடிவங்களை, பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தின்போது வரலாற்று வழியில் தோன்றி மறைந்து போகும் உறவுகளாகிய இவற்றை, என்றும் நிலையான சாசுவத இயற்கை விதிகளாகவும் பகுத்தறிவு விதிகளாகவும் மாற்றும்படி உங்களது தவறான தன்னலக் கருத்தோட்டம் உங்களைத் தூண்டுகிறது. இந்தத் தவறான கருத்தோட்டம் உங்களுக்கு மட்டும் உரியதன்று, உங்களுக்கு முன்பிருந்த ஆளும் வர்க்கங்கள் யாவற்றுக்குமே உரியதாய் இருந்தது தான். பண்டைக்காலத்துச் சொத்துடைமையைப் பொறுத்த வரை நீங்கள் தெட்டத்தெளிவாய் காண்பதை, பிரபுத்துவச் சொத்துடைமை சம்பந்தமாய் நீங்கள் ஒத்துக் கொள்வதை, உங்களுடைய முதலாளித்துவச் சொத்துடைமை குறித்து உங்களால் ஒத்துக் கொள்ள முடிவதே இல்லை, நீங்கள் தடுக்கப்பட்டுவிடுகிறீர்கள்.

குடும்பத்தை ஒழிப்பதாவது! கம்யூனிஸ்டுகளுடைய இந்தக் கேடுகெட்ட முன்மொழிவை எதிர்த்து அதிதீவிரவாதிகளுங்கூட கொதித்தெழுகிறார்கள்.

இக்காலத்துக் குடும்பத்துக்கு, முதலாளித்துவக் குடும்பத்துக்கு, அடிப்படையாய் அமைவது எது? மூலதனம்தான், தனியார் இலாபம்தான். இந்தக் குடும்பம் அதன் முழுவளர்ச்சியிலுமான வடிவில் முதலாளித்துவ வர்க்கத்தாரிடையே மட்டும்தான் இருந்து வருகிறது. ஆனால் இந்நிலைமையின் உடன்நிகழ்வாய் குடும்பவாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப்பதையும், பொது நிலையிலான விபசாரத்தையும் காண்கிறோம்.

முதலாளித்துவக் குடும்பத்தின் உடன்நிகழ்வு மறையும் போது கூடவே முதலாளித்துவக் குடும்பமும் இயல்பாகவே மறைந்து போகும், மூலதனம் மறையும் போது இரண்டும் மறைந்துவிடும்.

குழந்தைகள் அவர்களுடைய பெற்றோரால் சுரண்டப் படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டுகிறீர்கள்? நாங்கள் இந்தக் குற்றத்தைப் புரிகிறவர்கள்தான், ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால் வீட்டுக் கல்விக்குப் பதிலாய் நாங்கள் சமூக முறையிலான கல்வியைப் புகுத்தி மனிதர்களிடையிலான உறவுகளிலேயே மிகப் புனிதமானவற்றை நாசமாக்க விரும்புகிறோம் என்பீர்கள்.

உங்களுடைய கல்வி இருக்கிறதே, அது மட்டும் என்னவாம்? அதுவும் சமூக முறையிலான கல்விதானே? எந்தச் சமூக நிலைமைகளில் நீங்கள் கல்வி போதிக்கிறீர்களோ அந்த நிலைமைகளாலும், பள்ளிக்கூடங்கள் மூலமும் இன்ன பிறவற்றின் மூலமும் சமுதாயத்தின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீட்டாலும் தீர்மானிக்கப்பட்டதுதானே அது? கல்வியில் சமுதாயம் தலையிடுதல் என்பது கம்யூனிஸ்டுகளுடைய கண்டு பிடிப்பு அல்ல; இந்தத் தலையீட்டின் இயல்பினை மாற்றவும், ஆளும் வர்க்கத்தினுடைய செல்வாக்கிலிருந்து கல்வியை விடுவிக்கவுமே கம்யூனிஸ்டுகள் முயலுகிறார்கள்.

குடும்பம், கல்வி என்றும், பெற்றோருக்கும் குழந்தைக்குமுள்ள புனித உறவு என்றும் பேசப்படும் முதலாளித்துவப் பகட்டுப் பேச்சுகள் மேலும் மேலும் அருவருக்கத்தக்கனவாகி வருகின்றன; ஏனெனில் நவீனத் தொழில் துறையின் செயலால் பாட்டாளிகளிடையே குடும்பப் பந்தங்கள் மேலும் மேலும் துண்டிக்கப்பட்டும், பாட்டாளிகளது குழந்தைகள் சாதாரண வாணிபச் சரக்குகளாகவும் உழைப்புக் கருவிகளாகவும் மாற்றப்படுகிறார்கள்.

ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களை எல்லோர்க்கும் பொதுவாக்கிவிடுவீர்களே என்று முதலாளித்துவ வர்க்கம் அனைத்துமாய்ச் சேர்ந்து கூக்குரலிடுகிறது.

முதலாளியாய் இருப்பவர் தனது மனைவியை வெறும் உற்பத்திக் கருவியாகவே பாவிக்கிறார். உற்பத்திக் கருவிகள் எல்லோர்க்கும் பொதுவாக்கப்பட்டுப் பயன்படுத்தப் படப் போவதாய்க் கேள்விப்பட்டதும், உடனே அவர் எல்லோர்க்கும் பொதுவாகிவிடும் இதே கதிதான் பெண்

களுக்கும் ஏற்படப் போகிறதென்று இயற்கையாகவே முடிவு செய்து கொண்டுவிடுகிறுர்.

பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலேயில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும், உண்மையில் இது தான் நோக்கம் என்பது அவருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்ருகும்.

இருப்பினும், பெண்களேக் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாக வும் அதிகார பூர்வமாகவும் எல்லோர்க்கும் பொதுவாக்கப் போகிறுர்களென நமது முதலாளிமார்கள் புரளி பண்ணி நல்லொழுக்கச் சீலர்களாய் சீற்றம் கொள்கிறுர்களே, அதைக் காட்டிலும் நகைக்கத்தக்கது எதுவும் இருக்க முடியாது. பெண்களே எல்லோர்க்கும் பொதுவாக்கும் கைங்கரியத்தைக் கம்யூனிஸ்டுகள் செய்யத் தேவையில்லே, நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இது செய்யப்பட்டு வருகிறது.

நமது முதலாளிமார்கள் சாதாரண விபசாரிகளிடம் செல்வதைச் சொல்லவே வேண்டாம், அதோடு அவர்கள் தமது பிடியிலுள்ள பாட்டாளிகளது மனேவியரும் பெண் டிரும் போதாமல் தமக்குள் ஒருவர் மனேவியை ஒருவர் வசப் படுத்திக் களவொழுக்கம் கொள்வதில் ஆகப் பெரிய இன்பம் காண்கிறுர்கள்.

முதலாளித்துவத் திருமணமானது உண்மையில் மனேவி யரைப் பொதுவாக்கிக் கொள்ளும் ஒரு முறையே ஆகும். ஆகவே கள்ளத்தனமாய்த் திரைமறைவில் பெண்களே எல் லோர்க்கும் பொதுவாக்கி வைக்கும் முறைக்குப் பதில், ஒளிவு மறைவற்ற சட்டபூர்வ முறையைக் கொண்டுவர விரும்புகிறுர்கள் கம்யூனிஸ்டுகள் என்று இவர்கள் கண்டிக் கலாமே தவிர அதிகமாய் ஒன்றும் சொல்வதற்கில்லே எப் படியும், இன்றைய பொருளுற்பத்தி அமைப்பு ஒழிக்கப்படும் போது, இந்த அமைப்பிலிருந்து எழும் பொதுப் பெண்டிர் முறையும்—அதாவது பகிரங்கப் பொது விபசாரமும் இரக சியத் தனிவிபசாரமும்—கூடவே ஒழிந்தே ஆகவேண்டும் என்பது தெளிவு.

மேலும் தாய்நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்

லாதொழிக்க விரும்புவதாகவும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

தொழிலாளர்களுக்குத் தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும், தேசத்தின் தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும், தன்னையே தேசமாக்கிக் கொண்டாக வேண்டும். அதுவரை பாட்டாளிவர்க்கம் தேசியத் தன்மை கொண்டதாகவே இருக்கிறது, ஆனால் இச்சொல்லுக்குரிய முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி, வாணிபச் சுதந்திரம், அனைத்துலகச் சந்தை, பொருளுற்பத்தி முறையிலும் இம்முறைக்கு உரித்தான வாழ்க்கை நிலைமைகளிலும் நாடுகள் ஒருபடித்தானவை ஆதல்—இவற்றின் காரணமாய் வெவ்வேறு நாடுகளது மக்களுக்கும் இடையிலுள்ள தேசிய வேறுபாடுகளும் பகைமைகளும் நாள்தோறும் மேலும் மேலும் மறைந்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க மேலாண்மையானது இவற்றை மேலும் துரிதமாய் மறையச் செய்யும். குறைந்தது தலைமையான நாகரிக நாடுகளின் அளவிலாவது அமைந்த செயல் ஒற்றுமை, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய தலையாய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும். தேசத்தினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்குத் தேசங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.

சமயத்தின், தத்துவவியலின், பொதுவாய்ச் சித்தாந்தத்தின் நோக்குநிலையிலிருந்து கம்யூனிசத்துக்கு எதிராய்க் கூறப்படும் குற்றச்சாட்டுகள் விவரமாய்ப் பரிசீலிக்கத் தக்கவையல்ல.

மனிதனது கருத்துக்களும் நினைப்புகளும் கண்ணோட்டங்களும்—சுருங்கச் சொன்னால் மனிதனது உணர்வானது—

அவனது பொருளாயத வாழ்நிலைமைகளிலும் சமூக உறவுகளிலும் சமூக வாழ்விலும் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலுடனும் சேர்ந்து மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ள ஆழ்ந்த ஞானம் வேண்டுமா, என்ன?

பொருள் உற்பத்தியில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப, அறிவுத் துறை உற்பத்தியின் தன்மையிலும் மாற்றம் ஏற்படுகிறது—கருத்துக்களின் வரலாறு நிரூபிப்பது இதன்றி வேறு என்னவாம்? ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்கள் அந்தச் சகாப்தத்தின் ஆளும் வர்க்கத்தினுடைய கருத்துக்களாகத்தானே எப்போதுமே இருந்திருக்கின்றன.

சமுதாயத்தைப் புரட்சிகர முறையில் மாற்றிடும் கருத்துக்கள் என்பதாய்ச் சொல்கிறார்களே, அவர்கள் உண்மையில் குறிப்பிடுவது என்ன? பழைய சமுதாயத்தினுள் புதியதன் கூறுகள் படைத்துருவாக்கப்பட்டுவிட்டன, பழைய வாழ்நிலைமைகள் சிதைவதற்கு ஒத்தபடி பழைய கருத்துக்களும் கூடவே சிதைகின்றன என்ற உண்மையைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பண்டைய உலகு அதன் அந்திமக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது பண்டைய சமயங்களை கிறித்தவ சமயம் வெற்றி கொண்டது. பிறகு 18ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயக் கருத்துகள் அறிவொளி இயக்கக் கருத்துகளுக்கு அடிபணிந்து அரங்கை விட்டகன்ற போது அக்காலத்திய புரட்சி வர்க்கமான முதலாளித்துவ வர்க்கத்துடன் பிரபுத்துவ சமுதாயம் தனது மரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. சமயத் துறை சுதந்திரம், மன சாட்சி சுதந்திரம் ஆகிய கருத்துக்கள் கட்டற்ற சுதந்திரப் போட்டியின் ஆதிக்கத்தினது அறிவு உலகப் பிரதிமைகளே ஆகும்.

‘‘வரலாற்று வளர்ச்சியின் போது சமயம், ஒழுக்கநெறி, தத்துவவியல், சட்டநெறி இவை சம்பந்தமான கருத்துக்கள் உருத்திரிந்தது மெய்தான். ஆனால் சமயமும் ஒழுக்கநெறியும் தத்துவவியலும் அரசியல் விஞ்ஞானமும் சட்டமும் இந்த மாற்றங்களால் அழிந்துபடாது எப்போதுமே இவற்

றைச் சமாளித்து வந்திருக்கின்றன'' என்று நம்மிடம் கூறுவார்கள்.

''இதன்றி சுதந்திரம், நீதி என்பன போன்ற சாசுவத உண்மைகள் இருக்கின்றன, இவை சமுதாயத்தின் எல்லாக் கட்டங்களுக்கும் பொதுவானவை. ஆனால் கம்யூனிசமானது சாசுவத உண்மைகளை இல்லாதொழியச் செய்கிறது; சமயம், ஒழுக்கநெறி ஆகிய அனைத்தையும் புதிய அடிப்படையில் அமைப்பதற்குப் பதில் இவற்றை ஒழித்துக் கட்டிவிடுகிறது. ஆகவே கம்யூனிசம் கடந்த கால வரலாற்று அனுபவம் அனைத்துக்கும் முரணாய்ச் செயல்படுகிறது.''

இந்தக் குற்றச்சாட்டில் அடங்கியுள்ள சாரப்பொருள் என்ன? கடந்த கால சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் இயக்கமாய் இருந்திருக்கிறது, இந்தப் பகைமைகள் வெவ்வேறு சகாப்தங்களில் வெவ்வேறு வடிவங்களை ஏற்று வந்திருக்கின்றன.

ஆனால் இந்த வர்க்கப் பகைமைகள் ஏற்ற வடிவம் எதுவானாலும், சமுதாயத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியால் சுரண்டப்பட்டு வந்தது என்பது கடந்த சகாப்தங்கள் யாவற்றுக்கும் பொதுவான உண்மையாகும். எனவே கடந்த சகாப்தங்களது சமூக உணர்வு எவ்வளவுதான் பல்வேறுபட்டதாகவும் பலவிதமானதாகவும் இருந்திருப்பினும், வர்க்கப் பகைமைகள் அறவே மறைந்தாலொழிய முற்றிலும் கரைந்துவிட முடியாத குறிப்பிட்ட சில பொது வடிவங்கள் அல்லது பொதுவான கருத்துக்களின் வட்டத்தினுள்ளே தான் அந்த சமூக உணர்வு இயங்கி வந்திருக்கிறது, இதில் வியப்பு ஏதுமில்லை.

கம்யூனிசப் புரட்சி பாரம்பரியச் சொத்துடைமை உறவுகளிலிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொண்டுவிடும் புரட்சியாகும், ஆகவே இந்தப் புரட்சியினது வளர்ச்சியின் போது பாரம்பரியக் கருத்துக்களிடமிருந்து மிகவும் தீவிரமாய்த் துண்டித்துக் கொள்ளும்படி நேர்வதில் வியப்புக்கு இடமில்லை.

போதும், கம்யூனிசத்தை எதிர்த்து எழுப்பப்படும் முதலாளித்துவ ஆட்சேபங்களை இத்துடன் முடித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான், தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி என்பதை மேலே கண்டோம்.

பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்.

ஆரம்பத்தில் இந்தப் பணியினைச் சொத்துடைமை உரிமைகளிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகளிலும் எதேச்சாதிகார முறையில் குறுக்கிட்டுச் செயல்படுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதாவது, பொருளாதார வழியில் போதாமலும் வலுக் குறைவாகவும் தோன்றும் நடவடிக்கைகளாய் இருப்பினும், இயக்கப் போக்கின் போது தம்மை மிஞ்சிச் சென்றுவிடுகிறவையும் பழைய சமூக அமைப்பினுள் மேலும் குறுக்கிடும்படியான அவசியத்தை உண்டாக்குகிறவையுமாகிய நடவடிக்கைகள் மூலம் தான், பொருளுற்பத்தி முறையைப் புரட்சிகரமாய் அடியோடு மாற்றியமைத்திடும் பாதையில் தவிர்க்க முடியாதவையாகிய இந்நடவடிக்கைகள் மூலம்தான், இந்தப் பணியினை நிறைவேற்ற முடியும்.

இந்த நடவடிக்கைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறானவையாகவே இருக்கும்.

ஆயினும் மிகவும் வளர்ந்து முன்னேறிய நாடுகளுக்குப் பொதுவாய்ப் பெருமளவுக்குப் பொருந்தக் கூடிய நடவடிக்கைகள் வருமாறு:

1. நிலத்தில் சொத்துடைமையை ஒழித்தலும் நிலவாடகைகள் அனைத்தையும் பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தலும்.

2. கடுமையான வளர்வீத அல்லது படித்தர வருமானவரி

3. பரம்பரை வாரிசாய்ச் சொத்துடைமை பெறும் உரிமை அனைத்தையும் ஒழித்தல்.

4. நாட்டைவிட்டு வெளியேறிவிடுவோர், கலகக்காரர்கள் ஆகியோர் எல்லோரது சொத்தையும் பறிமுதல் செய்தல்.

5. அரசு மூலதனத்துடன் தனியுரிமையான ஏகபோகம் கொண்ட தேசிய வங்கியின் மூலமாய், கடன் செலாவணியை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

6. செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களை அரசின் கைகளில் ஒருசேர மையப்படுத்தல்.

7. பொதுத் திட்டத்தின் பிரகாரம் ஆலைகளையும் உற்பத்திக் கருவிகளையும் விரிவாக்குதலும், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதலும், பொதுவாய் மண்வளத்தை உயர்த்தலும்.

8. உழைப்பைச் சரிசமமாய் எல்லோருக்கும் உரிய கடமையாக்குதல், முக்கியமாய் விவசாயத் துறைக்காகத் தொழிற் பட்டாளங்களை நிறுவதல்.

9. விவசாயத்தைத் தொழில் துறையுடன் இணைத்தல், தேச மக்களை மேலும் சீரான முறையில் நாடெங்கும் பரவியமையச் செய்வதன் மூலம் நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான பாகுபாட்டைப் படிப்படியாய் அகற்றுதல்.

10. எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுப் பள்ளிக்கூடங்களில் இலவசக் கல்வி அளித்தல். ஆலைகளில் குழந்தைகளது உழைப்பின் தற்போதைய வடிவை ஒழித்திடல். கல்வியைப் பொருள் உற்பத்தியுடன் இணைத்தல், இன்ன பிற.

வளர்ச்சியின் போது வர்க்க பேதங்கள் மறைந்துவிடும் போதும், தேச மக்கள் அனைவராலுமான மாபெரும் கூட்டமைப்பின் கைகளில் பொருளுற்பத்தி அனைத்தும் ஒருசேர மையமுற்றுவிடும் போதும், பொது ஆட்சியதிகாரம் அதன் அரசியல் தன்மையை இழந்துவிடும். அரசியல் ஆட்சியதிகாரம் என்பது அதன் சரியான பொருளில், ஒரு வர்க்கத்தின் ஒழுங்கமைந்த பலவந்த அதிகாரத்தையே, பிறிதொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக அமைந்த பலவந்த அதிகாரத்

தையே குறிக்கின்றது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் சந்தர்ப்பங்களது நிர்ப்பந்தம் காரணமாய்த் தன்னை ஒரு வர்க்கமாய் ஒழுங்கமைத்துக் கொள்கிறதெனில், புரட்சியின் மூலம் தன்னை ஆளும் வர்க்கமாக்கிக் கொள்கிறதெனில், ஆளும் வர்க்கம் என்ற முறையில் பழைய பொருளுற்பத்தி உறவுகளைப் பலவந்தமாய் ஒழித்திடுகிறதெனில், அப்போது அது இந்தப் பொருளுற்பத்தி உறவுகளுடன் கூடவே வர்க்கப் பகைமைகளும் பொதுவாய் வர்க்கங்களும் நிலவுதற்குரிய நிலைமைகளையும் ஒழித்திடுவதாகிறது, அதன் மூலம் அது ஒரு வர்க்கமாய்த் தனக்குள்ள மேலாண்மையையும் ஒழித்திடுவதாகிறது.

வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கட்கூட்டு ஒன்று எழுந்து விடும்.

## III

## சோஷலிச, கம்யூனிச இலக்கியம்

### 1. பிற்போக்கு சோஷலிசம்

#### (அ) பிரபுத்துவ சோஷலிசம்

பிரான்சையும் இங்கிலாந்தையும் சேர்ந்த பிரபுக் குலத்தோருக்கு வரலாற்று வழியில் ஏற்பட்ட நிலையின் காரணமாய், நவீன முதலாளித்துவ சமுதாயத்தை எதிர்த்து பிரசுரங்கள் எழுதுவது அவர்களது வாழ்க்கை பணியாயிற்று. 1830 ஜூலையில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியிலும், இங்கிலாந்துப் பாராளுமன்றச் சீர்திருத்தக் கிளர்ச்சியிலும்[56] இந்தப் பிரபுக் குலத்தோர் திடீர் ஏற்றம் கண்டுவிட்ட வெறுக்கத்தக்க புதுப் பணக்கார அற்பர்களால் திரும்ப

வும் தோற்கடிக்கப்பட்டார்கள். இதற்குப் பிற்பாடு மெய்யான அரசியல் போராட்டத்துக்கு வழி இல்லாமற் போயிற்று. இனி சாத்தியமானது எல்லாம் இலக்கியப் போர் ஒன்றுதான். ஆனால் இலக்கியத் துறையிலுங்கூட முடியாட்சி மீட்சிக் காலத்திய* பழைய கூப்பாடுகளை எழுப்புவது சாத்தியமற்றதாகிவிட்டது.

பிரபுக் குலத்தோர் தம்மீது அனுதாபம் உண்டாகும்படி செய்யும் பொருட்டு, வெளிப் பார்வைக்குத் தமது சொந்த நலன்களை மறந்து, சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களை மட்டுமே கருதுவோராய் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தமது குற்றச்சாட்டை வகுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இவ்விதம் பிரபுக் குலத்தோர் தமது புதிய எஜமானர்கள் மீது வசை பொழிந்தும், நெருங்கி வரும் பெருங்கேடுகுறித்து அச்சம்தரும் ஆருடங்களை அவர்கள் காதுக்குள் முணுமுணுத்தும் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்.

இவ்வாறுதான் உதயமாயிற்று பிரபுத்துவ சோஷலிசம்: பாதி புலம்பலாகவும், பாதி வசைப் பாட்டாகவும், பாதி கடந்த காலத்தின் எதிரொலியாகவும், பாதி எதிர் காலத்தைப் பற்றிய மிரட்டலாகவும், சில நேரங்களில் அதன் கசப்பான, கிண்டலான, சுருக்கெனத் தைக்கும்படியான விமர்சனத்தின் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தின் நெஞ்சின் நடுமையத்துள் தாக்குவதாகவும், ஆனால் தற்கால வரலாற்றின் போக்கைப் புரிந்து கொள்ளும் திறன் கொஞ்சமும் இல்லாததால் எப்போதுமே கோமாளித்தனமான விளைவை உண்டாக்குவதாகவுமே இருந்தது.

மக்களைத் தம் பக்கத்தில் திரளச் செய்யும் பொருட்டு பிரபுக் குலத்தோர் பாட்டாளியின் பிச்சைத் தட்டினைக் கொடி போல் தமக்கு முன்னால் உயர்த்திக் காட்டினர்.

---

* இங்கு குறிப்பிடப்படுவது 1660க்கும் 1689க்கும் இடையில் ஏற்பட்ட இங்கிலாந்து முடியாட்சி மீட்சி அல்ல, 1814க்கும் 1830க்கும் இடையில் பிரான்சு கண்ட முடியாட்சி மீட்சியே[57] குறிப்பிடப்படுகிறது. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

ஆனால் மக்கள் அவர்களோடு சேர்ந்த போதெல்லாம் அவர்களது முதுகுப் புறத்தில் பழைய பிரபுத்துவக் குல இலட்சினைகள் இருக்கக் கண்டார்கள்; உடனே மரியாதையின்றி வாய் விட்டுச் சிரித்தவாறு அவர்களிடமிருந்து தூர ஓடினார்கள்.

பிரெஞ்சு மரபுவழி முடியாட்சிவாதிகளிலும்[58] ''இளம் இங்கிலாந்துக்காரர்களிலும்''[59] ஒரு பிரிவினர் இப்படித் தான் நாடகமாடினர்.

தமது சுரண்டல் முறை முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல் முறையிலிருந்து மாறுபட்டிருந்ததைச் சுட்டிக் காட்டும் பிரபுத்துவவாதிகள், முற்றிலும் வேறுவகைப்பட்ட சூழலிலும் நிலைமைகளிலும் தாம் சுரண்டியதையும், இவை தற்போது காலங் கடந்தனவாகிவிட்டதையும் மறந்துவிடுகிறார்கள். தங்களுடைய ஆட்சியில் நவீனப் பாட்டாளி வர்க்கம் இருந்ததில்லை என்பதை எடுத்துரைக்கும் இவர்கள், தங்களுடைய சமூக அமைப்பு தவிர்க்க முடியாதபடி பெற்றெடுத்ததே நவீன முதலாளித்துவ வர்க்கம் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

மற்றபடி இவர்கள் தமது விமர்சனத்தின் பிற்போக்குத் தன்மையை மூடிமறைக்க முயற்சி செய்யவில்லை; இவர்களது விமர்சனத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டாய்க் கூறப்படுவது என்னவெனில், பழைய சமுதாய அமைப்பு முறையினை வேரோடு வெட்டி வீழ்த்துவதற்கென்றே விதிக்கப்பட்ட ஒரு வர்க்கத்தை இந்த முதலாளித்துவ ஆட்சி வளர்ந்துயரச் செய்கிறது என்பது தான்.

பாட்டாளி வர்க்கத்தை உருவாக்குகிறது என்பதுகூட அவ்வளவாய்க் காரணமல்ல, புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை அல்லவா உருவாக்குகிறது என்று முதலாளித்துவ வர்க்கத்தை இவர்கள் நிந்தனை செய்கிறார்கள்.

ஆகவே இவர்கள் அரசியல் நடைமுறையில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான எல்லா அடக்குமுறை நடவடிக்கைகளிலும் சேர்ந்து கொள்கின்றார்கள். இவர்களுடைய ஆடம்பரமான வாய்ப்பேச்சுகள் எப்படி இருப்பினும், அன்றாட

நடைமுறை வாழ்க்கையில் இவர்கள் தயங்காது குனிந்து, தொழில் துறை மரத்திலிருந்து விழும் பொற்கனிகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்கிறார்கள், ஆட்டு ரோமத்திலும் வள்ளிக் கிழங்கு சர்க்கரையிலும் உருளைக் கிழங்கு சாராயத்திலுமான வாணிபத்தில் கிடைக்கும் ஆதாயத்துக்காக வாய்மையையும் அன்பையும் கண்யத்தையும் விலைக்கு விற்கிறார்கள்.*

எப்படிச் சமயகுரு எப்போதுமே நிலப்பிரபுவுடன் கைகோத்துச் செயல்பட்டு வந்திருக்கிறாரோ, அதே போல் சமயவாத சோஷலிசமும் பிரபுத்துவ சோஷலிசத்துடன் சேர்ந்து நடைபோட்டு வந்திருக்கிறது.

கிறித்தவத் துறவு மனப்பான்மைக்கு சோஷலிசச் சாயமிட்டுக் காட்டுவதைவிட எளியது எதுவும் இல்லை. தனிச் சொத்தையும் திருமணத்தையும் அரசையும் எதிர்த்துக் கிறித்தவம் கண்டன முழக்கமிடவில்லையா? இவற்றுக்குப்பதில் அது பரோபகாரத்தையும் வறுமையையும், பிரம்ம சரியத்தையும் ஊன் ஒடுக்கத்தையும், மடாலய வாழ்க்கையையும் புனித மாதாவாகிய சமயச் சபையையும் போற்றி உபன்யாசம் புரியவில்லையா? பிரபுத்துவக் கோமானுடைய மனப்புகைச்

---

* குறிப்பாய் ஜெர்மனிக்கு இது பொருந்துவதாகும். ஜெர்மன் நிலப்பிரபுக்களும் பிரஷ்ய (ஜங்கர்களும்) நிலவேந்தர்களும்[60] தமது பண்ணைகளில் பெரும் பகுதியை நேரே தமது காரியக்காரர்களைக் கொண்டு சொந்தத்தில் விவசாயம் நடத்தியதோடு, பெரிய அளவில் வள்ளிக் கிழங்கு சர்க்கரைத் தயாரிப்பாளர்களாகவும் உருளைக் கிழங்கு சாராயம் வடிப்போராகவும் தொழில் புரிகின்றனர். இவர்களினும் செல்வச் செழிப்புடைத்தவர்களாய் இருக்கும் பிரிட்டிஷ் பிரபுக்குலத்தினர் இன்னும் இந்த அளவுக்குச் சென்றுவிடவில்லை, ஆயினும் அவர்களும் சரிந்து செல்லும் நிலவாரங்களுக்காக ஈடு செய்துகொள்ளும் பொருட்டு, அதிகமாகவோ குறைவாகவோ கபடமான கூட்டுப் பங்குக் கம்பெனிகளது அமைப்பாளர்களுக்கு உதவியாய்த் தமது பெயரைக் கடன் கொடுத்து ஆதாயமடையத் தெரிந்தவர்களாகவே இருக்கின்றனர். [1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]

சலேப் புனிதம் பெறச் செய்வதற்காக சமயகுருதெளித்திடும் புனித தீர்த்தமே கிறித்தவ சோஷலிசம்.

### (ஆ) குட்டிமுதலாளித்துவ சோஷலிசம்

முதலாளித்துவ வர்க்கத்தால் நாசத்துக்கு உள்ளாக்கப்பட்டது பிரபுத்துவக் கோமான்களது வர்க்கம் மட்டுமல்ல; நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் சூழலில் வாட்டமுற்று நசித்தவை இந்தப் பிரபுத்துவ வர்க்கத்தின் வாழ் நிலேமைகள் மட்டும் அல்ல. மத்திய கால நகரத்தாரும் சிறு விவசாய உடைமையாளர்களும்தான் நவீன முதலாளித்துவ வர்க்கத்தின் முன்னேடிகளாவர். தொழில் துறையிலும் வாணிபத் துறையிலும் சொற்ப அளவே வளர்ச்சிபெற்றுள்ள நாடுகளில் இவ்விரு வர்க்கங்களும் உதித்தெழுந்து வரும் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கத்தில் செயலிழந்த நிலேயில் இன்னமும் காலமோட்டிக் கொண்டிருக்கின்றன.

நவீன நாகரிகம் முழு அளவுக்கு வளர்ந்துவிட்ட நாடுகளில் குட்டிமுதலாளித்துவப் பகுதியோராலான ஒரு புதிய வர்க்கம் உருவாகியிருக்கிறது. இவ்வர்க்கம் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது, முதலாளித்துவ சமுதாயத்தின் வால் பகுதியாய் ஓயாமல் தன்னேப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இவ்வர்க்கத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் போட்டியினது செயற்பாட்டால் இடையருது வீழ்த்தப்பட்டுப் பாட்டாளி வர்க்கத்தினுள் தள்ளப்படுகின்றனர். நவீனத் தொழில் துறை வளர்வதைத் தொடர்ந்து நவீன சமுதாயத்தில் இவர்கள் சுயேச்சையான ஒரு பிரிவாய் நீடிக்க முடியாமல் அறவே மறைந்து போய், வாணிபத்திலும் தொழிலிலும் விவசாயத்திலும் தம்மிடத்தில் மேலாளர்களும் சம்பள அலுவலர்களும் அமர்த்தப்பட்டுவிடும் காலம் நெருங்கி வருவதைப் பார்க்கின்றனர்.

தேச மக்களில் பாதிக்கு மேற்பட்டோர் விவசாயிகளாய் இருக்கும் பிரான்சு போன்ற நாடுகளில், முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்ப் பாட்டாளி வர்க்கத்தை ஆதரித்த

எழுத்தாளர்கள், முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான தமது விமர்சனத்தில் விவசாயிகளும் குட்டிமுதலாளித்துவப் பகுதியோருமானவர்களது பார்வையைப் பயன்படுத்த நேர்வதும், இந்த இடைத்தட்டு வர்க்கங்களது நோக்குநிலையிலிருந்து தொழிலாளி வர்க்கத்துக்காக வாதாட முற்படுவதும் இயற்கையே. இவ்வாறுதான் எழுந்தது குட்டிமுதலாளித்துவ சோஷலிசம். பிரான்சில் மட்டுமின்றி இங்கிலாந்திலும் இவ்வகையினருக்கு சிஸ்மோந்தீ தலைமை தாங்கினர்.

இவ்வகைப்பட்ட சோஷலிசம் நவீனப் பொருளுற்பத்தி உறவுகளிலுள்ள முரண்பாடுகளைக் கண்டு மிகுந்த மதிநுட்பத்துடன் அவற்றை விவரித்தது. பொருளியலாளர்களுடைய கபடமான நியாயவாதங்களை அது அம்பலப்படுத்திற்று. இயந்திரங்களும் உழைப்புப் பிரிவினையும் உண்டாக்கும் நாசகர விளைவுகளையும் மூலதனமும் நிலமும் ஒருசிலரின் கைகளில் குவிவதையும் அமித உற்பத்தியையும் நெருக்கடிகளையும் அது மறுக்க முடியாத வகையில் நிரூபித்துக் காட்டிற்று. குட்டிமுதலாளித்துவப் பகுதியோருக்கும் விவசாயிகளுக்கும் தவிர்க்க முடியாதவாறு ஏற்படும் அழிவையும், பாட்டாளி வர்க்கத்தின் கொடுந் துன்பத்தையும், பொருளுற்பத்தியில் நிலவும் அராஜகத்தையும், செல்வத்தின் வினியோகத்தில் ஏற்படும் படுமோசமான ஏற்றத்தாழ்வுகளையும், தேசங்களிடையிலான படுநாசத் தொழில் துறைப் போரையும், பழைய ஒழுக்கநெறியும் பழைய குடும்ப உறவுகளும் பழைய தேசிய இனங்களும் குலைந்து செல்வதையும் அது எடுத்துரைத்தது.

ஆயினும் இவ்வகைப்பட்ட சோஷலிசம் அதன் நேர்முகக் குறிக்கோள்களைப் பொறுத்தவரை, பழைய உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களையும் அவற்றுடன் கூடவே பழைய சொத்துடைமை உறவுகளையும் பழைய சமுதாயத்தையும் மீட்டமைக்கவே விரும்புகிறது; அல்லது நவீன உற்பத்தி, பரிவர்த்தனைச் சாதனங்களை அவற்றால் தகர்த்தெறியப் பட்டுள்ள, தகர்த்தெறியப்பட்டே ஆக வேண்டிய பழைய சொத்துடைமை உறவுகளின் கட்டுக்கோப்பினுள் இருத்திவைத்து அடைத்திடவே விரும்புகிறது. இவை இரண்டில் எது அதன் விருப்பமாயினும், இவ்வகைப்பட்ட சோஷலி

சம் ஒருங்கே பிற்போக்கானதும் கற்பனுவாதத் தன்மையதுமே ஆகும்.

தொழில் அரங்கில் ஒருங்கிணேந்த கைவினேச் சங்கங்கள், விவசாயத்தில் தந்தைவழிச் சமூக உறவுகள்—இவையே அதன் இறுதி முடிவான முழக்கங்கள்.

முடிவில், தன்னேத் தானே ஏமாற்றிக் கொள்ள முயலுவதன் மதிமயக்கங்களே எல்லாம் முரட்டுப் பிடிவாதம் கொண்ட வரலாற்று உண்மைகள் சிதறியோடச் செய்ததும், இவ்வகைப்பட்ட சோஷலிசம் பரிதாபத்துக்குரிய மனச்சோர்விலும் வேதனேயிலும் மூழ்கி முடிவு எய்துகிறது.

### (இ) ஜெர்மானிய, அல்லது ''மெய்யான'' சோஷலிசம்

பிரெஞ்சு நாட்டு சோஷலிச, கம்யூனிச இலக்கியமானது ஆட்சியதிகாரம் செலுத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் ஒடுக்குமுறையின் பலனுய் உருவாகி எழுந்தது, இந்த ஆட்சியதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தின் வெளிப்பாடாய் விளங்கிற்று. ஜெர்மனியில் வரைமுறையற்ற பிரபுத்துவ ஆதிக்கத்தை எதிர்த்து முதலாளித்துவ வர்க்கம் தனது போராட்டத்தை அப்போதுதான் ஆரம்பித்திருந்த ஒரு நேரத்தில் இந்த இலக்கியம் இந்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

ஜெர்மன் தத்துவவியலாளர்களும் அரைவேக்காட்டுத் தத்துவவியலாளர்களும் ஆடம்பர அடுக்குமொழிப் பித்தர்களும் இந்த இலக்கியத்தை ஆவலுடன் கட்டித் தழுவிக் கொண்டனர், ஆனுல் பிரெஞ்சு நாட்டிலிருந்து இந்த எழுத்துகள் ஜெர்மனிக்குள் இடம்பெயர்ந்து வந்தபோது பிரெஞ்சு நாட்டுச் சமூக நிலேமைகளும் அவற்றுடன் சேர்ந்து இடம்பெயர்ந்து வரவில்லே என்பதை அவர்கள் நினேவில் கொண்டார்கள் இல்லே. ஜெர்மனியில் நிலவிய சமூக நிலேமைகளில் இந்த பிரெஞ்சு இலக்கியம் அதன் உடனடி நடைமுறை முக்கியத்துவத்தை அறவே இழந்து முழுக்க முழுக்க இலக்கியத் தன்மையதான ஒரு போக்காய்த் திரியலாயிற்று. இவ்விதம், பதினெட்டாம் நூற்ருண்டின் ஜெர்மன் தத்துவ

வியலாளர்களுக்கு, முதலாவது பிரெஞ்சுப் புரட்சியின் கோரிக்கைகள் பொதுவான ''நடைமுறை வழியிலான பகுத்தறிவின்'' கோரிக்கைகளேயன்றி வேறல்ல என்ருயின; புரட்சிகர பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினது சித்தத்தின் வெளிப்பாடானது அவர்களுடைய கண்களுக்குத் தூய சித்தத்தின்—எத்தகையதாய் இருந்தாக வேண்டுமோ அத்தகைய சித்தத்தின், பொதுப்படையான உண்மை மனித சித்தத்தின்—விதிகளைக் குறிப்பனவாயின.

ஜெர்மன் இலக்கிய விற்பன்னர்களது பணி, புதிய பிரெஞ்சுக் கருத்துக்களைத் தமது பண்டைத் தத்துவவியல் மனச்சான்றுக்கு இசைவாய் வகுத்திடுவதில், அல்லது இன்னும் சுருராய்ச் சொல்வதெனில் தமது சொந்தத் தத்துவவியல் கண்ணேட்டத்தைத் துறந்துவிடாமல் பிரெஞ்சுக் கருத்துக்களைக் கிரகித்துக் கொள்வதில் அடங்கிவிடுவதாகியது.

இந்தக் கிரகிப்பு அயல் மொழி ஒன்று எப்படி கிரகிக்கப் படுகிறதோ அதே வழியில், அதாவது மொழிபெயர்ப்பு மூலமாய் நடந்தேறியது.

பண்டைக் காலப் புறச்சமயத்தாரின் முதுபெரும் இலக்கியங்கள் தீட்டப் பெற்றிருந்த எழுத்துச் சுவடிகளின் மேல் மடாலயத் துறவிகள் கத்தோலிக்கப் புனிதர்களது வாழ்க்கை வரலாறு பற்றிய அசட்டுக் குறிப்புகளை எழுதி வைத்ததை நாம் நன்கறிவோம். இதே செயல் முறையைத்தான் ஜெர்மன் இலக்கியத் துறையினர் அஞசார பிரெஞ்சு இலக்கியம் சம்பந்தமாய் நேர் எதிர்த் திசையில் செய்து முடித்தார்கள். பிரெஞ்சு மூலத்துக்கு அடியில் அவர்கள் தமது தத்துவவியல் அபத்தத்தை எழுதினர்கள். எடுத்துக்காட்டாய், பணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளைப் பற்றிய பிரெஞ்சு விமர்சனத்துக்கு அடியில் அவர்கள் ''மனிதத் தன்மை அன்னியமாதல்'' என்று எழுதினர்கள், முதலாளித்துவ அரசு பற்றிய பிரெஞ்சு விமர்சனத்துக்கு அடியில் ''பொதுமை எனும் கருத்தினம் அரியாசனத்திலிருந்து அகற்றப்படுதல்'' என்றும், இன்ன பலவாருகவும் எழுதினர்கள்.

பிரெஞ்சு வரலாற்றியல் விமர்சனங்களுக்கு அடியில் இப்படி இந்தத் தத்துவவியல் பதங்களைப் புகுத்துவதற்குத்தான்

அவர்கள் ''செயல் துறை தத்துவவியல்'', ''மெய்யான சோஷலிசம்'', ''ஜெர்மன் சோஷலிச விஞ்ஞானம்'', ''சோஷலிசத்தின் தத்துவவியல் அடிப்படை'' என்றெல்லாம் பெயர் சூட்டிக் கொண்டனர்.

பிரெஞ்சு சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு இலக்கியம் இவ்வாறு அறவே ஆண்மையிழக்க நேர்ந்தது. ஜெர்மானியரின் கைக்கு வந்ததும் இப்படி அது ஒரு வர்க்கம் பிறிதொன்றை எதிர்த்து நடத்தும் போராட்டத்தின் வெளிப்பாடாய் இருக்கும் தன்மையை இழந்துவிட்டதால், அவர் ''பிரெஞ்சுக்காரருடைய ஒருசார்பினைக்'' கடந்து முன்செல்கிறோமென நினைத்துக் கொண்டார்; உண்மையான தேவைகளுக்குப் பதிலாய் உண்மையின் தேவைகளை, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பதிலாய் மனித சாரத்தன்மையின் நலன்களை, எந்த வர்க்கத்தையும் சேராமல், எதார்த்தத்தில் இல்லாமல், தத்துவவியல் கற்பனையின் பனிமூட்டத்தில் மட்டும் இருக்கக் கூடிய பொதுப்படையான மனிதனின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறோமென எண்ணிக் கொண்டார்.

இந்த ஜெர்மன் சோஷலிசம், பள்ளிக்கூட மாணவனது பாடத்துக்கு ஒப்பானதை அத்தனை மகத்தான காரியமாய்க் கொண்டு தனது அவலச் சரக்கை அவ்வளவு பிரமாதமாய் விளம்பரப்படுத்தி வந்த அது, பகட்டுப் புலமை வாய்ந்த தனது அப்பாவித்தனத்தை படிப்படியாய் இழக்க வேண்டியதாயிற்று.

பிரபுத்துவக் கோமான்களையும் வரம்பில்லா முடியாட்சியையும் எதிர்த்து ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கமும், குறிப்பாய் பிரஷ்ய முதலாளித்துவ வர்க்கமும் நடத்திய போராட்டம், அதாவது மிதவாத இயக்கம் சூடு பிடித்து மும்முரமாயிற்று.

இதன் மூலம் ''மெய்யான'' ஜெர்மன் சோஷலிசத்துக்கு நெடுநாளாய் அது விரும்பிக் காத்திருந்த வாய்ப்பு கிட்டிற்று: அரசியல் இயக்கத்துக்கு எதிராக சோஷலிஸ்டுக் கோரிக்கைகளை எழுப்புவதற்கும், மிதவாதத்துக்கு எதிராகவும், பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கு எதிராகவும், முதலாளித்துவப் போட்டிக்கும் முதலாளித்துவப் பத்திரிகை

சுதந்திரத்துக்கும் முதலாளித்துவ சட்டநெறிக்கும் முதலாளித்துவச் சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிராகவும் வழக்கமான சாபங்களைப் பொழிவதற்கும் அதற்கு வாய்ப்பு கிட்டிற்று. மக்கள் திரளினர் இந்த முதலாளித்துவ இயக்கத்தின் மூலம் யாவற்றையும் இழக்க வேண்டியிருக்குமே தவிர எந்த ஆதாயமும் பெற முடியாது என்று அவர்களுக்கு உபதேசிப்பதற்கு வாய்ப்பு கிட்டிற்று. ஆனால் சரியான தருணத்தில் ஜெர்மன் சோஷலிசத்துக்கு மறதி ஏற்பட்டுவிட்டது. அது எதனுடைய அசட்டு எதிரொலியாய் இருந்ததோ, அந்தப் பிரெஞ்சு விமர்சனமானது நவீன முதலாளித்துவ சமுதாயம் அதற்குரிய பொருளாதார வாழ் நிலைமைகளோடும் அதற்கு ஏற்றதாகிய அரசியல் அமைப்போடும் ஏற்கெனவே நிலவுவதையே, அதாவது ஜெர்மனியில் நடைபெறவிருந்த போராட்டம் எதைச் சாதிக்க நினைத்ததோ அது ஏற்கெனவே நிலவுவதையே தனது அடிப்படை முற்கோளாய்க் கொண்டிருந்தது என்பது குறித்து மறதி ஏற்பட்டுவிட்டது.

எதேச்சாதிகார அரசாங்கங்களுக்கும் அவற்றின் பாதிரிமார்களுக்கும் பேராசிரியர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் அதிகாரிகளுக்கும், தம்மை அச்சுறுத்திய முதலாளித்துவ வர்க்கத்திடம் காட்டி மிரட்டுவதற்கு ஏற்ற கிலியூட்டும் பொம்மையாய் இந்த ஜெர்மன் சோஷலிசம் பயன்பட்டது.

இதே அரசாங்கங்கள் சரியாய் இதே காலத்தில் ஜெர்மன் தொழிலாளி வர்க்க எழுச்சிகளை அடக்குவதற்காக உபயோகித்த கசப்பு மருந்துகளாகிய கசையடிகளுக்கும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பிற்பாடு இந்த ஜெர்மன் சோஷலிசம் கசப்பகற்றும் இனிப்பான கடைசிக் கவளமாயிற்று.

இவ்வாறு ''மெய்யான'' சோஷலிசம் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஆயுதமாய் இந்த அரசாங்கங்களுக்குப் பயன்பட்ட அதே நேரத்தில், பிற்போக்கான ஒரு தரப்பின், ஜெர்மன் பிலிஸ்தியர்களது நலத்தின் நேரடிப் பிரதிநிதியாகவும் விளங்கிற்று. ஜெர்மனியில் குட்டிமுதலாளித்துவ வர்க்கமானது, பதினாறும் நூற்றுண்டின் மிச்சக் கூறுகளாய் அமைந்து, அது முதலாய்ப்

பல்வேறு வடிவங்களில் இடைவிடாமல் தலைகாட்டி வருகிறது; தற்போதுள்ள நிலைவரங்களுக்கு இந்த வர்க்கம்தான் மெய்யான சமூக அடித்தளமாய் இருக்கிறது.

இந்த வர்க்கம் அழியாது நீடிக்க வேண்டுமாயின் ஜெர்மனியின் தற்போதைய நிலைவரங்கள் அப்படியே நீடித்தாக வேண்டும். முதலாளித்துவ வர்க்கம் தொழில் துறையிலும் அரசியலிலும் செலுத்தும் மேலாண்மையானது இந்த வர்க்கம் நிச்சயமாய் அழிந்து போகும்படியான அபாயத்தை உண்டாக்குகிறது—ஒரு புறத்தில் மூலதனம் ஒருசிலரிடம் குவிவதன் மூலமும், மறுபுறத்தில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் எழுவதன் மூலமாகவும் அதற்கு இந்த அபாயம் ஏற்படுகிறது. ''மெய்யான'' சோஷலிசம் ஒரே கல்லால் இந்த இரண்டையும் அடித்து வீழ்த்தக் கூடியதாய்த்தோன்றிற்று. உடனே கொள்ளை நோய் போல் அது பல்கிப்பரவிற்று.

கற்பிதச் சிலந்தி வலை அங்கி, சொல்லோவியப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டது; பிணி கொண்ட பசப்புணர்ச்சிக் கண்ணீரில் தோய்ந்தது — அறிவெல்லைக்கு அப்பாற்பட்ட இந்த அங்கியால்தான் ஜெர்மன் சோஷலிஸ்டுகள் எலும்பும் தோலுமாய் அவல உருக் கொண்ட தமது ''நிரந்தர உண்மைகளை'' மூடிப் போர்த்தியிருந்தனர். இந்த அங்கி அவர்களது சரக்குகளின் விற்பனையை இம்மாதிரியான குட்டி முதலாளித்துவக் கூறுகளிடத்தே ஏகமாய் பெருகச் செய்வதற்கு உதவியாய் இருந்தது.

ஜெர்மன் சோஷலிசத்தைப் பொறுத்தவரை அது குட்டி முதலாளித்துவ பிலிஸ்தியர்களது படாடோபமான பிரதிநிதியாய் விளங்குவதே தனக்குரிய பணி என்பதை மேலும் மேலும் நன்றாகவே உணர்ந்து கொண்டது.

ஜெர்மன் தேசமே முன்மாதிரியான தேசம், ஜெர்மனியின் பிலிஸ்திய அற்பனே முன்னுதாரணமான மனிதன் என்பதாய் அது பறைசாற்றிற்று. இந்த முன்னுதாரண மனிதனின் இழிகுணம் ஒவ்வொன்றுக்கும் அதன் உண்மைப் பண்புக்கு நேர்விரோதமாய், மறைபொருளான மகோன்னத சோஷலிசத் தன்மையதான விளக்கம் தந்தது. கடைகோடி

நிலேக்குச் செல்ல வேண்டுமென்று அது கம்யூனிசத்தின் ''முரட்டுத்தனமான நாசப்'' போக்கை நேர்நின்று எதிர்த்தது; எல்லா வர்க்கப் போராட்டங்களையும் வெறுத்து ஒதுக்கியவற்றுக்கும் மேம்பட்டதான பாரபட்சமற்ற தனது உன்னத நிலையைப் பிரகடனம் செய்தது. சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு வெளியீடுகள் என்பதாய்க் கூறிக் கொண்டு தற்போது (1847) ஜெர்மனியில் வினியோகமாகி வருபவை யாவும்—விதிவிலக்காய் ஒருசிலவற்றைத் தவிர்த்து—அறவே வலுவிழக்கச் செய்யும் இந்தக் கேடுகெட்ட இலக்கிய வகையினைச் சேர்ந்தவையே*.

## 2. பழமைவாத, அல்லது முதலாளித்துவ சோஷலிசம்

முதலாளித்துவ வர்க்கத்தில் ஒரு பகுதி, முதலாளித்துவ சமுதாயம் தொடர்ந்து நிலவும்படி உறுதி செய்து கொள்ளும் பொருட்டு சமூகக் குறைபாடுகளை அகற்ற விரும்புகிறது.

இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே பொருளியலாளர்களும், கொடைவள்ளல்களும், மனிதாபிமானிகளும், உழைப்பாளி மக்களுடைய நிலைமையை மேம்படுத்துவோரும், தருமப் பணித் துறையாளரும், ஜீவகாருண்ய சங்கத்தாரும், மதுக் குறைப்பு வீரர்களும், எல்லா விதமான துக்கடாச் சீர்திருத்தக்காரர்களும். இந்த முதலாளித்துவ சோஷலிசம் முழுநிறைத் தத்துவ அமைப்புகளாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

புரூதோனின் *Philosophie de la Misère* [''வறுமையின் மெய்யறிவு''] என்ற புத்தகத்தை இவ்வகை சோஷலிசத்துக்கு ஓர் உதாரணமாய்க் குறிப்பிடலாம்.

* 1848ஆம் ஆண்டின் புரட்சிப் புயல் இந்த ஈனப் போக்கு அனைத்தையுமே துடைத்தொழித்தது, இனி சோஷலிசத்தின் பக்கம் தலைகாட்டும் விருப்பமே இப்போக்கினருக்கு ஏற்படாதபடி பாடம் கற்பித்தது. ஹெர் கார்ல் கிருய்ன் தான் இந்தப் போக்கின் பிரதான முன்மாதிரிப் பிரதிநிதியாக இருந்தவர். **[1890ஆம் ஆண்டின் ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

சோஷலிச நாட்டங் கொண்ட முதலாளிமார்கள் நவீன சமூக நிலைமைகளின் எல்லா அனுகூலங்களும் வேண்டும், ஆனால் இந்நிலைமைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளாகிய போராட்டங்களும் அபாயங்களும் இருக்கக் கூடாது என்று ஆசைப்படுகிறார்கள். தற்போதுள்ள சமூக முறையை அப்படியே வைத்துக் கொண்டு அதன் புரட்சிகரக் கூறுகளையும் சிதைவுக் கூறுகளையும் மட்டும் நீக்க வேண்டுமென்பதே இவர்களது விருப்பம். பாட்டாளி வர்க்கம் இல்லாமல் முதலாளித்துவ வர்க்கம் மட்டும் இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறார்கள். முதலாளித்துவ வர்க்கம் தான் அதிபதியாய் அமைந்திருக்கும் உலகே யாவற்றிலும் சிறந்ததென இயல்பாகவே கருதுகின்றது. இந்த வசதியான கருத்தை முதலாளித்துவ சோஷலிசம் அதிகமாகவோ குறைவாகவோ நிறைவு பெற்ற தத்துவ அமைப்பாய் வளர்த்திடுகிறது. இம்மாதிரியான அமைப்பைப் பாட்டாளி வர்க்கம் செயல்படுத்தி இவ்வழியில் நேரே ஒரு புதிய சமூக ஜெரூசலத்தை நோக்கி நடைபோட வேண்டுமென கோருவதன் மூலம் உண்மையில் அது கேட்பது என்னவெனில், பாட்டாளி வர்க்கம் தற்போதுள்ள சமுதாயத்தின் வரம்புகளுக்கு உட்பட்டதாய்த் தொடர்ந்து இருந்து கொண்டு, அதேபோது முதலாளித்துவ வர்க்கத்தைப் பற்றி அதற்குள்ள வெறுக்கத்தக்க கருத்துகளை எல்லாம் விட்டொழித்துவிட வேண்டும் என்பதுதான்.

இவ்வகை சோஷலிசத்தின் இன்னொரு வடிவம் குறைவாகவே முறைப்படுத்தப்பட்டது, ஆனால் அதிகமாய் நடைமுறைத் தன்மை வாய்ந்தது. தொழிலாளி வர்க்கத்துக்கு அனுகூலமாய் இருக்கக் கூடியது பொருளாயத வாழ் நிலைமைகளில், பொருளாதார உறவுகளில் ஏற்படும் மாறுதல் மட்டுமேதான், வெறும் அரசியல் சீர்திருத்தத்தால் பயன் ஏதுமில்லை என்று எடுத்துரைப்பதன் மூலம், தொழிலாளி வர்க்கத்தின் கண்களில் எவ்விதமான புரட்சி இயக்கமும் மதிப்பிழந்துவிடும்படிச் செய்ய முயன்றது இது. ஆனால் பொருளாயத வாழ் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதன் மூலம் இவ்வகைப்பட்ட சோஷலிசம் எவ்வகையிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி உறவு

களின் ஒழிப்பை, புரட்சியால் மட்டுமே சாதிக்கப்படக் கூடிய இந்த ஒழிப்பைக் குறிக்கவில்லை; நிர்வாகச் சீர்திருத்தங் களையே குறிக்கிறது. இந்த நிர்வாகச் சீர்திருத்தங்கள் முத லாளித்துவப் பொருளுற்பத்தி உறவுகள் தொடர்ந்து நீடிப் பதை அடிப்படையாய்க் கொண்டவை, ஆகவே மூலதனத் துக்கும் உழைப்புக்கும் இடையிலான உறவுகளை எவ்விதத்தி லும் பாதிக்காதவை, அரசாங்கத்தின் செலவுகளைக் குறைப் பதற்கும் நிர்வாகப் பணியை எளிமையாக்குவதற்கும் மேல் அதிகமாய் ஒன்றும் செய்ய முடியாதவை.

முதலாளித்துவ சோஷலிசம் வெறும் சொல் அலங்கார மாகும் போது மட்டுமே அது தன்னைச் சரியானபடி வெளிப் படுத்திக் கொள்கிறது.

தடையில்லா வாணிபம்: தொழிலாளி வர்க்கத்தின் நல னுக்காக. காப்புச் சுங்க வரிகள்: தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காக. சிறைச் சீர்திருத்தம்: தொழிலாளி வர்க்க நலனுக்காக. இதுதான் முதலாளித்துவ சோஷலிசத்தின் இறுதி நிலையைக் குறிக்கும் சொல், விளையாட்டாய் அமை யாத ஒரே சொல்.

முதலாளித்துவ சோஷலிசத்தைச் சுருக்கமாய் ஒரே வாக் கியத்தில் சொல்லிவிடலாம்: முதலாளி முதலாளியாய் இருப் பது, தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காகவே.

### 3. விமர்சன-கற்பனாவாத சோஷலிசமும் கம்யூனிசமும்

பாபெஃபின் எழுத்துகளையும் ஏனையோரது எழுத்துகளை யும் போல் நவீன காலத்தின் மாபெரும் புரட்சி ஒவ்வொன்றி லும் பாட்டாளி வர்க்கக் கோரிக்கைகளின் குரலாய் எப் போதும் ஒலித்திருக்கும் இலக்கியத்தை இங்கு நாம் குறிப் பிடவில்லை.

பிரபுத்துவச் சமுதாயம் வீழ்த்தப்படுகையில் எங்கும் ஒரே பரபரப்பு மிகுந்திருந்த காலங்களில் பாட்டாளி வர்க் கம் தனது சொந்த நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற் காக முதன்முதலாய் நேரடியாய் மேற்கொண்ட முயற்சிகள் தவிர்க்க முடியாதபடி தோல்வியுற வேண்டியதாயிற்று; ஏனெ

னில், பாட்டாளி வர்க்கம் அப்போது வளர்ச்சியுருத நிலையிலே இருந்தது என்பதுடன், அது விடுதலை பெறுவதற்குத் தேவையான பொருளாதார நிலைமைகள் இன்னமும் தோன்றியாகவில்லை. இந்த நிலைமைகள் பிற்பாடுதான் தோற்றுவிக்கப்பட விருந்தன, வரவிருந்த முதலாளித்துவச் சகாப்தத்தால் மட்டுமே இந்த நிலைமைகள் தோற்றுவிக்கப்படக் கூடியவை. பாட்டாளி வர்க்கத்தின் இந்த ஆரம்பக் கால இயக்கங்களின் உடன் பிறப்பாய் எழுந்த புரட்சி இலக்கியமானது தவிர்க்க முடியாதவாறு ஒருவித பிற்போக்குத் தன்மை கொண்டதாகவே இருந்தது. அனைவரும் துறவி மனப்பாங்கு கொள்ள வேண்டுமென்றும், கொச்சையான முரட்டு வழியில் சமுதாயம் சமனமாக்கப்பட வேண்டுமென்றும் அது போதித்தது.

சரியானபடி சோஷலிச, கம்யூனிச கருத்தமைப்புகள் என்பதாய்க் கூறத்தக்கவை, சான் சிமோனும் ஃபூரியேயும் ஓவனும் ஏனையோரும் எடுத்துரைத்த இவை, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டத்தின் மேலே விவரிக்கப்பட்ட வளர்ச்சியுருத ஆரம்பக்காலக்கூறில் உருவாகி எழுந்தவையே (பிரிவு I, ''முதலாளிகளும் பாட்டாளிகளும்'' என்பதைப் பார்க்கவும்).

இந்த அமைப்புகளின் மூலவர்கள் அன்றைய சமுதாயத்தினுள் இருக்கும் வர்க்கப் பகைமைகளையும் சிதைவு உண்டாக்கும் கூறுகளின் செயலையும் கண்ணுறுவது மெய்தான். ஆனல் இன்னமும் பிள்ளைப் பருவத்திலேயே இருந்த பாட்டாளி வர்க்கம் வரலாறு படைக்கும் முன்முயற்சியோ, சுயேச்சையான அரசியல் இயக்கப்பாடோ சிறிதும் இல்லாத ஒரு வர்க்கமாகவே அவர்களுக்குத் தோற்றமளிக்கிறது.

வர்க்கப் பகைமையின் வளர்ச்சியானது தொழில் வளர்ச்சியுடன் சேர்ந்து அதே வேகத்தில் நடைபோடுவதால், அவர்கள் கண்ணுறும் பொருளாதாரச் சூழ்நிலை பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வேண்டிய பொருளாயத நிலைமைகளை இன்னும் அவர்களுக்குத் தெரியும்படி வெளிப்படுத்தவில்லை. ஆகவே அவர்கள் இந்த நிலைமைகளைத் தோற்றுவிக்கக் கூடிய ஒரு புதிய சமூக விஞ்ஞானத்தை, புதிய சமூக விதிகளை தேடிச் செல்கிருர்கள்.

வரலாற்று வழிப்பட்ட செயல் சொந்த முறையிலான அவர்களது கண்டுபிடிப்புச் செயலுக்கும், விடுதலைக்காக வரலாற்று வழியில் உருவான நிலைமைகள் கற்பனை முறையில் வகுக்கப்பட்ட நிலைமைகளுக்கும், பாட்டாளி வர்க்கத்தின் படிப்படியான, தன்னியல்பான வர்க்க ஒழுங்கமைப்பு இந்தக் கண்டுபிடிப்பாளர்கள் இதற்கென புனைந்தளிக்கும் சமூக ஒழுங்கமைப்புக்கும் அடிபணிய வேண்டும் என்றுகியது. இவர்களது கண்களுக்கு, இவர்களுடைய சமூகத் திட்டங்களுக்கான பிரசாரமும், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடைமுறைப் பணியும்தான் வருங்கால வரலாறு என்றுகி விடுகிறது.

ஏனையவற்றைவிட மிக அதிகமாய்த் துன்புறும் வர்க்கமாய் இருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களில்தான் தலையாய கருத்து செலுத்த வேண்டும் என்ற உணர்வோடு இவர்கள் தமது திட்டங்களை வகுத்தமைக்கிறுர்கள். இவர்களுக்குப் பாட்டாளி வர்க்கம் என்பதாய் ஒன்று இருக்கிறதெனில், அது மிக அதிகமாய்த் துன்புறும் வர்க்கம் என்ற வகையில் மட்டும்தான்.

வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி பெருத நிலையும், அதோடு இவ்வகை சோஷலிஸ்டுகளுடைய சுற்றுச்சார்புகளும் இவர்களை வர்க்கப் பகைமைகள் யாவற்றுக்கும் தாம் மிகவும் மேலானேராய் இருப்பதாய்க் கருதிக் கொள்ளச் செய்கின்றன. இவர்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் நிலையையும், மிகவும் சலுகை படைத்தவர்களின் நிலையையுங்கூட மேம்படுத்த விரும்புகிறுர்கள். ஆகவே வழக்கமாய் இவர்கள் வர்க்க பேதம் கருதாமலே, ஒட்டுமொத்தமாய் சமுதாயம் முழுமைக்கும் வேண்டுகோள் விடுக்கிறுர்கள்; அது மட்டுமின்றி, எல்லோருக்கும் முதலாய் ஆளும் வர்க்கத்துக்கே வேண்டுகோள் விடுக்கிறுர்கள். ஏனெனில் இவர்கள் எடுத்துரைக்கும் அமைப்பினைப் புரிந்து கொள்ளும் எவரும் சமுதாயத்தின் சாத்தியமான மிகச் சிறந்த நிலைக்குரிய சாத்தியமான மிகச் சிறந்த திட்டமாகும் இந்த அமைப்பு என்பதைக் காணத் தவறவும் முடியுமோ?

எனவே இவர்கள் எல்லா அரசியல் செயற்பாட்டையும், முக்கியமாய் எல்லாப் புரட்சிகரச் செயற்பாட்டையும் நிரா

கரிக்கிறார்கள். சமாதான வழிகளில் இவர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறார்கள்; அற்பமான சோதனைகள் மூலமும்—நிச்சயம் தோல்வியுறவே செய்யும் என்னும்படியான இவற்றின் மூலமும்—முன்னுதாரணத்தின் சக்தி மூலமும் இவர்கள் இந்தப் புதிய சமூக வேதத்துக்குப் பாதையைச் செப்பனிட முயலுகிறார்கள்.

வருங்கால சமுதாயத்தைப் பற்றிய இப்படிப்பட்ட கற்பனைச் சித்திரங்கள், பாட்டாளி வர்க்கம் இன்னமும் வளர்ச்சி பெறாததாய் இருந்து கொண்டு தனக்குரிய நிலை குறித்து கற்பனைப் புனைவான கருத்தோட்டத்தையே பெற்றிருக்கும் ஒரு காலத்தில் தீட்டப் பெற்ற இந்தச் சித்திரங்கள், பொதுவாய் சமுதாயத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று அந்த வர்க்கத்துக்கு உள்ளுணர்வாய் எழும் அந்த ஆரம்பக் கால ஆர்வங்களுக்கு ஏற்பவே அமைந்திருக்கின்றன.

ஆனால் இந்த சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு வெளியீடுகளில் விமர்சனக் கூறும் ஒன்று அடங்கியிருக்கிறது. நடப்பிலுள்ள சமுதாயத்தின் ஒவ்வொரு அடிப்படை ஏற்பாட்டையும் இந்த வெளியீடுகள் தாக்குகின்றன. ஆகவே தொழிலாளி வர்க்கம் அறிவொளி பெறுவதற்கு அவற்றில் மதிப்பிடற்கரிய விவரப் பொருள்கள் நிறைந்திருக்கின்றன. அவற்றில் முன்மொழியப்பட்டிருக்கும் நடைமுறைத் திட்டங்கள் யாவும்—நகரத்துக்கும் கிராமப்புறத்துக்குமுள்ள பாகுபாட்டையும்,* குடும்ப அமைப்பையும், தனியாட்களின் நலனுக்காகத் தொழில்கள் நடத்தப்படுவதையும், கூலியுழைப்பு முறையையும் ஒழித்தல், சமுதாயத்தின் ஒருங்கிசைவைப் பிரகடனம் செய்தல், அரசின் செயற்பாடுகளைப் பொருளுற்பத்தியை மேற்பார்வையிடுதலாய் மட்டும் மாற்றிடுதல் ஆகிய இத்தகைய திட்டங்கள் யாவும்—வர்க்கப் பகைமைகள் மறைந்து போவதை மட்டும் குறிப்பனவாய் இருக்கின்றன. இந்த வர்க்கப் பகை

* ஆங்கிலப் பதிப்பில் இந்த வாசகம் பின்வருமாறு உள்ளது: ''உதாரணமாக, அவர்கள் நகரப்புறத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான முரண்பாடுகளை ஒழிப்பதற்கான இத்தகைய காரிய சாத்தியமான நடவடிக்கைகளை முன்வைத்தார்கள்.''—ப-ர்.

மைகள் அக்காலத்தில் அப்போதுதான் தலைதூக்கிக் கொண்டிருந்தன, இவற்றின் ஆரம்பக் காலத்துக்குரிய தெளிவற்ற, வரையறை செய்யப்படாத வடிவங்களில் மட்டுமே இந்த வெளியீடுகள் இவற்றைக் குறிப்பிடுகின்றன. எனவே இந்த முன்மொழிவுகள் முற்றிலும் கற்பனாவாதத் தன்மையனவாகவே இருக்கின்றன.

விமர்சன-கற்பனாவாத சோஷலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் முக்கியத்துவம் வரலாற்று வளர்ச்சியுடன் எதிர் விகிதச் சார்புறவு கொண்டதாகும். நவீன கால வர்க்கப் போராட்டம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று திட்டவட்டமான உருவம் பெறுகிறதோ, போராட்டத்திலிருந்து கற்பிதமாய் விலகி நிற்பதும், கற்பிதமாய் அதனைத் தாக்குவதும் அந்த அளவுக்கு நடைமுறை மதிப்பையும் தத்துவார்த்த நியாயத்தையும் முற்றும் இழந்துவிடுகின்றன. ஆகவே இந்த அமைப்புகளின் மூலவர்கள் பல விதத்திலும் புரட்சிகரமானோராய் இருந்திருப்பினுங்கூட, இவர்களது சீடர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெறும் பிற்போக்குக் குறுங் குழுக்களாகவே அமைந்திருக்கிறார்கள். பாட்டாளி வர்க்கத்தின் முற்போக்கான வரலாற்று வழி வளர்ச்சிக்கு எதிராய், அவர்கள் தமது ஆசிரியர்களுடைய மூலக் கருத்துக்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் வர்க்கப் போராட்டத்தை மழுக்கடிக்கவும் வர்க்கப் பகைமைகளுக்கு இணக்கம் காணவும் முயலுகின்றனர். அதுவும் முரணின்றி முறையாய் முயலுகின்றனர். தமது கற்பனாவாத சமூகத் திட்டங்களைச் சோதனை முயற்சிகள் மூலம் சித்தி பெறச் செய்யலாமென்று, தனிப்பட்ட சில ''பலான்ஸ்டேர்களையும்'', ''உள்நாட்டுக் குடியேற்றங்களையும்'', ''சிறு ஐகேரியாவையும்''*—புதிய ஜெருசலத்தின்

* ''பலான்ஸ்டேர்கள்'' ஷார்ல் ஃபூரியேயின் திட்டத்தின்படி அமைந்த சோஷலிசக் குடியேற்றங்கள். ''ஐகேரியா'' என்பது காபே தமது கற்பனை நாட்டுக்கும் பிற்பாடு தமது அமெரிக்கக் கம்யூனிசக் குடியேற்றத்துக்கும் சூட்டிய பெயர். **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

''உள்நாட்டுக் குடியேற்றங்கள்'' [Home-colonies] என்பதாய் ஓவன் தமது கம்யூனிச முன்மாதிரி அமைப்புகளுக்குப்

இந்தக் குட்டிப் பதிப்புகளை—அமைத்திடலாமென்று இன்னமும் கனவு காண்கிறார்கள். இந்த ஆகாயக் கோட்டைகளை எல்லாம் சித்தி பெறச் செய்வதற்காக இவர்கள் முதலாளிமார்களது பரிவு உணர்ச்சியையும் பணத்தையும் எதிர்பார்த்து வேண்டுகோள் விடுக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. படிப்படியாய் இவர்கள் மேலே விவரிக்கப்பட்ட பிற்போக்குப் பழமைவாத சோஷலிஸ்டுகளது பிரிவுக்குத் தாழ்ந்து விடுகிறார்கள். இவர்களது பகட்டுப் புலமை அதிகமாய் முறைப்படுத்தப்பட்டதாய் இருக்கிறது என்பதும், இவர்கள் தமது சமூக விஞ்ஞானத்தின் அதிசய சக்தியில் வெறித்தனமான மூட நம்பிக்கை கொண்டவர்கள் என்பதும் தான் மேலே விவரிக்கப்பட்டோருக்கும் இவர்களுக்குமுள்ள ஒரே வித்தியாசம்.

எனவே இவர்கள் தொழிலாளி வர்க்கம் மேற்கொள்ளும் எந்த அரசியல் நடவடிக்கையையும் கடுமையாய் எதிர்க்கின்றனர். புதிய வேதத்தில் குருட்டுத்தனமாய்க் கொண்டுள்ள அவநம்பிக்கையின் விளைவாகவே இம்மாதிரிதான நடவடிக்கை எழுகிறதெனக் கருதுகின்றனர்.

இங்கிலாந்தில் ஓவனியர்களும் பிரான்சில் ஃபூரியேயர்களும் முறையே சார்ட்டிஸ்டுகளையும் *La Réforme* ஆதரவாளர்களையும்[61] எதிர்க்கின்றனர்.

## IV

## தற்போதுள்ள பற்பல எதிர்க்கட்சிகள் குறித்து கம்யூனிஸ்டுகளின் நிலை

இங்கிலாந்திலுள்ள சார்ட்டிஸ்டுகளையும் அமெரிக்காவிலுள்ள நிலச் சீர்திருத்தாளர்களையும் போல் தற்போதுள்ள

---

பெயரிட்டார். ''பலான்ஸ்டேர்கள்'' என்பதாய் ஃபூரியே திட்டமிட்ட பொது மாளிகைகளுக்குப் பெயர் சூட்டப்பட்டது. ''ஐகேரியா'' என்பது கற்பனை நாட்டுக்கு இடப்பட்ட பெயர், காபே இந்தக் கற்பனை நாட்டின் கம்யூனிச நிறுவனங்களைச் சித்தரித்துக் காட்டியிருந்தார். **[1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

தொழிலாளி வர்க்கக் கட்சிகள் சம்பந்தமாய் கம்யூனிஸ்டு களுடைய உறவுநிலை இரண்டாவது பிரிவில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறை வேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் தற் காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தை யும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக் கின்றனர். பிரான்சில் கம்யூனிஸ்டுகள் பழமைவாத, தீவிர வாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு எதிராய் சமூக-ஜன நாயகவாதிகளுடன்* கூட்டு சேர்ந்து கொள்கிறார்கள்; ஆனால் மாபெரும் புரட்சியிடமிருந்து மரபு வழியில் வந்துள்ள தொடர்கள் குறித்தும் பிரமைகள் குறித்தும் விமர்சனப் பார்வை கொண்ட ஒரு நிலையை ஏற்பதற்கான உரிமையை விட்டுவிடாமல் தம் கையில் வைத்திருக்கிறார்கள்.

சுவிட்ஸர்லாந்தில் அவர்கள் தீவிரவாதிகளை ஆதரிக்கிறார் கள், அதேபோது தீவிரவாதக் கட்சி பிரெஞ்சு நாட்டு அர்த் தத்தில் ஜனநாயக சோஷலிஸ்டுகளாகிய ஒரு பகுதியும் தீவிரவாத முதலாளித்துவ வர்க்கத்தாராகிய ஒரு பகுதியு மான ஒன்றுக்கொன்று பகைமையான இரு கூறுகளைக் கொண் டிருப்பதை அவர்கள் தவறாமல் கவனத்தில் வைத்திருக்கிறார் கள்.

---

* அக்காலத்தில் பாராளுமன்றத்தில் லெத்ரு-ரோலா னும், இலக்கியத்தில் லுயீ பிளானும், நாளேடுகளில் *Réforme*[62] பத்திரிகையும் பிரதிநிதித்துவம் செய்த கட்சி. சமூக-ஜனநாயகம் என்னும் பெயர், அதைக் கண்டுபிடித்த வர்களாகிய இவர்களுக்கு, அதிகமாகவோ குறைவாகவோ சோஷலிசச் சாயல் கொண்ட ஜனநாயக அல்லது குடியரசுக் கட்சியின் ஒரு பிரிவைக் குறிப்பதாய் இருந்தது. **[1888ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

பிரான்சில் அக்காலத்தில் தன்னை சமூக-ஜனநாயகக் கட்சி என்று அழைத்துக் கொண்ட கட்சியை அரசியல் வாழ்க்கை யில் லெத்ரு-ரோலானும், இலக்கியத்தில் லுயீ பிளானும் பிரதிநிதித்துவம் செய்தனர்; இவ்வாறு அது இன்றைய ஜெர்மன் சமூக-ஜனநாயகத்திடமிருந்து வெகுவாய் வேறு படுவதாய் இருந்தது. **[1890ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.]**

போலந்தில் தேச விடுதலைக்கு விவசாய நிலவுடைமையிலான புரட்சி தலையாய முன்னிபந்தனையென வற்புறுத்தும் கட்சியை, 1846ஆம் ஆண்டு கிராக்கவ் எழுச்சியை உசுப்பி விட்ட கட்சியை அவர்கள் ஆதரிக்கிறார்கள்.[63]

ஜெர்மனியில் முதலாளித்துவ வர்க்கம் எதேச்சாதிகார முடியாட்சியையும் பிரபுத்துவ நிலவேந்தர் அமைப்பையும் பிற்போக்குவாதக் குட்டிமுதலாளித்துவப் பகுதிகளையும் எதிர்த்துப் புரட்சிகரமாய்ச் செயல்படும் போதெல்லாம், அவர்கள் அதனுடன் சேர்ந்து நின்று போராடுகிறார்கள்.

ஆனால் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள தீராப் பகைமை குறித்து கணப்பொழுதும் ஓயாமல் அவர்கள் சாத்தியமான முழு அளவுக்குத் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்; முதலாளித்துவ வர்க்கம் தனது மேலாண்மையுடன் கூடவே தவிர்க்க முடியாதபடி கொண்டு வந்தாக வேண்டியிருக்கும் சமூக, அரசியல் நிலைமைகளை ஜெர்மன் தொழிலாளர்கள் அப்படியே நேரே முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தும் பொருட்டும், ஜெர்மனியில் பிற்போக்கு வர்க்கங்கள் வீழ்ச்சியுற்றதும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டம் உடனடியாகவே ஆரம்பமாகிவிடும் பொருட்டும் அவர்கள் இப்படித் தொழிலாளர்களுக்கு உணர்வூட்டுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் பிரதானமாய் ஜெர்மனியிடம் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். ஏனெனில் ஜெர்மனியானது முதலாளித்துவப் புரட்சி நடைபெறும் தறுவாயில் இருக்கிறது; இங்கு இந்த முதலாளித்துவப் புரட்சி ஐரோப்பிய நாகரிகம் அதிகம் முன்னேறியிருக்கும் நிலைமைகளிலும், பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலும் இருந்ததைக் காட்டிலும் மிக அதிக வளர்ச்சி பெற்றுள்ள ஒரு பாட்டாளி வர்க்கம் இருந்து வரும் சூழலிலும் நடைபெறவிருக்கிறது என்பதுடன், ஜெர்மனியில் முதலாளித்துவ புரட்சியானது அதை உடனடியாகவே பின்தொடரும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான ஒத்திகையே ஆகும்.

சுருங்கக் கூறின், கம்யூனிஸ்டுகள் எங்கும் தற்போதுள்ள சமூக, அரசியல் நிலைவரங்களது அமைப்பு முறையை எதிர்த்து நடைபெறும் புரட்சிகர இயக்கம் ஒவ்வொன்றையும் ஆதரிப்பவர்கள் ஆவர்.

இந்த இயக்கங்கள் யாவற்றிலும் அவர்கள் சொத்துடைமைப் பிரச்சினையை, இதுவரை அது எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல், தலைமையான பிரச்சினையாய் முன்னிலைக்குக் கொண்டுவருகிறார்கள்.

முடிவில், எல்லா நாடுகளையும் சேர்ந்த ஜனநாயகக் கட்சிகளது ஒற்றுமைக்காகவும் அவற்றினிடையிலான உடன்பாட்டுக்காகவும் அவர்கள் பாடுபடுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் தமது கருத்துக்களையும் நோக்கங்களையும் மூடிமறைக்க மனம் ஒப்பாதவர்கள். இன்றுள்ள சமுதாயத்தின் நிலைமைகள் யாவற்றையும் பலவந்தமாய் வீழ்த்த வேண்டும், அப்போதுதான் தமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று கம்யூனிஸ்டுகள் ஒளிவுமறைவின்றி பறைசாற்றுகிறார்கள். அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள், கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று. பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது.

### உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

*கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்*
*இருவராலும் 1847 டிசம்பரில்—*
*1848 ஜனவரியில் எழுதப்பட்டது*

*ஜெர்மன் மொழியில் வந்த ஒரு*
*குறிப்பிட்ட பதிப்பில் லண்டனில்*
*முதன் முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின்படி அச்சிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது*

கார்ல் மார்க்ஸ்

# முதலாளித்துவ வர்க்கமும் எதிர்ப்புரட்சியும்[64]

இரண்டாம் கட்டுரை

கொலோன், டிசம்பர் 11

மார்ச் பிரளயம்[65]—சிற்றுருவிலான ஒரு பிரளயம்—வடிந்து தணிந்த போது அது பெர்லினின் நிலப்பரப்பில் பூதங்களையோ புரட்சிகர ராட்சசர்களையோ விட்டுச் செல்லவில்லை, மாறாக பழைய பாணியிலான கைப்பாவைகளை கொழுத்துச் சிறுத்த முதலாளித்துவப் பிரமுகர்களை "ஐக்கிய சட்டமன்றத்தின்"[66] மிதவாதிகளை, உணர்வு பூர்வமான பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளை விட்டுச் சென்றது. மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ வர்க்கத்தைக் கொண்டிருந்த மாகாணங்களான ரைன் மாகாணம் மற்றும் சைலிஷியா புதிய மந்திரிசபைகளுக்கான பிரதான படைப் பிரிவை வழங்கின. இவர்களின் பின்னால் ரைனிஷ் சட்ட இயல் அறிஞர்களின் முழு வரிசையும் இருந்தது. நிலப் பிரபுக்களால் முதலாளித்துவ வர்க்கம் வலுவந்தமாகப் பின்னணிக்குத் தள்ளப்பட்ட அதே அளவுக்கு ரைன் மாகாணமும் சைலிஷியாவும் மந்திரி சபைகளில் பழைய பிரஷ்யன் மாகாணங்களுக்கு இடம் அளித்தன. ஓர் எல்பெர்ஃபெல்ட் டோரி[67] மட்டுமே இன்னும் பிராண்டன்பர்க் மந்திரி சபையை ரைன் மாகாணத்துடன் இணைத்துக் கொண்டிருக்கிறார். ஹான்சிமன் மற்றும் வான் டெர் ஹெய்த்! இந்த

இரண்டு பெயர்களும் பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு 1848 மார்ச் மற்றும் டிசம்பர் இடையிலான முழு வேறுபாட்டையும் குறித்துக் காட்டுகின்றன!

பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கம் அரசு அதிகாரத்தின் சிகரத்துக்கு வீசித்தள்ளப்பட்டது. ஆயினும் இது அது விரும்பிய தன்மையில், மன்னருடன் சமாதான முறையிலான பேரம் மூலமாக நடைபெறவில்லை, மாறாக ஒரு புரட்சி மூலம் ஏற்பட்டது. தனது சொந்த நலன்களைத் தாங்கி ஆதரித்துக் கொள்வதற்கு அன்றி மாறாக, மன்னருக்கு எதிராக அதாவது தனக்கே எதிராக ஒரு மக்கள் இயக்கத்துக்கு வேண்டி, மக்களின் நலன்களைத் தாங்கி ஆதரிக்கும் வகையில் முதலாளித்துவ வர்க்கத்துக்குப் பாதை சமைத்திருந்தது. ஆயினும், மன்னர் அதன் பார்வையில் தனது அகவாழ்வுக்கான நலன்களை மூடி மறைத்துக் கொள்வதற்கான, கடவுள் அருளால் வழங்கப்பட்ட, ஒரு திரையாக மட்டுமே காட்சி அளித்தார். அதன் சொந்த நலன்களின் மற்றும் அதன் நலன்களுடன் உடன்படும் அரசியல் வடிவங்களினதும் முழுநிறைக்காப்புடைய தன்மை அரசியல் சட்ட மொழியில் எழுதப்படும் போது பின்வரும் வாசகத்தைக் கொண்டிருக்கும்: மன்னரின் முழுநிறைக் காப்புரிமை. இதுவே அரசியல் சட்ட முடியரசின் மீது ஜெர்மன் மற்றும், குறிப்பாயும் பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கம் இவ்வளவு பரவசமான பிரியம் கொண்டிருப்பதற்கான ஏதுவாகும். எனவே பிப்ரவரிப் புரட்சியையும் அதனுடன் சேர்த்து அதன் ஜெர்மன் அலையதிர்வுகளையும், நாட்டின் ஆட்சியைத் தம் கரங்களில் அது அளித்த காரணத்தால் பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கம் வரவேற்ற போதிலும் அதே சமயத்தில் அது தனது தன்னல ஏற்பாடுகளை நிலை குலைத்துக் கொண்டது. காரணம் அது விரும்பாத அதனால் நிறைவு செய்ய இயலாத நிபந்தனைகளால் அது சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

முதலாளித்துவ வர்க்கம் போராடக் கரம் உயர்த்தவில்லை. அதன் போராட்டத்தை தனக்காக மக்கள் நடத்த அனுமதித்தது. எனவே, அதனிடம் மாற்றி வழங்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு விரோதியை முறியடித்த ஒரு தளபதி

யின் ஆட்சியல்ல, மாருக ஒரு பொதுப் பாதுகாப்புக் கமிட்டி யின் ஆட்சியாகும் இதனிடம் வெற்றிவாகை சூடிய மக்கள் தமது நலன்களுக்கான பாதுகாப்பை ஒப்படைத்திருந்தார் கள்.

கம்பஹாசன் இந்த நிலைமையின் படுமோசமான வேத னையை இன்னும் உணர்ந்தார். அவரது மந்திரி சபை யின் பலவீனம் முழுவதற்கும் இந்த உணர்வும் இதைத் தோற்றுவித்த புறநிகழ்வுகளுமே காரணம். அவரது அரசாங் கத்தின் மிகவும் மானக்கேடான செயல்கள் ஒருவிதத்தில் வெட்கிச் சிவக்கும் வகையில் இருந்தன. ஒளிவுமறைவற்ற வெட்கக்கேடும் திமிரும் ஹான்சிமனின் தனியுரிமையாக இருந்தன. இந்த இரண்டு ஓவியர்கள் இடையில் இருந்த ஒரே வேறு பாடு சிவப்பு வண்ணம் தீட்டல் மட்டுமே.

பிரஷ்யன் மார்ச் புரட்சியை 1648 ஆங்கிலப் புரட்சியோடும், 1789 பிரெஞ்சுப் புரட்சியோடும் போட்டுக் குழப்பக் கூடாது.

1648ல் முதலாளித்துவவர்க்கம் முடியாட்சிக்கு எதிராக, நிலவுடைமைப் பிரபுக்குலத்துக்கும் நிலைநாட்டப்பட்டிருந்த சமய நிறுவனத்துக்கும் எதிராக நவீனப் பிரபுக்குலத்துடன் அணிசேர்ந்திருந்தது.

1789ல் முதலாளித்துவ வர்க்கம் முடியரசு, பிரபுக்குலம் மற்றும் நிலைநாட்டப்பட்ட சமய நிறுவனத்துக்கு எதிராக மக்களுடன் அணிசேர்ந்திருந்தது.

1789 புரட்சிக்கு (குறைந்தபட்சம் ஐரோப்பாவில்) அதன் முன்னேடி மாதிரியாக 1648 புரட்சி மட்டுமே இருந் தது, 1648 புரட்சிக்கு ஸ்பெயினுக்கு[68] எதிரான நெதர் லாந்துக்காரர்களின் புரட்சி எழுச்சி மட்டுமே இருந்தது. இந்த இரண்டு புரட்சிகளும் காலத்தில் மட்டுமன்றி உள்ள டக்கத்திலுங்கூட அவற்றின் முன்னேடி மாதிரிகளை விடவும் ஒரு நூற்றுண்டுக்கு அப்பால் இருந்தன.

இரண்டு புரட்சிகளிலும் இயக்கத்தின் முன்னணியாக மெய்யாகவே அமைந்திருந்த வர்க்கம் முதலாளித்துவ வர்க்க மாகும். பாட்டாளி வர்க்கம் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் கூருக இல்லாத நகரத்தார் அடுக்குகளுக்கு ஒன்று முதலா ளித்துவ வர்க்கத்திடமிருந்து தனிப்பிரிந்த நலன்கள் எது

வும் இருக்கவில்லை, அல்லது அவை இன்னமும் சுயேச்சையாக வளர்ச்சியடைந்த வர்க்கங்களாகவோ அல்லது வர்க்கங்களின் உபபிரிவுகளாகவோ அமையவில்லை. எனவே அவர்கள் எங்கே முதலாளி வர்க்கத்துக்கு எதிராக முன்வந்தார்களோ அங்கே, எடுத்துக்காட்டாக, பிரான்சில் 1793 முதல் 1794 வரை, அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் பாணியில் இல்லாவிட்டாலுங்கூட முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களின் நிறைவேற்றத்திற்காக மட்டுமே போராடினுர்கள். பிரெஞ்சு பயங்கர இயக்கம் முழுதும், எதேச்சாதிகாரம், நிலப்பிரபுத்துவம் மற்றும் அற்பவாதம் எனும் முதலாளித்துவ வர்க்கத்தின் விரோதிகளுடன் பிளெபியன் (பாமரக் குடியோர்) தன்மையில் பழிதீர்த்துக் கொள்ளும் செயலே தவிர வேறு எதுவும் அல்ல.

1648 மற்றும் 1789 புரட்சிகள் ஆங்கில மற்றும் பிரெஞ்சுப் பாணி புரட்சிகள் அல்ல; அவை ஐரோப்பிய பாணியிலான புரட்சிகளாகும். அவை பழைய அரசியல் அமைப்பு மீது சமுதாயத்தின் ஒரு திட்ட வட்டமான வர்க்கம் ஈட்டிய வெற்றி அல்ல. அவை புதிய ஐரோப்பிய சமுதாயத்தின் அரசியல் அமைப்புக்கான பிரகடனமாகும். இந்தப் புரட்சிகளில் முதலாளித்துவ வர்க்கம் வெற்றிவாகை சூடியது; ஆனுல் அந்த சமயத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் வெற்றி ஒரு புதிய சமுதாய அமைப்பின் வெற்றியாக விளங்கியது, பிரபுத்துவச் சொத்துடைமை மீதான முதலாளித்துவச் சொத்துடைமையின் வெற்றியாகவும், மாகாணப் போக்கை எதிர்த்த தேசிய இனத்தின் வெற்றியாகவும், கில்டுக்கு எதிராக போட்டியின் வெற்றியாகவும், தலைவாரிசு முறைக்கு எதிராகப் பாகப்பிரிவினையின் வெற்றியாகவும், உடைமையாளர் மீது நிலம் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்த நிலவுரிமையாளரின் வெற்றியாகவும், மூட நம்பிக்கைகளை எதிர்த்த அறிவொளியின் வெற்றியாகவும், குடும்பப் பெயரை எதிர்த்த குடும்பத்தின் வெற்றியாகவும், பகட்டான சோம்பலை எதிர்த்த சுறுசுறுப்பின் வெற்றியாகவும், மத்தியகால முந்துரிமைகளை எதிர்த்த குடியுரிமைச் சட்டத்தின் வெற்றியாகவும் விளங்கியது. 1648 புரட்சி பதினுரும் நூற்றுண்டை எதிர்த்துப்

பதினேழாம் நூற்றுண்டு ஈட்டிய வெற்றியாகும். 1789 புரட்சி பதினேழாம் நூற்றுண்டை எதிர்த்துப் பதினெட்டாம் நூற்றுண்டு ஈட்டிய வெற்றியாகும். இந்தப் புரட்சிகள் அவை நிகழ்ந்த உலகப் பகுதியின், இங்கிலாந்து மற்றும் பிரான்சினுடையதை விடவும் அதிகமாக அந்த நாளைய உலகின் தேவைகளை வெளியிட்டன.

பிரஷ்யாவின் மார்ச் புரட்சியில் இந்த வகைப்பட்ட எதுவும் இருக்கவில்லை.

பிப்ரவரி புரட்சியானது அரசியல் சட்ட முடியாட்சியை மெய்யாகவும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை கருத்தளவிலும் ஒழித்துக்கட்டியிருந்தது. பிரஷ்யாவின் மார்ச் புரட்சி அரசியல் சட்ட முடியாட்சியை கருத்தளவிலும், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மெய்யாகவும் நிறுவுவதாக இருந்தது. இது ஓர் ஐரோப்பியப் புரட்சியாக இருப்பதற்கு பதில் ஒரு பின்தங்கிய நாட்டில் ஏற்பட்ட ஓர் ஐரோப்பியப் புரட்சியாக குறுக்கப்பட்ட பின்விளைவாகவே இருந்தது. அதன் காலத்தை கடந்து முன்னேடுவதற்குப் பதிலாக அது அரை நூற்றுண்டுக்கும் அதிகப்பட்ட காலம் பின்வாங்கிச் சென்றது. இது துவக்கமுதலே இரண்டாந்தரமானதாக இருந்தது. ஆனல் இரண்டாந்தரமான நோய்களுக்குச் சிகிச்சைபெறுவது அதிக கஷ்டமானது என்பதும், அதே சமயம் இவை மூல நோயைவிடவும் கூடுதலாக உடம்பை வாட்டி வதக்கிவிடும் என்பதும் நன்கறிந்த உண்மையாகும். இது ஒரு புதிய சமுதாய அமைப்பை நிலைநாட்டும் விஷயம் அல்ல, மாருக பாரிசில் காலமாகிவிட்டதான அந்த சமுதாய அமைப்புக்குப் பெர்லினில் மறுபிறப்புத் தரும் பிரச்சினையாகும். பிரஷ்யாவில் நடந்த மார்ச் புரட்சி ஒரு தேசியப் புரட்சியோ ஜெர்மனி தழுவிய புரட்சியோகூட அல்ல, இது துவக்க முதல் பிரஷ்யன் மாகாண வட்டப் புரட்சியாகவே இருந்தது. வியென்ன, காசெல், மூனிக் மற்றும் எல்லாவகைப்பட்ட மாகாண புரட்சி எழுச்சிகளும் இதனுடன் ஒருங்கே ஓடிப் பாய்ந்து இதன் தலைமையுடன் போட்டியிட்டன.

1648 மற்றும் 1789 புரட்சிகள் படைப்பாற்றலின் சிகரம் என்பதாக எல்லையற்ற பெருமிதம் கொள்ளும் அதே

போதில், 1848ல் பெர்லின் புரட்சியின் பேராவல் காலாவதியாகிப் போன ஒன்றை நிறுவுவதில் கருத்தாக இருந்தது. அவற்றின் ஒளி, ஒளியைப் பரப்பிய கோள்கள் மறைந்து போய் நூறுயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு மட்டுமே பூமியில் வாழும் நம்மை எட்டும் நட்சத்திரங்களின் ஒளியினைப் போன்றதாகும். பிரஷ்யாவின் மார்ச் புரட்சி சிற்றுருவிலான மறு வடிவமாய்,—எல்லா விஷயங்களிலும் ஒரு சிற்றுருவிலான மறுவடிவமாய் இருப்பது போலவே—ஐரோப்பாவுக்குரிய இத்தகைய நட்சத்திரமாக காட்சியளித்தது. இதன் ஒளி, நெடுங்கால முன்பே பதனழிந்து போன ஒரு சமுதாயத்தின் சவத்தின் ஒளியாக இருந்தது.

ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம், மிகவும் சோம்பலாகவும் ஊக்கமின்றியும் மெதுவாகவும் வளர்ச்சியடைந்து வருவதால் அது நிலப்பிரபுத்துவத்தையும் எதேச்சாதிகாரத்தையும் அச்சுறுத்தும் முறையில் எதிரிட நேர்ந்த போது, பாட்டாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒத்ததான நலன்கள் கருத்துக்களைக் கொண்டிருந்த நகரத்தார்களின் எல்லாப் பிரிவுகளும் அதை அச்சுறுத்தும் முறையில் எதிரிட்டன. அதோடு அது தனக்கு விரோதமாக தனக்குப் பின்னுல் ஒரு வர்க்கம் அணிவகுப்பதை மட்டுமன்றி தனக்கு முன்னுல் ஐரோப்பா முழுதுமே நிற்கக் கண்டது. 1789ல் பிரெஞ்சுக்காரர்கள் செய்தது போல, பிரஷ்யன் முதலாளித்துவ வர்க்கம் பழைய சமுதாயத்தின் பிரதிநிதிகள், முடியாட்சி மற்றும் பிரபுக்குலத்துக்கு எதிராக நவீன சமுதாயம் முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கமாக இருக்கவில்லை. அது ஒரு வகைப்பட்ட சமுதாய படிநிலை மட்டத்துக்கு சரிந்து விட்டது, மன்னரை எதிர்த்தது போலவே மக்களையும் உறுதியாக எதிர்த்தது, இரண்டுக்கும் எதிராக இருப்பதில் ஆர்வம் காட்டியது, தனித்தனியாக எடுத்துக் கொண்டால் இதன் எதிராளிகள் ஒவ்வொருவருக்கும் எதிராகத் திடசித்தம் இன்றி இருந்தது, காரணம் அது அவை இரண்டும் தனக்கு முன்னுலோ பின்னுலோ எப்போதும் இருக்கக் கண்டது. அது ஏற்கெனவே பழைய சமுதாய அமைப்பைச் சேர்ந்ததாக இருந்த காரணத்தால், அது வெகு துவக்கம்

கா. மார்க்ஸ்

# மார்க்ஸ் பா. வ. ஆன்னென்கவுக்கு எழுதிய கடிதம்

பாரிஸ் நகரத்துக்கு

*பிரஸ்ஸல்ஸ், டிசம்பர் 28 [1846]*

*அன்பார்ந்த திரு. ஆன்னென்கவ் அவர்களுக்கு,*

*உங்கள் நவம்பர் 1ம் தேதிய கடிதத்துக்கு எனது பதில் வெகு நாளைக்கு முன்பே நீங்கள் பெற்றிருக்க வேண்டியது, ஆனால்* திரு. புரூதோனின் வறுமையின் மெய்யறிவு எனும் *நூலை எனது புத்தகக் கடைக்காரர் சென்ற வாரந்தான் எனக்கு அனுப்பி வைத்தார். அதைப் பற்றிய எனது கருத்தைத் தங்களுக்கு உடனே தெரிவிப்பதற்காக இரண்டே நாளில் படித்து முடித்தேன். அந்நூலை மிக அவசரமாகப் படித்துள்ளதால் விபரங்களில் நான் இறங்க முடியாது, அதைப்பற்றி எனக்கு ஏற்பட்ட பொதுவான கருத்தை மட்டுந்தான் நான் சொல்ல முடியும். நீங்கள் விரும்பினால் இரண்டாவது கடிதத்தில் நான் விபரங்களில் இறங்க முடியும்.*

*மொத்தத்தில் அந்நூல் மோசமானது, மிக மோசமானது என்று நான் மனந்திறந்து சொல்லித் தீர வேண்டும். இந்த வடிவ ஒழுங்கில்லாத படாடோபமான நூலில் திரு. புரூதோன் விளம்பரப்படுத்திக் கொள்கிற ''ஜெர்மன் மெய்யறிவு பாற்பட்ட ஒட்டுத்தையலை'' பற்றி நீங்களே உங்கள்*

கடித்ததில் நகைக்கிறீர்கள், ஆனால் பொருளாதார ஆய்வு மெய்யறிவின் விஷத்தால் கெட்டுவிடவில்லை என்று கருது கிறீர்கள். பொருளாதாரவாதத்திலுள்ள பிழைகளைத் திரு. புரூதோனின் மெய்யறிவுக்குக் கற்பிக்க நானும் முன்வர வில்லை. திரு. புரூதோன் ஒரு அபத்தமான மெய்யறிவுத் தத்துவத்தைக் கொண்டிருப்பது அவர் நமக்கு அரசியல் பொருளாதாரம் பற்றிய பொய்யான விமர்சனம் கொடுப் பதற்குக் காரணமல்ல, அவர் நமக்கு ஓர் அபத்தமான மெய்யறிவுத் தத்துவம் கொடுப்பதற்குக் காரணம் இன் றையச் சமுதாய அமைப்பு முறையை அதன் engrènement இலே [சங்கிலித் தொடரான இயக்கத்திலே]—ஃபூரியே யிடமிருந்து திரு. புரூதோன் எவ்வளவோ இரவல் வாங்கி யதிலிருந்து இவ்வார்த்தையை எடுத்துப் பயன்படுத்து கிறேன்—அவர் புரிந்து கொள்ளத் தவறுகிறார்.

இறைவனைப் பற்றியும், உலகளாவிய பகுத்தறிவு பற்றி யும், மனிதகுலத்தின் நபர்சார்பற்ற, பிழையறியாத பகுத் தறிவு பற்றியும், அது எப்போதும் எல்லாச் சகாப்தங்களிலும் தனக்குத் தானே நிகராக இருக்கிறதாகவும் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு ஒருவனுக்கு அதைப் பற்றிச் சரி யான உணர்வு மட்டும் இருந்தால் போதுமென்றும் திரு. புரூதோன் ஏன் பேசுகிறார்? ஓர் ஆழ்ந்த சிந்தனையாளராகக் காட்டிக் கொள்வதற்காக அவர் ஏன் ஆழமற்ற ஹெகல் வாதத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும்?

இந்தப் புதிருக்கு அவரே தடயம் அளிக்கிறார். திரு. புரூதோன் வரலாற்றிலே ஒரு சமுதாய நிகழ்ச்சி வளர்ச்சி களின் வரிசைத் தொடரைக் காண்கிறார்; வரலாற்றிலே முன்னேற்றம் நடைமுறையாகியுள்ளதைக் காண்கிறார்; கடைசியாக, தனிநபர்கள் என்கிற முறையில் மனிதர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதையே அறியாதவர் களாகவும் தமது சொந்த இயக்கத்தையே தவறாகப் புரிந்து கொண்டிருப்பவர்களாகவும் காண்கிறார்—அதாவது, முதல் நோட்டத்திலே தெரிகிறபடி, அவர்களின் சமுதாய வளர்ச்சி யானது, அவர்களின் தனித்தனி வளர்ச்சியிலிருந்து வேறுபட் டும், பிரிந்தும் சுயேச்சையோடும் இருப்பதாகத் தோன்று

கிறது. இந்த விஷயங்களை அவரால் விளக்க முடியவில்லை, எனவே உலகளாவிய பகுத்தறிவு தன்னைத் தானே நிதர்சனப் படுத்திக் கொள்கிறதாக ஒரு ஊகப் பிரமாணத்தை வெறுமே புனைந்து விடுகிறார். மாயமான காரணங்களை, அதாவது பொது அறிவு போதாச் சொற்றொடர்களைப் புனைவது போன்ற சுளுவான வேலை வேறொன்றில்லை.

ஆனால், திரு. புரூதோன் மனிதகுலத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி பற்றித் தமக்கு ஒன்றும் புரியவில்லை என்று ஒப்புக் கொள்கிற போது—உலகளாவிய பகுத்தறிவு, இறைவன் என்றெல்லாம் படாடோபமான சொற்களைப் பயன்படுத்தி இதை அவர் ஒப்புக் கொள்கிறார்,—பொருளாதார வளர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தமக்குத் திராணி இல்லை என்று அவர் உட்கிடையாகவும் அவசியகரமாகவும் ஒப்புக்கொள்ளவில்லையா?

என்ன வடிவத்திலிருந்தாலும் சரியே, சமுதாயம் என்பது என்ன? மக்களின் பரஸ்பரச் செய்கையின் விளைபயனே. மனிதர்கள் தாங்களாகவே ஏதாவதொரு சமுதாயத்தைத் தேர்ந்து கொள்ளச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. மனிதர்களின் உற்பத்திச் சக்திகளில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அனுமானித்துக் கொள்ளுங்கள், வர்த்தகம் நுகர்வு பற்றிய ஒரு குறிப்பிட்ட வடிவம் உங்களுக்குக் கிடைக்கும். உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் நுகர்விலும் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டங்களை அனுமானித்துக் கொள்ளுங்கள், அவற்றிற்குப் பொருத்தமான ஒரு சமுதாய அமைப்பு முறையும் ஒரு பொருத்தமான குடும்ப அமைப்பும் படிப்பிரிவுகளின் அல்லது வர்க்கங்களின் அமைப்பும் — சுருங்கச் சொன்னால், ஒரு பொருத்தமான குடியுரிமைச் சமுதாயம்—உங்களுக்குக் கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட குடியுரிமைச் சமுதாயத்தை அனுமானித்துக் கொள்ளுங்கள், அந்தக் குடியுரிமைச் சமுதாயத்தின் வெறும் அதிகாரபூர்வமான வெளிப்பாடாக இருக்கிற குறிப்பிட்ட அரசியல் அமைப்பு உங்களுக்குக் கிடைக்கும். இதைத் திரு. புரூதோன் என்றைக்கும் புரிந்து கொள்ள மாட்டார், ஏனெனில் அரசு எனும் நிலையில் நின்றுகொண்டு சமுதாயத்துக்கு

—அதாவது, சமுதாயத்தைப் பற்றிய அதிகாரபூர்வமான பொழிப்பின் நிலையில் நின்றுகொண்டு அதிகாரபூர்வமான சமுதாயத்துக்கு—வேண்டுகோள் விடுப்பதில் தாம் பெரிதாக ஏதோ செய்வதாக அவர் நினைத்துக் கொள்கிறார்.

தமது வரலாற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் பொருளாதாரச் சக்திகளைத் தேர்ந்து கொள்ள மனிதர்கள் சுதந்தரமுள்ளவர்களாயில்லை என்று மேற்கொண்டு சொல்லத் தேவையில்லை, ஏனெனில் ஒவ்வொரு உற்பத்திச் சக்தியும் பெறப்பட்ட சக்தியாகும், முந்தைய நடவடிக்கையின் விளைபயனே ஆகும். எனவே உற்பத்திச் சக்திகள் மனிதர்களின் நடைமுறை ஆற்றலின் விளைவாகும்; ஆனால் இந்த ஆற்றலுங்கூட மனிதர்கள் இருக்கக் காண்கிற சூழ்நிலைமைகளாலும் ஏற்கெனவே பெறப்பட்டுள்ள உற்பத்திச் சக்திகளாலும் அவர்களுக்கு முன்பே—அவர்களால் படைக்கப் படாமல் முந்தைய தலைமுறையினரால் விளைவிக்கப்பட்டு—இருந்து வரும் சமுதாய வடிவத்தாலும் நிர்ணயிக்கபட்டுள்ளது. பின்னிட்டு வரும் ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையால் பெறப்பட்ட உற்பத்திச் சக்திகளைக் கைவரப் பெறுகிறது, அது புதிய உற்பத்திக்குரிய மூலப்பொருளாக அதற்குப் பயன்படுகிறது, இந்த எளிய உண்மையின் காரணமாக மனித வரலாற்றிலே ஒரு கூட்டுப்பொருத்தம் உண்டாகிறது, மனிதகுலத்தின் வரலாறு உருப்பெறுகிறது, மனிதனின் உற்பத்திச் சக்திகளும் எனவே அவனுடைய சமுதாய உறவுகளும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக வளர்க்கப் பெற்றுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு வரலாறானது மனிதகுல வரலாறாக அமைகிறது. எனவே, மனிதர்களின் சமுதாய வரலாறு எனப்பட்டது எப்போதும் அவர்களின் தனிநபர் வளர்ச்சியின்—அதை அவர்கள் உணர்ந்திருந்தாலும் இராவிட்டாலும் சரி—வரலாறு தவிர வேறில்லை. அவர்களின் பொருளாயத உறவுகளே அவர்களின் உறவுகளனைத்துக்கும் அடிப்படை. இந்தப் பொருளாயத உறவுகள் அவசியகரமான வடிவங்கள் மட்டுமே, அவற்றில் அவர்களுடைய பொருளாயத மற்றும் தனிநபர் வகைப்பட்ட செயல்கள் நடக்கின்றன.

திரு. புரூதோன் கருத்துக்களையும் பொருட்களையும் கலந்து குழப்புகிறார். மனிதர்கள் தாங்கள் வென்று கொண்டதை என்றைக்கும் விட்டுக் கொடுப்பதில்லை, ஆனால் இதற்குப் பொருள் அவர்கள் எந்தச் சமுதாய வடிவத்தில் சில உற்பத்திச் சக்திகளைப் பெற்றார்களோ அந்தச் சமுதாய வடிவத்தை என்றைக்கும் விட்டுக் கொடுப்பதில்லை என்பதல்ல. அதற்குமாறாக, சாதித்த விளைவு பறிபோகாமலிருப்பதற்காகவும் நாகரிகத்தின் பலன்களை இழக்காமலிருப்பதற்காகவும் அவர்களின் "commerce"க்குரிய வடிவமானது [விவகார உறவுகள்] பெறப்பட்டுள்ள உற்பத்திச் சக்திகளோடு மேற்கொண்டு பொருந்தி வராமற்போகிற தருணத்திலிருந்து அவர்கள் தங்களுடைய மரபுவழிச் சமுதாய வடிவங்களை மாற்றித்தீர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இங்கே "commerce" என்கிற சொல்லை அதன் மிக விரிவான பொருளிலே—ஜெர்மன் மொழியிலே நாம் "Verkehr" எனும் சொல்லைப் பயன்படுத்துவது போல—நான் பயன்படுத்துகிறேன். எடுத்துக்காட்டாக: சிறப்புரிமைகள், கில்டுகள், கார்ப்பரேஷன்கள் ஆகியவற்றின் அமைப்பு, மத்தியகால ஒழுங்குமுறைப்படுத்தும் ஆட்சிமுறை ஆகியவை சமுதாய உறவுகள், அவை மட்டுமே பெறப்பட்டிருந்த உற்பத்திச் சக்திகளுக்கும் முன்பிருந்து வந்த—இந்த அமைப்புகள் எழுவதற்குக் களமாயிருந்த—சமுதாய நிலைமைகளுக்கும் பொருத்தமாக இருந்தன. கார்ப்பரேஷன்கள், ஒழுங்குவிதிகளின் ஆட்சிமுறையின் பாதுகாப்பின்கீழ் மூலதனம் திரட்டப்பட்டது, கடல்கடந்த வாணிபம் வளர்க்கப்பட்டது, காலனிகள் நிறுவப்பட்டன. எந்த வடிவங்களின் பாதுகாப்பின் கீழ் இந்தப் பலன்கள் பழுத்தனவோ அந்த வடிவங்களை நீடித்து வைத்திருக்க முயன்றிருந்தால் மனிதர்கள் அதன் பலன்களை இழந்திருப்பார்கள். எனவே, 1640லும் 1688லும் புரட்சிகள் எனும் இரு இடிமுழக்கங்கள் வெடித்தன. எல்லாப் பழைய பொருளாதார வடிவங்களும், அவற்றிற்குப் பொருத்தமான சமுதாய உறவுகளும், பழைய குடியுரிமைச் சமுதாயத்தின் அதிகாரப் பற்றுள்ள வெளிப்பாடாகிய அரசியல் அமைப்பும், இங்கிலாந்திலே ஒழிக்கப்பட்டன. எனவே, எந்தப் பொரு

ளாதார வடிவங்களில் மனிதர்கள் உற்பத்தி செய்தும், நுகர்ந்தும், பரிமாற்றம் செய்தும் வருகிறார்களோ அந்தப் பொருளாதார வடிவங்கள் தற்காலிகமானவை, வரலாற்று ரீதியானவை. புதிய உற்பத்திச் சக்திகள் கைவரப் பெற்றதும் மனிதர்கள் தமது உற்பத்தி முறையை மாற்றிக் கொள்கிறார்கள், மற்றும் உற்பத்திமுறையுடன் அந்தக் குறிப்பிட்ட உற்பத்தி முறைக்கு அவசியகரமான உறவுகளாக மட்டுமே இருக்கிற எல்லாப் பொருளாதார உறவுகளையும் மாற்றிக் கொள்கிறார்கள்.

இதைத்தான் திரு. புரூதோன் புரிந்து கொள்ளவில்லை, மெய்ப்படுத்திக் காட்டுவதும் இல்லை. வரலாற்றின் உண்மையான இயக்கத்தைப் புரிந்து கொள்ளச் சக்தியற்ற திரு. புரூதோன் ஒரு மாய உருக்காட்சியை உண்டாக்குகிறார், அது இயக்கவியல் வகைப்பட்டது என்றும் தன்முனைப்பாகச் சொல்லிக் கொள்கிறது. பதினேழாவது, பதினெட்டாவது அல்லது பத்தொன்பதாவது நூற்றாண்டு பற்றிப் பேச வேண்டியது அவசியம் என்று அவர் உணரவில்லை, ஏனெனில் அவருடைய வரலாறு கற்பனையின் பனிமூட்ட மண்டலத்தில் உதித்துக் காலத்தையும் வெளியையும் கடந்து எழுகிறது. சுருங்கச் சொன்னால், அது வரலாறு அல்ல, பழைய ஹெகல்வாதக் குப்பை; அது புனிதம் கெட்ட வரலாறு—மனிதனைப் பற்றிய வரலாறு—அல்ல, புனிதமான வரலாறு—அதாவது கருத்துக்களின் வரலாறு—ஆகும். அவரது பார்வை நிலையிலே, கருத்து அல்லது நிரந்தரப் பகுத்தறிவு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்துகிற கருவியே மனிதன், வேறொன்றுமில்லை. திரு. புரூதோன் சொல்கிற பரிணாமங்கள் பரமநிலைக் கருத்தின் மாயக் கருக்குழியிலே நிறைவேற்றம் பெறும் பரிணாமங்கள்தான் ஆகும். இந்த மாயச் சொற்கட்டின் முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்டால் மிஞ்சிக் கிடைப்பது திரு. புரூதோன் தமது மூளைக்குள்ளே பொருளாதார வகையினங்கள் எந்த ஒழுங்கிலே தம்மை முறைப்படுத்தி நிறுத்திக் கொள்கின்றனவோ அந்த வரிசையினை அவர் கொடுப்பதுதான். அது மிகவும் ஒழுங்கு குலைந்த மனத்திலே பிறந்த வரிசை என்று உங்களுக்கு நிரு

பிப்பதில் எனக்குப் பெரிய முயற்சியொன்றும் தேவைப் படாது.

மதிப்பு எனும் விஷயம் திரு. புருதோனின் செல்லக் குஞ்சு, அதைப் பற்றிய ஆய்வுவிளக்கத்திலிருந்து அவர் தமது நூலைத் தொடங்குகிறுர். இன்று இந்த ஆய்வுவிளக் கத்தைப் பரிசீலிப்பதிலே நான் இறங்கப் போவதில்லை.

நிரந்தரப் பகுத்தறிவின் பொருளாதாரப் பரிணுமங்களின் வரிசைத்தொடர் **உழைப்புப் பிரிவினையிலிருந்து** தொடங்கு கிறது. திரு. புருதோனுக்கு உழைப்புப் பிரிவினை ஒரு மிகச் சாதாரணமான விஷயம். எனினும் சாதி அமைப்பு முறையுங் கூட ஒரு குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினை அல்லவா? கைவினைச் சங்க அமைப்பு முறையும் மற்ருெரு உழைப்புப் பிரிவினை தானே? இங்கிலாந்திலே பதினேழாம் நூற்ருண் டின் மத்தியிலே தொடங்கி பதினெட்டாம் நூற்ருண்டின் கடைசிப்பகுதியிலே முடிந்த பட்டறைத் தொழில் அமைப்பு முறையின் கீழிருந்த உழைப்புப் பிரிவினையும் பெருமளவான நவீனகாலத் தொழில்துறையின் உழைப்புப் பிரிவினை யிலிலிருந்து முற்றிலும் வேறுபட்டதல்லவா?

சாதாரணப் பொருளாதாரவாதிகளுங்கூட எடுத்துக் கவனிக்கிறதைப் புறக்கணிக்கும் அளவுக்கு திரு. புருதோன் உண்மையிலிருந்து விலகி நிற்கிறுர். அவர் உழைப்புப் பிரி வினையைப் பற்றிப் பேசும் போது உலக மார்க்கெட்டைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம் என்று உணரவில்லை. ஆனுல், இன்னமும் காலனிகள் தோன்றியிராத, ஐரோப்பாவை பொருத்தமட்டில் இன்னும் அமெரிக்கா ஒன்று இராதிருந்த, கான்ஸ்டான்டிநோபிளின் இடையீடு மூலமாக மட்டுமே ஐரோப்பா கிழக்காசியாவை அறிந்திருந்த பதினுன்காவது, பதினைந்தாவது நுற்ருண்டுகளின் உழைப்புப்பிரிவினை எனப் பட்டது ஏற்கெனவே காலனிகள் வளர்ந்துவிட்டிருந்த பதி னேழாவது நூற்ருண்டின் உழைப்புப் பிரிவினையிலிருந்து அடிப்படையாகவே வேறுபட்டிருக்க வேண்டுமல்லவா?

அத்துடன் முடியவில்லை. நாடுகளின் உள் அமைப்பு முழு வதும், அவற்றின் சர்வதேச உறவுகள் அனைத்தும் ஒரு குறிப் பிட்ட உழைப்புப் பிரிவினையின் வெளிப்பாடு தவிர வேறு

என்ன? உழைப்புப் பிரிவினை மாறுகிற பொழுது இவையும் மாறித் தீர வேண்டுமல்லவா?

திரு. புரூதோன் உழைப்புப் பிரிவினைப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதபடியால் நாட்டுப்புறமும் நகரப்புறமும் பிரிந்ததைப் பற்றி அவர் குறிப்பிடுவது கூட இல்லை. எடுத்துக் காட்டாக, இந்தப் பிரிவினை ஜெர்மனியில் ஒன்பதாம் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை நிகழ்ந்தது. எனவே திரு. புரூதோனுக்கு இந்தப் பிரிவினை ஒரு நிரந்தர விதி, ஏனெனில் அதன் தோற்றமோ வளர்ச்சியோ அவருக்குத் தெரியாது. இந்த ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையின் படைப்பு நிரந்தரமாக நிலைத்திருக்கும் என்கிற முறையிலே தமது நூல் நெடுகிலும் அவர் பேசுகிறுர். உழைப்புப் பிரிவினை பற்றி திரு. புரூதோன் சொல்வதெல்லாம் அவருக்கு முன்பே ஆதாம் ஸ்மித்தும் மற்றும் ஓராயிரம் பேர்களும் சொன்னதின் ஒரு சுருக்கமே—மிக மேம்போக்கான அரை குறையான சுருக்கமே—ஆகும்.

இயந்திரவகை என்பது இரண்டாவது பரிணமம். உழைப்புப் பிரிவினைக்கும் இயந்திரவகைக்கும் உள்ள தொடர்பு திரு. புரூதோனுக்கு முற்றிலும் மாயமாகப்படுகிறது. ஒவ்வொரு வகைப்பட்ட உழைப்புப் பிரிவினையும் குறிப்பிட்ட உற்பத்திக் கருவிகளைப் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாக, பதினேழாம் நூற்றுண்டின் நடுவுக்கும் பதினெட்டாம் நூற்றுண்டின் நடுவுக்கும் இடைப்பட்ட காலத்தில் மக்கள் ஒவ்வொன்றையும் கையால் செய்யவில்லை. இயந்திரங்கள் இருந்தன, நெசவு இயந்திரங்கள், கப்பல்கள், நெம்புக்கருவிகள் முதலான நுட்பச் சிக்கலான இயந்திரங்களும் இருந்தன.

எனவே, பொதுப்படையான உழைப்புப் பிரிவினையிலிருந்து இயந்திரவகையைப் பெறுவதை விட மிக அபத்தமானது வேருென்றுமில்லை.

மேலும், திரு. புரூதோன் இயந்திரவகையின் தோற்றத்தைப் புரிந்து கொள்ளாதது போலவே அதன் வளர்ச்சியைப் புரிந்து கொண்டிருப்பது அதைவிடக் குறைவு என்று, போகிற போக்கிலே, சொல்லி வைக்கலாம். 1825ம் ஆண்டு

வரை—முதலாவது பொது நெருக்கடிக் காலம் வரை உற்பத்தியைவிடப் பொதுவாகவே நுகர்வு சம்பந்தப்பட்ட தேவைகள் விரைவாக அதிகரித்தன, இயந்திர வகையின் வளர்ச்சி சந்தையின் தேவைகளிலிருந்து பிறந்த இன்றியமையாத ஒரு பின்விளைவேயாகும். 1825லிருந்து, இயந்திரங்களின் புனைவும் செயல்பாடும் வெறுமே தொழிலாளிகள் முதலாளிகள் இடையேயுள்ள போரின் விளைவாகவே இருந்தது. எனினும் இது இங்கிலாந்து விஷயத்தில் மட்டுமே உண்மை. ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரை, உள் நாட்டுச் சந்தைகளிலும் உலகச் சந்தையிலும் ஒருங்கே ஆங்கிலேயப் போட்டி இருந்ததால் அவையும் இயந்திர வகையை எடுத்துப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இறுதியாக, வட அமெரிக்காவிலே இயந்திரவகை புகுத்தப்பட்டதற்குக் காரணம் மற்ற நாடுகளோடுள்ள போட்டி மட்டுமல்லாமல் ஆள்பலம் இல்லாமையுமாகும்—அதாவது, வட அமெரிக்காவின் மக்கட்தொகைக்கும் அதன் தொழில் தேவைகளுக்கும் இடையே பொருத்தமின்மை இருந்ததுமாகும். இந்த உண்மைகளிலிருந்து நீங்கள் கண்டு கொள்ள முடியும், திரு. புரூதோன் மூன்றுவது பரிணமமாக, இயந்திரவகையின் எதிருரையாக, போட்டி எனும் பூதத்தை மந்திரித்து எழுப்பிவிடுவதில் என்ன அறிவு விவேகம் காட்டுகிறார் என்று!

இறுதியாகவும் பொதுவாகவும் சொன்னுல், உழைப்புப் பிரிவினை, போட்டி, கடன் மதிப்பு முதலியவற்றின் பக்கத்தில் வைத்து இயந்திர வகையையும் ஒரு பொருளாதார வகையினமாக்குவது முற்றிலும் அபத்தமாகும்.

உழவு மாடு போலவே இயந்திரவகையும் ஒரு பொருளாதார வகையினம் அல்ல. தற்காலத்தில் இயந்திர வகையைப் பயன்படுத்துவது இன்றைய நமது பொருளாதார அமைப்பு முறையின் உறவுகளில் ஒன்று, ஆனுல் இயந்திர வகையைப் பயன்படுத்தும் வழிமுறையானது இயந்திரவகையிலிருந்து முற்றிலும் தனித்ததாகும். காயப்படுத்துவதற்குப் பயன்படுத்தினுலும் சரி காயத்துக்கு மருந்திட்டுக் கட்டுப்

போடுவதற்குப் பயன்படுத்தினுலும் சரி வெடிமருந்து வெடிமருந்துதான்.

போட்டி, ஏகபோகம், வரிகள் அல்லது போலீஸ், வாணிபக் கொடுப்பு நிலே, கடன் மதிப்பு, சொத்து ஆகியவற்றை நான் குறிப்பிட்டுள்ள வரிசையொழுங்கிலே திரு. புரூதோன் தமது மூளேக்குள் வளர அனுமதிக்கிறதிலே தம்மையே மிஞ்சிவிட்டார். இங்கிலாந்தில், இயந்திரவகை கண்டு பிடிக்கப்படுமுன்பே, பதினெட்டாம் நூற்ருண்டின் துவக்க வாக்கில் அநேகமாக எல்லாக் கடன் மதிப்பு நிறுவனங்களும் வளர்க்கப்பட்டிருந்தன. வரிவிதிப்பை அதிகப்படுத்தி முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிக்கு வந்துள்ளதால் பிறந்த புதிய கோரிக்கைகளே நிறைவாக்குவதற்கு வாய்த்த ஒரு புதிய வழிமுறையே பொதுக் கடன்மதிப்பு என்பது.

இறுதியாக, திரு. புரூதோனின் அமைப்பு முறையில் கடைசி வகையினமாக சொத்து அமைந்துள்ளது. ஆனுல், யதார்த்த உலகத்திலே, உழைப்புப் பிரிவினேயும் திரு. புரூதோனின் மற்ற எல்லா வகையினங்களும் சமுதாய உறவுகளாகும், அவற்றின் முழுமொத்தந்தான் இன்று சொத்து என்று அறியப்பட்டுள்ளது: இந்த உறவுகளுக்கு அப்பாற்பட்ட நிலேயில் முதலாளித்துவச் சொத்து என்பது வெறுமே ஒரு இயக்கமறுப்புவாத அல்லது சட்ட வல்லுநருக்குரிய பிரமையேயாகும். வேருன சகாப்தத்தைச் சேர்ந்த சொத்தான நிலப்பிரபுத்துவச் சொத்து முற்றிலும் வேருன சமுதாய உறவுகளின் வரிசைத் தொடரிலே வளர்கிறது. திரு. புரூதோன் சொத்தை ஒரு சுயேச்சையான உறவாக நிலே நாட்டப் போய் ஆய்வு முறையில் மட்டும் தவறு செய்யவில்லே: அதோடு முதலாளித்துவ உற்பத்தியின் எல்லா வடிவங்களேயும் சேர்த்துப் பிணேத்திருக்கும் பந்தத்தை அவர் புரிந்து கொள்ளவில்லே, ஒரு குறிப்பிட்ட சகாப்தத்திலுள்ள உற்பத்தி வடிவங்களின் வரலாற்று ரீதியான, தற்காலிகமான தன்மையைப் புரிந்து கொள்ளவில்லே என்றும் அவர் தெளிவாகக் காட்டிக் கொள்கிருர். நமது சமுதாய நிறுவனங்களே வரலாற்று ரீதியான உருவாக்கங்களாகக் கருதாமல், அவற்றின் தோற்றத்தையோ வளர்ச்சியையோ புரிந்து

கொள்ளவும் முடியாமல், திரு. புரூதோன் அவற்றைப் பற்றி வறட்டுத் தத்துவ வகைப்பட்ட விமர்சனந்தான் அளிக்க முடியும்.

எனவே, வளர்ச்சியை விளக்குவதற்குத் திரு. புரூதோன் ஒரு கட்டுக்கதையில் தஞ்சம் புக வேண்டிய கட்டாயம் ஏற் படுகிறது. தமது உறுதியான கற்பனைக் கருத்தான சம நிலை பற்றிய கருத்துக்கு வகை செய்வதற்காகத்தான் உழைப்புப் பிரிவினை, கடன் மதிப்பு, இயந்திரவகை முதலியவை யனைத்தும் புனையப்பட்டதாக அவர் கருதுகிறார். அவரது விளக்கம் அளப்பரிய வெகுளித்தனமானது. இவையனைத் தும் சமநிலையின் நன்மைக்காகப் புனையப்பட்டவை, ஆனால் துரதிருஷ்டவசமாக அவை சமநிலைக்கு எதிராகத் திரும்பி விட்டனவாம். இதுவே அவரது முழு வாதமாகும். அதாவது, அவர் ஒரு பொருத்தமற்ற அனுமானம் செய்து கொள் கிறார், அப்புறம் அசல் வளர்ச்சி ஒவ்வொரு படியிலும் அவரது கட்டுக்கதையுடன் முரண்படுகிற போது ஒரு முரண்பாடு இருக்கிறதாக முடிவுக்கு வருகிறார். தனது வெறியாக ஊன்றி விட்ட கருத்துக்கும் யதார்த்த இயக்கத்துக்கும் இடையே மட்டுமே இந்த முரண்பாடு உள்ளது என்கிற விஷயத்தை உங்களிடமிருந்து மறைக்கிறார்.

எனவே, மனிதர்கள் தமது உற்பத்திச் சக்திகளை வளர்த்து வருவதற்கேற்ப—அதாவது தாங்கள் வாழ்ந்து வருவதற் கேற்ப—அவர்கள் ஒருவரோடு ஒருவர் குறிப்பிட்ட உறவு களை வளர்க்கிறார்கள் என்பதையும், உற்பத்திச் சக்திகளின் மாற்றத்தோடும் வளர்ச்சியோடும் கூடவே இந்த உறவு களின் இயல்பும் மாறித் தீர வேண்டும் என்பதையும் திரு. புரூதோன் பார்க்கவில்லை, இதற்கு முக்கியமான காரணம் அவருக்கு வரலாற்று ரீதியான அறிவு கிடையாது. பொரு ளாதார வகையினங்கள் எனப்பட்டவை இந்த அசல் உறவு களின் சூட்சுமச் சொல்லுருக்கள் மட்டுந்தான், இவ்வுறவுகள் இருக்கிறவரைதான் அவை உண்மையாய் நீடிக்கின்றன என்பதை அவர் பார்க்கவில்லை. எனவே, அவர் முதலாளித் துவப் பொருளாதாரவாதிகள் செய்கிற தவற்றில் விழு கிறார்—அவர்கள் இந்தப் பொருளாதார வகையினங்கள்

நிரந்தரமானவை என்று கருதுகிறார்கள், அவற்றை வரலாற்று வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு மட்டுமே—உற்பத்திச் சக்திகளின் ஒரு திட்டவட்டமான வளர்ச்சிக் கட்டத்துக்கு மட்டுமே—விதிகளாக இருக்கிற வரலாற்று ரீதியான விதிகளாகக் கருதவில்லை. எனவே, யதார்த்தமான, தற்காலிகமான, வரலாற்று வழிப்பட்ட சமுதாய உறவுகளின் சூட்சுமச் சொல்லுருக்களாக அரசியல் பொருளாதார வகையினங்களைக் கருதுவதற்கு மாறாக, திரு. புரூதோன் ஒரு மாயமான தலைகீழ் வித்தையின் மூலமாக இந்த யதார்த்தமான உறவுகளிலே இந்தச் சூட்சுமக் கருத்துக்களின் வெறும் உருத்தோற்றங்களைத்தான் காண்கிறார். இந்தச் சூட்சுமக் கருத்துக்கள் எனப்பட்டவை உலகந் தோன்றிய நாளிலிருந்து தெய்வப் பிதாவின் நெஞ்சிலே சூத்திரங்களாகத் துஞ்சியவாறிருந்தனவாம்.

ஆனால் இங்கே திரு. புரூதோனின் அறிவாற்றல் கடுமையான வலிப்புக்கு ஆளாகிறது. இந்தப் பொருளாதார வகையினங்கள் அனைத்தும் இறைவனின் நெஞ்சிலிருந்து உதிக்கும் வெளிப்பாடுகளானால், மனிதனின் மறைவான, நிரந்தரமான வாழ்க்கையானால், முதலாவதாக: வளர்ச்சி எனப்படும் நிகழ்வு எப்படி ஏற்படுகிறது, இரண்டாவதாக: எப்படி திரு. புரூதோன் நடப்புக்காப்புவாதியாக இல்லாமல் இருக்கிறார்? பகைமைகளின் ஒரு முழுமையான அமைப்பு முறையைக் கொண்டு அவர் இந்த வெளிப்படையான முரண்பாடுகளை விளக்குகிறார்.

இந்தப் பகைமைகளின் அமைப்பு முறையைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருவோம்.

ஏகபோகம் ஒரு நல்ல விஷயம், ஏனெனில் அது ஒரு பொருளாதார வகையினம், எனவே அது இறைவனின் வெளிப்பாடு. போட்டி ஒரு நல்ல விஷயம், ஏனெனில் அதுவும் ஒரு பொருளாதார வகையினம். ஆனால் எது நல்லதில்லை என்றால் ஏகபோகத்தின் யதார்த்த நிலையும் போட்டியின் யதார்த்த நிலையுமாகும். அதைவிட மோசமானது, போட்டியும் ஏகபோகமும் ஒன்றையொன்று விழுங்கும் விஷயம். என்ன செய்வது? ஆண்டவனின் இவ்விரு கருத்துக்களும்

ஒன்றோடொன்று முரண்படுவதால், இவ்விரண்டுக்கும் உரிய ஒரு கூட்டமைப்புங்கூட ஆண்டவனின் நெஞ்சிலே இருப்பது வெளிப்படை என்று அவருக்குத் தோன்றுகிறது, இந்தக் கூட்டமைப்பிலே ஏகபோகத்தின் தீமைகளைப் போட்டி நிவர்த்திக்கிறதாம், போட்டியின் தீமைகளை ஏகபோகம் நிவர்த்திக்கிறதாம். இரண்டு கருத்துக்களிடையே நடக்கும் போராட்டத்தின் விளைவாக அவற்றின் நல்ல அம்சம் மட்டுமே புலப்படுத்திக் கொள்கிறதாம். இந்த இரகசியத்தை இறைவனிடமிருந்து பிடுங்கி எடுத்துக் கொண்டு பயன்படுத்தினால் போதும் எல்லாம் சிறப்பாக ஈடேறும்; மனிதனின் அகநிலையற்ற பகுத்தறிவின் இருட்டிலே மறைந்து கிடக்கும் கூட்டமைப்பான சூத்திரத்தை வெளிப்படுத்தித் தீர வேண்டும். அதை வெளிப்படுத்துவோனாக முன்வருவதற்கு ஒரு கணமேனும் தயங்கவில்லை திரு. புரூதோன்.

ஆனால், யதார்த்த வாழ்க்கையை ஒரு வினாடி நோக்குங்கள். தற்காலப் பொருளாதார வாழ்க்கையிலே நீங்கள் போட்டியையும் ஏகபோகத்தையும் காண்கிறதோடல்லாமல் அவற்றின் கூட்டமைப்பையும் காண்கிறீர்கள், அது ஒரு சூத்திரம் அல்ல, அது ஒரு இயக்கம். ஏகபோகம் போட்டியை உண்டாக்குகிறது, போட்டி ஏகபோகத்தை உண்டாக்குகிறது. ஆனால் இந்த சமன்பாடு இன்றைய நிலைமையின் கஷ்டங்களைப் போக்குவதற்குப் பதிலாக—போக்குகிறது என்று தான் முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் நினைக்கிறார்கள்—அதைவிட மேலும் கஷ்டமான குழப்பமான நிலையைச் சென்றடைகிறது. எனவே, தற்காலப் பொருளாதார உறவுகள் நிலைகொண்டிருப்பதற்கான அடிப்படையை நீங்கள் மாற்றினால், இன்றைய உற்பத்தி முறையை நீங்கள் ஒழித்தால், நீங்கள் போட்டியையும் ஏகபோகத்தையும் அவற்றின் பகைமையையும் ஒழிப்பதோடல்லாமல் அவற்றின் ஒற்றுமையை, அவற்றின் கூட்டமைப்பை, போட்டிக்கும் ஏகபோகத்துக்கும் உண்மையான நடுவமைதி நிலையான இயக்கத்தைக் கூட ஒழித்துவிடுவீர்கள்.

இனி திரு. புரூதோனின் இயக்கவியலுக்கு ஓர் எடுத்துக் காட்டு தருவோம்.

விடுதலையும் அடிமை முறையும் ஒரு பகைமையாகும். விடுதலையின் நிறைகளையும் குறைகளையும் பற்றி நான் பேசத் தேவையில்லை, அடிமை முறை பற்றிப் பேசுகையில் அதன் குறைகளைப் பற்றியும் பேசத் தேவையில்லை. அதன் நிறைகளை விளக்குவது ஒன்றே இங்குள்ள விஷயம். நாம் மறைமுகமான அடிமை முறையை, பாட்டாளி வர்க்கத்தின் அடிமை நிலையை, இங்கே எடுத்துப் பேசவில்லை; நேரடியான அடிமை முறையை, ஸீரினும், பிரேசில், வட அமெரிக்காவின் தென் மாநிலங்கள் ஆகியவற்றிலுள்ள கறுப்பு இனத்தவர்களின் அடிமை நிலையை எடுத்துப் பேசுகிறோம்.

இயந்திரவகை, கடன் மதிப்பு முதலியவற்றைப் போல் நேரடியான அடிமை முறையும் இன்று நமது தொழில் முறைக்கு அச்சாணியாகும். அடிமை முறை இன்றேல் பருத்தி இல்லை; பருத்தி இல்லையேல் நவீனத் தொழில் துறை இல்லை. அடிமை முறை காலனிகளை மதிப்புள்ளவையாகச் செய்கிறது; காலனிகள் உலக வாணிபத்தைப் படைத்துள்ளன; உலக வாணிபம் பெருமளவான இயந்திரத்தொழில் துறைக்கு அவசியமான நிபந்தனையாகும். எனவே தான், நீக்கிரோக்களை வாங்கி விற்பது தொடங்குமுன், காலனிகள் பழைய உலகத்துக்கு [Old World] ஒரு சில விளைபொருட்களைத்தான் வினியோகித்தன, உலகத் தோற்றத்தில் காணத்தக்க மாற்றம் எதுவும் செய்யவில்லை. எனவே அடிமை முறை ஒரு மிக முக்கியமான பொருளாதார வகையினமாகும். மிக முற்போக்கான நாடாகிய வட அமெரிக்கா அடிமை முறை இல்லாவிட்டால் ஒரு தந்தை வழி ஆட்சிக் கால நாடாக மாறிவிடும். நாடுகளின் நிலப்படத்திலிருந்து வட அமெரிக்காவை நீக்கிவிட்டால் அராஜகமும் உலக வாணிப நலிவும் நவீன நாகரிகத்தின் நலிவும் கிடைக்கும். ஆனல் அடிமை முறையை மறைய விடுவது அமெரிக்காவை நாடுகளின் நிலப்படத்திலிருந்து நீக்குவதாகும். எனவே, அடிமை முறை ஒரு பொருளாதார வகையினமாக இருப்பதால் அது உலகம் தோன்றிய நாளிலிருந்து ஒவ்வொரு நாட்டிலும் காணக் கிடக்கிறது. நவீன காலத்திய நாடுகள் அடிமை முறையைத் தத்தம் நாடுகளில் வெறுமே மறைத்து

கள். சாத்தியமற்றதை—அதாவது, முதலாளித்துவ வாழ்க்கைக் குரிய நிலைமைகள் வேண்டும், ஆனால் அந்த நிலைமைகளின் அவசியகரமான பின்விளைவுகள் மட்டும் இருக்கக் கூடாது—அவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி வடிவமும் நிலப்பிரபுத்துவ வடிவம் போலவே வரலாற்று ரீதியானது, தற்காலிகமானது என்று அவர்களில் ஒருவர்கூடப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் கருத்தில் முதலாளித்துவ வகைப்பட்ட மனிதன்தான் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் சாத்தியமான அடிப்படையாவான் எனும் விஷயத்திலிருந்து இந்தத் தவறு ஏற்படுகிறது; முதலாளித்துவத் தன்மை அற்றுவிட்ட மனிதர்களைக் கொண்ட சமுதாயத்தை அவர்களால் கற்பனை செய்ய முடியாது.

எனவே, திரு. புரூதோன் வறட்டுத் தத்துவவாதியாக இருந்து தீர வேண்டியுள்ளது. அவர் கருத்தில், தற்கால உலகத்தைத் தலைகீழாகப் புரட்டி வருகிற வரலாற்று இயக்கமானது. இரண்டு முதலாளித்துவக் கருத்துக்களுக் குரிய சரியான நடுவமைதி நிலையை, கூட்டமைப்பைக் கண்டு பிடிக்கும் பிரச்சினையாகத் தாழ்ந்துவிடுகிறது. எனவே, இந்தக் கெட்டிக்கார ஆசாமி தனது தந்திரத்தால் கடவுளின் இரகசிய எண்ணத்தை, இரண்டு தனித்த கருத்துக்களின் ஒற்றுமையை, கண்டுபிடிக்க முடிகிறது—இவ்விரு கருத்துக் கள் தனித்திருப்பதற்குக் காரணம் திரு. புரூதோன் அவற்றை நடைமுறை வாழ்க்கையிலிருந்து, தற்கால உற்பத்தியிலிருந்து, அதாவது, அவை வெளியிடும் யதார்த்தங்களின் ஒற்றுமையிலிருந்து தனிமைப்படுத்தியிருக்கிறார். ஏற்கெனவே மனிதர்கள் பெற்றுள்ள உற்பத்திச் சக்திகளுக்கும் அந்த உற்பத்திச் சக்திகளோடு மேற்கொண்டு பொருந்தி வராதிருக்கும் அவர்களின் சமுதாய உறவுகளுக்கும் இடையேயுள்ள மோதல்களிலிருந்து உதிக்கும் மகத்தான வரலாற்று இயக் கத்துக்குப் பதிலாக; ஒவ்வொரு நாட்டுக்குள்ளே வெவ் வேறு வர்க்கங்களுக்கிடையேயும் நாடுகளுக்கு இடையேயும் தயாரிக்கப்பட்டு வரும் பயங்கரமான போர்களுக்குப் பதி லாக; இந்தப் மோதல்களுக்குத் தீர்வுகாண முடிவதற்கு ஒரே சாதனமாயிருக்கக்கூடிய மக்களின் நடைமுறை வகைப்

பட்ட வன்முறைச் செய்கைக்குப் பதிலாக—இந்த மாபெரும், நீடித்த, சிக்கலான இயக்கத்துக்குப் பதிலாக, திரு. புரூதோன் தமது தலையில் நடந்து வரும் விசித்திரமான இயக்கத்தைக் [mouvement cacadauphin] கொடுக்கிறார். எனவே படித்த அறிவாளிகள் தாம், கடவுளின் இரகசிய எண்ணங்களைக் களவாடத் தெரிந்துள்ள மனிதர்கள்தாம் வரலாற்றைப் படைக்கிறார்கள். அவர்களின் தரிசனங்களைச் செயல்படுத்துவது ஒன்றுதான் சாதாரண மக்களின் வேலை.

திரு. புரூதோன் ஒவ்வொரு அரசியல் இயக்கத்துக்கும் கடும் எதிரியாக இருப்பதின் காரணத்தை இப்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அவர் கருத்துப்படி, தற்காலப் பிரச்சினைகளுக்குரிய தீர்வு மக்களின் இயக்கத்திலே இல்லை, தமது சொந்த மனத்தின் இயக்கவியல் சுழற்சியிலேதான் உண்டாம். அவர் கருத்தில் வகையினங்கள் உந்துசக்தியாக இருப்பதால், அந்த வகையினங்களை மாற்றுவதற்கு நடைமுறை வாழ்க்கையை மாற்ற வேண்டிய அவசியமில்லை. விஷயம் அதற்கு நேர் மாறானதாம். வகையினங்களை மாற்றித் தீர வேண்டும், அதன் பின்விளைவாக இன்றையச் சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்படும்.

முரண்பாடுகளைச் சமரசப்படுத்த அவருக்கிருக்கும் விருப்பத்திலே திரு. புரூதோன் அந்த முரண்பாடுகளின் அடிப்படையையே மாற்றித் தீர வேண்டாமா என்றுகூடக் கேட்கவில்லை. அரசனையும் பிரதிநிதிகளின் சட்டமன்றத்தையும் பிரபுக்களின் சட்டமன்றத்தையும் சமுதாய வாழ்க்கையின் ஒன்றிணைந்த பகுதிகளாக, நிலையான வகையினங்களாக வைத்திருக்க விரும்புகிற அரசியல் வறட்டுத் தத்துவவாதி போலவே அவர் இருக்கிறார். அவர் தேடிக்கொண்டிருப்பதெல்லாம் இந்தச் சக்திகளிடையே ஒரு நடுவமைதி நிலையை நிலைநாட்டுவதற்குரிய ஒரு புதிய சூத்திரந்தான்—அவற்றின் நடுவமைதி நிலை என்னவோ ஒரு சக்தி மற்ற சக்தியிடம் ஒரு சமயம் வென்றும் ஒரு சமயம் அடிமைப்பட்டும் வருகிறபடியுள்ள அசல் இயக்கத்திலேதான் அடங்கியுள்ளது. இப்படித்தான், சமுதாயப் படிப்பிரிவினரையும், பிரபுத்துவத்தையும், அரசனையும், நாடாளுமன்றத்தையும் பிறவற்றையும் நடுவமைதி

நிலைக்குக் கொணரக்கூடிய உண்மையான சூத்திரத்தைத் தேடுவதில் பல சாமானியத் திறமுள்ள சிந்தனையாளர்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்; அவர்கள் ஒரு நாள் விழித்தெழுந்த போது மேற்கொண்டு உண்மையிலே அரசனோ நாடாளுமன்றமோ பிரபுத்துவமோ எதுவும் இல்லாதிருக்கக் கண்டார்கள். இந்த நிலப்பிரபுத் துவ முறையின் ஏற்பாடுகளுக்கும் பகைமைகளுக்கும் அடிப் படையாக இருந்து வந்த எல்லாச் சமுதாய உறவுகளையும் தூக்கியெறிவதே இந்தப் பகைமையின் உண்மையான நடு வமைதி நிலையாகும்.

திரு. புரூதோன் ஒரு புறத்தில் நிலையான கருத்துக்களை யும் சுத்தமான பகுத்தறிவின் வகையினங்களையும் மற்றொரு புறத்தில் அவர் கருத்துப்படி இந்த வகையினங்களின் செயல் பாடாக உள்ள மனிதப் பிறவிகளையும் அவர்களின் நடை முறை வாழ்க்கையையும் வைக்கிற காரணத்தால், வாழ்க்கைக் கும் கருத்துக்களுக்கும் இடையே—ஆன்மாவுக்கும் உடம் புக்கும் இடையே உள்ள ஒரு இருமை வாதம் [dualism], பல வடிவங்களில் திரும்பத் திரும்ப நிகழ்ந்து வரும் ஒரு இருமை வாதம், அவரிடம் தொடக்கத்திலிருந்தே இருக்கக் காண் கிறோம். இந்தப் பகைமை என்பது திரு. புரூதோன் தெய் வமாகப் போற்றிக் கொள்ளும் வகையினங்களின் சாதாரண மான தோற்றத்தையும் சாதாரணமான வரலாற்றையும் புரிந்து கொள்ள இயலாத திறமின்மையே தவிர வேறில்லை.

கம்யூனிசத்துக்கு எதிராகத் திரு. புரூதோன் மேற்கொள் ளும் அபத்தமான தாக்குகளைப் பற்றிப் பேசுவதற்கு இட மில்லை, ஏற்கெனவே என் கடிதம் மிகவும் நீண்டுவிட்டது. இப்போதைக்கு நீங்கள் என்னோடு ஒத்துப் போவீர்கள், இன்றையச் சமுதாய நிலையைப் புரிந்து கொள்ளாத ஒருவன் அதைத் தூக்கியெறியும் போக்கில் போகிற இயக்கத்தையும் சரி, இந்தப் புரட்சிகரமான இயக்கத்தின் இலக்கிய வெளி யீடுகளையும் சரி அதைவிடக் குறைவாகத்தான் புரிந்து கொள்வான் என்று எதிர்பார்க்கலாம்.

உணர்ச்சி வகைப்பட்ட சோஷலிஸ்ட் பாணி பகற்கனவு களைத் திரு. புரூதோன் வெறுக்கிறாரே, அந்த ஒரேயொரு

அம்சத்தில் அவருடன் எனக்கு முழுமையான உடன்பாடு உண்டு. அவருக்கு முன்பே, நான் இந்த உணர்ச்சி வகைப் பட்ட, கற்பனுவாத, மூளையற்ற சோஷலிசத்தைக் கேலி செய்ததின் வழியாக ஏற்கெனவே நிறைய பகைமையை என் பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் திரு. புரூதோன் தமது குட்டிமுதலாளித்துவ உணர்ச்சிப் பாங்கை—வீடு, இல்லறக் காதல், இன்னும் இவை போன்ற சாதாரண விவகாரங்களைப் பற்றி அவர் உணர்ச்சி பொங்கப் பேசுவதையே நான் குறிப்பிடுகிறேன்—சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்குக்கு எதிராக நிறுத்துகிறதில் தம்மைத் தாமே வேடிக்கையாக ஏமாற்றிக் கொள்ளவில்லையா? பார்க்கப் போனால், மதிப்புக்குரிய புரூதோனின் படாடோபமான வெற்றுரைகளை விட ஃபூரியேயின் (எடுத்துக்காட்டுக்குக் குறிப்பிடுகிறேன்) சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்கு மிக ஆழமாகச் செல்கிறது. அவரே தமது வாதத்தின் வெறுமையையும் இவ் விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் தமக்குத் திறமை அறவே இல்லாதிருப்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறார், எனவே தான் அவரிடம் கோபமும் சொல்லார வாரமும் தர்மாவேசமும் [irae hominis probi] வெடிக்கின்றன, நுரைதள்ளப் பேசுகிறார், சபிக்கிறார், கண்டிக்கிறார், வெட்கக்கேடு படுகொலை என்றெல்லாம் கூவுகிறார், மார்பில் அடித்துக் கொள்கிறார், சோஷலிஸ்ட் அவக்கேடுகள் தம்மைக் கறைப்படுத்தவில்லை என்று மனிதன் இறைவன் எல்லோரிடமும் பீற்றிக் கொள்கிறார்! சோஷலிஸ்ட் உணர்ச்சிப் பாங்குகளையோ அவை தான் என்று தாம் கருதுவதையோ அவர் விமர்சிக்கவில்லை. ஒரு துறவி போல, ஒரு போப்பாண்டவர் போல, கேவலமான பாவிகளைச் சபித்து விலக்கி வைக்கிறார், குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தின் மேன்மைகளையும் இல்லற வாழ்க்கையின் அற்பமான தந்தைவழி ஆட்சிக் காலப் பிரமைகளின், களவொழுக்கப் பிரமைகளின் மேன்மைகளையும் வியந்து பாடுகிறார். இது தற்செயலானதல்ல. அடிமுதல் முடி வரை திரு. புரூதோன் குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தின் மெய்யறிஞரும் பொருளாதாரவாதியும் ஆவார். முன்னேறிய ஒரு சமுதாயத்தில் குட்டிமுதலாளித்துவ நபர் தனது வாழ்நிலையின்

காரணத்தாலேயே ஒரு புறத்தில் சோஷலிஸ்டாகவும் மறு புறத்தில் பொருளாதாரவாதியாகவும் இருந்து தீரவேண்டியிருக்கிறது; அதாவது, அவன் பெரு முதலாளிகளுடைய செல்வச் சிறப்பைக் கண்டு பிரமையடித்து நிற்கிறுன், மக்களின் துன்பதுயரங்களைக் கண்டு அனுதாபப்படுகிறுன். ஒரே நேரத்தில் அவன் முதலாளித்துவ வகைப்பட்டவனுகவும் மக்களைச் சார்ந்துள்ள மனிதனுகவும் இருக்கிறுன். தான் நடுநிலை வகிப்பதாகவும் சரியான நடுவமைதி நிலையை (அது சாமானியத் திறத்தினின்று வேறுபட்ட ஒன்றுகச் சொல்லிக் கொள்கிறது) கண்டு கொண்டதாகவும் அடிநெஞ்சிலே தன்னைத் தானே புகழ்ந்து கொள்கிறுன். இவ்வகைப்பட்ட குட்டிமுதலாளித்துவ முரண்பாட்டை வியந்தேத்துகிறுன், ஏனெனில் முரண்பாடுதான் அவனது வாழ்நிலைக்கு அடிப்படை. அவனே செயல்பட்டு வரும் சமுதாய முரண்பாடு தவிர வேறில்லை. நடைமுறையில் தான் எப்படி இருக்கிறுனே அதை அவன் தத்துவரீதியிலே நியாயப்படுத்தித் தீர வேண்டும், மற்றும் பிரெஞ்சு குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தின் விஞ்ஞான ரீதியான வியாக்கியான கர்த்தாவாக இருக்கும் சிறப்பு திரு. புருதோனுக்கு உண்டு—அது ஒரு உண்மையான சிறப்பாகும், ஏனெனில் வரவிருக்கும் எல்லாச் சமுதாயப் புரட்சிகளிலும் குட்டிமுதலாளித்துவ வர்க்கம் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

அரசியல் பொருளாதாரம் பற்றிய எனது நூலை[69] இக்கடிதத்துடன் அனுப்ப வேண்டும் என்பதே என் விருப்பம், என்றுலும் இந்நூலையும் சரி, ஜெர்மன் மெய்யறிஞர்கள், சோஷலிஸ்டுகள்* பற்றிய விமர்சனத்தைப் பற்றி உங்களிடம் பிரஸ்ஸல்சில் பேசியிருக்கிறேனே, அதையும் சரி, இதுவரை அச்சடித்து வெளியிடுவது சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஜெர்மனியில் இப்படிப்பட்ட ஒரு வெளியீட்டுக்கு எதிர்ப்படுகிற கஷ்டங்களைச் சொன்னுல் நீங்கள் நம்பவே மாட்டீர்கள்—ஒரு புறத்தில் போலீஸார் உண்டாக்கும் கஷ்டங்கள், மறுபுறத்தில் நான் தாக்கும் போக்குகளுக்கெல்

* கா. மார்க்சும் பி. எங்கெல்சும். **ஜெர்மன் சித்தாந்தம்** எனும் நூலைப் பார்க்க.—ப-ர்.

லாம் தாங்களே அக்கறையுள்ள பிரதிநிதிகளாக இருக்கும் புத்தகவிற்பனையாளர்கள் உண்டாக்கும் கஷ்டங்கள். நமது சொந்தக் கட்சியைப் பொருத்தவரை, அது ஏழையாயிருப்பது மட்டுமல்ல, ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பெரும் பகுதியினர் நான் அவர்களுடைய கற்பனையுலகத் திட்டங்களையும் சொல்லெழுச்சிகளையும் எதிர்ப்பதற்காக என் மேல் கோபம் கொண்டிருக்கிறார்கள்...

அன்புடன்,
**கார்ல் மார்க்ஸ்**

**மி.மி. ஸிதசுலேவிச்சும் அவரது சமகாலத்தவரும் வெளியிட்ட அவர்களது கடிதங்கள்.**
*செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், 1912 எனும் நூலில் பிரெஞ்சு மொழி மூலவாசகத்தில், 3ம் தொகுதியில் முதன்முதலில் பிரசுரிக்கப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது. பிரெஞ்சு மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது*

# பதிப்பாளர் குறிப்புகள்

1 **ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்** — *1845 வசந்தத்தில் மார்க்ஸ் பிரஸ்ஸல்சில் எழுதினர். வரலாறு பற்றிய அவரது பொருள்முதல்வாதத் தத்துவப் புத்தகத்தின் முக்கிய பகுதிகளை அவர் ஏற்கெனவே பூர்த்தி செய்திருந்தார். மானுட சமுதாயத்தைப் புரிந்துகொள்வதற்கு உரிய சாதனமாகப் பொருள்முதல்வாதத்தை விரிவுபடுத்தியிருந்தார். எங்கெல்சின் கூற்றுப்படி ''இதுவே புதிய உலகக் கண்ணேட்டத்தின் ஒளிமிகுந்த கருவிதையைத் தாங்கி நிற்கும் முதல் தஸ்தவேஜு ஆகும்'' (''லுத்விக் ஃபாயர்பாக்'' நூலின் முன்னுரையை பார்க்கவும்).*

*''ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்'' எனும் தமது நூலில் மார்க்ஸ் ஃபாயர்பாக் மற்றும் அவரது முன்னேடிகள் அனைவரின் பொருள்முதல்வாதத்தில் காணப் பெறும் அடிப்படைக் குறைபாடுகளை வெளிப்படுத்துகிருர். அதன் செயலற்ற சிந்திப்புத் தன்மை கொண்ட அணுகுமுறை மற்றும் மனிதனது புரட்சிகரமான ''நடைமுறை-விமர்சன'' நடவடிக்கையின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளத் தவறும் போக்கு ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிருர். உலகை உணர்வதிலும் மறு உருவாக்கம் செய்வதிலும் புரட்சிகர நடைமுறை வகித்து வரும் தீர்மானகரமான பாத்திரத்தை அவர் வலியுறுத்துகிருர்.*

*இந்த ''ஆய்வுரைகள்'' ''ஃபாயர்பாக் குறித்து'' எனும் தலைப்பில் 1844-47ல் மார்க்ஸ் எழுதிய ''குறிப்புப் புத்தகத்தில்'' இடம் பெற்றுள்ளன. 1888ல் எங்கெல்ஸ் இந்த ஆய்வுரைகளை வெளியிட்டபோது, மார்க்ஸ் இதை வெளியிட உத்தேசித்திருக்கவில்லை என்பதால், வாசகர் இந்த தஸ்தவேஜை மேலும் நன்ருகப் புரிந்து கொள்ள இயலும் வகையில் இருக்க வேண்டும் என்பதால் ஒரு சில பதிப்புமுறை மாற்றங்களைச் செய்தார். இந்தத்*

தொகுதியில் இந்த ''ஆய்வுரை'' பற்றி எங்கெல்ஸ் வெளியிட்டதும் கூடுதலாக—மார்க்சின் கையெழுத்துப் பிரதியின் அடிப்படையில்—1888 பதிப்பில் அடங்கியிராத கொட்டை எழுத்து மற்றும் மேற்கோள் அடையாளங்கள் இடம் பெற்றுள்ளன. ''ஃபாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்'' எனும் தலைப்பு மார்க்சிய-லெனினியக் கழகம் வழங்கியதாகும்—7.

2 **ஜெர்மன் சித்தாந்தம்** (*Die deutsche ideologie Kritik der neuesten deutschen philosophie in ihren Reprasentanten Feuerbach B. Baur und Stirner und des deutschen Sozialismus in seinen verschiedenen propheten*) —1845-46ல் பிரஸ்ஸல்சில் மார்க்சும் எங்கெல்சும் சேர்ந்து எழுதிய நூல். இந்த நூலில் விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவத்தின் தத்துவஞான அடிப்படை என்ற முறையில் மார்க்சும் எங்கெல்சும் வரலாறு பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தோட்டத்தை விரிவிளக்கம் செய்தனர்.

''ஜெர்மன் சித்தாந்தம்'' எனும் நூலின் கையெழுத்துப் பிரதி இரண்டு பாகங்கள் கொண்டது. முதல் பாகம் ஹெகலுக்குப் பிந்திய கால தத்துவ இயல் பற்றிய விமர்சனம், இரண்டாம் பாகம் ''மெய்யான'' சோஷலிசம் பற்றிய விமர்சனம்.

முதல் பாகத்தின் 1ஆம் அத்தியாயம் ''ஜெர்மன் சித்தாந்தத்தின்'' மிகவும் நேர்முகமான உள்ளடக்கத்தை வகுத்து முன்வைக்கிறது. இதனால் தான் இது, இந்த நூல் முழுவதன் மிகவும் முக்கியமான அத்தியாயமாக இருப்பதோடு தானே முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1ஆம் அத்தியாயத்தின் கையெழுத்துப் பிரதி ஏகதேசமான மூன்று பகுதிகளும் அத்தியாயத்தின் துவக்கம் பற்றிய இரண்டு தெளிவாக எழுதப்பட்டபடிகளும் கொண்டதாகும். இதற்கேற்ப இந்த அத்தியாயத்தின் மூல பாடம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பகுதி தெளிவாக எழுதப்பட்ட படியின் இரண்டாம் பதிப்புருவாகும். இரண்டாம் பதிப்புருவில் இருந்து செய்யப்பட்ட நீக்கங்கள் முதல் பதிப்புருவில் இருந்து சேர்க்கப்பட்டு உள்ளன. 2ஆம் பகுதி இந்த அத்தியாயம் முழுவதன் ஆரம்ப சாரத்தைத் தருகிறது. 3ஆம் மற்றும் 4 ஆம் பகுதிகள் ஸ்டிர்னர் பற்றி எடுத்து விளக்கும் அத்தியாயத்தில் இருந்து எடுக்கப்பட்ட தத்துவார்த்த பிறழ்ச்சிகள் ஆகும் (தொகுதி 1ன் 3ஆம் அத்தியாயம்). இந்தத் தொகுதியில் விஷயங்கள் ருஷ்யன் சிற்றேட்டின் பிரகாரம் முறைப்

படுத்தப் பெற்றுள்ளன: கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ''ஃபாயர்பாக், பொருள்முதல்வாத மற்றும் கருத்துமுதல் வாதத்துக்கு எதிரான கண்ணோட்டம்''. (''ஜெர்மன் சித் தாந்தம்''. மாஸ்கோ, 1966. 1ஆம் அத்தியாயத்தின் புதிய வெளியீடு.)

ஆசிரியத் தலைப்புக்கள் யாவும் மற்றும் அவசிய மான இடைச்செருகல்களும் கையெழுத்துப் பிரதியின் பக்க விவரமும் சதுர அடைப்புக்களில் தரப்பட்டுள்ளன. மார்க்ஸ் மற்றும் எங்கெல்சால் எழுதப்பட்ட பிரதான மான இரண்டாவது தெளிவான படிவத்தின் காகிதங் களின் மீது "S" எனும் எழுத்தில் எண் வரிசை சுட்டப் பட்டுள்ளது. இதற்குச் சரி ஒப்பான எண் விளக்கம் உதாரணமாக [S. 1] [S. 2] இத்தியாதியாகும். தெளிவான முதல் படியில் ஆசிரியர்களால் பக்க எண்கள் போடப்பட வில்லை பக்கங்கள் ''ப'' எனும் எழுத்தால் சுட்டப்பட்டுள் ளன. இதற்குச் சரி ஒப்பான எண் விளக்கம்: [ப.1], [ப.2] இத்தியாதியாகும். கையெழுத்துப் பிரதிகளின் திருத்தி எழுப்படாத மூன்று பகுதிகளின் பக்கங்களுக்கு மார்க்ஸ் எண்வரிசை இட்டுள்ளார் அவை [1] [2] இத்தியாதி எண் விளக்கம் மூலம் மட்டுமே சுட்டப்பட்டுள்ளன.—12.

3 இங்கு குறிப்பிடப்படுகிற டேவிட் ஸ்ட்ராசின் பிரதான நூலானது (''ஏசுவின் வாழ்க்கை''. டே.பி. ஸ்ட்ராஸ் எழுதியது, டுபிங்கென் 1835—1836) சமயம் பற்றிய தத்துவவியல் விமர்சனத்தைத் துவங்கி வைத்தது, ஹெக லியன் கொள்கையாளர்களை—பழைய ஹெகலியன்கள் மற்றும் இளம் ஹெகலியன்கள் என்று பிரித்தது.—12.

4 இங்கு குறிப்பிடப்படுவது 18ஆம் நூற்றுண்டின் இறுதி யில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி யாகும்.—12.

5 தியதோகி—மஹா அலெக்சாந்தரின் ஜெனரல்கள். அலெக் சாந்தர் மரணத்துக்குப் பிறகு ஆட்சி அதிகாரத்திற் கான அவர்களது போராட்டத்தில் பரஸ்பரம் மூர்க்க மாகப் போராடினுர்கள். இந்தப் போராட்டத்தின் (கி.மு. நாலாம் நூற்றுண்டின் இறுதி முதல் மூன்றும் நூற்றுண்டின் துவக்கம் வரை) போக்கில் அலெக்சாந் தரின் சாம்ராஜ்யம் என இருந்த ஸ்திரமற்ற ராணுவ ஆட்சி நிர்வாக ஒன்றியம் பல சுயேச்சையான அரசு களாக குலைந்து பிரிந்தது.—13.

6 ''உலகை அதிரவைக்கும் சிந்தனைகள்'' எனும் தொடர் *Wigand's Vierteljahrsschrift,* இதழ் 4ல், 1845ல் வெளியிடப்பட்ட பெயர்குறிப்பிடாத நபர் எழுதிய கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது. இந்தக் காலாண்டு சஞ்சிகை இளம் ஹெகலியன்களின் பிரசுரமாகும். இது ஆட்டோ விகாண்டால் லீப்ஸிக்கில் இருந்து 1844-45ல் வெளியிடப்பட்டு வந்தது. இதற்குக் கட்டுரைகள் எழுதியவர்களில் புரூனோ பௌவர் மாக்ஸ் ஸ்டிர்னர் மற்றும் லுத்விக் ஃபாயர்பாக் அடங்குவர்.—18.

7 ''ஜெர்மன் சித்தாந்தம்'' எனும் நூலில் வெர்கெர் ["Verkehr'' எனும் சொல் தனிநபர்கள், சமுதாயக் குழுக்கள் மற்றும் முழுநாடுகளின் பொருள்வகை மற்றும் அக வளர்ச்சி ஒட்டுறவைச் சூழ்ந்துதழுவிய மிகவும் விரிவான பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருள்வகை ஒட்டுறவு எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தி நடைமுறையில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் மேற்கொள்ளும் ஒட்டுறவு இதர எல்லா வடிவிலுமான ஒட்டுறவுக்கு அடிப்படை என்று மார்க்சும் எங்கெல்சும் காட்டுகிறார்கள். "Verkehrsform" (ஒட்டுறவின் வடிவம்), "Verkehrsweise" (ஒட்டுறவின் பாணி), "Verkehrverhältnisse" (ஒட்டுறவின் உறவுகள் அல்லது நிபந்தனைகள்) மற்றும் ''Produktions und Verkehrsverhältnisse" (உற்பத்தி உறவுகள் மற்றும் ஒட்டுறவு) எனும் தொடர்கள் ''ஜெர்மன் சித்தாந்தம்'' எனும் நூலில் நாம் காண்கிறோம். அந்தக் காலகட்டத்தில் அவர்களது மனத்தில் உருவாகி வந்ததான உற்பத்தி உறவுகள் எனும் கருத்துருவை விளக்குவதற்கு மார்க்சும் எங்கெல்சும் இந்தத் தொடர்களைப் பயன்படுத்தினார்கள்.—21.

8 இந்தத் தொகுதியில் ''கணம்'' எனும் சொல் மூலம் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கும் Ssamm எனும் தொடர் கடந்த நூற்றாண்டின் நாற்பதாம் ஆண்டுகளில் எழுதப்பட்டதான வரலாற்று நூல்களில், இது இன்று வகிப்பதைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு மிகப் பெரிய பங்கு வகித்தது. ஒரு பொதுவான மூதாதையரிடம் இருந்து வமிசவழி வந்த ஒரு மக்கள் சமுதாயத்தைச் சுட்டுவதற்கு இந்தத் தொடர் பயன்படுத்தப்பட்டது. மற்றும் நவீனக் கருத்துருக்களான ''இனம்'' ''கணம்'' ஆகியவற்றை அடக்கியதாக இருந்தது. லெவிஸ் ஹென்றி மார்கன் தமது ''பண்டைச் சமுதாயம்'' (1877) எனும் தமது முக்கியமான நூலில் இந்தக் கருத்துருக்களை முதன்

முதலாக பொருள் வரையறை செய்து பாகுபடுத்திக் காட்டினர். தலை சிறந்த அமெரிக்க மானிடவியலாளரும் வரலாற்றுளருமான இவர் முதல் தடவையாக புராதனப் பொதுவுடைமை அமைப்பின் உட்கரு என்ற முறையில் இனங்களின் உட்பொருளை எடுத்துக் காட்டி, அதன்மூலம் ஆதிகால சமுதாய வரலாறு முழுதுக்குமான விஞ்ஞான அடித்தளங்களை நிறுவினர். மார்கனின் கண்டுபிடிப்புக் களில் இருந்து பொது முடிவுகளை மேற்கொண்ட எங் கெல்ஸ் ''இனம்'' மற்றும் ''கணம்'' எனும் கருத்துருக் களின் அர்த்தம் குறித்து ஓர் அகல்விரிவான பகுப்பாய் தமது ''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் (1884) எனும் நூலில் புரிந்துள்ளார்.—23.

9 ரோமன் மக்கள் உரிமைக் காவலர் விசினியஸ் மற்றும் செக்ஸ்டியசின் நிலச் சட்டம் பட்ரீஷிய உயர்குலச் சீமான் களை எதிர்த்து பிளெபியப் பாமரக் குடியோர் நடத்திய போராட்டத்தின் விளைவாக கி.மு. 367ல் நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டப்படி ரோமன் குடிமகன் எவரும் 500 யுகேரா (சுமார் 309 ஏக்கர்கள்)வுக்கு அதிகமான பொதுநிலத்தை [ager publicus] உடைமையாக வைத் திருக்க முடியாது.—25.

10 இங்கு குறிப்பிடப்படுவது ''லுத்விக் ஃபாயர்பாக் தன்மை பற்றிய விவரணம்'' எனும் புரூனோ பௌவர் கட்டு ரையாகும். இது *Wigand's Vierteljahrsschrift*, இதழ் 3ல், 1845ல் வெளியிடப்பட்டது.—37.

11 ஹெகலின் ''வரலாற்றின் தத்துவவியல்'', முகவுரை, உலக வரலாற்றின் பூகோளவியல் அடித்தளம் எனும் நூல் காண்க.—41.

12 இங்கு குறிப்பிடப்படுவது *Wigand's Vierteljahrsschrift*, இதழ் 3ல், 1845ல் வெளியிடப்பட்ட ''லுத்விக் ஃபாயர்பாக்கின் தன்மை பற்றிய விவரணம்'' எனும் புரூனோ பௌவர் எழுதிய கட்டுரையில் அவர் பயன்படுத்திய சொற்களா கும்.—41.

13 *Deutsch-Französische Jahrbücher* (''ஜெர்மன்-பிரெஞ்சு வர லாற்றுப் பதிவேடுகள்'') கார்ல் மார்க்ஸ் மற்றும் அர் னல்ட் ருகேயை ஆசிரியர்களாகக் கொண்டு ஜெர்மன் மொழியில் பாரிசிலிருந்து வெளியிடப்பட்ட ஒரு சஞ் சிகை. முதல் இதழ் மட்டுமே இரட்டை மலராக (1844

பிப்ரவரியில்) வெளிவந்தது. மார்க்சுக்கும் முதலாளித்துவ தீவிரவாதியான ருகேக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக இந்த சஞ்சிகையின் வெளியீடு நிறுத்தப்பட்டது.—50.

14 பாட்டாளி வர்க்கப் புரட்சியை எல்லா முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் ஒரே சமயத்தில் மட்டுமே நிறைவேற்ற முடியும் எனவே, தனி ஒரு நாட்டில் புரட்சி வெற்றியடைவது சாத்தியமல்ல எனும் முடிவு எங்கெல்சின் கம்யூனிசத்தின் கோட்பாடுகள் எனும் கட்டுரையில் அதன் கடைசி விளக்கத்தைப் பெற்றது. இது ஏகபோக முதலாளித்துவத்துக்கு முந்திய காலப்பகுதிக்குச் சரியானது.

லெனின், தாம் கண்டு பிடித்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் சமநிலையற்ற பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் விதி என்பதைத் தமது துவக்க நிலையாகக் கொண்டு ஒரு புதிய முடிவுக்கு வந்தார். புதிய வரலாற்று நிலைமைகளில், ஏகபோக முதலாளித்துவ காலப்பகுதியில் சோஷலிஸ்டுப் புரட்சியானது முதலில் ஒரு சில நாடுகளில் அல்லது தனி ஒரு நாட்டிலுங்கூட வெற்றியடையும் எனவும், புரட்சியின் வெற்றி எல்லா நாடுகளிலும் அல்லது பெரும்பாலான நாடுகளில் ஏககாலத்தில் சாத்தியமல்ல எனவும் அவர் சுட்டிக் காட்டினார். இந்த ஆய்வுரை முதல் தடவையாக லெனினது ''ஐரோப்பாவுக்கு ஓர் ஐக்கிய அரசு எனும் கோஷம் பற்றி'' (1915) எனும் கட்டுரையில் முன்வைக்கப்பட்டது.—55.

15 1806ல் முதலாம் நெப்போலியனால் பிரகடனம் செய்யப்பட்ட **கண்டத்திற்குரிய அமைப்பு** அல்லது கண்டத்திற்குரிய முற்றுகைத் திட்டம் கிரேட் பிரிட்டனுக்கும் ஐரோப்பா மாகண்ட நாடுகளுக்கும் இடையிலான வாணிகத்தைத் தடை செய்தது. ருஷ்யாவில் நெப்போலியன் தோல்வியடைந்த பிறகு இது நீக்கம் செய்யப்பட்டது.—58.

16 "Marseillaise,""Carmagnole,""Ça ira"—இவை பதினெட்டாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சிக் காலப் பகுதியில் நிலவிய புரட்சிகரப் பாடல்கள் ஆகும். கடைசிப் பாடலின் பல்லவி: "Ah! ça ira, ça ra, ça ira. Les aristocrates à la lanterne!" (''ஆ! இது சரி,

இது சரி. மேல்தட்டுப் பேர்வழிகள் தெருவிளக்குக் கம்பங்களில் தூக்கிலிடப்படுவார்கள்!'')—62.

17 இந்தச் சொல்விளக்கம் மாக்ஸ் ஸ்டிர்னரின் *Der Einzige und sein Eigenthum* (''அலாதியானவனும் அவனது சொத்துடைமையும்'') எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.—63.

18 இந்தச் சொல்விளக்கம் புரூனோ பெளவரின் ''லுத்விக் ஃபாயர்பாக்கின் தன்மை'' எனும் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது.—68.

19 இந்தச் சொல்விளக்கம் மாக்ஸ் ஸ்டிர்னரின் ''அலாதியானவனும் அவனது சொத்துடைமையும்'' எனும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.—69.

20 *Hallische Jahrbücher* மற்றும் *Deutsche Jahrbücher* என்பவை லீப்சிக்கில் இருந்து தாள் வடிவில் வெளியிடப்பட்டுவந்த இளம் ஹெகல்வாதிகளின் இலக்கிய தத்துவஞான சஞ்சிகையின் சுருக்கப் பெயர்களாகும். இது 1838 ஜனவரி முதல் 1841 ஜூன் வரை *Hallische Jahrbücher fur deutsche Wissenschaft und Kunst* (''ஜெர்மன் விஞ்ஞானம் மற்றும் கலை பற்றிய ஹல்லே வரலாற்றுக் குறிப்பேடு'') என்ற தலைப்பிலும் 1841 ஜூலை முதல் 1843 ஜனவரி வரை *Deutsche Jahrbücher für Wissenschaft und Kunst* (''விஞ்ஞானம் மற்றும் கலை பற்றிய ஜெர்மன் வரலாற்றுக் குறிப்பேடு'') என்ற தலைப்பிலும் தினசரி வெளியிடப்பட்டது. 1843 ஜனவரியில் இந்த சஞ்சிகை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது.—69.

21 பு. பெளவர், *Geschichte der Politik Cultur und Aufklarung des Achtzehnten Jahrhunderts* (''பதினெட்டாம் நூற்றுண்டின் அரசியல், கலாசாரம் மற்றும் அறிவொளி இயக்க வரலாறு''), தொகுதி 1-2, சார்லட்டன்பர்க், 1843-1845.—70.

22 **ரைன் பாடல்** (Der deutsche Rhein) — ''ஜெர்மன் ரைன்'' இது ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட கவிஞர் நிக்கலஸ் பெகர் என்பவரால் எழுதப்பட்டது. தேசியவாதிகளால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இது 1840ல் எழுதப்பட்டு பிந்திய ஆண்டுகளில் பல இசையமைப்பாளர்களால் மெட்டமைக்கப்பட்டது.—70.

23 இங்கு குறிப்பிடப்படுவது — Wigand's Vierteljahrsschrift, தொகுதி 2ல், பக்கங்கள் *193-205*, *1845*ல் வெளியிடப்பட்ட ''அலாதியானவனும் அவனது சொத்துடைமையும்'' சம்பந்தமாக ''கிறித்தவத்தின் சாரம்'' எனும் லுத்விக் ஃபாயர்பாக்கின் கட்டுரையாகும். இந்தக் கட்டுரை பின்வருமாறு முடிவுறுகிறது: ''எனவே ஃபாயர்பாக்கை ஒரு பொருள்முதல்வாதி என்றோ அல்லது ஒரு கருத்துமுதல்வாதி என்றோ அல்லது முற்றொருமையின் தத்துவஞானி என்றோ அழைக்க முடியாது, என்றால் அவர் யார்? அவர் சிந்தனைகளில் எதார்த்தத்தில் என்னவாக இருக்கிறாரோ அதுவாக இருக்கிறார், உணர்வில் உடலில் என்னவாக இருக்கிறாரோ அதுவாக இருக்கிறார், சாரத்தில் புலன்களில் என்னவாக இருக்கிறாரோ அதுவாக இருக்கிறார்—அவர் மனிதர்—இன்றேல் ஃபாயர்பாக் மனிதனின் சாரத்தைத் தனது சமுதாயத்திற்கு மட்டுமே எடுத்துச் செல்வதால்—அவர் சமுதாய மனிதன், கம்யூனிஸ்ட் ஆக இருக்கிறார்.—*70*.

24 லு. ஃபாயர்பாக் ''எதிர்காலத் தத்துவவியலின் கோட்பாடுகள்''. ஜூரிஹ் மற்றும் விண்டர்தர், *1843*, பக்கம் *47*.

''ஜெர்மன் சித்தாந்தம்'' எனும் நூலின் தொகுதி 1, அத்தியாயம் 1க்கு எழுதும் உத்தேசத்துடன் ''ஃபாயர்பாக்'' எனும் தலைப்பில் வெளியிட்ட குறிப்புகளில் எங்கெல்ஸ் ஃபாயர்பாக்கின் நூலில் இருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்டிக் கருத்துரைக்கிறார்:

''வாழ்நிலை என்பது பொருள்களில் இருந்து தனிப்பிரிக்கக் கூடியதான ஒரு பொதுவான கருத்துரு அல்ல. நிலவும் பொருட்களுடன் சேர்ந்து இது ஓர் அலகாக அமைகிறது. வாழ்நிலை என்பது சாரத்தின் நிலைமையாகும். எனது சாரம் எனது வாழ்நிலையாகும். மீன் நீரினுள் இருக்கிறது, ஆனால் அதன் சாரத்தை இந்த வாழ்நிலையில் இருந்து தனிப்பிரிக்க முடியாது. மொழியுங்கூட வாழ்நிலையையும் சாரத்தையும் இனங்காண்கிறது. மானுட வாழ்க்கையில் மட்டுமே வாழ்நிலையானது சாரத்திடமிருந்து—ஆனால் தனிவிலக்கான துரதிருஷ்டமான சம்பவங்களில் மட்டுமே—பிரிவினை செய்யப்படுகிறது. ஒரு மனிதனின் சாரம் அவன் வாழும் இடத்தில் இல்லாது போகும் நிலை ஏற்படுகிறது. ஆனால் இந்தப் பிரிவினை காரணமாக அவனது உடல் உண்மையில் எங்கே இருக்கிறதோ அங்கே அவனது உள்ளம் உண்மையில் இல்லை என்பதாகிறது.

[35] இத்தாலிய நகரமான அமால்ஃபி ஒரு லாபகரமான வாணிக மையமாக இருந்தது. இந்த நகரத்தின் வசம் இருந்த கடல் வாணிக உரிமைச் சட்டம் [Tabula Amalphitana] இத்தாலி முழுவதிலும் அமுல் செய்யப்பட்டிந்தது, அதோடு மத்திய தரைக் கடல் நாடுகள் அனைத்திலும் பரவி யிருந்தது.—*133.*

[36] **கம்யூனிசத்தின் கோட்பாடுகள்** எனும் நூல் ''கம்யூனிஸ்டு சங்கத்தின்'' நகல் வேலைத்திட்டமாகும். பாரிசில் இருந்த இந்த சங்கத்தின் மாவட்டக் கமிட்டியின் நெறிமுறைப்படி எங்கெல்ஸ் இதை எழுதினார். இதை ஒரு பூர்வாங்க நகல் என்று கருதிய எங்கெல்ஸ் 1847 நவம்பர் 23-24ல் மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவர்கள் வினாவிடை வடிவத்தைக் கைவிட்டு இந்தச் சங்கத்தின் வேலைத்திட்டத்தை ''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை'' போன்று உருவரை செய்ய வேண்டும் என்று யோசனை கூறினார். நவம்பர் 29 முதல் டிசம்பர் 8 வரையில் நடைபெற்ற ''கம்யூனிஸ்டு சங்கத்தின்'' இரண்டாவது காங்கிரஸ் மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் கருத்துக்களுக்கு முழு ஆதரவு அளித்தது. அதன் வேலைத்திட்டத்தை, ''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை'' எழுதும் பொறுப்பை வழங்கியது. இந்த அறிக்கையை எழுதும் போது மார்க்சியத்தின் மூலவர்கள் ''கம்யூனிசத்தின் கோட்பாடுகள்'' எனும் நூலில் முன்வைத்த சில யோசனைகளைப் பயன்படுத்தினார்கள்.

''கம்யூனிசத்தின் கோட்பாடுகள்'' எனும் நூலில் எங்கெல்ஸ் பாட்டாளி வர்க்கக் கட்சியின் சில முக்கியமான வேலைத்திட்டங்களையும் போர்த்தந்திரக் கோட்பாடுகளையும் தத்துவார்த்த முறையில் ஆதாரப்படுத்தி விளக்கினார். அதோடு, வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல உதவும் நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டினார்.—*139.*

[37] 22 மற்றும் 23ஆம் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு மாறாக இந்தக் கையெழுத்துப் பிரதி ''இருக்கிறது'' எனும் சொல்லை வைத்திருக்கிறது. ''கம்யூனிஸ்டு சங்கத்தின்'' பூர்வாங்க நகல் வேலைத்திட்டத்தில் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டது போன்ற ஒன்று பதிலாக இருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தம் போலும்.—*165.*

[38] சாசன இயக்கம் [Chartism]—*1830* மற்றும் *1850*ஆம் ஆண்டு

களில் நிகழ்ந்த பிரிட்டிஷ் தொழிலாளர்களின் ஒரு புரட்சிகர வெகுஜன இயக்கம். 1838ல் சாசனவாதிகள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்காக ஒரு விண்ணப்பம் (மக்கள் உரிமை சாசனம்) தயாரித்தனர். 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் எல்லோருக்கும் வாக்குரிமை, இரகசிய வோட்டு முறை, நாடாளுமன்ற வேட்பாளருக்கு சொத்துடைமை யோக்கியதாம்சத்தை நீக்கம் செய்வது இத்தியாதி கோரிக்கைகளை முன்வைத்தனர். லெனின் ''சாசனவாத இயக்கத்தை பரந்துவிரிந்த, மக்கள் அரசியல் உருவிலான, முதல் பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கம்'' என்று சித்தரித்தார்.—168.

39 கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் முதல் வேலைத்திட்ட தஸ்தவேஜு. இது மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் மாபெரும் போதனைகளின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்த ஒரு முழுமையான நன்கு உருவாக்கப்பட்ட விரிவிளக்கத்தை வழங்குகிறது. ''சமுதாய வாழ்க்கையெனும் அரங்கினையும் தன்னுள் கொண்டு முரணற்றதாய் அமைந்த பொருள்முதல்வாதம்; வளர்ச்சி பற்றிய மிக விரிவான மிக ஆழமான போதனையாகிய இயக்கவியல்; வர்க்கப் போராட்டத்தையும் ஒரு புதிய, கம்யூனிச சமுதாயத்தின் படைப்பாளனாகிய பாட்டாளி வர்க்கத்திற்குள்ள உலக வரலாற்று முக்கியத்துமுடைத்த புரட்சிகரப் பாத்திரத்தையும் பற்றிய தத்துவம்—இவை யாவும் அடங்கிய ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை இந்த நூல் மாமேதையருக்குரிய தெளிவோடும் ஒளிச்சுடரோடும் எடுத்துரைக்கிறது'' (வி. இ. லெனின்).

''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை'' முதலாளித்துவத்தின் வீழ்ச்சியின் தவிர்க்கவொண்ணாத்தன்மை, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிவாகை ஆகியவற்றுக்கான விஞ்ஞான நிரூபணங்களைப் பாட்டாளி வர்க்கத்திற்கு ஆயுதமாக வழங்குவதோடு, புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பணிகளையும் நோக்கங்களையும் வரையறுத்தது.

கம்யூனிஸ்டு சங்கத்தின் வேலைத்திட்டம் என்பதாக மார்க்ஸ் மற்றும் எங்கெல்சால் எழுதப்பட்ட இந்த அறிக்கை 1848 பிப்ரவரியில் முதன் முறையாக லண்டனில் வெளியிடப்பட்டது. இந்தப் பதிப்பில் இந்த ஆவணம் மட்டுமன்றி ஆங்கிலப் பதிப்பின் முகவுரை தவிர்த்த எல்லாப் பதிப்புகளின் முகவுரைகளும் உட்படுத்தப்பட்டிருந்தன. ஆங்கிலப் பதிப்பின் முகவுரை 1888ல் வெளி

*விரிவிளக்கம் செய்தார்கள். இங்கு முறைப்படுத்தி முன் வைக்கப்பட்டுள்ள வடிவில் இது ''சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் விதிகளில்'' இருக்கக் காணலாம்.—181.*

50 *இந்த முன்னுரை எங்கெல்சால் 1890 மே 1ந் தேதி எழுதப்பட்டது. அந்த நாளில் இரண்டாம் அகிலத்தின் பாரிஸ் காங்கிரசின் முடிவுப்படி (ஜூலை 1889) பல ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நகரங்களில் மக்கள் திரளின் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் கூட்டங்கள் நடைபெற்றன. காங்கிரசால் முன்வைக்கப்பட்டதான எட்டுமணி வேலை நாள் மற்றும் இதர கோரிக்கைகளைத் தொழிலாளர்கள் முன்வைத்தார்கள். அந்த நாள் முதல் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் மே முதல் தேதியை ஒவ்வொரு ஆண்டும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டுத் தினமாகக் கொண்டாடி வருகிறார்கள்.—181.*

51 **காங்கிரஸ் போலந்து**—*1814-15 ஆண்டு வியென்னா காங்கிரஸ் முடிவின்படி ருஷ்யாவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட போலந்து அரசு என்ற பெயரிலான போலந்தின் பகுதியாகும்.—183.*

52 *இங்கு குறிப்பிடப்படுவது ஜாரின் ஆதிக்கத்தை எதிர்த்து 1863-1864ல் போலந்து மக்கள் மேற்கொண்ட தேச விடுதலை எழுச்சியாகும். புரட்சிகர முன்முனைப்பைத் தவற விட்டுவிட்ட சிறு நிலப்பிரபு வர்க்கக் (''சிவப்பு''—தீவிரக்) கட்சியின் முரணான போக்கு காரணமாக இதன் தலைமை பெரிய நிலப்பிரபுக்களுக்கும் பெரிய முதலாளிகளுக்கும் மாறிச் சென்றது. இவர்கள் ஜாரின் அரசாங்கத்துடன் ஒரு லாபகரமான உடன்பாடு செய்து கொள்ளும் நோக்கமுடன் செயல்பட்டார்கள். 1864 கோடைக்கு முன்பு இந்த எழுச்சி ஜாரின் படைகளால் மிகவும் கொடூரமாக ஒடுக்கப்பட்டது.—184.*

53 *''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை'' ஜெர்மன் பதிப்பில் 1890ல் எங்கெல்ஸ் கடைசி வாக்கியத்தை மட்டும் நீக்கிவிட்டு இந்தக் குறிப்பையும் சேர்த்திருந்தார்.—191.*

54 **சிலுவைப் போர்கள்**—*11-13 நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பிய பெரிய நிலப்பிரபுக்களும் உயர்குடி வீரர்*

களும் இத்தாலிய வாணிக நகரங்களும் கிழக்கு நாடுகள் மீது நடத்திய இராணுவகாலனி பிடிப்புப் படையெடுப்புக்கள். ஜெருஸலத்திலும் மற்றப் ''புனித ஸ்தலங்களிலும்'' உள்ள கிறித்தவப் புனிதச் சின்னங்களை முஸ்லிம்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்டல் என்னும் மதப் பதாகையின் கீழ் இந்தப் படையெடுப்புக்கள் நடத்தப்பட்டன. உலக மேலாதிக்க நோக்கம் கொண்டிருந்த ரோமன் கத்தோலிக்க சமயபீடமும் போப்பின் அதிகாரத்துவமும் இந்தச் சிலுவைப் போர்களின் சித்தாந்தியாயும், உத்வேகமூட்டியாயும் செயல்பட்டன. அதன் பிரதான ராணுவ பலம் உயர் குடிவீரர்படையே. நிலப்பிரபுத்துவ அடிமைத் தனத்தில் இருந்து விடுபட ஒரு வழி என்று இதைக் கண்ட விவசாயிகளும் சிலுவைப் போர்களில் கலந்து கொண்டார்கள். சிலுவைப் போர்களைத் தொடர்ந்து முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவர் இருசாராரும் சூறையாடலுக்கும் வன்முறைக்கும் இலக்காயினர். சிலுவைப் போர் நடத்தியோரின் கொள்ளைக்கார நோக்கம் முஸ்லிம் அரசுகளான சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, டுனிஷியா ஆகியவற்றோடு நின்றுவிடவில்லை. வைதிகமான பைசான்ஷியன் சாம்ராஜ்யத்தையும் பாதித்தது. ஆனால் சிலுவைப் போர்நடத்தியோரின் கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதி வெற்றிகள் நீடிக்கவில்லை, அவர்கள் வசப்படுத்தி வைத்திருந்த நிலப்பரப்பு விரைவில் மீண்டும் முஸ்லிம்கள் வசமாயின.—196.

55 தமது பிந்திய நூல்களில் மார்க்சும் எங்கெல்சும் ''உழைப்பின் மதிப்பு'' மற்றும் ''உழைப்பின் விலை'' எனும் தொடர்களுக்குப் பதில் மார்க்சால் கொண்டுவரப்பட்டதான ''உழைப்புச் சக்தியின் மதிப்பு'' மற்றும் ''உழைப்புச் சக்தியின் விலை'' எனும் மேலும் துல்லியமான தொடர்களைப் பயன்படுத்தினர்.—203.

56 இங்கு குறிப்பிடப்படுவது தேர்தல் சட்டத்தில் சீர்திருத்தம் கோரி எழுந்த இயக்கமாகும். மக்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் இந்தச் சீர்திருத்தச் சட்டம் 1831ல் காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்டது, 1832 ஜூனில் பிரபுக்கள் சபையால் ஆமோதிக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தம் நிலப்பிரபுக்கள் நிதிப்பிரபுக்களின் ஏகபோக ஆட்சிக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்பட்டதாகும். தொழிற்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்வதற்கு இது பாதை சமைத்தது. இந்தச்

*சீர்திருத்தத்திற்கான போராட்டத்தில் பிரதான சக்தியாக விளங்கிய பாட்டாளி வர்க்கமும் குட்டிமுதலாளித்துவ வர்க்கமும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தால் ஏமாற்றப்பட்டனர், அவர்களுக்கு எவ்வித தேர்தல் உரிமைகளும் வழங்கப்படவில்லை.—228.*

57 **1660—1689 ஆண்டுகளின் ஆட்சி மீட்டமைப்பு**—*இங்கிலாந்தில் ஸ்டுவர்ட் மன்னர்களின் இரண்டாம் தடவை ஏற்பட்ட ஆட்சியைக் குறிப்பது. இந்த வமிசம் பதினேழாம் நூற்றூண்டில் இங்கிலாந்தில் நடந்த முதலாளித்துவப் புரட்சியால் வீழ்த்தப்பட்டது.*

**1814—1830 ஆண்டுகளின் ஆட்சி மீட்டமைப்பு**—*பிரான்சில் இரண்டாம் தடவை ஏற்பட்ட புர்போன்களின் ஆட்சி. உயர் குடியினர் மற்றும் சமயத் தலைவர்களை ஆதரித்த புர்போன் பிற்போக்கு ஆட்சி 1830 ஜூலை புரட்சியால் வீழ்த்தப்பட்டது.—229.*

58 **லெஜிடிமிஸ்டுகள்** *(மரபுவழி முடியாட்சிவாதிகள்)—1830ல் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட ''மரபுவழி'' புர்போன் அரசவமிசத்தின் ஆதரவாளர்கள். இந்த அரசவமிசம் உயர்குடி மரபுமுறை நிலப்பிரபுக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. நிதிப் பிரபுத்துவம் மற்றும் பெரும் முதலாளித்துவ வர்க்கத்தை நம்பி ஆட்சியில் இருந்த ஆர்லியன்ஸ் அரசவமிசத்துக்கு (1830-48) எதிராக நடத்திய தமது போராட்டத்தில் இந்த மரபுவழி முடியாட்சிவாதிகள் சோஷலிச வாய்வீச்சைக் கையாண்டார்கள், முதலாளி வர்க்கத்தின் சுரண்டலை எதிர்த்து தொழிலாளி மக்களைத் தாங்கி ஆதரிப்பவர்களாகத் தம்மைக் காட்டிக் கொண்டார்கள்.—230.*

59 **''இளம் இங்கிலாந்துக்காரர்கள்''**—*(பிற்போக்கு) டோரிக் கட்சியைச் சேர்ந்த பிரிட்டிஷ் அரசியல்வாதிகள், இலக்கியவாதிகளின் குழு. இது 1840ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் நிறுவப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகரித்துவரும் பொருளாதார அரசியல் வலிமையின்பால் அதிருப்தி தெரிவித்த அதேபோதில் இந்த ''இளம் இங்கிலாந்துக்காரர்கள்'' தொழிலாளி வர்க்கத்தைத் தமது செல்வாக்கின் கீழ் அடிப்படுத்தும் பொருட்டும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தமது போராட்டத்தில் அதை ஒரு கருவியாக மாற்றும் பொருட்டும் வாய்ச்சவடால் தந்திரங்களைக் கையாண்டார்கள்.—230.*

60 ஜங்கர்கள்—குறுகிய பொருளில் கிழக்குப் பிரஷ்ய நிலப் பிரபு உயர் குடியினரையும், விரிவான பொருளில் ஜெர் மன் நிலவுடைமையாளர் வர்க்கத்தையும் குறிக்கும் சொல்.—231.

61 இங்கு குறிப்பிடப்படுவது குட்டிமுதலாளித்துவ குடியரசு வாத-ஜனநாயகவாதிகளும் குட்டிமுதலாளித்துவ சோஷ லிஸ்டுகளும் ஆவர். இவர்கள் பிரெஞ்சு செய்திப்பத் திரிகையின் *La Réforme* (''சீர்திருத்தம்'') (பாரிசில் 1843 முதல் 1850 வரை வெளியிடப்பட்டது) ஆதரவாளர்கள். அவர்கள் ஒரு குடியரசையும் ஜனநாயகமான சமூக சீர்தி ருத்தங்களையும் கோரினார்கள்.—246.

62 *La Réforme* பத்திரிகை சம்பந்தப்பட்டது குறிப்பு 61ஐப் பார்க்க.—247.

63 1846 பிப்ரவரியில் தேசிய விடுதலை பெறும் நோக் கத்துடன் போலந்தின் பரப்பு முழுதிலும் ஒரு புரட்சி எழுச்சிக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இந்தப் புரட்சி எழுச்சிக்கு முக்கியமாக உற்வேகமளித்தவர் கள் போலந்தின் புரட்சிகர—ஜனநாயகவாதிகள் (தெம் போவ்ஸ்கியும் பிறரும்) ஆவர். ஆயினும் போலந்தின் உயர் குடியினரின் ஒரு பகுதி புரிந்த துரோகத்தாலும் இந்தப் புரட்சி எழுச்சியின் தலைவர்கள் பிரஷ்யன் போலீ சால் கைதுசெய்யப்பட்டதாலும் பொதுவான எழுச்சி தோல்வி உற்றதாலும் இங்குமங்குமாக மட்டுமே சில எழுச்சிகள் வெடித்தன. 1815 முதல் ஆஸ்திரியா, ருஷ்யா மற்றும் பிரஷ்யாவின் கூட்டு ஆதிக்கத்தில் இருந்துவந்த கிராக்கவில் மட்டுமே புரட்சி எழுச்சியாளர்கள் பிப்ரவரி 22ந் தேதி வெற்றியடைந்து தேசிய அரசாங்கத்தை நிறு வினார்கள். இது நிலப்பிரபுக்களுக்கு கட்டாயமாகச் செய் யப்பட்டு வந்த சேவைகளை ரத்துச் செய்து அறிக்கை வெளியிட்டது. கிராக்கவ் எழுச்சி 1846 மார்ச் ஆரம்பத் தில் நசுக்கப்பட்டது. 1846 நவம்பரில் ஆஸ்திரியா, பிரஷ்யா மற்றும் ருஷ்யா ஓர் உடன்படிக்கையில் கை யொப்பமிட்டன. இதன்படி கிராக்கவ் ஆஸ்திரிய சாம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.—248.

64 இந்தக் கட்டுரை 1848 டிசம்பரில் எழுதப்பட்ட மார்க் சின் **முதலாளித்துவ வர்க்கமும் எதிர்ப்புரட்சியும்** எனும்

*நூலின் ஒரு பகுதியாகும். இதில் மார்க்ஸ் பிரஷ்யன் எதிர்ப்புரட்சியின் வெற்றியை வரலாற்றுவழி பொருள் முதல்வாதக் கருத்துநிலேயில் இருந்து பகுத்தாய்ந்து ஜெர்மனியில் நடந்த மார்ச் புரட்சியின் தன்மையையும் பிரத்தியேக அம்சத்தையும் வெளிப்படுத்துகிருர்.—250.*

65 *இங்கு குறிப்பிடப்படுவது 1848 மார்ச்சில் நடந்த ஜெர் மன் புரட்சியாகும்.—250.*

66 *இங்கு குறிப்பிடப்படுவது பிரஷ்யாவின் எல்லா மாகாண சட்டமன்றங்களின்* [Landtags] *பிரதிநிதிகளேயும் கொண் டதான சமுதாய ஆதீனங்களின் அமைப்பாகும். இந்த இடத்தில் மார்க்ஸ் 1848 ஏப்ரல் 2ந் தேதி கம்பஹாவு சன் அரசாங்கத்தின் கீழ் கூட்டப்பட்ட இரண்டாவது ஐக்கிய சட்டமன்றத்தைக் குறிப்பிடுகிருர். இது பிரஷ் யன் தேசிய சட்ட சபைத் தேர்தல்கள் பற்றிய ஒரு சட்டத்தை ஏற்றது. 1847ல் ஐக்கிய சட்டமன்றத்தால் மறுதலிக்கப்பட்ட கடனே அரசாங்கத்துக்கு வழங்க ஒப்புக் கொண்டது. இதைத் தொடர்ந்து இந்தச் சட்டமன்றம் 1848 ஏப்ரல் 10ந் தேதி கலேக்கப்பட்டது.—250.*

67 டோரிகள்—*ஆங்கில நாட்டு அரசியல் கட்சி. பதினெட் டாம் நூற்ருண்டின் இறுதியில் தோன்றியது. இது நிலப் பிரபுத்துவம், சமயத் தலேமையின் நலன்களேப் பிரகடனப் படுத்தியது. நிலப்பிரபுத்துவ மரபுகளேப் பாதுகாத் தது மிதவாத முற்போக்குக் கோரிக்கைகளே எதிர்த்துப் போராடியது. 19ஆம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் இந்த டோரிகள் மத்தியில் இருந்து ஒரு கன்சர்வேடிவ் கட்சி உதித்தது.—250.*

68 *இங்கு குறிப்பிடப்படுவது ஸ்பெயின் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்த நெதர்லாந்தில் (இன்றைய பெல் ஜியமும் ஹாலந்தும்) 1566-1609ல் நடந்த முதலாளித் துவ வகைப்பட்ட புரட்சியாகும். இந்தப் புரட்சி முதலா ளித்துவ வர்க்கம் மற்றும் மக்கள் திரளின் நிலப்பிரபுத் துவ எதிர்ப்புப் போராட்டத்தையும் ஸ்பானிய ஆட்சிக்கு எதிரான தேசவிடுதலேப் போரையும் ஒன்ருக இணேத்தது. 1609ல் பல தோல்விகளுக்குப் பின்னர் ஸ்பெயின் டச்சு முதலாளித்துவ குடியரசின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் படி கட்டாயப்படுத்தப்பட்டது. நெதர்லாந்தின் பதினு ரும் நூற்ருண்டு முதலாளித்துவப் புரட்சி ஐரோப்பாவில்*

வெற்றிகரமான முதலாளித்துவப் புரட்சிகளின் சகாப்தத்திற்குக் கட்டியங் கூறியது. இன்றைய பெல்ஜியத்தின் நிலப்பரப்பு 1714 வரை ஸ்பெயினுக்குச் சொந்தமாக இருந்தது.—252.

69 இங்கு குறிப்பிடப்படுவது மார்க்ஸ் எழுத உத்தேசித்திருந்த ஆனால் என்றுமே எழுதி முடிக்காத ''அரசியல் மற்றும் அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனம்'' எனும் கட்டுரையாகும்.—278.

## பெயர்க் குறிப்பகராதி


அகஸ்டஸ் [Augustus], *(கி.மு. 63—கி.பி. 14)—முதல் ரோமானிய சக்கரவர்த்தி (கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை).—37.*

அய்க்கின் [Aikin], ஜான் *(1747—1822)—ஆங்கில மருத்துவர், தீவிரப் பொதுவிவகார எழுத்தாளர்.—98.*

அலெக்சாந்தர் மாசிடோன் [Alexander Macedonian] *(கி.மு. 356—323)—மாபெரும் போர்வீரர், படைத்தலைவர், ராஜீய அறிஞர்.—90.*

அலெக்சாந்தர் III [Alexander III], *(1845—1894)—ருஷ்யன் சக்கரவர்த்தி (1881—1894).—174.*

ஆன்னென்கவ் [Annenkov], பாவெல் வசீலியெவிச் *(1812—1887)—ருஷ்யாவின் மிதவாத நிலவுடைமையாளர், இலக்கிய அறிஞர்.—258-279.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)—177-182, 191.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)—பிரபல ஆங்கில கற்பனாவாத சோஷலிஸ்டு.—8, 242, 246.*

ஃபாயர்பாக் [Feuerbach], லுத்விக் *(1804—1872)—மார்க்சுக்கு முந்திய காலப் பகுதியைச் சார்ந்த மாபெரும் ஜெர்மன் பொருள்முதல்வாதத் தத்துவஞானி.—7-18, 35-40, 69-73, 109.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—மாபெரும் பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்டு.—242, 245.*

கம்பஹாசன் [Camphausen], லுடோல்ஃப் *(1803—1890)—ஜெர்மன் வங்கி அதிபர், ரீனிஷ் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் தலைவருள் ஒருவர்; பிரஷ்யாவின் அமைச்சர்-அதிபர் 1848 மார்ச்-ஜூன்.—252.*

காபே [Cabet], எத்தியேன் *(1788—1856)—பிரெஞ்சு பொது விவகார எழுத்தாளர், பாட்டாளிகளின் அரசியல் இயக்கத்தில் (1830-40)பங்கு பற்றியவர்; அமைதிவழிப்பட்ட கற்பனாவாதக் கம்யூனிசத்தின் தலைசிறந்த பிரதிநிதி, ''இகாரியா பயணம்'' எனும் நூலின் ஆசிரியர்.—181, 246.*

கார்ல் மாபெரும் [Karl], *(742—814)—ஃபிரான்கி மன்னர் (768-800) சக்கரவர்த்தி (800-814).—123.*

கிசோ [Guizot], பிரான்சுவா பியேர் கியோம் *(1787—1874)—பிரான்சின் முதலாளித்துவ வரலாற்றாசிரியர், அரசறிஞர்; 1840 முதல் 1848 வரை பிரான்சில் உள்நாட்டு மற்றும் அயல்துறைக் கொள்கையை வழி நடத்தியவர்.—189.*

கிருய்ன் [Grün], கார்ல் *(1817—1887)—ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ பொது விவகார எழுத்தாளர். 1840ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் ''மெய்யான சோஷலிசத்தின்'' முக்கியமான பிரதிநிதிகளில் ஒருவர்.—239.*

கேதே [Goethe], இயோஹான் வோல்ஃப்காங் *(1749—1832)—மாபெரும் ஜெர்மன் எழுத்தாளர், சிந்தனையாளர்.——37.*

சான் சிமோன் [Saint-Simon], அன்ரீ *(1760—1825)—மாபெரும் பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்டு.—242.*

சிஸ்மோந்தீ [Sismondi], ழான் ஷார்ல் லியொனார் சிமோந்து தே *(1773—1842)—சுவிட்சர்லாந்து நாட்டுப் பொருளியலாளர், முதலாளித்துவத்தை குட்டிமுதலாளித்துவ நிலையில் நின்று விமர்சித்தவர்.—124, 233.*

செர்புலியே [Cherbuliez], அந்துவான் எலிசே *(1797—1869)—சுவிஸ் பொருளியலாளர், சிஸ்மோந்தீயின் சீடர்.—124.*

டார்வின் [Darwin], சார்ல்ஸ் ராபர்ட் *(1809—1882)—மாபெரும்*

ஆங்கில இயற்கை விஞ்ஞானி, விஞ்ஞான பூர்வமான பரிணும முறை உயிரியலின் மூலவர்.—*176.*

**தாந்தே** [Dante], **அலிகிரி** *(1265—1321)—மாபெரும் இத்தாலியக் கவிஞர்.—188.*

**நியூட்டன்** [Newton], **ஐசக்** *(1642—1727)—மாபெரும் ஆங்கில பௌதிகவியலாளர், வானியலாளர், கணித நிபுணர், மூலச்சிறப்புள்ள இயந்திரவியலின் மூலவர்.—100.*

**நெப்போலியன் மூன்ருவது** [Napoleon III], **(லூயி போனப்பார்த்)** *(1808—1873)—இரண்டாம் குடியரசின் அதிபர் (1848—1851), பிரான்சின் சக்கரவர்த்தி (1852—1870).—184.*

**பக்கூனின்** [Bakunin], **மிஹயீல் அலெக்சாந்திரவிச்** *(1814—1876)—ருஷ்யாவின் ஜனநாயகவாதி, பொதுவிவகார எழுத்தாளர், அராஜகவாதத்தின் சித்தாந்தவாதிகளில் ஒருவர்; ஜெர்மனியில் 1848-49 புரட்சியில் பங்கு பற்றினர்; முதலாவது அகிலத்தின் உறுப்பினர் என்ற முறையில் மார்க்சியத்தின் பரம விரோதியாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்; 1872ல் ஹேக் காங்கிரசில் பிளவு வேலைகளில் ஈடுபட்டதற்காக அகிலத்தில் இருந்து நீக்கப்பட்டார்.—173, 179.*

**பாபெஃப்** [Babeuf], **கிராக்ஹ** *(உண்மைப் பெயர் ஃபிரான்சுவா நோயல்) (1760—1797)—பிரெஞ்சுப் புரட்சியாளர். கற்பனுவாத சமத்துவவாத கம்யூனிசத்தின் தலைசிறந்த பிரதிநிதி.—241.*

**பிராண்டன்பர்க்** [Brandenburg], **ஃபிரீட்ரிஹ் வில்ஹெல்ம்** *(1792—1850)—கோமகன், பிரஷ்யன் ஜெனரல், அரசறிஞர், எதிர்ப்புரட்சி அமைச்சரவைக்கு (1848 நவம்பர் முதல் 1850 நவம்பர் வரை) தலைமை தாங்கினர்.—250.*

**பிளான்** [Blanc], **லுயீ** *(1811—1882)—பிரெஞ்சு குட்டிமுதலாளித்துவ சோஷலிஸ்டு, வரலாற்ருசிரியர்; 1848ல் இடைக்கால அரசாங்கத்தில் பதவி வகித்தார், லுக்சம்பர்க் கமிஷன் தலைவர். 1848 ஆகஸ்டு முதல் லண்டனில் இருந்த குட்டிமுதலாளித்துவ வெளியேறிகளின் தலைவருள் ஒருவர்.—247.*

பின்டோ [Pinto], ஐசக் *(1715—1787)—பெரிய டச்சு பங்கு மார்க்கெட்காரர், பொருளியலாளர்.—98.*

பிஸ்மார்க் [Bismarck], ஓட்டோ *(1815—1898)—இளவரசர், பிரஷ்ய மற்றும் ஜெர்மன் அரசறிஞர், தூதுத்துறையாளர், பிரஷ்யன் நிலப்பிரபுக்களின் நலன்களுக்காகப் போராடினார்; பிரஷ்யாவின் அமைச்சர்-அதிபர் (1862-71), ஜெர்மன் பேரரசின் முதலமைச்சர் (1811-1890).—184.*

புருதோன் [Proudhon], பியேர் ஜொசேஃப் *(1809—1865)—பிரெஞ்சு பொதுவிவகார எழுத்தாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், குட்டிமுதலாளித்துவ வர்க்க சித்தாந்தவாதி, அராஜகவாதத்தின் மூலவருள் ஒருவர்; 1848ல் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்.—239.*

பெவான் [Bevan], வி.—*ஸ்வான்சி நகரின் தொழிற்சங்க கவுன்சிலின் தலைவர். 1887ல் ஸ்வான்சியில் நடந்த தொழிற்சங்கக் காங்கிரசில் அவைத் தலைவர்.—179.*

பௌவர் [Bauer], புருனோ *(1809—1882)—ஜெர்மன் கருத்துமுதல்வாத தத்துவஞானி, பிரபல இளம் ஹெகலியன், முதலாளித்துவ தீவிரவாதி, 1866க்குப் பின் தேசியமிதவாதி.—16, 18, 37, 40, 41, 60-64, 67-73.*

மக்ஃபர்லேன் [Macfarlane], ஹெலன்—*1849-1850ல் சாசன இயக்கப் பத்திரிகைகளின் செயலூக்கமான நிருபர். ''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை'' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.—170.*

மார்கன் [Morgan], லெவிஸ் ஹென்ரி *(1818—1881)—பிரசித்தி பெற்ற அமெரிக்க விஞ்ஞானி, ஆதிகால சமுதாயம் பற்றி எழுதிய வரலாற்றாசிரியர், தன்னியல்பான பொருள் முதல்வாதி.—190.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—175-182, 186, 258-261, 267.*

மெட்டர்னிக் [Metternich], கிளெமன்ஸ் *(1773—1859)—இளவரசர், ஆஸ்திரிய பிற்போக்கு அரசறிஞர்; (1809-21)ல் அயல்துறை அமைச்சர், (1821-48)ல் முதலமைச்சர், ''தூய கூட்டணியின்'' ஓர் அமைப்பாளர்.—189.*

மௌரர் [Maurer], கியோர்க் லுத்விக் *(1790—1872)—பிரபல ஜெர்மன் முதலாளித்துவ வகைப்பட்ட வரலாற்றாசிரியர், புராதன மற்றும் மத்தியகால ஜெர்மனியின் சமுதாய அமைப்புமுறை பற்றி ஆராய்ச்சி செய்தவர்.—190.*

ரூசோ [Rousseau], ழான் ழாக் *(1712—1778)—பிரபல பிரெஞ்சு அறிவொளியாளர், ஜனநாயகவாதி, குட்டிமுதலாளித்துவ சித்தாந்தவாதி.—114.*

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்ட் *(1825—1864)—ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட பொதுவிவகார எழுத்தாளர், வழக்கறிஞர், 1848-49ல் ரீனிஷ் மாகாணத்தில் ஜனநாயக இயக்கத்தில் பங்கு பற்றினர். 1860ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் தொழிலாளர் இயக்கத்தில் சேர்ந்தார்; 1863ல் ''ஜெர்மன் தொழிலாளர் பொதுச் சங்கத்தைத்'' தோற்றுவித்தவருள் ஒருவர்; ஜெர்மனியை ''மேல்மட்டத்தில் இருந்து'' பிரஷ்யாவின் மேலாதிக்கத்தின் கீழ் ஒன்றிணைப்பதை ஆதரித்தார். ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கைத் துவக்கி வைத்தவர்.—178.*

லிசினியஸ் [Licinius], கேயஸ் லிசினியஸ் ஸ்தோலோ—*கி.மு. நாலாம் நூற்றாண்டின் முதற்பாதியில் வாழ்ந்த ரோமானிய அரசறிஞர். மக்கள் நீதிவாணராக இருந்தபடியால் செக்ஸ்டியசுடன் சேர்ந்து பிளிபியப் பாமரப் நலன்களுக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.—25.*

லெத்ரு ரோலான் [Ledru-Rollin], அலெக்சாந்தர் ஒகுஸ்ட் *(1807—1874)—பிரெஞ்சு பொதுவிவகார எழுத்தாளர், குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் தலைவருள் ஒருவர்; Réforme செய்திப் பத்திரிகையின் ஆசிரியர். அரசியல் நிர்ணய சபை மற்றும் சட்டமன்ற உறுப்பினர். பின்னல் நாட்டை விட்டு வெளியேறினர்.—247.*

வெனிடே [Venedey], ஜேகப் *(1805—1871)—ஜெர்மன் தீவிரவாத பொது விவகார எழுத்தாளர், அரசியலாளர், மிதவாதி.—70.*

வைட்லிங் [Weitling], வில்ஹெல்ம் *(1808—1871)—ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் துவக்கக் காலத்தில் ஒரு முக்கியமான தலைவர். கற்பனாவாத சமத்துவவாத கம்யூனிசத்தின் தத்துவாளர்.—181.*

ஸ்டிர்னர் [Stirner], மாக்ஸ் *(காஸ்பர் ஷ்மிட்—இலக்கியப் புனைப் பெயர்) (1806—1856)—ஜெர்மன் தத்துவஞானி, இளம் ஹெகல் சீடர்; முதலாளித்துவ தனித்துவம் மற்றும் அராஜகவாதத்தின் சித்தாந்தவாதிகளில் ஒருவர்.—16, 17, 18, 67-73, 79, 106, 117.*

ஸ்ட்ராவுஸ் [Strauss], டேவிட் ஃப்பிரிட்ரிஹ் *(1808—1874)—ஜெர்மன் தத்துவஞானி, பிரபல இளம் ஹெகல் சீடர், 1866க்குப் பிறகு மிதவாதி.—12, 16.*

ஸ்மித் [Smith], ஆடம் *(1723—1790)—ஆங்கிலப் பொருளியலாளர். சாஸ்திரிய முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மாபெரும் பிரதிநிதிகளில் ஒருவர்.—99, 260.*

ஹாக்ஸ்த்ஹாவுசன் [Haxthausen], ஆகுஸ்த் *(1792—1866)—பிரஷ்யன் அதிகாரி, எழுத்தாளர், ருஷ்யாவின் நில உறவுகளிலான கிராமச் சமுதாய அமைப்பின் மீதமிச்சங்களை விவரித்து ஒரு நூல் இயற்றியவர்.—190.*

ஹான்சிமன் [Hansemann], டேவிட் *(1790—1864)—பெரு முதலாளி, ரீனிஷ் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தலைவருள் ஒருவர்; 1848 மார்ச்-செப்டம்பரில் பிரஷ்யன் நிதியமைச்சராக இருந்தார்.—250, 252.*

ஹெகல் [Hegel], கியோர்க் வில்ஹெல்ம் ஃப்பிரீட்ரிஹ் *(1770—1831)—மாபெரும் உன்னத ஜெர்மன் தத்துவஞானி, புறநிலைக் கருத்துமுதல்வாதி.—12, 15, 17, 41, 66, 67, 73, 79, 259, 263.*

ஹெய்த் [Heydt], ஆகஸ்ட் *(1801—1874)—கோமகன், பிரஷ்ய அரசறிஞர், (1848—1858)ல் வாணிகம் தொழில்துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்.—250.*

ஹென்ரி எட்டாவது [Henry VIII], *(1491—1547)—1509—1547ல் இங்கிலாந்தின் மன்னர்.—93.*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.